14
காவேரி
விக்ருதி-ஆனி.... JUNE.1950
8 அணா
P.G.H.Bros

ஜூன் 24 தேதி ரிலீஸ்

விரைவில்
வெளிவருகிறது
மாடர்ன் தியேட்டர்ஸ்
மந்திரி
குமாரி
எண்ணிலடங்கா
புதுக்கருத்துகள்....
எல்லோர் நெஞ்சையும்
இழுத்துச் செல்லும்
உணர்ச்சி வெள்ளம்
கதை வசனம் - கருணாநிதி
சங்கீதம் - ஜி. ராமநாதன்

Agent :— T. T. KRISHNAMACHARI & Co.
12 A, Lingha Chetty Street, — G. T. MADRAS.

மாதவிடாய் :

சகோதரிகளே ! எமது "சும்பகி—ரேசனி" என்ற மருந்தை உபயோகித்தால், மாத வெளியீட்டை ஒழுங்குபடுத்துவதுடன் எவ்வளவு நாட்பட்ட தொந்தரவாக இருப்பினும் நிவர்த்திசெய்யும். தீங்கற்றது. 100-க்கு 100 பலன் நிச்சயம்.

விலை ரூ. 5/- தபாற்செலவு ரூ. 0-14-0.

கர்ப்பத்தடை :

"தம்பதி—சகா" நீங்கள் விரும்புகிறபடி கர்ப்பத்தடைக்கு உதவுகிறது. தீமை கிடையாது. 30 வருடங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்படுகிறது. பலர் நன்மை அடைந்திருக்கின்றனர்.

பூரண கர்ப்பத் தடைக்கு ரூ. 4-4-0
6 மாத காலத் தடைக்கு ரூ. 2-0-0
(தபாற் செலவு ரூ. 0-14-0)

வீரியம், யௌவனம் :

உடல், மனம் இரண்டிற்கும் "மதன விலாஸ் ரஸாயனம்" சிறந்த டானிக். மயக்கம், சோர்வு, நரம்புத் தளர்ச்சி, மறதி, அஜீரணம் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து. சோர்வடைந்த மாணவர்கள், மூளை வேலையில் ஈடுபடும் கவிஞர்கள், மணவாழ்க்கை தொடங்கிய காதலர்கள் இவர்களுக்கு இந்த டானிக் ஓர் வரப் பிரஸாதம்.

விலை ரூ. 2-8-0

விரைவாதம் :

குடல் இறக்கம், யானைக்கால், கீல் வாதம், வீக்கம் வலியுடன் கூடியதாயினும், எத்தனை நாட்பட்டதாயினும் ஒரு வாரத்தில் நிச்சயம் குணமளிக்கும் எமது ஆயுர்வேத முறைப்படி தயார் செய்த "ஸம்ஸந்தி". ஓர் முறை உபயோகித்துப் பாருங்கள் !

விலை ரூ. 4-8-0 தபாற்செலவு ரூ. 0-14-0

KAVIRAJ M. KAVYATIRTHA (C.M.)
70, Cornwallis Street, CALCUTTA—6

1950-ல்

என்ன நேர இருக்கிறது

புத்தாண்டாகிய 1950 க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12-மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி, மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி. கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள் நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1—4—0 (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபாற் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒருமுறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Shri
Swami Satnarayan Jotish Ashram
(C. K.) HOSHIARPUR.

தி ஸ்ரீ வெங்கடேசா மில்ஸ் லிமிடெட்

வெங்கடேசா மில்ஸ் போஸ்ட்

உடுமலைப்பேட்டை

•

100 நெ. வரை மெல்லிய ரக நூல்கள்,
மல், காடா ரகங்கள் உற்பத்தி
செய்வதில் பிரசித்தி பெற்ற

இந்திய ஸ்தாபனம்

•

மானேஜிங் ஏஜண்டுகள் :—

G. V. கோவிந்தசாமி நாயுடு அண்ட் கம்பனி

பியூரிடி பார்லி எட்டு மடங்கு அதிக வேலை புரியும்

பியூரிடி பார்லியில், அரிசிபார்லியின் நற்குணம் பூராவும் சந்துமிகுந்த வகையில் அடங்கியுள்ளது. ஒரு ஸ்பூன் பியூரிடி பார்லி, எட்டு ஸ்பூன் அரிசி பார்லிக்கு சமமானது. தவிர அது எப்பொழுது வாங்கினாலும் புத்தம் புதிய நிலையில் இருக்கும். ஏனெனில் அது சுகாதார முறைப்படி ஸீலிடப்பட்ட டின்களில் கிடைக்கின்றது. இருபதே நிமிஷங்களில் ருசிமிகுந்த கஞ்சி தயாரிக்கலாம். சீக்கிரமாக பார்லி வாட்டர் தயாரிப்பதற்கு. இரண்டு டீஸ்பூன் மட்டத்திற்கு பியூரிடி பார்லியை சிறிது ஜலத்துடன் மாவாக கரைத்து. இரு டம்ளர் ஜலத்துடன் ஐந்து நிமிஷம் கொதிக்கவைக்க வேண்டியதுதான். ருசிக்கு ஏற்றபடி உப்பு. சர்க்கரை அல்லது எலுமிச்சை ரஸம் சேர்த்துக்கொள்ளலாம்.

பியூரிடி பார்லி

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், தபால் பெட்டி 664, கல்கத்தா.

மாஜிக் ஸெண்ட்

நவீன காலத்திய மிக பிரமிக்கத்தக்க சிருஷ்டி.

காதலில் ஏமாற்றமடைந்தவர்களுக்கும், வாழ்க்கையில் சோர்வுற்றவர்களுக்கும் எங்கள் மாஜிக் ஸெண்ட் மிக்க உயர்வானது. நீங்கள் விரும்புபவர்கள் மீது சில துளிகள தெளியுங்கள். உங்கள் வசீகரம் அதிகரித்து உங்களைத் தேடிவருவார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் இதை உபயோகித்து நன்மை கண்டுள்ளார்கள். அதன் பலனையனுபவித்த அநேகர் கடிதங்கள் எழுதி அதன் புகழ் பாடியிருக்கிறார்கள். இந்த மாஜிக் ஸெண்டை உபயோகிப்பவர்கள் அநேக கெடுதல்களினின்றும், வியாதியினின்றும் தப்பியுள்ளார்கள். இதை உபயோகிப்பவர்களுக்கு ஐச்வரியமும், விவகாரம், பரிக்ஷை முதலியவைகளில் வெற்றியும் கிடைக்கும். இதை உபயோகிப்பவர்கள் தொழில் ஏற்றம், வாழ்க்கையில் உயர்வு இவைகளை அடைவார்கள். ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள். நீங்கள் எதை நினைத்தாலும் அதில் பயன் கிடைக்கும் பயனடையாவிடில் பணம் திருப்பித் தரப்படும்.

விலை ரூ. 1—15—0 (தபால் செலவு பிரத்தியேகம்)

வெளிநாடுகளுக்கு 5 ஷல்லிங் B. P. O.
இரண்டு பாட்டில் ரூ. 3—4—0 (வெளிநாடு 8 ஷல்லிங் B. P. O.)
மிகவும் சக்தியுள்ளதும் உடனே பயன் தரக்கூடியதும் ரூ. 4

Prof. R. S. Dhami, Mesmerist, (C. K.) Jullundur City (Punjab)

இப்போட்டியின் சீலிட்ட விடை சென்னை பிரீமியர் பாங்க் ஆப் இந்தியாவில் டிபாசிட் செய்யப்பட்டுள்ளது.

★ பிரவேசக்கட்டணம் கூப்பன் ஒவ்வொன்றுக்கும் அணு நான்கு மட்டுமே ★

முடிவு தேதி 8—7—50

1	எங்கு சென்றாலும் இவனுக்கு விசேஷ மரியாதை கிட்டும்.	அரசன்	அறிஞன்
2	உறவினர் வீட்டுக்குத்தானே போகிறோமென்று கையில் இதை எடுத்துக்காமலே பிரயாணம் சென்றுவிட்டுப் பிறகு திண்டாடுகிறவர்களுமுண்டு.	படுக்கை	உடுக்கை
3	பல பிரிவுகளுடன் கூடிய ஒரு பெரிய கம்பெனியை நடத்துவது என்றால் போதிய இது இல்லாமல் முடியுமா ?	தனம்	சனம்
4	பாரதநாட்டில், முன்னாளில் இதில் சிறந்த பெண்மணிகள் பலர் இருந்துள்ளார்கள்.	கல்வி	கற்பு
5	இது அதிகமாக உள்ளவர்களுடைய பேச்சே ஒரு அலாதியாகத்தானிருக்கும்.	செல்வம்	கர்வம்
6	சமைத்த ஆகாரம் இப்படியாக ஆகிவிட்டால் அதை எப்படித்தான் சாப்பிட முடியும் ?	ஊசல்	தீசல்
7	தமது காரியங்களை இதைக் கொண்டே வெற்றிகரமாக முடித்துக்கொள்வார்கள் சிலர்.	உத்தி	புத்தி

மேலே உள்ள கட்டத்தில் ஏழு குறிப்புகளும், அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு விடைகளும் தரப்பட்டுள்ளன. குறிப்புகளை நன்கு படித்துப் பார்த்து, குறிப்புக்கு மிகப் பொருத்தமான விடை எது என்று கண்டுபிடித்து எழுதவேண்டும். கூப்பன்களைத் தனிக்காகிதத்தில் எழுதியனுப்பலாம். அச்சுக்கூபன் எதுவுமில்லை. ஏழு விடைகளும் சேர்ந்துதான் ஒரு கூப்பன்.

கட்டணத்தை மணியார்டர் மூலம்தான் அனுப்பவேண்டும். ம. ஆ. ரசீதும் கண்டிப்பாய் கூப்பனுடன் சேர்த்து அனுப்பவேண்டும். இப்போட்டி சம்பந்தமான சகல விஷயங்களிலும் மானேஜரின் தீர்ப்பே முடிவானதும் சட்டப்படிக் கட்டுப்படுத்துவதுமாகும். விரிவான நிபந்தனைகள் வேண்டுவோர் கார்டு எழுதவும். இப்போட்டியின் சரியான விடை ஆடி இதழ் காவேரியில் வெளியிடப்படும்.

கூப்பன்களும் மணியார்டரும் அனுப்பவேண்டிய விலாசம்:-

மானேஜர், வரலக்ஷ்மி கம்பெனி (C. K.)

"ஸ்ரீவாஸ்", பல்மநேர் P. O. (சித்தூர் ஜில்லா)

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்,
பெரியதெரு, கும்பகோணம்.

LIVER CURE Branch Office,
Parekh Mansion, Sandhurst Road (West).
BOMBAY 4.

பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல, டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஓர் குடித்தனப் பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப் பின் துர்ப்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் ஏற்பட்டு விட்டது. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளி வருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக் கொண்டு வந்தது. முகம் வெளுத்து விட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டு விட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒரு நாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சை போட வெளியில் வந்ததும் அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சு போன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்தும் வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2—14—0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு] தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையால் மருந்து தயாரிக்கப்பட்டு வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதற்க.

Shrimati. BIBI CHARAN PIARI

Sant Nagar (C. K.) Jullundur City.

பரிசு ரூ. 1000

(ஒரு நூதன கண்டு பிடிப்பு)

மாய மோதிரம்

இந்த மோதிரம் அபூர்வ மந்திர சக்தியுடன் தயாரிக்கப்பட்டது. இது ஆச்சரியகரமான வேலைகளைச் செய்கிறது. எவரேனும் இம்மோதிரத்தை அணிந்துகொண்டால் எவ்வளவு கஷ்டமான காரியமாக இருந்தாலும் அல்லது தடுக்க முடியாத விபத்தாகஇருந்தாலும் வெற்றி பெறுவர். அது உங்களை எல்லாவிதமான ஆபத்துகளினின்றும் வியாதிகளிலிருந்தும் காப்பாற்றும். துர்கிரஹங்களின் தொந்தரவு நீங்கும். இம்மோதிரத்தை அணிபவர் தன் காதலரை (அவரானாலும் அவளானாலும் சரி) சுலபமாக வசப்படுத்தலாம். அவரானாலும் அவளானாலும் உங்களுக்குக் கட்டுப்பட்டு, தன் செய்கைக்காகப் பச்சாதாபப்படுவார். நீங்கள் காதல் உத்தியோகத்தில் வெற்றிபெற்று ஏராளமான சம்பத்தையும் அடைவீர்கள். இம்மோதிரம் உங்களுக்கு ஒரு மெய்க்காப்பாளனாக உதவும். இதை ஒரு முறை பரீட்சித்து இதன் ஆச்சரியகரமான பலன்களை முதல்இரவே காணுங்கள். விலை ரூ. 1—15—0 ஸ்பெஷல் ரூ. 3—0—0 மிக்க சக்தி வாய்ந்தது ரூ 3—15—0, போஸ்டேஜ் தனி. பலனளிக்காவிடில் விலை திருப்பியளிக்கப்படும்.

Principal,
SHINING MESMERISM HOUSE (C. K.)
Kartarpur (E. P.)

உங்கள்

வியாபாரச் செழிப்புக்கு
விளம்பரக் கவர்ச்சிக்கு
அழைப்பின் வசீகரத்திற்கு
மற்ற ஏனைய தொழில் சம்மந்தமான
எல்லா பிரிண்டிங் வேலைகளுக்கும்

திறமை வாய்ந்த அச்சகம் அவசியம்

உயர்தர நவீன கலர் மெஷின்கள் அடங்கிய

காவேரி கலர் பிரஸ்

உங்கள் எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்யக் காத்திருக்கிறது

எல்லாவித ஜாப் ஆர்டர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்

விபரங்களுக்கு: மானேஜர், காவேரி கலர் பிரஸ், கும்பகோணம்.

List of 1st Prize Winners names for C. No. 27:- (1) M. A. Khan, Secunderabad, (2) Bankeylal, Clerk, Gorakhpur, (3) B. Cheddu Baliga, Mangalore, (4) Parimol Basarmal, Ajmer, (5) Mrs. Kundan Devi, Amritsar, (6) Jainarainlal, Patna, (7) Manohardeo Krishna Pandit, Bombay, (8) B. Abul Majeed Saheb, Trivandrum, (9) Mukundlal, Rewa UP, (10) Pattammal, Madras, (11) D. Premanandan, Guntur, (12) K. R. Lokaiah, Bangalore, (13) J. Shamanna. Tiptu, (14) S. S. Parvathikar, Bijapur, (15) M. A. Govindan, Ramnad, (16) Sri Bishnu Charan Das, Cuttack, (17) K. Balakrishna Iyer, Kistna, (18) Md. Mobin Khan, Singhbhum, (19) Jaitendranath Khumtia, Orissa, (20) Bondada Ramulu, Vizag and 29 others.

ரூபாய் 25,000 பரிசு

ரிஜிஸ்டர் நெ. 249 போட்டி நெ. 29

M/S. Premier Bank of India Ltd..ல் சீல் செய்து வைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின் பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு, இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000/- முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1,000-ம் அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்கவேண்டும்.

RAINBOW COMPETITIONS

KEY S. NO. 27 +38 63=182

50	45	49	38
40	47	43	52
39	48	44	51
53	42	46	41

We hereby certify that the above is the solution in original deposited with us by *Rainbow Competitions* No. 27 on 6/4/50 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.

V. [illegible] 30-5-50.

Agent Madras

முடிவு தேதி 28-6-50 விடை 13-7-50

பிரவேசக்கட்டணம்:- கூபன் 1-க்கு ரூ. 1/-
6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5/-

190

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:- 40 முதல் 55 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில் மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும், எப்படிக் கூட்டினாலும் 190 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்கவேண்டும். விதிகள்:- தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்படவேண்டும். பிரவேசகட்டணத்தை கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதை கூபன்களுடன் சேர்த்து அனுப்பவேண்டும். வரவுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப் படுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறை பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம்:-

THE RAINBOW COMPETITIONS No. 29, 306 (6), Mint Street, MADRAS-I.

ரிஜிஸ்டர் நெ. 249 போட்டி நெ. 30

ரூபாய் 25,000 பரிசு

சரியான விடை Premier Bank of India Ltd. Madras-ல் சீல் செய்துவைக்கப்பட்டுள்ளது. (மற்றவை மேலே கூறப்பட்டுள்ளது போல்). முடிவு தேதி 13—7—50 — விடை: 28—7—50

பிரவேசகட்டணம் கூபன் 1க்கு ரூ. 1/- — 6 கூபன் கொண்ட ஸெட் 1க்கு ரூ. 5/-

194

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 41 முதல் 56 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் எப்படிக் கூட்டினாலும் 194 வரும்படி அமைக்கவேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும். மற்ற விபரங்கள் மேற்கூறியதுபோல்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம்:-

The Rainbow Competitions, No. 30,
306, (6) Mint Street, Madras-1

மாதவிடாய்

நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந்தாலும் 'ரிதுபர்த்தினி' (கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட்) திமையற்றது. ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை ரூ. 5-0-0. பார்வதி கர்ப்பத் தடைக்கு அபாயமில்லாத சிறந்த மருந்து. தற்காலிக கர்ப்பத்தடைக்கு ரூ. 3-0-0. நிலையான கர்ப்பத்தடைக்கு ரூ. 4-8-0.

(தபால் செலவு ரூ. 0-14-0)

விரைவாதம்

விரைவாதம், குடல்வாயு, பைலேரியா முதலியவற்றிற்கு, பி. எச். தைலம் உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது. இவ்வியாதிகளுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3-0-0. உட்கொள்ளும் மருந்து ரூ. 2-0-0. (தபால் செலவு ரூ. 0-14-0)

வீரியம்

தங்கம், வெள்ளி, கஸ்தூரி, பவழம் முதலியவற்றால் தயார் செய்த விகரின் உபயோகிப்பதால் இழந்த வீரியத்தைத் திரும்பப் பெறலாம். வீரிய மிழந்து, ஞாபக சக்தியின்றி, மனச் சோர்வுள்ள வாலிபர்களுக்குப் புத்துயிரளிக்கிறது. நரம்புகளைப் பலப்படுத்தி, புதிய ரத்தத்தை அபிவிருத்தி செய்கிறது. வேண்டிய அளவு வாழ்விற்குச் சுகமளிக்கிறது. சாதாரணம் விலை ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

கூஞ்சா தைலம்

வழுக்கை, மயிர் கொட்டுதல் போன்ற வியாதிகளை நிவர்த்திப்பதுடன் மயக்கத்தையும் போக்குகிறது. தலை மயிர் சம்பந்தமான எவ்வித நோயையும் கண்டிக்கவல்ல சிறந்த கேசவிருத்தி டானிக்.

ஒரு பாட்டில் ரூ. 2-0-0

தபாற் செலவு ரூ. 0-14-0 வேறு.



கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

KAVIRAJ R. N. CHAKRAVARTHI

Ayurvedha Sasthri (K. M.)

24, Debendra Ghose Road, Bhowanipore

CALCUTTA, 25

Stockists:

Messrs. APPAH & CO., 286, Netaji Subhas ChandraBose Road. Madras

பொருளடக்கம்

விக்ருதி மலர் 9 — ஆனி இதழ் 11

ஏன் தாமதம்? 11

கடல் முழக்கம் — ராமன் 12

குருட்டுத் தெய்வம் — எம். எஸ். கமலா 19

காதற் பரிசு — நாதன் 28

வீணையும் நாதமும் — ஜி. எஸ். மணி 35

வாழ்விலே சாவு — மாயாவி 43

பெண்களுக்கு மட்டும் — ஷிபானி சென்த்ர் — சாரி 57

திருந்திய தவறு — கே. சுந்தரம்மாள் 61

ஜெய் ஸோம்நாத் (தொடர் கதை) — கே. எம். முன்ஷி 81

நாடகமேடை விசித்திரங்கள் — ஆண்டி 97

குறிப்பு:— காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திராசிரியர் பொறுப்பாளியல்ல.

199317
600 008

மேன்மையின்

பெருமை அநேக வருஷ உழைப்பிற்குப் பின்னும் விளங்கும்



சைக்கிள்கள்

சைக்கிள் சாமான்கள்

பெராம்புலேட்டர்கள்

குழந்தை வண்டிகள்

இவைகளில்

உயரிய ரகத்திற்கு



நம்பி வாங்க

இங்கிலீஷ் சைக்கிள் & மோட்டார்

இம்போர்டிங் கம்பெனி லிமிடெட்

2/9 பிரட்வே :: :: மதராஸ்-1.

தந்தி :—''ஸைக்கிள்ஸ்'' போன்: 3168

OFFICE OF THE REGISTRAR OF
8 JUL 1950
MADRAS

காவேரி

விக்ருதி மலர் 9	“சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—” பாரதியார்	ஆனி இதழ் 11

ஏன் தாமதம்?

காவேரி ஆற்றுக்கும், காவேரிப் பத்திரிகைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பது நிரூபணம் ஆய்விட்டது இம்மாதம். பருவ மழையும் காற்றும் இல்லாமையால், காவேரியில் தண்ணீர் இல்லாமற்போய் மேட்டூர் அணைக்கட்டில் நீர்த்தேக்கம் குறைந்துகொண்டே வந்தது. அங்கிருந்து உற்பத்தியாகும் மின்சார சக்தி குறைக்கப்பட்டு, காவேரிப் பத்திரிகையின் காரியாலயத்திலுள்ள பெரிய இயந்திரங்கள் அரைகுறை மனதுடன் இயங்கின. நமக்கு இது ஏக்கத்தைக் கொடுத்தது.

இப்பொழுது பருவக்காற்று அடிக்கவே காவேரி பிரவகிக்க ஆரம்பித்துவிட்டாள். தமிழ்நாட்டின் வளம் காவேரியைப் பொறுத்துத்தானே இருக்கிறது! காவேரிப் பத்திரிகை இயந்திரங்களும் அதற்கு இசைந்தாற்போல் இப்பொழுது முழு மனதுடன் இயங்க ஆரம்பித்துவிட்டன. எனினும் காலதாமதம் ஆகி, வாசகர்கள் பொறுமையை ஒரு சிறிது சோதிக்க நேர்ந்துவிட்டது. இனி காவேரியின் பிரவாஹம் இடைவிடாது ஓடும் என்று உறுதிகூறி இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

“ஜெய் ஸோம்நாத்” தொடர்கதை ருசிகரமான கட்டத்தில் பாய்ந்து செல்கிறது. கஜினி அமீர் ஸோமநாதர் ஆலயத்தை அழிக்க வருகிறான் என்ற செய்தி அனைவரையும் நிலைகுலையச் செய்கிறது. கங்க சர்வக்ஞர் ஆசிபெற்று மஹாராஜா பீமதேவர் இதற்காவன செய்யக் கிளப்புகிறார். செல்லுமுன் ஸ்வாமி சன்னிதியில் சௌளாவைச் சந்திக்க ஓர் தருணம் வாய்க்கிறது. மண்டையோட்டு மாலையணிந்த, நூற்றெட்டுப் பெண்களின் ரத்தத்தால் சிவபூஜை செய்த காபாலிகன் அவளை நரபலியிடத் தீர்மானித்து நெருங்குகையில் பீமதேவர் தோன்றி, காபாலிகனை நெஞ்சை நெறித்துக் கொன்று சௌளாவைக் காப்பாற்றுகிறார். மயிர்க்கூச்சலிடும் சம்பவம்.

“மாயாவி” சென்ற இதழில் தொடங்கிய “வாழ்விலே சாவு” என்ற வாழ்க்கைச் சம்பவம் இந்த இதழில் முடிவடைகிறது.

ஸ்ரீமதி கே. சுந்தரம்மாள் அவர்கள் “திருந்திய தவறு” என்ற ஓர் அற்புதக் கதையைச் சிருஷ்டி செய்திருக்கிறார்கள். பெண்கள் மெத்தப் படிக்கவேண்டும், என்ற நவீனக்கொள்கையை அலசி, அது எத்தகைய பெண்களுக்குப் பொருந்தும், அது பெண்மைக்குப் புறம்பானதா என்பதை மிக அழகாகத் தம் அபாரக் கற்பனா சக்திகொண்டு தம் கதையில் சித்திரித்துக் காட்டியுள்ளார். எல்லோர் மனதையும் இக் கதை கவரும் என்பதோடுமட்டுமல்லாது பெண்களின் அகக் கண்களையும் இது திறக்கும் என்று நம்புகிறோம்.

“வீணையும் நாதமும்”, “காதற் பரிசு” “குருட்டுத் தெய்வம்” இன்னும் அநேக கதைகள், கட்டுரைகள். ரஸித்து உங்கள் அபிப்பிராயங்களை எடுத்துரையுங்கள்.

கடல் முழக்கம்

ராமன்

இவ்வளவு நேரம் வெப்பம் கொடுத்த சூரியன் மலைவாயிலடையப் போகிறான். கருணைக்கடல் இன்பமாய்க் குளிர்ந்த காற்றை வீசி நம்மை உத்ஸாகப் படுத்துகிறது!

அன்று வரும்வழியில் பஸ் ஸ்டாண்டில் சுந்தரத்தை க்யூவின் கடைசியில் பார்த்தேன். அவன் முகத்தில் கவலை நிரம்பியிருந்தது. ஆனால், பொறுமையுடன் மயிலாப்பூர் பஸ்ஸுக்காகக் காத்துக்கொண்டிருந்தான். திருவல்லிக்கேணியில் ஏதோ ஒரு பையனைப் பார்க்க வந்திருந்தானாம்.

இளமைக்கே உரிமையான அலட்சியமோ, இல்லாவிட்டால், வாலிபத்தின் முறுக்காயுமிருக்கலாம்! சுந்தரம் வருவார் என்பது தெரிந்திருந்தும் பையன் வெளியே போய்விட்டானாம். பையனின்

தகப்பனாரும் வீட்டிலில்லை. அவர்கள் வீட்டிற்குவர இருட்டி ஒரு நாழிகை செல்லுமாம். அவனுடைய ஆத்திரம் மயிலாப்பூர் போய் இன்னொரு வரனைப் பார்த்துவிட்டு வரலாமென்று வந்தவன், பஸ் ஸ்டாண்டில் வரம் கிடக்கிறான்! இதையறிந்த நான் 'விஷ்யூசக்ஸஸ்' என்று ஆங்கிலத்தில்கூறி வந்துவிட்டேன். பெண்ணைப் பெற்றவன்; பொறுமை ரொம்ப வேண்டாமா?

பிரஸிடென்ஸி காலேஜ் சதுக்கத்தில் கனகசபை வெகுவேகமாய் ஆபீஸிலிருந்து வந்துகொண்டிருந்தான். நான் ஒரு கனைப்புக் கொடுத்தேன். குரலைக் கேட்டு, கனகசபை என் பக்கம் திரும்பினான். அவன் போகும் வேகத்தில் எதிரில் வரும் என்னைக்கூடப் பார்க்கவில்லையே யென்று வருத்தம். இதை அவன் முகம் தெளிவாய்க் காட்டியது. ரொம்ப வினயத்துடன்; "இன்று எங்கள் வீட்டிற்கு ஒரு நண்பர் வருவதாகச் சொல்லியிருக்கிறார். நான் டயத்துக்குப் போகவேண்டும். பையன்கிட்டக் கூடச் சொல்லிவிட்டு வந்தேன். வரட்டுமா?" என்றான். "சரி, போய்விட்டு வாங்க. பையனுக்குச் சீக்கிரம் எதாவது ஏற்பாடு பண்ணுங்க!" என்று ஆசிகூறி வந்தேன்.

தினந்தோறும் பார்க்கும் அதே காட்சிதான். ஆனால் அன்று வானத்து ஓரங்களில், குவியல் குவியலாயுள்ள மேகங்கள் கதிரவன் மறைவை எதிர் பார்ப்பது போல் தோற்றமளித்தன! வஸந்தகாலமல்லவா? வெப்பம் தாங்காமல் மேல் கிளம்பிய நீராவியின் சிறு திடல்கள், சில வெள்ளிபோல் மின்னின; சிலவற்றில் வானம் தந்தவில் தோன்றியது. அங்குமிங்கும் தோரணம் காற்றில் அசைவதுபோல், நடு நடுவே சில புள்ளினங்கள் பறந்துகொண்டிருந்தன.

ஐந்தரை ஆறுமணிக்கு, பீச்சு ரோட்டைக் கடந்து மணலுக்கு வருவது என் போன்ற முதியவர்களுக்கு ரொம்பக் கஷ்டம் தான். எத்தனையோ கார்கள் 'ஹாரன்' கொடுத்துக்கொண்டும், சில சத்தம் செய்யாமல் 'டாஷ்' செய்து கொண்டும் ஓடுவதைப் பார்த்தாலே பயங்கரமாயிருக்கும். நான் பிறந்ததோ பத்தொன்பதாவது நூற்றாண்டு, இப்பொழுது சதாபிஷேகத்தை எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறேன். இந்தப் பாதையைக் கடந்துவிட்டால் பிறகு எனக்கும் நிம்மதிதான்!

என் மனதில் ஒரு ஆசை உண்டு. அது தினந்தோறும் என்னை இங்கே இழுத்து வந்துவிடும்! ரத்னாகரத்தைப் பார்த்தவுடனேயே என்னை அறியாமல் எண்ணங்கள் பெருகி மனதில் அலைபாய ஆரம்பித்துவிடும். என் மனம் இன்ப வெள்ளத்தில் மிதக்கும். அலைகள் வீசி எழுவது மாதிரி என் உணர்ச்சி பொங்கி எழும். பிறகு தானாகவே சிதைந்து, பெரு நீருடன் ஐக்கிய மாவதுபோல் எழுந்து அடங்கி நிற்கும்!

அன்று மணலில் வரும்போது 'இவ்வளவுபேர்கள் இன்பத்தை நாடி, கடற்கரைக்கு வந்திருக்கிறார்கள். கனக சபை மாதிரி எத்தனையோபேர்கள் இதை விட்டுவிட்டுப்போகிறார்களே! கிட்டிய இன்பத்தை அனுபவிக்கக் கொடுத்து வைக்கவேண்டாமா?' என்று எனக்குள் நினைத்துக்கொண்டேன்.

ஆனால், எனக்குமட்டுமா இந்த ஆசை! இதோ விளையாடுகிறார்களே! எத்தனையோ சிறுவர்களும், சிறுமியரும்; அதோ தண்ணீர் ஓரமாய், தாயும் மகளும்; கணவனும் மனைவியும்; இளமையும் முதுமையுமாய்ப் போட்டி போட்டுக்கொண்டு காலில் அலைகள் வந்து தழுவிச் செல்ல சிலர் வேகமாகவும் சிலர் மெள்ளவும், சிலர் ஒய்யாரமாகவும் நடைபோட்டுக்கொண்டு செல்கிறார்களே, அவர்களுக்கும்தான் இந்த ஆசை.

உழைத்துக் களைத்த உலகம், ஆடிப் பாடி ஆனந்திக்க இங்கே தினம் குழுமுகிறது. குழந்தைகளின் விளையாட்டுடன், மழலைக் கீதம் போல் கடலின் ஓசை ஒலிக்கிறது! இதைப் பின்னணியாக்கிக் கொண்டு வானொலியின் கீதம் இசைக்கும்போது, எங்கும், ஒரே குதூகலமாயிருக்கிறது!

சமுத்திரம் மட்டும் சும்மாவிருக்கிறதா? ஜாலக் கிரீடை செய்வதுபோல், தன் நீர்த் திவலைகளைச் சிதறி மேலே கிளப்புகின்றது. பையன்கள் குதித்து விளையாடுவது போல் ஆனந்தமாய் அலைமேல் அலை மோதிச் செல்கின்றது! இதைக் கண்டு யார்தான் ஆசைப்படாமலிருப்பார்கள்!

இவைகளைப் பார்த்தவுடன் எனக்குச் சொல்லி முடியாத ஒரு இன்பம் உண்டா

கும்! என் கவலைகளெல்லாம் தகர்ந்துவிடும். 'என்னைப்போல் பலர் இங்கு, இப்படிச் சந்தோஷமாய்க் களிப்பதற்கு வருவார்களல்லவா?' என்று அடிக்கடி நினைப்பதுண்டு.

அன்று வழக்கம்போல் சமுத்திரத்தைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தேன். ஒரு மெல்லிய காற்று வீசிற்று. சற்று மெதுவாகத் திரும்பினேன்.

அப்பொழுதுதான் ஒரு இளமங்கை வந்துகொண்டிருந்தாள். இதேமாதிரி காட்சிகள் எனக்கு ரொம்ப பழக்கமானதுதான்! அவள் வரும்போது வானம் நீலமும், மங்கிய வெண்மையும் கலந்த நிறத்துடன் பிரகாசித்தது! இடையிடையே பொன்னும், சிகப்பும் கலந்த நீரோட்டம். மலைவாயிலடையும் சூரியனின் கிரணங்கள் இவைகளினூடு வீச, வானத்தின் சாயங்கால வனப்பு, பார்ப்பதற்கு அழகாகவிருந்தது. அது அந்த மங்கையின் வருகைக்குப் பொருத்தமாயும், கவர்ச்சியாயுமுள்ள புறத்தோற்றமாய் நின்று விளங்கிற்று!

பெரிய தர்பார் மண்டபத்தில் விரித்திருக்கும் ரத்தினகம்பளம் மாதிரியிருந்தன அந்த வானத்தின் வனப்பும், அந்தச் சூரியனின் பிரகாசமும்!

பழையபடி கடலைப்பார்த்துத் திரும்பினேன். எனக்குச் சற்றுத் தூரத்தில் ஒரு வாலிபன்வந்து மணலில் உட்கார்ந்தான்.

இவனைப்பார்த்தவுடன் வந்துகொண்டிருந்த கன்னிகையைப் பழையபடி பார்த்தேன். கடலையும் உற்று நோக்கினேன்.

அந்தக் கன்னிகை ஒருயுவதி சிவப்பு நிறம். பருவத்தின் வளர்ச்சி பொன்னுக்கு மெருகு தீட்டியதுபோல் அவள் உடம்பைப் பிரகாசப் படுத்தியிருந்தது. அவள் முகத்தில் கவலை தென்பட்டது!

“மனம் தடுமாற்றத்தை அடைகிறதோ என்னவோ? அவள் மனக்குறைதான் என்ன? என்னால் எப்படி அறிய முடியும்?” என்று எனக்குள் கேட்டுக்கொண்டேன்.

அந்த வாலிபனோ நல்ல முகவெட்டான பிள்ளை. ஆனால், அவன் பார்வையில் மகிழ்ச்சியில்லை! இதைக் கவனித்தவுடன் என் மனம் குழம்பியது.

“சடவினால், பிரிந்து உட்கார்ந்திருக்கும் தம்பதிகளோ?” என்று முதலில் எண்ணினேன். ஆனால், அவர்கள் முகத்தில் உத்ஸாகம் குன்றியிருந்ததே தவிர, கோபம் தென்படவில்லை. அதனால் இருவரும் தனி என்று உறுதிகொண்டேன்! இருவரும் அந்தக் கடலையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். நானும் கடலைப் பார்த்தேன்.

“இந்தக் காலத்தில் ஒன்றையும் திடீரென நிச்சயிக்கமுடியவில்லையே! பொறுமையை இழந்துவிட்டால், பிறகு எல்லாம் தவிடுபொடியாகிவிடும். இந்த நவநாகரிகப் பண்பு ஒரு விசித்திரமானது! நாம் ஏறிச்செல்லும் வாகனம், கலாசாலை, கல்லூரி, கடற்கரை இப்படியுள்ள பொது ஸ்தலங்களிலெல்லாம் காதல் மணம் நிரம்பியிருக்கும் காலமல்லவா? தானம் வாங்கிய நான் காதலை எப்படி உணரமுடியும்?’

இருந்தாலும் என்னையும் அறியாமல் ஒரு ஆசை வலையில் இன்று நாங்கள் மூவரும் இப்பொழுது சிக்கிக்கொண்டுவிட்டோம்! என் கண் வீசிய தூண்டிலில் இருவர் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பற்றி எப்படித் தீர்ப்புச் செய்து விடுவிக்கப்போகிறேனோ? என்று கவலையுடன் அவர்கள் இருவரையும் திரும்பத் திரும்பப் பார்த்தேன். கிழவர்களுக்கே உரிய ஒரு குறும்பு! எதையாவது கொட்டி அளக்கவேண்டாமா? அது என்னைமட்டும் விடுமா? நானும் அதன் வலையில் சிக்கிக்கொண்டேன்!

அலைகள் மாறுவது மாதிரி இருவரின் முகபாவங்களும் மாறிக்கொண்டே வந்தன. திடீரென இருவரும் ஒரே கணத்தில் எழுந்து நின்றார்கள். நான் திகைப்படைந்தேன்! நாடகத்தில் சில பாத்திரங்கள் ஒரே சமயத்தில் சொல்லிவைத்தாற்போல் எழுந்திருப்பதில்லையா? அது மாதிரி நூறுகஜ தூரத்துக்கப்பாலிருக்கும் இருவரும் எழுந்தனர். எனக்குச் சந்தேகம். ஏதாவது கோர்ட்ஷிப்! நடக்கிறதோ என்னவோ? இல்லாவிட்டால் யதேச்சையாயும் நடக்கலாம்!' என்று நினைத்தேன். பிறகு, ஒன்றும் புரியவில்லை. நிதானமாய்க் கவனிக்கலானேன்!

சரேலென மரகதம் எழுந்து தண்ணீரை நோக்கி நடந்தாள். அவள் வருமுன்பு ஒரு அலை மரகதத்தின் காலைத் தழுவிச் சென்றது! பள்ளிக்கூடத்திலி

ருந்து சந்தோஷமாய் ஓடிவந்து தன் தாயின் காலைக் கட்டிக்கொள்ளும் சிறுமி செயலாயிருந்தது அந்த அலையின தழுவல்!

மரகதத்தின் முகம் மலர்ந்தது! அவள் வாய் என்னவோ முணுமுணுத்தது. கடலைப் பார்த்துக்கொண்டே:

“உன்னைப் பார்க்க என் மனதில் எண்ணங்கள் பெருகுகின்றன. நான் ஒரு பருவ மங்கை. என் மன அமைதிக்கும் கலக்கத்துக்கும் காரணம் நான்தான்! கலக்கம் தெளிவுக்குத் தானே!

நீயோ பெரிய மகா சமுத்திரம். உனக்குள் எத்தனையோ கோடி ஜீவராசிகள் வாழ்கின்றன. உன்மீது கப்பலையும், கட்டு மரங்களையும் இட்டுச்சென்று மனிதனும் வயிறு வளர்க்கிறான்! உன்னிடம் முத்து, பவளம், மீன். இவைகளையெல்லாம் அடக்கிக்கொண்டு இப்படி நிலைகொள்ளாமல் ஏன் கொந்தளிக்கிறாய்?

பூமியில் மட்டும் சந்தோஷம், சோகம், பிறப்பு, இறப்பு இருக்கிறதென்று நினைத்திருந்தேன். இன்று நான் கண்டது உனக்கும், உன்னுள் அடங்கியபொருள்களுக்கும், பூமியில் நாங்கள் அனுபவிக்கும் நிலைதான! என்று உணர்ந்தேன்.

நாங்கள் இங்கு விளையாடும் ஆடல், பாடல்களை உன் அலைகள் அழகாகச் சித்திரிக்கின்றன! நீலமும் வெண்மையும் கலந்த உன் நீர்ப்பரப்பைப் பார்த்தால் அறியாமை விலகி அமைதிதானாகவே ஏற்படுகிறதே!

நானும் சந்தோஷமாய்த்தான் வளர்ந்தேன். என் குதூகலம் என் உடம்பின் எழிலை மெருகுபடுத்தியது. நான் அடையப் போகும் இன்பத்தை நினைத்துப் பல நாட்கள் மகிழ்ந்தேன். என் மகிழ்ச்சிக்கும் ஒரு எல்லையில்லையா, என்ன? வாழ்க்கையில் இன்பத்தினூடே துன்பம் தோன்றி மறைவதைச் சூசிப்பிக்கவோ என்னவோ சற்றுமுன் வானத்திலிருந்து அழகுபடுத்திய, இந்த மேகக் கூட்டங்கள்கூட இப்பொழுது நீராவியாக மாறி மறைகின்றன!

உன் அலைகளைக்கூட லட்சியம்செய்யாமல் இந்தச் செம்படவர்கள், கட்டுமரத்தையும், படகுகளையும், வைத்துக்கொண்டு நீ வளர்க்கும் குழந்தைகளை வலைவீசிப் பிடித்து வருகிறார்கள். நீ சுயேச்சையாய் வளர்க்கும் ஒவ்வொரு பொருளும் எங்களுக்குத் தேவைதான், உன்னுடைய அலைகளைப்போல் மனிதனுடைய ஆசைகளும் கணக்கிலடங்காமல் பெருகிவளர்கின்றன!

பூமியிலுள்ள நாங்கள் ஒரு கட்டுக்கு அடங்கவேண்டும். ஏன்? எங்கள் நிலப்பரப்பே ஒரு வரம்பிற்குள்ளானதுதானே!

உன்கதி அப்படியில்லை. நீ இன்பமாய் எல்லையற்று வாழ்கிறாய். உன் இன்பத்தைப் பொங்கும் அலைகளுடன் கூத்தாடி ஆனந்திக்கிறாய். சந்திரனைப் பார்த்து உன் அலைகள் பௌர்ணமியன்று நர்த்தனம் செய்கின்றனவல்லவா? உலகைப் பிரகாசப்படுத்தும் சூரியனும் உன்னிடமிருந்துதானே வெளி வருகிறான்!

நாங்கள் அடிமைதான்! ஏன் தெரியுமா? எங்கள் உயிருக்கு உப்பு நீ, உன் ஆவி நாங்கள் பருகும் தண்ணீர், நாங்கள் அணியும் முத்தும் பவளமும் நீ தந்தவை! பருவக் காற்றை நீதானே கொண்டுவருகிறாய்? இவ்வளவுபேர்கள் நாங்கள் இங்கே கூடியிருக்கிறோமே எதற்கு? உன் காற்றைச் சுவாசிக்கத் தானே!

உன்னைக் கண்டு நான் மோகம் கொண்டதில் விபரீதமொன்றுமில்லையே! நானோ பருவமங்கை; என் எண்ணங்கள் பெருகும் போது உன் அலைகளைப்பார்த்து மகிழ்ந்தேன்!

உன்னைப் பார்த்தவுடன் என் உணர்ச்சி பொங்கிற்று! என் சிநேகிதிகளெல்லாம் குடும்பவாழ்க்கை தொடங்கிவிட்டார்கள். நான்மட்டும் இன்னும் போராடிக்கொண்டிருக்கிறேனே! இப்படிக் குதித்துக் குதித்து, தட்டுத் தடங்கலில்லாமல் தாவிவரும் உன் அமுத அலைகளுக்குக் கரையிருப்பது தெரியாதல்லவா? என் கதியும் அப்படித்தான்! பருவ வளர்ச்சிக்கும் ஒருதடை உண்டென்பது இப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது!

மல்லிகை மொக்கிற்கு மலருமுன்புதான் அதிக வாசனை. கொம்பில் பழுத்த பழமும், தேனும் அதிக ருசியாகவிருக்குமல்லவா? பருவம் தாண்டிவிட்டால் பயிருக்குக் கெடுதலென்பது உலகமறிந்ததுதானே! இதையெல்லாம் நினைத்து நினைத்து ஏங்கி உட்கார்ந்துகொண்டிருந்தேன்.

அதோ வருகிறானே அந்த வலைஞன், அவனுடைய களிப்பு. அவனுக்குக் கிடைத்த மீன்களின் விலையை உணர்த்துகிறதல்லவா? இதைப் பார்த்தவுடன் எனக்கே ஒரு ஆச்சரியம் தாங்கவில்லை! என் கதையைக்கேள்;

“என் பெற்றோர்களும் கவலைப்படுகிறார்கள். நானோ படித்தவள். என் மனோவேகத்தை என்னால் அறியமுடிகிறது. ‘மேல் நாடுகளில் எத்தனையோ பெண்கள், பருவகாலத்தில் விவாகமாகாதவர்கள், அவர்கள் வாழ்நாட்கள் முழுமையும், காலம் கடந்த, கன்னிகைகளாகவே கழிக்கிறார்கள்’ என்று படித்திருக்கிறேன். எதுவும் காலாகாலத்திலானால்தானே இன்பம் உண்டு! என் கவலை சொல்லிமுடியாது. அதனால்தான் இங்கே வந்தேன். உன்னைப் பார்த்துக் கொண்டே குழம்பிக்கொண்டிருந்தேன்.

இன்று என் தகப்பனாரும் வரன் தேடப் போயிருக்கிறார். அவரும் இந்த வலைஞன் மாதிரி இன்பத்துடன் வீடு வரவேண்டும்! அவர் வீசும் வலையில்தானே என் வாழ்க்கை பின்னப்பட்டிருக்கிறது! அவர் வலையில் இன்று நல்ல சுருமீன்—இல்லை,— முத்து மாணிக்கமுமாய் விழவேண்டும்!

நீ கொடுத்த, அதாவது உன்னைப் பார்த்து நான் அடைந்த இந்த இன்பம் இன்று முத்தாய் மலர்ந்து, என் இதயமாணிக்கமாய் அமையவேண்டும். பிறகு என் வாழ்க்கைப் படகும் ஆனந்தமாய்த் தானே செல்லும்!

இந்த அலைகளின் ஒலி சற்றுமுன் என் காதில் கொட்டு மேளமாய் முழங்கிற்று! உடனே ஓடிவந்து இரு கரங்களாலும் வாரி அணைய வந்தேன். ஆனால் நான் வந்ததும் வராததுமாய் ஒரு அலை என்னைத் தழுவி விட்டுச் சென்றுவிட்டது!''

இதைச் சொல்லுமுன் அவள் உடம்பு புல்லரித்தது! மற்றோர் அலை அவள் சிற்றாடையை நனைத்துவிட்டுச் சென்றது. மெள்ளக் குனிந்து துணியின் தலைப்பைப் பிழிகிறாள்.

எனக்கு யுவனின் ஞாபகம் வந்தது. அவன் பக்கம் திரும்பினேன். அவன் எழுந்திருந்த இடத்திலேயே நின்றுகொண்டு ஏதோ யோசனை செய்துகொண்டிருந்தான்.

அவன் மனதுக்குள்; ''எங்கள் குடும்பமும் பொருளாதார நிலையில் மத்திய வகுப்பில் சேர்ந்த ஒன்று. என் தகப்பனார் குமாஸ்தா உத்தியோகத்திலிருந்தே என்னைப் படிக்க வைத்துவிட்டார். முதலில் நான், இதுவரை படிப்பேனென்று அவர் நினைத்திருப்பாரா? கடலில் அலை ஓய்ந்த பிறகு வலைஞன் கட்டுமரங்களைச் செலுத்துவோமென்று காத்திருக்கமுடியுமா? வாழ்க்கையில் வரும் ஒவ்வொரு சம்பவத்தையும் நான் தைரியமாய் ஏற்கவேண்டும். இன்றுநான் ஏற்காவிட்டால் நான் ஒரு கோழைதான்! இளமையின் இன்பம் மாறுமுன் உலகத்தை அனுபவிக்க வேண்டுமல்லவா! 'பருவத்தே பயிர் செய்!' என்று நான் அரிச்சுவடியில் படித்திருக்கிறேனே! அப்பா என்னை வீட்டிலிருக்கச் சொன்னார். நிலையான உத்தியோகமில்லாமல் விவாகம் செய்துகொள்ள இஷ்டமில்லை. இங்கு ஓடிவந்தேன்.

இந்தக் கடற்கரையில் நான் கண்டவைகள் என்னை என்னவோ செய்கின்றன. பார்த்தாலே பயங்கரமாயிருக்கும் இந்தக் கடலில் வெகு தூரம்போய்க் கொண்டுவரப்படும் மீனும் முத்தும் விலைமதிப்பற்றனவாயில்லையா? உலகத்தில் என்னைப்போல் எத்தனையோ பட்டதாரிகள்! நான்தானே தைரியமாய்ச் சமுதாயத்தில் நிரந்தரமான என் வாழ்க்கையைத் தேடி அமைத்துக்கொள்ள வேண்டும்?''

ராமன் இங்க்

மிகச்சிறந்த பௌண்டன்பேன் இங்க்

12 வருஷ சேவையினால் ஆயிரக்கணக்கான யுவர், யுவதிகளின் நன்மதிப்பைப் பெற்றுள்ளது.

⊕

நீங்கள் அதை உபயோகித்தீர்களா?

⊕

அது எப்பொழுதும் போல உயர்ந்த தரமுள்ளது

⊕

எல்லா இடத்திலும் கிடைக்கும்.

⊕

REGAL PRODUCTS Ltd.

Royapettah: P. B. 663:

MADRAS-14

என்று நினைத்தவனின் எண்ணம் தடைபட்டது!

மரகதம் சிற்றாடையைப் பிழிந்துகொண்டே இந்த யுவனிருக்கும் பக்கமாய்த் திரும்பி, எதிரில்வரும் பாக்கியத்தைப் பார்த்து:

“பாக்கியம்! பீச்சுலேகூடவா தவனம், கனகாம்பரம், விற்கவந்துட்டே?” என்றாள்.

“இல்லீங்கோ அம்மா! அதோ அவரு வருறாரு. மீனெல்லாம் கூடையிலே, மார்க்கட்டுக்கு எடுத்துக்கிட்டுப் போகணுங்க. நீங்க கூட, என்ன இங்கே காத்துவாங்க வந்துட்டீங்களே!”

“திருவல்லிக்கேணி வந்தேன், அப்படியே......” முடிப்பதற்குள் மரகதத்தின் பேச்சுத் தடைபட்டது!

மாணிக்கமும், மரகதமும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்!

* * * *

மாணிக்கத்தின் மனதில் “இந்தப் பெண் யார்? முகம்கூட எங்கோ அறிமுகமானதுமாதிரி தோன்றுகிறதே?” என்ற கேள்விகள் எழும்பின!

மரகதத்தின் உடம்பு சிலிர்த்தது! அவளும் ‘நான் கல்லூரியில் படிக்கும்போது இவரை எங்கோ பார்த்த சாயலாயிருக்கிறதே? இவர் ஏன் என்னை இப்படி உற்றுப் பார்த்தார்? இவர்தான் மாணிக்கமா?......இருக்காது......அப்பா அவரைத்தானே பார்க்கப் போயிருக்கிறார்.........அவராயிருந்தால், இப்படி இங்கே தனிமையில் வர நியாயமில்லையே? இந்நேரத்தில் நண்பர்களோடு விளையாடவல்லவா போயிருப்பார்! பீச்சுக்கு வரும் எத்தனையோ பேர்களில் இவரும் ஒருவராக இருக்கலாம்!

ஆனால், என் உள்ளம் இவரைப் பார்த்தவுடன் ஒருவித உணர்ச்சியைக் கிளப்பியதே! எனக்கு வயது வந்த பிறகு யாரையாவது அசப்பிலே பார்த்துவிட்டால் என் வெட்கம் என்னை என்னவோ செய்துவிடும்! என் உடைகள், அலங்காரங்கள், எல்லாம் சரியாக இருக்கின்றனவாவென்று ஒருமுறை பார்த்துக்கொள்வேன். என் வசீகரத்தை நினைத்து இன்பக் கேணியில், மனதுக்குள் நீராட ஆரம்பித்துவிடுவேன்! இது பெண்களுக்குள்ள உணர்ச்சிதானே!

இப்பொழுது ஒரு சக்தி விவரிக்க முடியாமல் என்னை அழுத்துகிறது! எனக்கே வெட்கமாயிருக்கிறதே!” என்று கொடிக்குள் நினைத்தவள். “அதோ வந்துவிட்டது பார் கட்டுமரம்!” என்று பாக்கியத்திடம் சொல்லிக்கொண்டே சமுத்திரத்தைப் பார்த்தாள்!

பழனியின் கட்டுமரம் கரைக்குவந்தது. வேடிக்கை பார்க்க அநேகர் அதைச் சுற்றிக் கூடினார்கள். அந்தக் கூட்டத்தில் மரகதமும் மாணிக்கமும் பக்கத்தில் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தார்கள்!

இந்தச் சேர்க்கை எதிர்பாராமல் நடந்ததுதான்! பார்த்த எனக்கும் ஆச்சரியம் தாங்கவில்லை!

பலவித வர்ண மீன்களைப் பழனி பாக்கியத்தின் கூடையில் சோமாறிக் கொட்டிக்கொண்டிருக்கிறான். மரகதத்தின் புருவங்கள் பாக்குக் கடிக்கும் நேரம் கூடி விலகின! கூட்டத்தோடு கூட்டமாய் நின்றுகொண்டிருந்த மாணிக்கமும் பக்கத்தில் மரகதத்தைப் பார்த்துத் திகிலடைந்தான்! அவனை அறியாமல் ஒரு மெய்சிலிர்ப்பு உண்டாயிற்று!

பழனியின் வலையில் சிக்கிய மீன்களைக் கூடையில் சோமாறிக் கொண்டிருக்கும்போது, மாணிக்கமும், மரகதமும் ஒரு வலையில் சிக்கிக்கொண்டு திகைக்கிறார்கள்!

மரகதம் தன் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு சீக்கிரம் வீட்டுக்குப் போகவேண்டுமென்று தீர்மானித்தாள். அவள் மணலை நோக்கி நடக்கிறாள். அப்பொழுதுதான் பீச்சு ஓரமாயுள்ள ஆயிரக்கணக்கான மின்சார விளக்குகள் பளிச்சென்று மின்னிக்கொண்டு ஜ்வலிக்க ஆரம்பித்தன!

மரகதம் தனக்குள், ‘சந்தோஷமாய் உட்கார்ந்திருந்தேன். அவர் பார்த்த பார்வை என்னை வெலவெலக்க அடித்துவிட்டதே! எனக்குப் பயமாயில்லை, ஆனால் அந்தப் பார்வை...? இது என் வயதின் கூற்றுத்தான் இல்லாவிட்டால் அவர்...!’ என்று குழம்பிக்கொண்டே வருகிறாள்!

அதற்குள் பாக்கியம், “நான்போய் வறேன்: அம்மா! விளக்கு வைச்சுடுச்சு. சீக்கிரம் விட்டுக்குப் போங்க, இந்த வயசிலே ஒத்தையிலே இங்கேயெல்லாம் வரக்கூடாது!” என்று சொல்லிக்கொண்டே ஒய்யாரமாய்ப் பழனியுடன் குப்பத்தை நோக்கிப் போகிறாள்!

மாணிக்கம் என்னவோ நினைத்துக்கொண்டே தண்ணீர் ஓரமாய் மெள்ள வடக்கே பார்த்து நடந்துகொண்டிருந்தான்! மரகதத்திற்குப் பழனியையும், பாக்கியத்தையும் பார்த்தவுடன் ஒரு ஏக்கம் பற்றிக்கொண்டது!

‘வாழ்க்கையின் இன்பம் சேர்க்கையில்தானிருக்கிறது. பழனியின் களைப்பு பாக்கியத்தைக் கண்டவுடன் தீர்ந்துவிட்டது. பாக்கியத்தின் பாக்கியம் இதோ அவர்கள் இருவரும் ஒய்யாரமாய்ப் போகிறதில்லவா தோன்றுகிறது! அழகாக அமைந்துள்ள உல்லாசப் பாதை, வரிசையான மின்சார விளக்கு, ரம்யமான இந்தக் கடற்காற்று, இந்தத் தம்பதிகளின் குதூகலமான நடை, எல்லாம் என்னை என்னவோ செய்கின்றன!

என் மனதில் பதிந்து கிடந்த தாபத்தை இன்று இந்தக் கடல்தான் தணித்தது! ஆனால் மறுபடியும் என்னை ஏதோ ஒரு பாரம் மனதில் அமுக்குகிறது! நானும் வீட்டிற்குப் போகவேண்டும். போகுமுன் இந்தப் பேரிகையின் ஒலியுடன் குதித்துவரும் அலைகளை ஒருமுறை பார்த்துவிட்டுப் போகிறேன்!' என்று நினைத்துத் திரும்பினாள். அப்பொழுது வானொலியில் வாத்தியக்கச்சேரி ஆரம்பமாயிற்று!

எதிரில் அலைகள் தாவிக்கொண்டு செல்கின்றன. அப்பொழுதுதான் பூர்ணவடிவுடன் சந்திரன், தன் இன்பக் கிரணங்களை வீசிக்கொண்டு கிளம்பினான். அவனை எதிர்கொண்டழைப்பதுபோல் அலைகள் போகின்றன! அந்த நீலக்கடல் ஒரு பெரிய கல்யாணமண்டபமாய்க் காட்சியளித்தது! 'கலகல' வென்ற சலங்கை ஒலியுடன்கூடிய அலைகள் சபையில் நடனமாடுவதுபோல் தோன்றின!

மரகதத்தின் மனதில் என்ன தோன்றியதோ! 'கிடு, கிடு'வென்று தண்ணீர்வரை வேகமாகவந்தாள். அவள் பிடிக்கவந்த அலை இன்னும் கணநேரத்தில் முழங்கிக்கொண்டு வந்துவிடும்!

சற்றுத்திரும்பினாள். கொஞ்சதூரத்தில் அவள் தகப்பனாரும், நடுவில் மாணிக்கமும் இன்னும் யாரோ ஒருவரும்—அவர் யாருமில்லை; கனகசபைதான்—வருவதைக் கண்டாள்!

அமுதகலசத்தைத் தலையில் தாங்கிவருவது போல் கும்பம் கும்பமாய், தன் முடியை உயர்த்திக்கொண்டு 'கல கல' வென்ற சத்தத்துடன் ஒரு அலை வந்து சரேலென மரகதத்தின்மேல் வீசிற்று! மரகதம் ஆனந்தப் பூரிப்பில் தலைகுனிந்து சமுத்திரராஜனை வணங்கினாள்! அவள் உடம்பு சிலிர்த்தது!

அதற்குள் சுந்தரம் "அம்மா! மரகதம்!" என்றார்.

தந்தையைப் பார்க்கக் குனிந்த தலையை நிமிர்த்தியவள், பொங்கும் அலைகளினூடே கிளம்பும் பூர்ண சந்திரனுக்கும் அவளுக்குமிடையே, அவள் உள்ளத்தின் மாணிக்கத்தைக் கண்டாள்! ●

குருட்டுத் தெய்வம்

எம். எஸ். கமலா

அப்பொழுதுதான் இரவு சாப்பாட்டை முடித்துக்கொண்டு சுந்தரேசன் ஜன்னலருகிலுள்ள சாய்வு நாற்காலியில் சாய்ந்து வெற்றிலைபோடத் தொடங்கினான். தெருவில் வெள்ளி ஊற்றைப்போல் பாயும் நிலா ஒளியில் எதிர்வீட்டுக் குழந்தைகள் களிப்புடன் விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் அவன் மனதிலும் ஏதோ தோன்றியது. சென்ற வருடம் நம் செல்வன் ராஜு காலன் வீடுசெல்லாமலிருந்தால் அவனும் இப்படித்தானே விளையாடுவான் என்று தோன்றவே அவனையறியாது அவன் கண்கள் ஈரமாயின. கையில் சுருட்டின வெற்றிலையை வாயில்போட மறந்து, கண்கள் சிறுவர்களின்பால் வெறித்து நிற்க, கற்சிலைபோல் சாய்ந்திருந்தான்.

கணவன் தனக்காகக் காத்திருப்பாரென்று அவசர அவசரமாய்த் தன் வேலைகளை முடித்துக்கொண்டு பால் கோப்பையுடன் வந்த ருக்மணி சுந்தரேசனைப் பார்த்துத் திடுக்கிட்டவளாய், "என்ன? உங்களை மறந்து யோசனை செய்துகொண்டிருக்கிறீர்கள்?" என்று பால் கோப்பையை அலமாரியில் வைத்தாள். அவன் பதில் பேசவில்லை. அவன் எதைப் பார்க்கிறானென்று அவளும் ஜன்னலுக்கு வெளியில் தன் பார்வையைச் செலுத்தினாள். புதிர் விளங்கிவிட்டது. அவள் முகமும் சுருங்கியது. மெள்ளத் தன் கணவனின் தோளில் வலக்கையை ஊன்றிக்கொண்டு நெடுமூச்செறிந்தாள். நிறைமாத சூலியின் சோர்ந்த முகம் சுருங்கித்தெரியவே, அவன் தன் கலக்கத்தை அடக்கிக்கொண்டு அவள் கையை வருடினான். எனினும் அவன் கண்கள் தெருவில் தானிருந்தன.

மகவைப் பறிகொடுத்த பெற்றோர்களின் துக்கம் ஒன்றேதானே! ஆனால் நம்மவர்கள் மாத்திரம் மூடப்பிரசாரம் செய்வதில் கெட்டிக்காரர்கள். எந்தத்தத்துவம் எப்படியிருந்தாலும்சரி, சொல்லில் தனிவழியே வந்து நிலைத்துப் போன சில முதுரைகள் விஞ்ஞானமும் அறிவும் விரிந்த இந்தக் காலத்தில்கூட, தகர்த்தெறிய முடியாமல் நின்றுகொண்டிருக்கின்றன. 'பெண்ணா பெற்றவயிறு துடிக்க, அவன் ஆண்தானே! அவனுக்கென்ன?" எப்பேர்ப்பட்ட சொல்லு? ஒரு சிசுவின் ஜனன காரணன் தந்தை; ஜனன காரணி தாய். வித்து ஊன்றி முளைக்கச் செழிப்பான நிலம் தேவை; வெண்ணெய்க்குத் தொன்னையாதாரம்: தொன்னைக்கு வெண்ணெயாதாரம் என்றாற் போலிருந்தும் 'சுகதுக்கங்களும், சொல்லும் செயலும், ஆணுக்குத் தனி, பெண்ணுக்குத் தனி' என்று எந்தச் சுயநலவாதியோ சிரஞ்சீவியாய் விதைத்துச் சென்றுவிட்டான்.

ருக்மணியின் கையை வருடிக்கொண்டிருந்த சுந்தரேசன் அவள் கையைப் பிடித்துக்கொண்டான். அச்சமயம் தெருக்கோடியில் அதி இனிமையாய், இயற்கையாய்ப் பாடுவது கேட்டது. இருவர் காதுகளும் பாட்டைக் கேட்டன.

"அந்தகராய்ப் பிறந்தோர்க்கு
அவனியில் சுகமுண்டோ?
அன்னையிருந்தாலும்... பெற்ற
அன்னையிருந்தாலும், வாழ்வு
அவதி தானய்யா;"

சுந்தரேசன் ருக்மணியைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தான். அவள் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது.

"ருக்கு!" என்று பரிதாபமாய் அவளைப் பார்த்து மற்றொரு கையால் இடையைச் சுற்றி வளைத்தான்.

"பாட்டைக் கேட்டீர்களா?" என்றாள் குரல் கரகரக்க, குற்றவாளியைப் போல். அவன் பெருமூச்செறிந்தபடி தலையை

அசைத்தான். மறுபடியும் பாட்டின் ஒலி. இருவரும் நடுங்கியபடியே காதுகளைத் தீட்டிக்கொண்டனர்.

"இருளே உலகம்
இன்னலே இன்பம்
கொடுமையே வாழ்வு
கோலே ஆதரவு"

என்ற சரணம் அவர்களைக் கலகயக்கச் செய்தது. சுந்தரேசனின் கண்களிலிருந்து அறுந்த முத்துச் சரம்போல் நீர் வடிந்தது. ருக்மணியின் முதுகில் யாரோ பளீரென்று அறைந்தாற்போல் இருந்தது. "அம்மா!" என்று இடையைப் பிடித்துக்கொண்டு, "நீங்கள் போய்,

அவர்கள் யாரென்று பாருங்கள்" என்ருள் சோர்ந்த குரலில்.

"உனக்குப் பைத்தியமாருக்கு?" என்ருன் விம்மலை அடக்கிக்கொண்டே.

"பைத்தியமாயிருந்துவிட்டால் கவலையில்லையே! மனச்சாட்சிதானே குத்துகிறது. சந்தனத்தில் கலக்கவேண்டிய பன்னீரைக் கடைசியில் சாம்பலில் கரைத்து விட்டேன். ஒரு ஐந்து நிமிஷம் என்னை அடக்கிக்கொள்ளச் சக்தியற்றதால் வந்த வினைதானே! இப்பொழுது......"

"..................."

"இப்போ........."

"?.........??.........???"

"ஆண்டுகள் கணக்கில் அடக்கிக்கொண்டு........." என்னும்போது

"கண்ணிழந்தவர்கள்
காவியத்திலிடம்பெற்று,
கண்ணிருப்போரின்
கருத்தைக் கவர்ந்தனரே!"

என்று அருகில் கேட்டது, "நீங்கள் தயவுசெய்து எனக்காகப் போய்ப்பார்க்க மாட்டீர்கள்?" என்றவள் மறுபடியும் "அம்மா!" என்று வீர் என்று எழுந்து போய், தன் படுக்கையில் சாய்ந்தாள். சுந்தரேசன் சுவரைப் பிடித்துக் கொண்டு நின்ற சிறு குழந்தை சறுக்கி விழுந்ததைப்போல் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். தன்னைச் சமாளித்துக் கொண்டு தெருவுக்குச் சென்ருன். அங்கு இப்பக்கமும், அப்பக்கமும் திரும்பிப் பார்த்தான். தெருத் திருப்பத்தில் ஒன்றையொன்று பற்றிக்கொண்டு ஊர்ந்து செல்லும் நிழல்போலத் தெரிந்தது. சட்டென்று வாயிற்படியை விட்டி றங்கிச் சென்ருன். அவன் தெருக்கோடிக்குச் செல்லுவதற்குள் அந்த நிழல் மறைந்து விட்டது. எங்கேபோய்த் தேடுவது? யார் பெயரைச் சொல்லி அழைப்பது? எவரைக்கேட்பதென்று தெரியாமல் தயங்கி நின்ருன், உலகமே சுற்றுவதுபோல் தோன்றியது அவனுக்கு. வேகமாய் வீட்டுக்குச் செல்ல அடியெடுத்துவைத்தான். நடந்தானே? இல்லையோ அவனுக்கே தெரியாது. யாரோ அவனைப் பிடித்துக்கொள்வதுபோல் தோன்றியது, அப்படியே கண்களை மூடினான்.

* * * *

ருக்மணியின் மனதில் சொல்லறியா வேதனை, பெருமூச்சு விட்டபடியே எதிரில் சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள். அங்கே சுவரில் மாட்டப்பட்டிருந்த இரண்டு வயது குழந்தையின் படம் அவளை இன்னும் வேதனையிலாழ்த்தியது. 'உம்' என்று மெள்ளப் புரண்டு படுத்தாள், அங்கிருந்த மற்றொரு படம் சுமார் 10 வயதுச் சிறுவன், மோஹனப் புன்னகை செய்தவாறு சிறு குழந்தை ஒன்றை எடுத்துக்கொண்டு நின்றிருந்தான். அதைப் பார்த்ததும் அவள் மூளை விமான வேகத்தில் சுழலத் தொடங்கியது. சுழலும் மூளையில் அந்தப்பாட்டு ஒருபுறம் எதிரொலித்துக் கொண்டிருந்தது. அவள் அந்தப் படத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். அதற்குள் தோன்றிய நிழல் சித்திரங்கள் அவளைச் சித்திரவதை செய்யத் தொடங்கின.

சுமார் பன்னிரண்டாண்டுகளுக்கு முன் இதேபோல் பால்பொழியும் நிலவில் ஒரு சிறிய வீட்டின்முன் ஒரு குதிரை வண்டி நின்றிருந்தது. தான் மூன்று வயதுப் பாலகனுடன் வண்டி ஏறினாள். அவளுக்குப் பின் சுந்தரேசன் ஏறினான். வண்டியின் பாதுகாப்புக் கம்பியை இழுத்துப்போட்டு, "சுந்தரேசா! கண்ணனை விட்டு இருக்கமுடியாதுபோல் தோன்றுகிறது. அவனை அழைத்துப் போகாதே!" என்ருர் வண்டியின் கூண்டைப்பிடித்துக் கொண்டு நின்றிருந்த கிழவர், குரல் தழுதழுக்க

"அப்பா! நீங்கள் என்னசெய்வீர்கள்? அம்மாவா இருக்கிருள்? நீங்கள் வெளியில் சென்றபோது அவனை வைத்துக்கொள்ள. இன்னும் இரண்டு மூன்று வருஷ சர்விஸ்தானே இருக்கிறது. அதை விட்டு வந்துவிடுங்களேன். எல்லோரும் சேர்ந்து கூழோ கஞ்சியோ ஒன்ருக் குடிப்போம்."

"சுந்தரேசா! இன்னும் எட்டு வருஷம் வேலை பார்க்கலாம். அங்கங்கள் அசைந்தால்தான் அரைவயிறு கஞ்சி குடிக்கும் நிலையிருக்கும்... நா...ன் வேலையையும் விட்டு உனக்குப் பாரமாய் வந்திருப்பதா? முடியாதப்பா! இனி நம் கண்ணனுக்காக இன்னும் நான்கு வருடம் வேலையிலிருக்க

வேண்டும். வாழ நினைப்பது எதற்காக என்று நினைக்கிறாய்? அவனுக்காக. இல்லாவிட்டால் உங்க அம்மாள் இல்லாத உலகில் எனக்கென்ன வேலை சொல்லு?" என்று தோளில் தொங்கிய துவாலையால் கண்களைத் துடைத்துக்கொண்டார்.

வண்டிக்குள்ளிருந்த ருக்மணியின் மனம் உருகியது. பெரியவர் கண்கலங்கியதைப் பார்த்து அவள் நாக்கசைந்தது. "நீங்கள் கவலைப்படாதீர்கள். கண்ணன் என் குழந்தை. என் குழந்தையை நான் பார்த்துக்கொள்ளாமல் யார் பார்த்துக்கொள்வார்கள்? உங்களுக்கு லீவ் கிடைக்கும்போதெல்லாம் நீங்கள் வந்துபார்த்துப்போங்கள். எங்களுக்கு முடிந்தால் நாங்களே கண்ணனை அழைத்துவந்து காட்டிச் செல்கிறோம்" என்றாள் தைரியமாய். கிழவர் நிமிர்ந்து வண்டிக்குள்ளிருந்த நாட்டுப் பெண்ணைப் பார்த்தார். கண்ணாடியைப்போல் மின்னும் அவள் கன்னங்களைத் தட்டிக்கொண்டிருந்தான் கண்ணன். "வேண்டாம் எப்படியோ கஷ்டப்பட்டுக்கொண்டாயினும் அவனைக் காப்பாற்றிக் கொள்கிறேன். அவனை எவர் பொறுப்பிலும் விட ஒப்பமாட்டேன்" என்றார் சொற்களில் அழுத்தமும் குரலில் நெகிழ்ச்சியும் தோன்ற.

"அப்பா! நீங்கள் ஏதோ பாசத்தால் சொல்கிறீர்கள். சின்னஞ்சிறு குழந்தையை வைத்துக்கொண்டு எப்படியப்பா ஆபீசுக்கும் சென்று, அவனையும் கவனித்துக்கொள்வீர்கள்? நானும் ருக்குவுமாய், கண்ணை இமை காப்பதுபோல்காப்போம். கவலைப்படாதீர்கள். அம்மாவுக்கு நாங்களும் செய்யக் கடமைப்பட்டுள்ளோம்." என்று, "ஊம். வண்டியை விடப்பா! நாங்கள் வருகிறோம். கடிதம் போட்டுக்கொண்டிருங்கள். அம்மாவையே நினைத்துக்கொண்டிருக்காதீர்கள்." என்றான். வண்டி ஓடத் தொடங்கியது. அவன் சொற்கள் காற்றில் கரைந்துகொண்டிருந்தன. கிழவரின் கண்கள் வண்டி சென்ற திசையையே உற்றுப் பார்த்தபடி இருந்தன.

* * *

தாலூகா ஆபீஸ் குமாஸ்தா ரகுநாதய்யருக்குச் சுந்தரேசன் ஒரே பிள்ளை. உரியகாலத்தில் பிறந்த அந்தப் பிள்ளையைப் பட்டதாரி ஆக்கவேண்டுமென்று அவர் ஆசைப்பட்டார். அவர் ஆசை இண்டர்வரையில்தான் கைகூடிற்று. அதே அவர் சக்திக்குமேல் போய்விட்டது. பத்தொன்பது வயதில் இண்டரில் தேறிய சுந்தரேசனைக் கலெக்டராபீஸில் குமாஸ்தாவாகச் சேர்த்துவிட்டார். படிப்பும், உத்தியோகமும் வந்துவிடவே அவன் கையைப் பிடிக்க ருக்மணியும் வந்தாள். ருக்மணி குடித்தனத்திற்கு வந்து இரண்டாண்டுகள் ஆயின. கூடியமட்டும் தங்கள் நிலைமைக்கேற்றவாறு எல்லாவற்றையும் சரிகட்டிக்கொண்டு போகும் நாட்டுப்பெண்ணாய்ச் கிடைத்ததில் சுந்தரேசனின் தாய் மனம் பூரித்துப்போனாள்.

லீலாவிநோதனை விதி விளையாடுறானோ? அல்லது பொறி இருந்தால் விடாதென்கிறார்களே' மூதாட்டிகள் அதுபோல ருக்மணி கருத்தரிப்பதற்குப் பதிலாய் அவள் மாமியார் கருத்தரித்தாள். அக்கம் பக்கத்தாரின் அச்சரியம், அந்தம்மாளுக்குச் சற்றே தலை இறக்கமாயிருந்தாலும் என்ன செய்வாள்? தாய்மை என்ற உயரிய விலையற்ற ஆபரணம் தரித்த பெருமை அந்தம்மாளின் முகத்தில் பொலிந்துகொண்டுதானிருந்தது. ஒரு சிலர், "ஐம்பத்தைந்து வயது ஒருவயதா பொண்ணாப் பொறந்தவளுக்கு? பெத்த வயிறு தானே!" என்றார்கள். மற்றும் சிலர் "வானம் இருக்கும்வரை மழையும், மஹராஜன் இருக்கும்வரை பிள்ளையும்" என்ன அதிசயம்' என்றார்கள். யார் என்ன சொன்னால் என்ன? இருபத்திரண்டுவயது நிரம்பிய சுந்தரேசனுக்குக் கண்ணன் தம்பியாய்ப் பிறந்தான். எத்தனையோ கவலைகளுக்கிடையில் அந்தச் சிறு குடும்பத்தில் கண்ணன் பிறந்தது அனைவருக்குமே ஆனந்தத்தை யளித்தது.

குறுகுறுத்த பார்வையும், கரிய கூந்தலும், கன்னக் கதுப்பும், உருட்டிவிட்டாற்போல் கைகால்களும், அழகிய எலுமிச்சம்பழ நிறமும்கொண்ட கண்ணனைப் பார்த்ததும் ருக்மணிதான் "அம்மா! நம் வீட்டில் கண்ணன் பிறந்துவிட்டான்" என்று சொன்னாள். அதே கண்ணன் பெயர்தான் அவனுக்கு இடப்பட்டது. ஆறுமாதம் மாமியாருக்கு உபசரணை செய்ய இருந்துவிட்டு ருக்மணி தன் கணவனிருக்கும் இடம் சென்றாள். அவளுக்குக் கண்ணனை விட்டுப்போக மனமில்லை. அவன் அழகாய் முகம்பார்த்து சிரித்துக்கொண்டு தவழ்ந்துவரப் பிரயத்தனம் செய்துகொண்டிருந்தான். அல்லும் பகலும் கண்ணன் நினைவே. அவனைப்

போல் தனக்கொரு கண்ணன் பிறந்தால் தன் மாமியார் தன்னிடம் கேட்கமுடியுமா? இப்படி சுக சொப்பனங்களைக் கண்டு கொண்டிருந்தாள்.

அவள் வந்த இரண்டு மாதத்திற்கெல்லாம் மாமியாருக்கு உடம்பு சரியில்லை என்று கடிதம் வந்தது. "கண்ணன் அலைந்து போவான் நான் ஊருக்குப்போய் மாமியாருக்குச் சகாயமாயிருக்கிறேன்" என்று சுந்தரேசனிடம் சொன்னாள். சுமார் பத்து மாதகாலம் பிரிந்திருந்த மனைவியை அனுப்ப அவன் விரும்பவில்லை. அவனும் லீவ் எடுத்துக்கொண்டு அவளுடன் செல்லத் தயாராயிருந்தான். இவன் லீவ் எடுப்பதற்குள் மாதம் ஆறு மறைந்துவிட்டது. அவன் அன்று புறப்படத் தயாராயிருந்தபோது,

"சுந்தரேசா! உங்கம்மாள் படுத்த படுக்கையாகிவிட்டாள். நீ ருக்மணியுடன் ஒரு தரம் வந்துபோனால் தேவலை" என்று ரகுநாதய்யரிடமிருந்து வந்த கடிதம் அவனை அதிரச்செய்தது. ருக்மணியுடன் புறப்பட்டுச் சென்றான்; கட்டிலில் படுத்திருக்கும் தாயைக் கண்டான்; விக்ரகம்போல் தாயின் மார்பில் சாய்ந்துகொண்டிருக்கும் கண்ணனைப் பார்த்தான். கண்ணன் அழகு அவனைக் கவர்ந்தாலும் தன் அன்னை படுத்திருப்பதற்கு அவன்தானே காரணமென்று தோன்றியது. "இவன் பிறக்கவில்லையென்று......" என்று முணுமுணுத்தவன், தாய் தன் உதட்டையே உற்றுப் பார்ப்பதைப் பார்த்து அடக்கிக்கொண்டான்.

ருக்மணி கண்ணனை வாரிஎடுத்து அணைத்து முத்தமிட்டாள். சுந்தரேசன் தாயருகில் அமர்ந்து பரிவுடன் தாயை அணைத்துக்கொண்டான். தாய் மைந்தனிடம் ஏதோ மெள்ளச் சொன்னாள். 'என்ன?' என்று திடுக்கிட்டவன் ருக்மணியின் கையிலிருக்கும் கண்ணனைப் பார்த்தான்.

எந்த நோய்வந்தாலும் பிழைப்பார்கள். 'எலும்புருக்கி' என்ற பெயரைச்சொன்னவர்கூடப் பிழைக்காத நோய். அத்தகைய கொடிய நோய் சுந்தரேசனின் தாயை ஓராண்டு பிடித்து உலுக்கி எமனுலகம் அழைத்துச் சென்றது. தன் தாயின் ஈமச்சடங்குகள் முடிந்தபின் கண்ணனை எடுத்துக்கொண்டு புறப்பட்டபோதுதான் ரகுநாதர் துடிதுடித்து நின்றது.

* * * *

சென்னை வந்தடைந்த சுந்தரேசன் குழந்தை கண்ணனுடன் சுகமே வந்து சேர்ந்ததைத் தந்தைக்கு அறிவித்தான். ருக்மணி கண்ணனைத் தன் கண்மணி போல் பார்த்துக்கொண்டாள். அவனுக்கு எழுத்துக்களைச் சொல்லக் கற்றுக்கொடுத்தாள். தன் மதலைச்சொல்லால் அவன் சொல்வதைக்கேட்டு ? கணவனும் மனைவியும் களிப்புறுவார்கள்.

"என்ன இருந்தாலும் நம் கண்ணன் மிகவும் கெட்டிக்காரன்" என்பாள் ருக்மணி சந்தோஷம் தாங்காமல். அச்சமயங்களில் சுந்தரேசனின் முகம் சுருங்கும். "நான் சொல்வது உங்களுக்குப் பொய்யாய்ப்படுகிறதுபோல் தோன்றுகிறது. "கண்ணு! உங் கண்ணுவுக்கு அந்தப்பாட்டைச் சொலவிகாட்டுடா !" என்பாள். கண்ணன் தன் இனிய குரலில்.

"கடற்கரைக்குச் சென்றேம் நாம்
களிப்புடன் விளையாடவே !
(வெண்) மதியோன் வட்ட வடிவமாய்
வெண்ணிலவுதன்னைப் பொழியவே !
அலைகள் அழகாய் மோதவே
அவசரமாய்ப் புரளவே"

என்பான். "என்ன இருந்தென்ன ருக்கு !" என்று கண்கலங்குவான் சுந்தரேசன். தன் போஷணையில் குட்டிகையாய் வளரும் கண்ணனைப் பார்த்து அவள் பெருமிதம் கொண்டால், அவன் அழமாட்டாத குறையாய்ச் சுற்றிவந்தான். அவ்வப்பொழுது ரகுநாதர் வந்து தம் அருமை ஆருயிர்க் கண்ணனைப் பார்த்துச் சென்றுகொண்டிருந்தார்.

காலதேவன் மூன்று அடிகள் எடுத்து வைத்தான் உலக வீதியில். கண்ணன் ஆறு வயதையும் தாண்டிவிட்டான். ஏழாவது படியில் நின்று எக்களிக்கும் உலகை லக்ஷியம் செய்யாமல் நின்றான்.

அன்று கண்ணன் வெகுசீக்கிரம் உறங்கிவிட்டான். ருக்மணி ஏதோ சஞ்சிகையைப் படித்துக்கொண்டிருந்தாள். சுந்தரேசன் ஆபீஸிலிருந்து அலுப்பாய் வீட்டிற்கு வந்தவன் கண்ணன் தூங்குவதைப் பார்த்து, "இத்தனை சீக்கிரம் தூங்கிவிட்டானே !" என்று "கண்ணு !" என்று தன் பையிலிருந்த பிஸ்கட் பாக்கெட்டை எடுத்தான்.

"அப்படியானால் நாளை கண்ணனை அந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிடுகிறீர்களா ?" என்று ஆவலுடன் அதை வாங்கிக்கொண்டாள்.

"ருக்கு ! தாய்க்கு மறுத்துக்கூறலாம். ஆபீஸில் அதிகாரியின் உத்தரவிற்கும் சால் ஜாப்சொல்லித் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால்... ஆனால்... மனைவி மஹாராஜியின் ஹுகுமைத்தள்ளி மன நிம்மதியுடன் வாழும் ஆடவன் உண்டா? ஆனால் ஒன்று. கண்ணனைப்பள்ளியில் சேர்ப்பதாயின் நீ உன் சில செலவுகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும். நம் சக்திக்குமேல் சம்பளம் கட்டவேண்டியிருக்கிறது."

"வீட்டில் வைத்துக்கொண்டு தினமும் அழைத்துப்போய் விட்டுவந்தால்..."

"அதற்கு வசதியில்லை. பள்ளிக்கூடத்திற்கும் நம் வீட்டுக்கும் ஒன்பது மைல் இருக்கிறது."

"வேறெங்காவது......?"

"வேறெங்கும் இல்லை..." என்று அவள் எண்ணத்தை வேருடன் பிய்க்கப் பிரயத்தினப்படுபவன்போல் பார்த்தான்.

"நம் குழந்தைக்குச் செய்வதைவிட என்ன அப்படி வந்துவிட்டது. என் செலவுகளை நான் குறைத்துக்கொள்ளத் தயார் என் கண்ணனுக்காக. நாளைக்கே கொண்டுபோய்ச் சேர்த்துவிடுங்கள். முக்கியமாய் அவனுக்குச் சங்கீதமும் கற்பிக்கச் சொல்லுங்கள்" என்றாள்.

"என்றும் நடக்கவேண்டுமே ருக்கு ! நாளையே நம் குடும்பம்..."

'மணமுமில்லை, மனைவியுமில்லை. மகனின் பெயர் மகாலிங்கமென்றானாம் ? என்பதுபோல்தானிருக்கிறது உங்கள் பேச்சு. அப்படி ஏதாவது...... (என்று வெட்கத்துடன் தலைகுனிந்துகொண்டு) எப்படினும் நம் முதல் குழந்தையான கண்ணனின் சுக சௌகரியத்திற்குப்பிறகுதான்" என்றாள். சுந்தரேசன் பெருமையுடன் அவள் முகவாய்க்கட்டையைப் பிடித்து நிமிர்த்தி, "உன்னைப்போன்ற மன்னியைப் படைத்த கண்ணனுக்குக் குறைவு என்ன ?" என்றான். அச்சமயம் கண்ணன் "அண்ணு !" என்று திரும்பிப் படுத்தான். அவள் கணவனின் கைகளை விலக்கிக்கொண்டு கண்ணனருகில் ஓடிவந்தாள்.

* * * *

கண்ணன் பள்ளியில் சேர்க்கப்பட்டு நான்காண்டுகள் ஆயின. அவன் பள்ளியில் அவன் அழகும் திறமையும் எல்லோரையும் கவர்ந்தன. சுந்தரேசனின் விருப்பப்படி அவனுக்குச் சங்கீதம் கற்றுக்கொடுத்தார்கள்.

சங்கீத உபாத்தியாயருக்குக் கண்ணனின் இனிய குரல் மிகவும் திருப்தியை அளித்தது. தம் திறமை முழுவதும் அவனுக்குச் சொல்லிக்கொடுத்தார். அவனும் ஒருமுறை சொன்னதும் பிடித்துக்கொண்டு பாடுவான். அவனுடன் அவன் வகுப்பில் 'உமா' என்றொரு பெண் சங்கீதம் கற்றுவந்தாள். அவள் கண்ணனை வெகு பரிவுடன் பார்த்துக்கொள்வாள். கண்ணனின்மேல் காற்றடிக்கக் கூடாது. தூசி படக்கூடாது துடிதுடித்துப் போவாள். அவளிடம் குரல் அழகும், குண அழகும் இருந்ததேயொழிய உடலழகு பெற்றவளல்ல. விடுமுறை நாட்கள் வந்தால் உமாவுடன் வருவான். உமா கண்ணனை அவன் வீட்டில் விட்டுத் தன் வீட்டுக்குப் போவாள்,

அன்று உமாவும் கண்ணனும் கோடை விடுமுறைக்காக வீட்டிற்கு வந்தனர். அச்சமயம் வீட்டில் சிறு குழந்தையின் அழுகைக் குரல் கண்ணனை ஆச்சரியத்திலாழ்த்தியது. "உமா! குழந்தையழுகிறதல்லவா?" என்று, "மன்னி!" என்றழைத்தான்.

"கண்ணா வா!! அம்பி பிறந்திருக்கான். ராஜு! அண்ணா வந்திருக்கான் பாருடா! செல்லமே!" என்று கொஞ்சினாள். உமா ராஜுவை வாங்கிக்கொண்டமர்ந்தாள். கண்ணன் அவளருகிலேயே அமர்ந்து குழந்தை ராஜுவின் தளிர்க்கரங்களைக் கன்னத்திலும் கண்களிலும் ஒற்றிக்கொண்டு முத்தமிட்டான். அவன் மெய் சிலிர்த்தது. தன் மன்னிக்கு...அன்புச் சொரூபியான தன் அண்ணனுக்குப் பிறந்த அருமைக் குழந்தை ராஜு "ராஜு!" என்று முகத்தை வருடினான். தோள்களைத் தடவினான். கால்களைக் கண்களில் ஒற்றிக்கொண்டு "யார்போலிருக்கிறான் உமா?" என்றான் ஆவலாய்.

"மன்னியைப்போல்" என்றாள்.

கண்ணனுக்குப் பெருமை தாங்கவில்லை தான் கற்ற பாட்டைக் குழந்தைக்குப் பாடினான். அவனின் தூய அன்பைக்கண்டு சுந்தரேசனும் ருக்மணியும் மனம் பூரித்து நின்றனர்.

வருஷம் ஒன்று ஆயினும் ருதுக்கள் ஆறு இருக்கின்றன. உதிரும காலம். தளிரும் காலம், மலரும் காலம் என்றெல்லாம், அதுபோல் மானிடன் ஒருவனாயினும் அவன் மனத்திடலில் எழும்பும் எண்ணக்கதிர்கள் எண்ணிலடங்கா, ஏட்டில் எழுதமுடியா.

* * * *

குழந்தை ராஜுவுக்கு இரண்டு வயது நிரம்பியது. வீட்டில் பொருளாதாரத்தில் நெருக்கடி ஏற்பட்டது. ருக்மணி மெள்ள, தன் கணவனைக் கடிந்துகொண்டாள். சுந்தரேசன் அதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் தன் கடமையைச் செய்துவந்தான், ருக்மணிக்குத் தாயன்பு மேலோங்கியது. தன் அருமை மைந்தனுக்குக் கைக்குக்காப்பும் இடுப்புக்கு அரைஞாணும் பண்ணிப்போட வேண்டுமென்று ஆசை தோன்றியது. தன்னிடம் சேர்த்துவைத்துள்ள பணத்தில் இரண்டு பவுன் வாங்கித் தருவதாகவும் சுந்தரேசன் இரண்டு பவுன் வாங்கிப்போட்டு ராஜுவுக்கு அரைஞாணும் காப்பும் பண்ணிப் போடவேண்டுமென்று கெஞ்சினாள். ஆனால் அவனுக்கு வசதியில்லையே! என் செய்வான்? காதில் விழாதவன் போலிருந்தான். அன்று அவன் இலைமுன் சாப்பிட உட்கார்ந்ததும் தன் பாடத்தை ஒப்புவிக்க ஆரம்பித்தாள். புன்சிரிப்புச்சிரித்துக்கொண்டே சாப்பிட்டேன் என்று பெயர் செய்து எழுந்தான். அவன் புன்சிரிப்பில் எத்தனை புண்ணின் நோவு இருக்கிறதோ அவள் கண்டிருந்தால்.........

"நீங்கள் எப்படியாவது இன்று பவுன் வாங்கிக்கொண்டுதான் வரவேணும்" என்றாள் வெற்றிலையைக் கொடுத்தபடியே.

"ருக்கு! என் சம்பளம் என்ன? மாதம் நமக்கு ஆகும் செலவு என்ன? என்பதை நினையாமல சொல்லுகிறாயே. எந்தச்செலவை குறைக்கமுடியும் சொல்?" என்று நிதானமாய் அன்பொழுகக் கேட்டான்.

"எனக்குத் தெரியாது. 'நம் ராஜுவுக்கு அரைஞாண் கட்டிப் பார்த்துத்தானாகவேண்டும்."

"ஆண் குழைந்தைக்கு நகை என்னத்திற்கு. கறுப்புககயிறே நன்றாயிருக்கிறது."

"காசு செலவாகிறதென்றால் கறுப்புக் கயிறுதான் நன்றாயிருக்கும். தாம்புக்கயிறு கூட நன்றாயிருக்கும். நான் ராஜுவுக்கு நகைபோட்டுப் பார்க்கவேண்டுமென்று எத்தனையோ சிக்கனமாய்க் குடுத்தனத்தை நடத்துகிறேன். இனி எதையும் குறைக்க முடியாது. என்ன செய்வேன்?"

"நான்மாத்திரம் எங்கிருந்து மீதம் பிடிக்க முடியும்? உன்னிடம்தானே எல்லாவற்றையும் கொடுக்கிறேன்."

"நீங்கள் நினைத்தால் என் குழந்தை...... நம் குழந்தைக்காக.........ஒரு காரியம் செய்தால்........."

"என்ன செய்யச் சொல்கிறாய்? எங்காவதுபோய், கொள்ளையடிக்கச் சொல்லுகிறாயா?"

"கொள்ளையடிக்கச் சொல்லவில்லை. ராஜூவுக்காக, கண்ணனுக்கு அனுப்பும் ரூபாய்களை ஒரு ஆறுமாதம் நிறுத்திவிட்டால்..."

"என்ன சொன்னாய்! ருக்மணி!! உன் வார்த்தையா? இது?? நீ பேசுகிறாயா? அல்லது......அன்றே அப்பாவிடம் என்ன சொன்னாய்? எங்களுக்குப் பிறக்கவேண்டியவன்......" உன் முதல்பிள்ளையை வஞ்சித்து ......என்றால் முடியாது. நான் எடுத்துவரும் போதே வேண்டாமென்றேன். ஒரு காரியத்தைச் சாதிக்க எத்தனை தியாகங்கள் செய்யவேண்டுமென்பதைப் பார்த்துக் கொள். நம்மை நாமே தியாகம் செய்து கொள்ள வேண்டியிருக்கும். அதை அன்று அறிந்துகொண்டவள்போல் பேசினாய். உன் செலவுகளைக் குறைத்துக்கொள்கிறேன் "என்றாய். ஆனால் இன்று......"

"ஆம். அப்பொழுது சொன்னேன் இப்பொழுது என்வயிற்றுச்சதைக்காக..அவனைப் பத்தாண்டுகளுக்குமேல் காப்பாற்றி ஆயிற்று. உங்கப்பாவேறு.........ஒரு ஆறு மாதம் உங்கப்பா அனுப்பட்டும். அதற்குப் பின்......"

"முடியாது ருக்கு : முடியாது"

"கண்ணன் உங்கள் குழந்தையல்ல. பங்காளி, என்பது நினைவிருக்கட்டும்" என்று சீறினாள்.

"இல்லை. அவன் என் மகன்தான். மூத்த சகோதரன் தந்தைக்குச் சமானமாவன் என்று சொல்வார்கள்.

"அப்படியென்றால்......"

"ஒன்றுமில்லையென்றுதான்......"

"நான் அன்று கண்ணனை எடுத்துவராதிருந்தால்......"

"அதுவேறு விஷயம். இப்பொழுது அதைப்பற்றிப் பேச்சு இல்லை" என்று கோட்டை மாட்டிக்கொண்டபடியே வெளியில்வந்தான், இவன்வரும் காலடி ஓசையைக் கேட்டு நடையில் நின்றிருந்த உருவம் ஒரு புறமாய் மூடியிருந்த கதவிற்குப்பின் ஒளிந்துகொண்டது. சுந்தரேசன் விறுவிறுவென்று நடந்துசென்றுவிட்டான். அவன் பின் தொடர்ந்துவந்த வார்த்தைகளை அவன் காதில் வாங்கிக்கொள்ளாவிடினும் ஒளிந்துகொண்டிருந்த உருவம் நன்றாய்க் கேட்டது.

"அந்தப் பங்காளிப் பாவி இருக்கும் வரை என் குடும்பத்திற்குச் சுகம் கிடையாது. கடவுளே! என்னையும் என் குழந்தையையும் எடுத்துச் சென்று. அவனுக்கே செய்து கொண்டு அழட்டும்" என்ற ருக்மணியின் சுடுசொற்கள் அந்த உருவத்தின் உடலைப் பிடித்து உலுக்கியது.

* * * *

இரண்டு நாட்களாய்ச் சுந்தரேசன் தன் மனைவியுடன் பேசாமல் யாரோ மூன்றுவது மனிதனைப்போல் சாப்பிடக் கூப்பிட்டால், போவது, இல்லையேல் தெருத் திண்ணையிலோ தன் அறையில் ஜன்னலருகிலோ அமர்ந்துவிடுவான். ருக்குவும் கடின மௌன விரதத்தைத்தான் கடைப்பிடித்தாள். யாராகிலும் தளர்ந்துகொடுத்தால்தான் சம்சாரத்தில் அமைதி ஏற்படும்போல் தோன்றியது. ஆபீஸில் நூறுரூபாய் 'லோன்' போட்டுப் பெற்றுக்கொண்டு, அன்று வீட்டிற்கு வேகமாய்வந்தான். அவன் வரவிற்காக மேஜைமேல் இரண்டு கடிதங்கள் காத்து நின்றிருந்தன. ஒன்று கண்ணனின் பள்ளியிலிருந்து, மற்றொன்று கண்ணனிடமிருந்து. முதல் கடிதத்தில்,

ஐயா!

இம்முறை உங்கள் சகோதரன் ஏன் இன்னும் பள்ளிக்கு வரவில்லை? நாளையிலிருந்து பரீக்ஷைகள் ஆரம்பமாகின்றன. அனுப்பிவைக்கவும்." என்று இருந்ததைப் பார்த்ததும் அவனுக்குத் தூக்கிப்போட்டது. பரபரவென்று கண்ணனின் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான்.

"அன்புமிக்க அண்ணா"

நீங்கள் மன்னியைச் சந்தோஷப்படுத்துங்கள். குழந்தை ராஜூவுக்கு வேண்டியதைச் செய்துபோடுங்கள். நான் உங்கள் குழந்தையாகவே இருக்கவிரும்புகிறேன். பங்காளியாய் அல்ல. உங்கள் சக்திக்கு மீறி என்னை இத்தனைநாள் காப்பாற்றியதற்கு என் நன்றி மிகுந்த தாழ்ந்த வந்தனங்களை ஏற்றுக்கொள்ளுங்கள். ஜீவ விருக்ஷங்களையும், விண்ணையும், மண்ணையும் நம்பி வாழும் பறவைகளையும் காப்பாற்றும் கடவுள் மானிடர்களைக் காப்பாற்றுவார். அதிலும் என் போன்றவர்களைக்கண்டிப்பாய், கருணையுடன் காப்பாற்றுவார். உங்களுடைய அன்பும், மன்னியின் பரிபூரண ஆசியும் என்றென்றும் என்பாலிருக்குமென்று நம்புகிறேன்.

உங்கள் அன்புமிக்க சகோதரன்

பெயரளவில் கண்ணன்.

அதைப் படித்ததுதான் தாமதம். சுந்தரேசனின் கண்களிலும் காதுகளிலும் அக்னி ஜ்வாலைகள் எழும்பின. கண்கள் சுழன்றன. அப்படியே திடீரென்று தரையில் சாய்ந்

தான். ருக்மணி ஓடிவந்து அவன் கையிலிருக்கும் கடிதத்தைப் பிடுங்கித் தூரப்போட்டு அவனுக்கு வேண்டிய உபசாரம் செய்தாள். கண் விழிக்கவில்லை.

மாதம் மூன்றாயிற்று அவன் கண் திறந்து பார்க்க. அவன் மெள்ளக் கண்விழிக்கும் போது சோகமே உருவாய்த் துடிதுடித்தபடி நின்றிருந்தார் ரகுநாதய்யர். அவர் பார்வையில் "அன்றே என் குழந்தையை அனுப்ப மறுத்தேனே! கேட்காமல் அழைத்துவந்து இப்படி செய்துவிட்டாயே!" என்றாற்போலிருந்தது.

"அப்பா!" என்றலறினான் அத்தனை பலவீனத்திலும்.

"சுந்தரேசா! அவனுக்கு அகக்கண் மகா தெளிவாய் இருக்கிறது. புறக்கண் இல்லாத தோஷம்தானே... உன் தாய் வெந்ததற்குக் காரணம். நான் வேகாமல் இருப்பதற்கும்... கடவுளின் சித்தம் அப்படி இருந்தால் யார் என்ன செய்யமுடியும்?" என்றார் அவனைத் தழுவியபடியே ஆயினும் அவரின் எல்லையற்ற சோகத்தின் வேதனை அவர் சொல்லிலும், பார்வையிலும் நன்கு தெரிந்தது.

கூற்றுவனின் கூற்றால் விதி சிரிப்பது எவருக்கும் தெரியாது. கணவன் நோய்வாய்ப்பட்டதும் அவனைக் கவனிக்கப்போய், குழந்தையைச் சரியாய்க் கவனிக்காததால் ராஜா கட்டி விழுந்து கண்களை மூடினான். ஹா! தாயுள்ளம் தவித்தது. அதற்குமேல் அவன் சிந்தனை ஓடாமல் தடைபட்டு நின்றது. மறுபடியும் இடையில் ஓர் பெரிய அடி.

* * * *

"அம்மா! என்று வீரிட்டாள். எதிர்த்த வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்த எச்சுப்பாட்டி எழுந்து வந்தாள். சிறிது நேரத்திற்கெல்லாம் அழகிய ஆண் குழந்தை பிறந்ததாக எச்சுப்பாட்டி சொல்லிக்கொண்டு வெளியில்வந்தாள். ஆனால் இன்னும் சுந்தரேசன் வெளியிலிருந்து வரவில்லை. ருக்மணியின் உள்ளம் துடிதுடித்துக்கொண்டிருந்தது.

இரவு நகருவேனா என்று சத்தியாக்கிரகம் செய்வதுபோல் தோன்றியது அவளுக்கு. தாயுமானசுவாமிபோல் வந்துதவிய எச்சுப்பாட்டி இரவு முழுவதும் ருக்குவுக்குச் சகாயமாயிருந்தாள்.

விடிந்தது. சுந்தரேசன் மெள்ளக் கண்களை விழித்துப் பார்த்தான். தன்னை உற்றுப் பார்த்துக்கொண்டே நிற்கும் தன் நண்பன் நாராயணனைப் பார்த்தான். "வா! நாராயணா!" என்றவன் தான் புதிய இடத்தில் படுத்திருப்பதை உணர்ந்து பரபரப்புடன் எழுந்தான்.

"என்னடா அவ்வளவு அவசரம்? ராத்திரி நடுத்தெருவில் விழ இருந்தாயே! உடம்பைப் பார்த்துக்கொள்ளடா!" என்றான் அன்புடன். அப்பொழுதுதான் அவனுக்கு இரவு தான் யாரோ பாடுவதைக் கேட்டுவந்தது நினைவிற்கு வந்தது. ருக்மணி தனக்காக விடிய விடிய என்ன வருந்தினாளோ என்று நினைத்தவனாய்,

"ரத்தக் கொதிப்போ? என்னவோ? டாக்டரைச் சந்தித்துக் கேட்கவேணும். வறேன்" என்று எழுந்தான்.

"கொஞ்சம் 'காப்பி' குடித்துவிட்டுப்போ; வெறும் வயிற்றுடன் போகாதே!" என்றான். அதேசமயம் அவன் மனைவி காப்பியைக் கொண்டுவந்து வைத்தாள். அவசர அவசரமாய்க் குடித்துவிட்டு வீட்டுக்கு வந்தான்.

எச்சுப்பாட்டி வெகுபரிவுடன் உற்சாகமற்ற குரலில், "ராத்திரி எங்கே போய் விட்டே! நிறைமாசக்காரியை ஒண்டியாய் விட்டுவிட்டு, நல்ல சமத்து போ! உனக்கு பிள்ளை பொறந்திருக்கு. ஆனால்......" என்றாள் சோகமாய்.

"ஆனால்......என்ன? உசிரோடு பிறக்கல்லியா?" என்றான் பரபரப்புடன்.

"அப்படியிருந்தாலும் தேவலையே" என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டு, குழந்தைக்கு.........கண்......இல்லை. குருடு" என்றாள். அதுவரை இதை அறியாதிருந்த ருக்மணி "ஐயோ!" என்று அரற்றினாள்.

"குருட்டுத்தெய்வம்" என்று பெருமூச்சு விட்டான். ருக்மணியின் மனதில்மாத்திரம் தன்னலம்தான் தன்னைத் தண்டித்ததென்று யாரோ எடுத்துச் சொல்வதுபோலிருந்தது.

"காதற் பரிசு"

நாதன்

நாராசம்போன்று, தன் காதில் விழுந்த அச்செய்தியினால், கங்கா உணர் விழுந்து நின்றாள். அவளது கண்களின் மள மளவெனப் பொங்கிய நீர் கன்னங்களில் வழிந்தோடியது. அவளது உள்ளத்தில், துக்கம் புது வெள்ளம்போலப் பொங்கி யெழுந்தது. வெடித்துவிடும் போலிருந்த தன் நெஞ்சத்தை அவள் அழுத்திப் பிடித்

துக்கொண்டாள். பைத்யம் பிடித்தவள் போல, உள்ளே பூஜையறையை நோக்கி ஓடினாள். அலங்காரமடையின் மீது வீற்றிருந்த விசுவநாதர் விக்ரகத்துக்கு முன், சுவரில் ஓர் ஓவியம் தொங்கியது. சாந்தம் நிறைந்த முகத்தினராய் விளங்கிய தன் தந்தையின் அப்படத்தின்முன் நின்ற கங்கா, "அப்பா, இந்த அநியாயத்தைக் கேட்டீர்களா! உங்கள் அத்யந்த சீடனுக்கேற்பட்ட இம்முடிவைக் கேட்டீர்களா! எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையுடையவரான தாரா "இஸ்லாம்" மத விரோதியாம்; அவர் காபிராம்; "இஸ்லாம்" மதத்தைக் காப்பாற்றவேண்டி, அவர் இன்று கழுவேற்றப்படுகிறாராம்!......" என்று புலம்பினாள்.

கங்காவின் உடல் கட்டைபோல அந்தப் படத்தின் முன் நின்றது. அவளது கண்களில் நீர்ப்பிரவாகம் வற்றாமல் ஓடிக்கொண்டிருந்தது. அவள் உள்ளத்தில் எண்ணில்லா உணர்ச்சிகள், கணக்கற்ற எண்ணங்கள் குமிழியிட்டன. "தாரா, தாரா" என அவளது இதயம் முணுமுணுத்தது. அவளது மனத் திரையில் கடந்தகால நிகழ்ச்சிகள் நிழலாட்டமாடின. சில நிமிடங்கள் மௌனமாகிக் கிடந்த கங்காவின் உதடுகள் அசைந்தன. இரைந்து பேசத் துணிவில்லாதவைபோல, அவைகள் முணுமுணுத்தன. "தாரா, உன் கதி இவ்விதம் ஆகவேண்டுமா? உன் துர்ப்பாக்ய முடிவுக்கு நான், இந்த அபலை, இந்த அபாக்யவதியும், காரணமா! இதுதான், விதியின் விளையாட்டா......" இந்த முணுமுணுப்பை யடக்கிக்கொண்டு, ஒரு நீண்ட பெருமூச்சு அவள் நெஞ்சின் ஆழத்தினின்றும் வெடித்தது. மீண்டும் அவள் மெதுவாகப் பேசினாள். "ஆம், நான் பாவி! என் வாழ்க்கைதான் அவலமாயிற்று. உன் வாழ்வு பாழாவதிலும், எனக்கு ஒரு பங்கு தேடிக்கொண்டுவிட்டேன். என் மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்யவேண்டித்தானே, நீ அந்தக் குண்டலங்களை அணிந்துகொள்ள நேரிட்டது. என் அன்பின் அடையாளமாக, இல்லை, இல்லை... என் 'நிறைவேறாக் காதலின்' சின்னமாக... நான் அந்தக் குண்டலங்களை உனக்கு அளித்தேன். உன் பரந்த மனோபாவத்தினால், இளகும் இதயத் தன்மையினால், நீயும் அவைகளை ஏற்றுக்கொண்டாய். அந்தக் குண்டலங்கள் உன் காதுகளை அலங்கரித்தன. அந்தக் காட்சியை நான் மானசீகமாகக் கண்டு, அக்காட்சி என் வறண்ட இதயத்தையும் இதுநாள் சிறிது வளம்படுத்தி வந்தது. ஐயோ, விதியே! இன்று அந்தக் குண்டலங்களே உனக்கு நாசகாரியாகின்றனவா!" அடுக்கடுக்காக எழுந்தன இவ் வார்த்தைகள். கங்காவின் மூச்சோட்டமே நின்றுவிடும் போலிருந்தது. அவளது அகக் கண்முன் பிரகாசமான இரண்டு பொன் குண்டலங்கள் விசுவரூபத்துடன் வந்து நின்றன. அதையடுத்து அழகிய சிறு பொன் குண்டலங்களைக் காதுகளில் அணிந்தவனாய், முகத்தில் புன்சிரிப்புத் தவழ ராஜகுமாரன் தாரா வந்துநின்றான். அடுத்த கணமே அவனது வதனத்திலிருந்த மகிழ்ச்சி மறைந்து துயரம் இடம்பெற்றது. கங்கா வெளிறிய முகத்துடன், வெறித்த பார்வையுடன், அசைவற்று நின்றாள்.

பரம்பரைப் பண்டிதர்கள் குலத்தில் வந்தவர், சிவசைதன்யர். புனித காசி நகரத்தில், அவரைவிடக் கல்விமான் இல்லை. பல பாஷைகளிலும், அவருக்குப் பாண்டித்யம் இருந்தது. உலகின் பல்வேறு மதங்கள், அவைகளின் நீதிகள், ஆசாரங்கள், இவைகளை அவர் கற்றுத் தெரிந்திருந்தார். ஸம்ஸ்கிருதத்தில் அவரது ஞானம் எங்கும் பிரசித்தமானது. சிவசைதன்யர், ஆசாரசீலர். மதப் பற்று நிறைந்தவர். ஆனால் அவரது இதயம் விசாலமானது. குறுகிய எண்ணங்கள் அவருள்ளத்தில் குடிகொள்ளவில்லை. ஹிந்து தர்மத்தின் தனிச் சிறப்பையெண்ணிப் பூரிப்பார். இஸ்லாம் மதத்தின் கொள்கைகளைச் சிலாகிப்பார். பல்வேறு மதக்கோட்பாடுகளின் ஒரு 'சங்கமமாக' அவர் விளங்கினார். காசி நகரில், வைதீகர்கள், வித்வான்கள் மத்தியில் அவருக்கு அளவற்ற செல்வாக்கு இருந்தது.

முகலாய சாம்ராட் ஷாஜஹானின் ஆட்சி நடந்துகொண்டிருந்தது. அக்பரின் பரம்பரையில் வந்த அவன் சிலாக்யமான முறையிலேதான் ஆண்டுவந்தான். காசியும், வேறு சில பகுதிகளும், ஷாஜஹானின் மூத்த புதல்வன் தாராஷுகோவின் நிர்வாகத்தில் இருந்தன. இளவரசன் தாராவிடம் சக்ரவர்த்திக்கு அளவற்ற அபிமானம் உண்டு. முகலாய சிம்மாதனத்துக்கு அடுத்த வாரிசாகிய அவனுக்கு, எல்லா வித்தைகளிலும் பயிற்சியளித்துவந்தான், ஷாஜஹான்.

சக்ரவர்த்தி ஷாஜஹானிடம், அக்பரின் பரந்த மனோபாவமும், முகலாயர்களுக்கேயுரிய மதப்பற்றும், கலந்து விளங்கின. தாராவோ, ஒரு விசித்ரப்பிறவியாக இருந்தான். அக்பரின் விசால சுபாவம் அவனிடத்தில் முழுக்க முழுக்க நிறைந்து விளங்கியது. தாரா நல்ல கல்விமான். அறிவாளி. பல பாஷைகளில் அவன் தேர்ச்சிபெற்றிருந்தான். வெவ்வேறு மதங்களைப்பற்றி அவனுக்கு ஞானம் இருந்தது. அவன் ஓர் உண்மை முஸ்லீம். ஆனால், இந்தியாவின் மிகப்பெரிய ஹிந்து மதத்தில், அவன் பற்றுள்ளவனாக இருந்தான். அதன் பண்

பாட்டில் அவன் விசேஷ மதிப்புக்கொண்டிருந்தான். ஸம்ஸ்கிருதத்தை நன்கறிந்திருந்த தாரா, பல ஸம்ஸ்கிருத பண்டிதர்களிடம் தொடர்பைக் கொண்டிருந்தான். தாரா, காசியில் சக்ரவர்த்தியின் பிரதிநிதியாகவிருந்தமையால், ஹிந்து மதத்தைப் பற்றி மேலும் அறிந்துகொள்ளவும், தனது ஸம்ஸ்கிருத பாஷா ஞானத்தை விருத்திசெய்துகொள்ளவும் அவனுக்குத் தருணம் கிடைத்தது. அதிருஷ்ட வசமாய், அவனுக்குப் பண்டிதர் சிவசைதன்யரின் பழக்கம், கிட்டியது. வெகுவிரைவில், அவரது மேதா விலாசத்துக்கும், இனிய சுபாவத்துக்கும் தாரா அடிமையாகி, அத்யந்த சிடனுமாகிவிட்டான்.

பண்டித சிவசைதன்யர், தாராவின் குணப் பண்பைக் கண்டு மகிழ்ச்சியுற்றார். அவனது ரசிகத்தன்மை குறித்துப் பூரித்தார். இஸ்லாம் மதத்தில், அவன் ஓர் ஒப்பற்ற மாணிக்கமாக விளங்குவானென்ற நம்பிக்கை கொண்டார். அவர். டில்லி சிம்மாதனத்தில் அடுத்தாற்போல அமரவிருக்கும், அவனது ஆட்சியின் கீழ், தருமம் தழைக்கும். கலைகள் வளரும், என்று கனவு கண்டார், சிவசைதன்யர் எனவே அவர் தாராவிடம் அபரிமிதமான அன்பு கொண்டிருந்தார். பரிவு காட்டிவந்தார்.

இராஜ்ய அலுவல்களிடையேயிருந்து ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் இளவரசன் தாரா, பண்டித சிவசைதன்யர் இல்லத்துக்குச் செல்வதுண்டு. இருவரும் பல உயரிய விஷயங்களைப்பற்றிச் சர்ச்சை செய்வார்கள். தனக்குள்ள சந்தேகங்களைத் தாரா கூற, பண்டிதர். தமது அறிவுத் திறனால், அவைகளை நீக்குவார். இவ்விதம், அந்த அற்புத குருவும், அதிசய சிடனும் பல மணி நேரங்களைக் கழிப்பர்.

முதன் முதலாக இளவரசன் தாரா, பண்டித சிவசைதன்யரை அவரது இல்லத்தில் சந்தித்த நாள்முதல், அவர்களிருவரிடையே, ஓர் அபூர்வ நேச உணர்ச்சி துளிர்க்கத் தொடங்கி அதுவே ஓர் இணையற்ற குரு சிட பாந்தவ்யமாக வளர்ந்தது. ஆனால் அந்த முதல் நாளன்றே, வேறுவிதமான ஓர் உணர்ச்சியும் ஒரு இளம் உள்ளத்தில் துளிர்த்து, நாட்களின் ஓட்டத்தில், வளரத் தொடங்கியிருந்தது.

பண்டித சிவசைதன்யரின் ஒரே புதல்வி கங்கா. குழந்தைப் பருவத்திலேயே தாயை இழந்திருந்த அவள், அப்பொழுது பதினாறு வயதுக் கன்னிப்பெண். கங்கா நதியின் சௌந்தர்யத்திலும், தூய்மையிலும் எல்லையற்ற பிரேமைகொண்டிருந்த பண்டிதரும், அவரது சகதர்மிணியும் ஒருமுகமாகத் தங்களது புதல்விக்கு, கங்கா எனப் பெயரிட்டிருந்தார். பெயருக்கேற்ற எழிலும் குணமும் கங்காவிடம் நிறைந்து விளங்கின. அன்றலர்ந்த தாமரையையொத்த முகமண்டலம், கரிய இரு பெரிய விழிகள், முத்துப்போன்ற பல் வரிசை, வதனத்தில் மாறாத புன்முறுவல், கண்களில் வற்றாத ஓர் குறுகுறுப்பு — இவைகளே கங்கா என்ற அந்த உயிர் ஓவியம்.

கல்வியளித்த ஞானமும், வைராக்யமும், மனைவியையிழந்த சிவசைதன்யரை உலகப் பற்றொழித்த யோகி நிலையில் வைத்திருந்தன. எல்லோரையும்போல், அவரும் குடும்ப வாழ்வில் நடமாடிக்கொண்டிருந்தவராகவே காணப்பட்டார். ஆனால், அவரது சிந்தனையும், அந்தராத்மாவும், சாதாரண மனிதன் கற்பனை செய்யவும் முடியாத ஒரு தெய்வீகப் பரப்பில் சஞ்சரித்துக்கொண்டிருந்தன. கங்கா தான், இக வாழ்வைத் தொடர்பூட்டிக்கொண்டிருந்த ஒரு சின்னமாக இருந்துவந்தாள்.

பந்த வாழ்வில் தாமரை இலைத் தண்ணீர் போல ஒட்டியும் ஒட்டாமலும், காலம் கடத்திக்கொண்டிருந்த பண்டிதர் தமது குமாரியைக் குறித்து அதிகமாகக் கவலை காட்டியவரல்ல; சிந்தனை செய்தவரல்ல. "ஈசுவர சங்கற்பம்," "தெய்வ சித்தம்" என்ற வார்த்தைகளையே, தம் புதல்வியைக் காணும்போதெல்லாம், அவரது உள்ளமும், உதடும் முணுமுணுத்தன.

புலிக்குப் பிறந்தது பூனையாகவில்லை. மீன் குஞ்சுக்கு நீச்சல் தானாகவே வந்தது. கங்கா, அந்த இளம் வயதிலேயே கல்வியில் நல்ல தேர்ச்சியடைந்திருந்தாள். பக்தி மார்க்கத்தில், அவளுக்கு எல்லைகடந்த ஈடுபாடு. அவர்களது பரம்பரையில் ஊறி வந்த பெருந்தன்மையும், களங்கமில்லா உள்ளத்தழகும் அவளையும் பற்றிக்கொண்டுதானிருந்தன. தந்தையிடம் கங்காவுக்கு அளவற்ற பாசம்; எல்லையில்லா அன்பு. அந்தரங்க பக்தியும், பவ்யமும். அவர் பூஜையறையில், காசி விசுவநாதர் விக்ரகத்தின் முன் மெய்மறந்து தியானத்திலீடுபட்டிருக்கையில், கங்காவும் தன்னை மறந்து ஸ்தோத்ரம் செய்துகொண்டிருப்பாள். அந்தச் சிறிய குடும்பத்தில் ஒரு அற்புதப் புனிதமும், தெய்வீகமும் செறிந்து அவர்களது அன்றாட வாழ்க்கையில் கலந்து கிடந்தன.

முதல் தடவையாக இளவரசன் தாரா, பண்டிதர் சிவசைதன்யரை சந்திக்கவந்தான். பண்டிதர் அவனைப் பரிவுடன் வர

வேற்றார். கொல்லைக் கோடியில், சமையலுள்ளின் நிலைப்படி சாளரத்தின் வழியே, இரு கரிய விழிகள் இளவரசனை நோக்கின. யௌவனமும், எழிலும் சேர்ந்த அவனது கம்பீர உருவம் அந்த இரு விழிகளையும் ஊடுருவிச்சென்று கங்காவின் உள்ளத்தில் அப்படியே பதிந்து நின்றது. அவள் வெளியே எங்கும் அதிகமாய்ச் சென்று ஆடவர்களைக் கண்டவளல்ல.

முதன் முதலாகக் கிட்டிய தூரத்தில், ஓர் ஆண்மகனை, அதுவும் ஓர் அரசிளங்குமாரனை, அந்நகரத்தின் தலைவனைக்கண்ட, கங்காவின் இதயத்தில் புத்தம்புதிய உணர்ச்சி ஒன்று அரும்பியது. அவள் உடலெல்லாம் புல்லரித்தது. கண்களை இமைக்காமல், கங்கா தாராவை நோக்கியவாறு நின்றாள்.

இளவரசன் தாரா அன்று இளமங்கை கங்காவைக் கவனிக்கவில்லை. அதன் பின் அவன் அங்கு வந்த பல தடவைகளிலும், அவளைப் றிற்ப அவன் அறியமாட்

டான். ஆனால் கங்காவின் இதயத்துள்ளோ, அரசகுமாரனின் உருவம் நிலைத்து இடம் பெற்றுவிட்டது. அவளது நினைவு சதா அவனைச் சுற்றியே வட்டமிட்டவாறிருந்தது. அப்பொழுது, அவள் உள்ளம் அவள் நிலையைக் "காதல்" என வியாக்யானம் செய்யவில்லை.

நாளடைவில் குணவான் தாரா, பண்டிதர் சிவசைதன்யரின் அபிமானத்துக்குப் பாத்திரமானான். இப்பொழுதெல்லாம், கங்கா முன்போல வெட்கத்தால் உள்ளே தன்னை அடைத்துக்கொள்ளவில்லை. சிறிது தாராளமாகப் பழகத் தொடங்கினாள். தனது தந்தையும், தாராவும் நடத்தும் சர்ச்சையில், சிறிது சிறிதாக அவளும் பங்கெடுத்துக்கொள்ளலானாள். விகற்பமறியாப் பண்டிதரும், கங்காவின் நடத்தையின் கருத்தை அறியவில்லை. அவளது மனதில் வீசிய காதற் புயலை வேதாந்தியான சைதன்யர் புரிந்துகொள்ளக்கூடவில்லை.

தனது அறிவையும், ஆராய்ச்சித்திறனையும் விருத்திசெய்து கொள்ளவதிலும், ஆத்மார்த்த ஞானத்தை வளர்த்துக்கொள்வதிலும் ஈடுபட்டிருந்த தாரா, கங்காவிடம் சகஜமாகத்தான் நடந்துகொண்டான். பெண், அதுவும் குருவின் குமாரி என்பதை அவனது பண்பட்ட உள்ளம் நன்குணர்ந்திருந்தது. எனவே களங்கமற்ற சித்தத்துடன் அவன் சர்வ ஜாக்ரதையுடன், நடந்துவந்தான். ஆனால் அதே சமயத்தில் குருபுத்திரி கங்காவின் நெஞ்சில் அலைபாய்ந்த ஆசாபாசத்தை அவன் எங்ஙனம் அறியக்கூடும்! அவளது உள்ளத்தில் குமிழியிட்ட காதற் சுழலையுணராத அவனது வெகுளி நெஞ்சம், கங்காவின் நடத்தையைச் சாதாரணமானதாகவே பாவித்தது.

வருடம் ஒன்று உருண்டுவிட்டது. அரசகுமாரனிடம் கங்காகொண்ட காதல் பலமடங்காகப் பெருகி நின்றது. அவனுடன், தனியே தான் ஒருவார்த்தை பேசமுடியாதா என அவள் ஏங்கினாள். காதலின் முன் மற்றச் சக்திகள் பலமும், பயனும் அற்றுப்போய்விடுகின்றன. எனவேதான், வைதீகக் குடும்பத்தில் பிறந்த கங்கா, தன் காதல் வேகத்தில், தனக்கும், முகலாயச் சக்ரவர்த்திக்கும் இடையே உள்ள தாரதம்மியத்தை உணரவில்லை. சமூகக் கட்டுப்பாட்டுத் தளைகளின் தன்மையைக் குறித்துச் சிந்திக்கவில்லை. தனது மனோபீஷ்டம், சரியானதா, தவறானதா என்ற யோசனையும் அவளுக்கு எழவில்லை.

அன்றொருநாள், வெள்ளிக்கிழமை. பண்டித சிவசைதன்யர் வெளியே சென்றிருந்தார். ஸ்நானம்செய்து, கூந்தலை அள்ளிச் சொருகிவிட்டவண்ணம் நிச்சிந்தையாய் உட்கார்ந்து, கங்கா பூத்தொடுத்துக்கொண்டிருந்தாள். வெளியே யாரோ கூப்பிட்ட சப்தம் கேட்டு, எழுந்து சென்றாள். வாசலில் இளவரசன் தாரா நின்றதைக் கண்ட கங்காவின் உடல் புளகாங்கிதமடைந்தது. ஒரு கணம் வெட்கத்துக்கடிமையாகி நின்றபின் அவள், "உள்ளே வாருங்கள்" என மெதுவாக மரியாதையுடன் மொழிந்தாள். "குருஜீ இல்லையா......?" எனத் தயக்கத்துடன், வினவினான், தாரா. "வெளியில் சென்றிருக்கிறார். வரும் நேரம்தான். உள்ளேவந்து அமருங்கள்" என்று மீண்டும் கோரினாள், கங்கா. தாரா தயக்கத்துடன், நின்றான். "இங்கேயாவது உட்காருங்கள்" என உள்ளே அருகிலிருந்த ஆசனமொன்றைக் காட்டினாள், கங்கா. அவள் வேண்டுகோளைத் தட்ட முடியாமல், தாரா உள்ளேசென்று உட்கார்ந்தான். குரு புத்திரியின் அந்தத் தாராள நடத்தையும், அவளது பரபரப்பும், அவனுக்குச் சிறிது வியப்பை யூட்டின.

சிறிது தொலைவில், தலைகுனிந்து கால் விரலை நோக்கியவண்ணம் நின்றாள், கங்கா. சிறிது பொழுது நகர்ந்தது. "ஏன் இன்னும் குருஜீ வரவில்லை. நான் அவசரமாக அவரைக் காணவேண்டும்" எனக்கேட்டான், தாரா. அங்கே தனியே தங்கியிருப்பதில் அவனது விருப்பமின்மை, அவனது குரலில் தெளிவாகத தொனித்தது. கங்கா, மௌனமாக நின்றாள். "முக்ய ராஜ்ய காரியமாக நான் உடனே காசியைவிட்டுப் புறப்படுகிறேன். திரும்பிவரப் பல நாட்கள் ஆகலாம்" எனத் தாரா, தன் நிலைமையை விளக்கினான். அதுகேட்ட கங்கா வியப்பினால், தலை நிமிர்ந்தாள். "என்ன, காசியை விட்டுப் புறப்படுகிறீர்களா?" எனக்கேட்டாள். அவளது குரலில் ஏக்கம் கலந்திருந்தது. "ஆம். அதனால்தான் குருஜீயிடம் விடைபெற வந்தேன்" என இளவரசன் பதிலளித்தான். கங்காவின் காதுகளில், "காசியை விட்டுப் புறப்படுகிறேன். திரும்பிவரப் பல நாட்கள் ஆகலாம்" என்ற தாராவின் வார்த்தைகள இடைவிடாது ஒலித்தன. பல நாட்களாக அவள் எதிர்நோக்கியிருந்த சந்தர்ப்பம் அன்றுதான் கிடைத்திருந்தது. அதை நழுவவிட அவள் மனம் சம்மதிக்கவில்லை. அவளது யௌவன உள்ளத்தில் "காதல்" தன் முழுவேகத்துடன் கொந்தளித்தது. கங்கா தன்னை மறந்துவிட்டாள்.

கங்கா மெதுவாக அடியெடுத்துவைத்து முன்னே நடந்தாள். அதைக்கண்ட தாரா

வின் உடல் படபடத்தது. அவன் பிரமிப்பால் சிலைபோலாகிவிட்டான். "தாரா, நான் தங்களை நேசிக்கிறேன்" என்ற சொற்களைக் கேட்ட தாரா, பதறி எழுந்தான். அவன் உடல் வியர்த்தது. "அந்த வார்த்தைகளை அவள்தான் உரைத்தாளா?..." என்ற ஐயப்பாட்டுடன், அவன் கங்காவை ஏறிட்டு நோக்கினான். அவளது முகத்தில் ஓர் அசாதாரணத் துடிப்பின் சாயை படர்ந்து நின்றது. முகத்தில் முத்துப்போல், வியர்வை துளித்திருந்தது. திக்பிரமையால், தாரா அசைவற்று நின்றுவிட்டான். "தாரா" என்று மீண்டும் அழைத்தாள், கங்கா. அந்தக் குரலில், ஓர் இனிமை, அவளது உள்ளத்தின் உணர்ச்சி, "காதலின்" துடிப்பு எல்லாம் கலந்து ஒலித்தன. தாரா, தனது பிரமையை உதறித் தள்ளினான். அவன் முகத்தில் உறுதி பளிச்சிட்டது. கரகரத்த தொண்டையைச் சரிப்படுத்திக்கொண்டு அவன் பேசினான். "குரு புத்திரி, இது என்ன விபரீதம்! தாங்கள் என் சகோதரியைவிட எனக்குப் புனிதமானவரல்லவா? நான் தங்கள் சகோதரன். எப்படி இந்த எண்ணம் தங்கள் உள்ளத்தில் எழுந்தது? நான் முஸ்லீம்; அதுவும் மணமானவன். என் மனைவியைத் தவிர மற்றவர்களை நான் தாய்மார்களாகப் பாவிக்கிறேன்" என்ற வார்த்தைகள், தெளிவாகவும் தீர்மானத்துடனும் வெளிக்கிளம்பின. அந்தப் பதிலின் நேர்மையைக்கண்ட கங்கா திகைத்து நின்றாள். அவன் முகத்தில் பிரதிபலித்த உறுதி, அவள் உறுதியைக் குலைத்தது. இடியுண்டவள்போல நின்றாள் அவள். மேலும் அங்கே நிற்க மனமில்லாதவனாய், "சகோதரி, நான் போய்வருகிறேன்" என்றவாறே, தாரா புறப்பட்டான்.

ஏமாற்றத்தால் தாக்குண்ட பின்னும், கங்காவின் இதயவேகம் தணியவில்லை. அங்கே விவரிக்க இயலாத ஒரு உணர்ச்சி வியாபித்து நின்றது. "நான் மணமானவன். தாங்கள் என சகோதரியைவிடப் புனிதமானவர்" என்ற சொற்கள் அவளது காதில் ரீங்காரமிட்டவாறிருந்தன. தாரா வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தான். "கொஞ்சம் பொறுங்கள்" எனத் தன்னை மறந்து கூவினாள், கங்கா. தாரா திகைத்து நின்றான். ஒரு நொடிக்குள், கங்காவின் காதுகளை அலங்கரித்திருந்த இரு பொன் குண்டலங்கள், அவளது கைக்கு இடம் மாறின. கங்கா அவைகளைக் கையிலேந்தியவாறே, நிதானமாக முன்னோக்கி நடந்தாள்.

"இளவரசே, விதிவசமாக நான் தங்களை என் மனதில் வரித்துவிட்டேன். தங்களது செல்வமோ, அழகோ அதற்குக் காரணமல்ல. அவைகளையெல்லாம் தாண்டிய ஏதோ ஒரு உன்னத கவர்ச்சி தங்கள்பால் என் மனதைக் கவர்ந்து இழுத்துவிட்டது. தாங்கள் மணமானவரென்பதை நான் அறியவில்லை! என்னை மன்னித்துவிடுங்கள். என் இச் செயலை மறந்துவிடுங்கள். ஆனால்......" அதற்குமேல் பேசவியலாமல் கங்காவின் குரல் தழுதழுத்தது. அவளது கண்களில் நீர் பிரவாகமெடுத்தது. கண்ணீர் மல்கிய கண்களுடன், தாராவை அன்புகனியப் பார்த்தவாறே ஆசை பொங்கப் பேசினாள், கங்கா. "என்னை மறந்துவிடுங்கள். ஆனால் என் "காதலை" மறக்க வேண்டாம். அது புனிதமானது. தெய்வீகமானது. இதோ இவைகளை என் அன்பளிப்பாக, என் "காதலின்" நினைவுச் சின்னமாக ஏற்றுக்கொள்ளுங்கள்" என வேண்டியவாறே, தான் அணிந்திருந்த அவ்விரு குண்டலங்களையும், தாராவிடம் நீட்டினாள். நடுங்கும் கரங்களில் அவைகளைப் பெற்றுக்கொண்டு, தாரா மௌனமாகவே வெளியே நடந்தான். கங்கா அவன் போகும் திசையையே பார்த்தவாறு நின்றாள்.

அரண்மனையையடைந்த பின்பும் தாராவின் மனம் நிம்மதியுறவில்லை. கங்காவையெண்ணி, அவன் பரிதாபப்பட்டான். அவன் சிந்தனை ஓடியது.

"காதல்—ஆம். அது ஒரு தெய்வீக சக்திதான்! இறைவன் போலவே அதுவும் ஜாதி மதபேதங்களுக்கு அப்பாற்பட்டது. அவள் கண்களுக்கு வேற்றுமை இல்லாததுபோல அச்சக்தியும், வேற்றுமைகளைத் தாண்டி இயங்குகின்றது." தாரா தன் ஜேபியிலிருந்து, அந்த இரு பொன்குண்டலங்களையுமெடுத்தான். அவைகளை நன்றாக உற்று நோக்கினான். அவனது முகத்தில் மகிழ்ச்சியின் சாயை படர்ந்தது. "பிரபு," "பிரபு" என அவன் வாய் உச்சரித்தது. அந்தக் குண்டலங்களில் ஸம்ஸ்கிருத எழுத்தில் "பிரபு" எனப் பொறிக்கப்பட்டிருந்தது. அவன் உள்ளத்தை அழுத்தியிருந்த வேதனை இறங்கியது போலிருந்தது, தாராவுக்கு. "பிரபுவின் திருவிளையாடல்தான், இவையெல்லாம். இன்று என்னை நேர்மை பிறழாமல் நடத்திச் சென்றவர் அவரல்லவா!...... பிரபு, பிரபு" என்றவாறே சர்வமத அபிமானி தாரா ஒரு பெருமூச்சுவிட்டான். அந்தக் குண்டலங்கள் அந்த நாழிமுதல் அவனது காதுகளில் இடம்பெற்றன.

அன்று காசியை விட்டுச்சென்ற இளவரசன் தாரா அதன்பின் காசி திரும்பவில்லை. டெல்லி சிம்மாதனத்தைக் கைப்பற்றச்

சூழ்ச்சி பல செய்த தாராவின் இளைய சகோதரன் ஔரங்கசீப் தந்தை ஷாஜஹானை மட்டும் சிறையில் தள்ளவில்லை. அவனது பொருமைக் கண்கள் மூத்த சகோதரன் தாராவின் மீதுதான் அதிகம் பதிந்திருந்தன. தாரா சிறை பிடிக்கப்பட்டான். மதவெறியன் ஔரங்கசீப், தாராவின் மீது ஓர் போலி விசாரணை நடத்தினான். தாராவின் மீது கீழ்க்கண்டவாறு குற்றம் சாட்டப்பட்டது. "தாரா இஸ்லாம் மதத்தின் விரோதி; அவன் இந்துக்களிடம் அதுவும் வைதிகர்களிடம் நெருங்கிய தொடர்பு கொண்டு இஸ்லாம் மதத்துக்கு இழிவும், அழிவும் தேடிவந்தான். அவன் தனது காதுகளிலணிந்திருந்த "பிரபு" என்ற எழுத்துக்களுள்ள குண்டலங்களே அவனது மேற்படி நடவடிக்கைகளுக்கு அத்தாட்சி."

மதவெறிக்கும், இராஜ்ய ஆசைக்கும் தாரா பலி ஆகிவிட்டான். அவனுக்கு ஔரங்கசீப் மரண தண்டனை விதித்து நிறைவேற்றினான். உலகம் ஒரு உத்தமனை இழந்தது. தனது சீடனது பரிதாப முடிவை அறியுமுன்பே, பண்டித சிவசைதன்யர் மண்ணுலக வாழ்வை நீத்தார்.

குண்டலங்களணிந்த தாரா, கங்காவின் அகக்கண்முன் மறையாது நின்றான். "எனது "காதற்பரிசா" உனக்கு யமனாயிற்று! பிரபு, பிரபு!" எனப் பிரலாபித்தவாறே, அவள் தடாலென வீழ்ந்தாள். அவள் உள்ளத்திலெழுந்த துக்கம் அவளது உயிரை அள்ளிச் சென்றது. ●

வீணையும் நாதமும்

ஜி.எஸ்.மணி

மிருதுவான ஒலியில் ரேடியோ பாடிக் கொண்டிருந்தது.

யாரோ வீணை வாசித்துக்கொண்டிருந்தார்கள்; கேட்பதற்கு மிகவும் ரம்யமாகத்தான் இருந்தது.

சற்றுத் தூரத்தில் கௌரிமட்டும் தனிமையில் அமர்ந்துகொண்டு ரஸித்துக்கொண்டிருந்தாள். அவளுக்கெதிரில், மேஜையின் மீது நோட் புத்தகம் ஒன்று பிரித்தபடி இருந்தது. அவள் கையில் பென்ஸில். நோட்டின் பிரித்த பக்கத்திலே, குழந்தை கிறுக்கியதுபோல், ஏதேதோ அர்த்தமற்ற கிறுக்கல்கள்; சுழிகள்; கோடுகள், கைக்குவந்தபடி ஏதோ படங்கள்; புரியாத சில வார்த்தைகள்—அவை எல்லாமே கௌரியின் கிறுக்கல்கள்தான். மனோதத்துவ சாஸ்திரி யாராவது அப்போது அவள் நிலையையும், அந்த நோட் புத்தகத்தையும் ஒரே சமயத்தில் பார்த்திருந்தால் அந்தக் கிறுக்கல்களிலிருந்து அவளது மன ஓட்டத்தை ஒருவாறு கண்டு பிடித்திருப்பானோ என்னவோ?

ரேடியோவில் வீணை வாசித்துக்கொண்டிருந்தவர் சாவேரி ராகத்தை அழகாக உருவாக்கிக்கொண்டிருந்தார்.

கௌரிக்கு மிகவும் பிடித்தமான ராகம் சாவேரி.

சாவேரியுடன் அவள் உள்ளமும் சஞ்சரிக்கத் தொடங்கியது.

அத்துடன் தொடர்புகொண்ட எத்தனையெத்தனை எண்ணங்கள் அவள் உள்ளத்தில் உருவாயினவோ?

பிரித்த பக்கத்தில் "நாணு—நாணு" என்று கௌரியின் கை எழுதியது; அதைத் தொடர்ந்து "வீணை நாணு—வீணை நாணு" என்றும் இருமுறை கிறுக்கினாள். அத்துடன் அப்படியே மெய்மறந்துவிட்டவளைப் போலக் காணப்பட்டாள். சூழ்நிலை உணர்வுடன் அப்போது அவள் கட்டாயம் இருக்கவில்லை. நிச்சயமாய், சாவேரின் சூழ்நிலையிலோ அல்லது வீணை நாணுவைப்பற்றிய நினைவிலோதான் அவள் தன்னை மறந்திருக்க வேண்டும்.

கனவு கண்டு விழித்தவளைப்போலே திடீரென்று கௌரி நிலை பெயர்ந்து ஏதோ எழுதலானாள்.

"சாவேரி நாணு—சங்கரன்" என்றெழுதி அடித்துவிட்டாள.

அப்புறம் :

'வீணையின் தந்தியை நானும் மீட்டினேன்; அவரும் மீட்டினார்; நாதம் அற்புதமாக இழைந்து பிரமிக்கும் வகையில் இணைந்தது. ஆனால் எங்கிருந்தோ திடீரென்று கிளம்பிய அபஸ்வரம் இணைந்த ஸுஸ்வரத்தின் இனிமையைப் பாழாக்கிவிட்டது' என்று எழுதினாள்.

மீண்டும் பிரமை பிடித்தவளைப் போலே அப்படியே சிலையாகி விட்டாள்.

எதிர்ச் சுவரில் ஆணும், பெண்ணுமாய் இரு பல்லிகள் ஒன்றாய் இணையும் சமயம்; எங்கிருந்தோ திடீரென்று தோன்றிய மூன்றாவது பல்லியின் குறுக்கீட்டால் இணைய இருந்த பல்லிகள் பதறிப்போய் மூலைக்கு ஒன்றாகப் பாய்ந்து பிரிந்துவிட்டன.

அதைப் பார்த்துக் கொண்டேயிருந்த கௌரி நீண்ட பெருமூச்செறிந்தாள்.

அறைக்கு வெளியே காலடியோசை கேட்டது.

தொடர்ந்து கௌரியின் கணவன் சங்கரன் அங்கு நுழைந்தான்.

தொடர்ந்து எழுந்த கௌரி பரபரவென்று ரேடியோவின் அருகேபோய், பாடிக்கொண்டிருப்பவர் மென்னியைப் பிடிப்பதுபோல், 'படக்'கென்று நிறுத்திவிட்டாள்.

"ரேடியோவை நிறுத்துவானேன் கௌரி? வீணை நன்றாக இருந்ததே?" என்று அமைதியுடன் கேட்டான் சங்கரன்.

"எனக்குப் பிடிக்கவில்லை" என்று அவள் சுருக்கமாக விடையளித்தாள்.

"நான் இங்கு வராதவரையில் உனக்கு வீணை பிடித்தது; நான் வந்ததும் பிடிக்கவில்லை யென்றுதான் அர்த்தமா?" என்று ஏக்கம் நிறைந்த குரலில் அவன் கேட்டான்.

கௌரி அதற்குப் பதிலே சொல்லவில்லை. அவள் சொல்லமாட்டாளென்பதும் அவன் அறிந்ததே.

பெருமூச்சுடன் மேஜையருகே போய்நின்றான்; கௌரியின் கிறுக்கல்களைக் கண்டான்; அடியில் அவள் எழுதியிருந்ததையும் படித்தான். அதையே உற்றுப் பார்த்துக் கொண்டு அப்படியே நின்றுவிட்டான்.

ஏதோ நினைத்துக்கொண்டவனைப்போலே திடீரென்று அவன் தலைதூக்கிப் பார்த்தபோது கௌரி அந்த அறையில் இல்லை.

சமையல் அறையில் பாத்திரங்களின் அரவம் கேட்டது.

சங்கரன் அந்தப் பக்கம் போனான்.

அவன் சாப்பிடுவதற்கு இலை போடப்பட்டிருந்தது.

கௌரியை ஏதோ வேலையாய் இருக்கும் பாவனையில் பார்த்தான்.

"கௌரி?" என்று கெஞ்சும் குரலில் அவன் அழைத்தபோது அவன் பக்கம் கூடத் திரும்பாமலே அவள் 'ஊம்' கொட்டினாள்.

"என்னை உன் கணவனாக மதிக்கிறாயா அல்லது எதிரியாகத்தான் கருதுகிறாயா? தயவு பண்ணிச் சொல்லி விடேன்?" என்று அதே குரலில் சங்கரன் கெஞ்சினான்.

அவள் வாயே திறக்கவில்லை.

அவள் மௌனத்தை எதிர் பார்த்தவனைப் போலவே அவன் தொடர்ந்து பேசினான். "நீ எழுதியிருக்கும் வரிகளைப் படித்தேன்."

"படிப்பீர்களென்று நிச்சயமாய்த் தெரியும்."

"வீணை நாணுவும், நீயும் எழுப்பிய ஸுஸ்வரத்தை ஆரம்பகாலத்தில் நானும்தான் ரஸித்தேன், உனக்கே தெரியுமே?" என்று சொல்லி, சங்கரன் சற்றே நிறுத்தினான்.

"அதைப்பற்றி இப்போது என்ன பேச்சு? சாப்பிட உட்காரலாமே?" என்று அவள் சுருக்கமாகவே விடை பகர்ந்தாள்.

"சொல்ல விரும்புவதைச் சொல்லித்தான் விடுகிறேனே; அபஸ்வரத்தைத் தோற்றுவித்தவன் நான்தானென்றா நீ இன்னமும் கருதுகிறாய்?"

"அபஸ்வரத்தின் காரணம் எதுவானால் தான் என்ன? என் கலையுணர்ச்சி பாழாய்ப் போனதுதான் நான் கண்ட பயன்."

"அதற்காக இவ்வளவு தூரம் உன் மனம் புண்பட்டுப் போகுமென்பது ஸத்யமாய் நான் உணராத உண்மையே."

"புண்பட்ட உள்ளத்தை மேலும் மேலும் சல்லடைக் கண்களாகத் துளைத்துக் கொண்டேயிருப்பதில் இன்னும் ஆனந்தமடைகிறீர்கள் போலும்!"

"அப்படி என்ன செய்கிறேன் கௌரி?"

"நீங்களும் அதைப்பற்றிப் பேசாமல் சும்மாவிருக்கமாட்டேனென்கிறீர்கள்; என்னையும் சும்மாவிருக்க விடமாட்டேனென்கிறீர்கள்—என்ன லாபம்?"

"நான் சும்மாவிருந்தாலும் உன் மனம் பொருமிக் கொண்டு இருக்கிறதென்று உன் ஒவ்வொரு செய்கையின் மூலமும் எனக்கு உணர்த்திக் கொண்டேயிருக்கிருய்; எனக்கும் கலையுணர்ச்சி உண்டு; உன் கலையுணர்வைப் பாழடிக்க வேண்டுமென்று உன் சுதந்திரத்தில் நான் குறுக்கிடவில்லை; இருந்தாலும் கலையின் பெயரில் உன் பெயருக்கு இழுக்கு நேரிடுவதை என்னல் பொறுக்க முடியவில்லை."

"என் சொந்த வாழ்க்கையில் நீங்கள் தலையிட்டபோதே நாணுவுடன் சேர்ந்து நான் வீணை வாசிக்கும் உரிமையைப் பறிக்கக் கூடாதென்று கேட்டதுதானே? அப்போது 'ஸரி' யென்று நீங்கள் வாக்களித்தபோதே ஊர்வம்பைப் பற்றியும் திர யோசித்திருக்க வேண்டும்—எப்படியும் ஊர்வம்புக்கு நானே—நாணுவோ—கடுகளவுகூடப் பொறுப்பாளிகள் அல்லவென்பதும் உங்களுக்குத் தெரிந்ததுதானே?"

"வாஸ்தவம்; ஆயினும்—உங்கள் வீணையில் மட்டுமல்ல—நம் வாழ்க்கையிலேயே அபஸ்வரம் எழும்பியதற்கு அந்த ஊர்வம்புதான் காரணம்; நானல்லவென்பதும் நீ அறிந்ததுதானே கௌரி?"

"ஸரி; இப்போது நான் என்ன செய்ய வேண்டுமென்கிறீர்கள்?" என்று சற்றே சிடுசிடுத்த குரலிலேயே கேட்டாள் கௌரி.

"சலிப்பின்றி — திருப்தியுடன் வாழ்க்கையை ஏற்றுக்கொள்ள மாட்டாயா கௌரி?"

"கசப்பை உணர்ந்த உள்ளம் மரத்தே போய்விட்டது; ஆனாலும் என் கடமையில் தவறமாட்டேன்" என்ருள் கௌரி.

ஏக்கம் நிறைந்து வெளிப்பட்ட பெருமூச்சுடன் சங்கரன் சாப்பிட உட்கார்ந்தான்; அவனால் ஸரியாகச் சாப்பிடமுடியவில்லை.

"வாழ்வின் ருசி ஸரியானபடி அமைந்தால்தான் உண்ணும் சோற்றிலும் ருசி தெரியும்; என் உள்ளம் மரத்துவிட்டதைப் போலவே நாக்கும்தான் செத்துவிட்டது" என்று யாருக்கோ சொல்வதுபோலே அவன் சொன்னன்.

கௌரி வாயே திறக்கவில்லை.

* * * *

ஏமாற்றத்தின் எதிரொலி எப்படித் திரும்பும் என்பது பற்றி யாராலுமே சொல்ல முடியாது.

ஒரே குருவிடம் ஒரே சமயத்தில் வீணை பயின்றுவந்த நாணுவும், கௌரியும் சிறந்த வைணிகர்களாகத் தேர்ந்துவிட்டார்கள். வீணையும், நாதமும் போலவே இருவருடைய இணைந்த வாசிப்பும், பாணியும் ஒத்துப் போய்விட்டன. எந்த நிகழ்ச்சியிலும் சேர்ந்தே வாசிப்பது என்று இருவரும் சங்கற்பம் செய்துகொண்டார்கள். மனம் போல் நடந்தும் வந்தது. வெகுசீக்கிரத்தில் நற்பெயரும் பெற்றுவிட்டார்கள்; அவ்விருவரைப் பற்றியும் சங்கீத ரஸிகர்கள் குறிப்பிடும்போது "வீணை ஜோடி" என்றே குறிப்பிட்டு வந்தார்கள்; தனித் தனியே குறிப்பிட நேர்ந்தால் 'வீணை நாணு' என்றும், 'வீணை கௌரி' என்றும் பேசிக்கொள்வார்கள்; சேர்ந்தே வீணைக் கச்சேரி நிகழ்த்தினர்கள்; சேர்ந்தே அடிக்கடி ரேடியோவிலும் வாசித்துவந்தார்கள். 'சாவேரி' ராகம், தானம், பல்லவியில் வீணை ஜோடியை மிஞ்சுபவர்கள் கிடையாதென்று பெரும் புகழ் கிடைத்துவிட்டது, அதற்கேற்ருற்போல் அந்த ராகத்தை அலாதியான அழகுடன் அற்புதமாக வாசித்துப் பெயரை நிலை நாட்டிக்கொண்டுவிட்டார்கள்.

சங்கரின் மூலமாக ஏமாற்றத்தின் சாயை படரத் தொடங்கியதும் அந்த வீணை ஜோடி திடுக்கிட்டுத் திகைத்தது; முதல் அடியை உணர்ந்ததும் எதிர்ப்பட்ட எதிரொலியின் விளைவாக அந்த வீணை ஜோடி மற்ருெருசங்கற்பம் செய்துகொண்டது; 'இனியும் வீணை வாசிக்க நேர்ந்தால் சேர்ந்துதான் வாசிப்பது; ஒருவர் இன்றி மற்றவர் தனியே வீணைக் கச்சேரி நிகழ்த்துவதில்லை என்பதே தீர்மானம். அதன்படி 'வீணை ஜோடி'யின் நிகழ்ச்சிகள் நாளடைவில் கச்சேரி ஜாபிதாவிலிருந்து அநேகமாக எடுபட்டேவிட்டதெனலாம்.

அதன் உண்மைக் காரணம் அறியாத பல ரஸிகர்கள் அது குறித்து ஏமாற்றமடைந்தார்கள்; அரைகுறையாகத் தெரிந்த சிலர் அர்த்தமின்றி மேலும் வர்ணம் தீட்டி வம்பளந்து பொழுதுபோக்கினர்கள்.

வீணை ஜோடி பிரிந்தும் அவர்களைப்பற்றிய ஊர்வம்புக்குச் சிறிதும் குறைவே இல்லை; அதன் எதிரொலி சங்கரனையும் தாக்காமல் விட்டுவிடவில்லை; அவனும்தான் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தான்.

ஏமாற்றத்தின் தாங்க முடியாத எதிரொலியை வைராக்யத்தின் வலுவில் ஆழ்த்தி அதன்மூலம் சிறிது திருப்திப் பட்டுக்கொண்டிருந்த கௌரிக்கு இரண்டாவது அடியும் காத்துக்கொண்டிருந்தது எப்படித் தெரியும்?

“கௌரி! வீணை நாணுவின் கச்சேரி இன்றைய ரேடியோ நிகழ்ச்சியில் சேர்ந்திருக்கிறதே? உங்கள் தீர்மானம் தவிடுபொடிதானோ” என்று வியப்புடன் சங்கரனே கேட்டுக்கொண்டு வந்தபோது கௌரியால் நம்பவே முடியவில்லை.

“என்னை இப்படிக் கொல்லாமல் கொல்லுவதைவிட என் கழுத்தைப் பிடித்து நெறித்தே கொன்றுவிடுவது எவ்வளவோ புண்யமாகும்” என்று பொறுக்க முடியாத எரிச்சலுடன் அவள் சொன்னதும், “யாரைச் சொல்லுகிறாய் கௌரி? என்னையா? வீணை நாணுவையா?” என்று சங்கரன் திகைத்துப் போய்க் கேட்டான்.

வேண்டுமென்று அவன் அவளை அப்படிக் குத்தவில்லை; தன் வார்த்தைகளின் மதிப்பைக் குறித்து எடைபோடாமலே அப்படிப் பேசிவிட்டான்.

ஆனால் கௌரி நேர்விரோதமாக எடுத்துக் கொண்டுவிட்டாள். “உங்களைத்தான் சொல்லுகிறேன்; எங்கோ மூலையில் முடங்கிக்கிடக்கும் அவரைப்பற்றி அபாண்டம் சொல்லி நீங்கள் திருப்தி அடைவது இன்னுமா நிற்கவில்லை?” என்று சவுக்கடிபட்ட சிறுத்தையைப்போலே அவள் சீறினாள்.

சங்கரன் சிரித்தான்; சலிப்பு நிறைந்த சிரிப்பாகத்தான் வெளிப்பட்டது: “என்னிடம் உனக்கு இன்னமும் இவ்வளவு துவேஷம், வீணை நாணுவிடம் அவ்வளவு பக்தி— இதோ: நீயே பார்த்துக்கொள்” என்றபடியே அன்றைய தினசரிப் பத்திரிகையின் ரேடியோ நிகழ்ச்சிநிரலைப் பற்றிய குறிப்பிலே—மறுநாள் நடக்கவிருந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்குப் பதிலாக—‘வீணை நாணு’வின் கச்சேரி என்றிருந்ததைச் சுட்டிக் காட்டினான்.

கௌரி படித்தாள்.

சொல்லமுடியாத அதிர்ச்சி அடைந்துவிட்டவளைப் போலவே அவளது அப்போதைய தோற்றம் காணப்பட்டது.

கண்கள் கலங்கி நின்றன.

“பிரதிக்ஞையும் காற்றோடு போய்விட்டதா? நான் எதிர்பார்க்கவேயில்லை; கனவிலும் எதிர்பார்க்கவில்லை” என்று அவள் கணவனுக்குப் புலப்படாத யாருடனோ பேசுவது போல் மெதுவான குரலில் சொல்லிக்கொண்டாள்.

நிலை கலங்கிய அவள் தோற்றத்தைக் கண்டு சங்கரனும் கலங்கிவிட்டான்.

“வேதனைப்படுவது அவசியமில்லை கௌரி; கலையுணர்ச்சிக்கு அடிமைப்பட்டவர்களிடம் ஸ்திரபுத்தியை எதிர்பார்க்க முடியாது” என்று அவன் ஸமாதானமாகத்தான் பேசினான்.

ஆனால் எதிரொலி எதிரிடையாகத்தான் வெளிப்பட்டது அவளிடமிருந்து: “போதும்! வீணை நாணுவின் கலையுணர்ச்சி நாசமாய்ப் போகட்டும்!” என்று அவள் கொதிப்படைந்து சபித்தாள்.

“கௌரி! என் மனப்பூர்வமாக ஒரேயொரு வேண்டுகோள்: சொன்னால் கேட்பாயா கௌரி?” என்று சங்கரன் உண்மையிலேயே கெஞ்சினான், வாஸ்தவமாக எழுந்த மனப்பூர்வமான ஆர்வத்துடன். “நாளைய தினம் ரேடியோவில் நாணுவின் கச்சேரியைக் கேட்போம். சாவேரியை அவன் கட்டாயம் பாடுவான்; நீயும் உன் வீணையிலே கூடப்பாடி என் ஆசையைத் தணிக்கவேண்டும்” என்றான்.

எவ்விதத்திலும் அவர்களுக்குக் குறுக்கே அவன் வேண்டுமென்று நிற்கவில்லையென்றும், ஊர் வாயை மூடவே அப்படி நேர்ந்ததாகவும் ஊர்ஜிதம் செய்ய விரும்பினான்.

ஆனால் அவள்—‘மாட்டேன், மாட்டேன், மாட்டவே மாட்டேன்’ என்று பிசாசு பிடித்தவளைப் போலே கூவினாள்.

சங்கரன் வாயை மூடிக்கொண்டுவிட்டான்.

அப்புறமும் அதைப்பற்றிப் பேசவேயில்லை.

கௌரியும் அப்புறம் வாயே திறக்கவில்லை. மலைத்து மலைத்து நின்றாள், செய்த காரியங்களிலும் கணக்கிலடங்காத தவறுகளும், ஒன்றும் புரியாத தடுமாற்றமும் காணப்பட்டன. பிரமை பிடித்தவளைப்போலே நடந்துகொண்டாள்.

சொல்லமுடியாத சஞ்சலத்துடன் சங்கரன் அவளைக் கவனிக்கத் தொடங்கினான்.

மறுநாள் வீணை நாணுவின் கச்சேரிகுறிப்பிடப்பட்டிருந்த சமயத்திற்குக் கௌரியிடம் எல்லைமீறிய பரபரப்புக் காணப்பட்டது. காரணமின்றி அங்குமிங்கும் போனாள்; சுற்றுமுற்றும் வெறிக்க வெறிக்கப் பார்த்தாள்; உள்ளத்தை உந்தித்தள்ளும் அளவு கடந்த ஏதோ ஆசையை மிகவும் பிரயா

சைப்பட்டு அடக்கிக்கொள்ள முயலுபவளைப் போலே காணப்பட்டாள்.

சங்கரனைக் காணவே காணேம்; எங்கே போனுனே? அந்தச்சமயம் அங்கே இல்லையென்பது ஸர்வநிச்சயம்.

கௌரி மட்டுமே திணறித் திணறித் தவித்துக்கொண்டிருந்தாள். கடைசியில் அவள், தன்னையுமறியாமலே, ரேடியோவைத் திறந்துவிட்டாள்.

நாணுவேதான் வீணை வாசித்துக்கொண்டிருந்தான்.

"ஆஹா! சாவேரியைத்தான் அற்புதமாக இழைத்துக்கொண்டிருந்தான்; என்ன சுகம்! என்ன ஜிலுஜிலுப்பு! வீணையின் தந்திகளை மட்டுமா அவன் மீட்டினுன்? அவள் ஹ்ருதயத் தந்திகளையுமல்லவா சேர்த்து மீட்டிவிட்டான்! வீணையின் நரம்புகளை மட்டுமா அவன் நெருடினுன்? அவள் ஜீவநாடியையும்தான் துடிக்கவைத்தான்!

பல மாதங்களாக விரலாலும் தொடாமல் வைத்திருந்த வீணையை எடுத்துக்கொண்டு ஓடோடிவந்தாள்; அவளும் சேர்ந்து வாசிக்கத் தொடங்கிவிட்டாள்.

வீணையைவிட்டு நாதம் பிரியுமா? மலரைவிட்டு மணம் பிரியுமா? கலையுணர்வேவென்றது.

ஆனுல் ஒரே ஒரு வித்யாஸம்; அவனேடு சேர்ந்து பாடுவது அவளுக்குத்தான் தெரியும்; அவளோடு சேர்ந்துபாடுவதாக அவன் அறியான்; ஒருகால் இருவரும் சேர்ந்தே வாசிப்பதாக அவன் மனக் கண்ணில்மட்டும் பார்த்துக் கொள்ளலாம்; அவளோ—பிரத்யட்சமாக உணர்கிருள்; எவ்விதமாகவோ பிரதிக்ஞை தெறித்துப் போய்விடவில்லை; நிறைவேறியேவிட்டது. அவன் உடைக்க முயன்றபோதிலும் அவள் நிறைவேற்றியேவிட்டாள்.

கலையுணர்விற்கு வெற்றி; வைராக்யத்துக்கு வெற்றி: வீணையும், நாதமும்போல் இணைந்த உள்ளங்களுக்கு வெற்றி—

என்ன?......யார் அவள் எதிரில் நிற்பது?...

கௌரியின் வீணை திடீரென்று அபஸ்வரமெடுத்து அழுதுவிட்டது; விகாரமான ஓலத்துடன் வீணையின் தந்தி அறுந்து தொங்கிவிட்டது.

அதே சமயம் என்ன காரணத்தாலோ ரேடியோவில் ஒலித்துக்கொண்டிருந்த வீணையின் மதுர நாதமும் சொல்லிவைத்தாற்போல் நின்றுவிட்டது.

"ஆஹா? நல்ல சமயத்தில் வீணையின் தந்தி அறுந்துவிட்டதே?" என்று எதிரில்

கடவுளின்
கோவிலுக்கான
பரிசுத்தம்

தெய்வீகத்திற்குப் பரிசுத்தம் இன்றியமையாதது. மிகவும் சுத்தமளிக்கும் சடங்காச்சார ஸ்நானங்களுக்கு, சுயமான சோப்பை மட்டுமே நாம் உபயோகிக்கவேண்டும். ஸோப்பில் ஏது கலப்புமிருக்கலாம்; ஆனுல் கோத்ரெஜ் ஸாண்டலில் நன்மைதரும் கலப்பற்ற தாவர எண்ணெய்ச் சத்துக்களே. கோத்ரெஜ் சௌந்தரியப் பொருட்களிலெல்லாம் உள்ளன போன்று, தனிமைப்பட உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. வெறுக்கத்தக்க மிருகக்கொழுப்புகள் யாதும் அவைகளில் இல்லை. சுய மைசூர் சந்தனத்தைலம் ஏதேஷ்டமாய்ப் பொருந்தப்பெற்ற கோத்ரெஜ் சந்தன சோப்பானது இன்பமான குளிர்மை, இதம், மணம் இவைகளையுடைய நிலையை யளிக்கும்.

கோத்ரெஜ் விம்டா — கிருமிகளைக் கொல்லவும் சொஸ்தமளிக்கவும் வல்ல வேம்பின் குணங்களையுடைய ஸோப்.

Godrej Sandal

கோத்ரெஜ் ஸாண்டல்
(மார்க்) (சந்தன)
டாய்லெட் (ஸ்நான) ஸோப்

குறைந்த விலையில் மற்றைய ஸோப்புகளைவிட மிகவும் உயர்தரமான ஸோப்பு.

கோத்ரெஜ் சோப்ஸ் லிமிடெட்,
மதராஸ்: 164, பிராட்வே: கொச்சின்: 6/36, கல்வாதி.

நின்ற சங்கரன் சொல்லித் துடிதுடித்துப் போய்விட்டான்.

"நீங்கள் நிற்பது தெரிந்ததும் வேண்டுமென்றேதான் அறுத்துவிட்டேன்!" என்று வெறி பிடித்தவளைப் போலே கூவிய கௌரி பேய்ச் சிரிப்புச் சிரித்தாள்.

"அடி பாவி! வேண்டுமென்றேயா அறுத்துவிட்டாய்?" என்று சங்கரன் பதறிப்போய்க் கேட்டான்.

"ஆமாம்; அதேசமயம் வீணைகாணுவின் ரேடியோ ஒலிபரப்பும் நின்றுபோய்விட்டதே! கவனித்தீர்களா? எங்களுக்குக் குறுக்கே நீங்கள் மறுபடியும் வந்துநின்றதில் எனக்கும் இஷ்டமில்லை; காணுவுக்கும் இஷ்டமில்லை; கடவுளுக்கும் இஷ்டமில்லை: எற்கனவே ஒருமுறை குறுக்கிட்டு அவல ஒலி எழுப்பினீர்களே? அது போதாதா?" என்று கேட்டு, பைத்தியக்காரியைப் போலே மறுபடியும் நகைத்தாள்.

அன்று படுக்கையில் படுத்தவள்தான்.

மறு அதிர்ச்சியின் காரணமாக ஹ்ருதயம் அளவுகடந்து பலஹீனமடைந்துவிட்டதாக அவளைப் பரிசோதித்த டாக்டர் தெரிவித்தார்.

வீணையின் துடிப்பு நின்றதைப்போலவே கௌரியின் ஹ்ருதயத் துடிப்பும் நின்றுவிட்டது.

கௌரி ஏன் இறந்தாள் என்பதே சங்கரனுக்குப் புரியவில்லை.

அவள் போன சிலநாட்களுக்கெல்லாம் பத்திரிகையில் வெளியான செய்தியொன்று சங்கரனை மேலும் திகைக்க வைத்துவிட்டது; அதுவும் அவனுக்குப் புரியாத புதிராகத்தான் இருந்தது.

அந்தப் பத்திரிகைச்செய்தி சொல்லியது:

"பிரபல வைணிகர் 'வீணை நாணு'வின் அற்புதமான சாவேரி ராகத்தை இனி சங்கீத ரஸிகர்கள் கேட்டு அனுபவிக்கமுடியாதபடி துர்ப்பாக்யம் நேர்ந்துவிட்டது. அவரது கையில் புறப்பட்ட சிறுகட்டியொன்று பெரிதாகிப் புரையோடிவிட்டதன் விளைவாக ஆபரேஷனில் அவருடைய கையையே எடுக்கும்படியாகிவிட்டது; உண்மையில் சங்கீத உலகத்திற்கு மகத்தான நஷ்டமே." ●

உங்களுடைய விவசாயப் பண்ணை சாதனங்களை விருத்தி செய்து
அதிக லாபம் அடைய இதுவே தகுந்த தருணம்.

PLAN YOUR 1950 MECHANISATION NOW!

The Fordson Major with the famous F-R Mounted Plough

பண்ணைக்கு உகந்த விவசாய சாதனம் போர்ட்ஸன் மேஜர் டிராக்டர். காரணம்? அதை ஓட்டும் செலவு குறைவு. ஒவ்வொரு காலன் ஆயிலுக்கும் அது செய்யும் வேலை அதிகம். ஸ்பேர் பார்ட்டுகளும், ரிப்பேர் சார்ஜுகளும் சொல்பம். மேஜர் ஹைட்ராலிக் பவர்லிப்ட் என்னும் கருவி மிகவும் சிறந்தது. இதனால் மேஜரினுடைய உபயோகம் அதிகரிக்கிறது. போர்ட்ஸன் ஆயுதங்கள் லேசாகவும், ஆனால் பலம் பொருந்தியதாயும், ஏற்றச் சுலபமாயும், ஓட்டச் சௌகரியமாயும், இடம்விட்டு இடம் மாற்ற எளிதாயும் இருக்கும். இதனால் காலத்தை சிக்கனப்படுத்துவதுடன், உழைப்பில் அதிக உபயோகத்தையும் அளிக்கிறது. மேஜரைப்போல் அவைகளையும் வாங்க லாபகரமாயுமிருக்கும்.



Three screw levers within easy reach of the tractor seat enable the F-R plough to be accurately adjusted in work.

1. Depth Control 2. Front furrow width for side land work 3. Levelling

You get more work out of a Fordson

Fordson

MAJOR TRACTOR

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்

202, 203 மவுண்ட்ரோடு, சென்னை-2

கிளைகள்: பெங்களூர், உதகமண்டலம், திரிச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (Dn.)

டெப்போ: கோயம்புத்தூர்

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

மதராஸ்

ஸர். A. ராமஸ்வாமி முதலியார்,
K. C. S. I., D. C. L. (Oxon)
சேர்மன்

செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 18,75,000
ரிஸர்வ் நிதி	ரூ. 10,75,000

சென்னையிலுள்ள ஆபீஸ்கள்:

நேதாஜி ஸுபாஷ் சந்திரபோஸ் ரோட், மயிலாப்பூர்,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர் & பெரியமெட்.

தென்னிந்தியாவிலுள்ள எல்லா முக்கிய நகரங்களிலும்
கிளை ஆபீஸ்கள் உள்ளன.

குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

டோங்ரேயின் பாலாம்ருதம்

K. T. டோங்கரே அண் கோ பம்பாய்-4.

சென்ற இதழ் தொடர்ச்சி

வாழ்விலே சாவு

மாயாவி

புரையோடிய புண் ஒன்று இருக்கிறது. அதை எந்த வைத்தியர் வேண்டுமானாலும் ‘காமா-சோமா’ வென்று அறுத்து, மருந்தை வைத்துக்கட்டிக் குணப்படுத்திவிட முடியாது. பக்குவமாக இடமறிந்து கத்தியைப் பாய்ச்சவேண்டும்; உள்ளே தங்கியிருக்கும் சீழை வெளியேற்ற வேண்டும்; அப்புறம் அதன் ஆணிவேர் எங்கிருக்கிறது என்பதை ஆராய வேண்டும்; அதிலிருக்கும் முளையை எடுத்து, அந்த இடத்தில் மருந்திட்ட திரியைச் சொருகி முதலில் குழிப் புண்ணை ஆற்றிவிட்டுத்தான் வெளிப் புண்ணை ஆற்ற வரவேண்டும். எவ்வளவோ கவனமாகச் செய்யவேண்டிய அந்த ‘மேஜர் ஆப்ரேஷ’னைக் கைதேர்ந்த ரண வைத்தியரல்லாது வேறு யாராவது கையாண்டால், ஆள் ‘பைசல்’ தான்.

மனஸ்தத்துவ வைத்தியமும் இதுபோன்றதொரு ரண சிகிச்சையே. அங்கே ஆயுதங்களைக் கவனமாகப் பிரயோகிப்பது போன்று, இங்கே வார்த்தைகளைக் கவனமாகப் பிரயோகிக்க வேண்டும். பிறகே புரையை அகற்றி, ஆணிவேர் இருக்கும் இடத்தைக் காணமுடியும். அதைக் காணும் பூர்வாங்க சிகிச்சையில்தான் முதல் பத்து நாட்கள் டே ஈடுபட்டிருந்தார்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணி நேரமே அவர் சிகிச்சைக்குச் செலவிடுவார். பிறகு ‘இன்று இவ்வளவு போதும்’ என்று கிளம்பி விடுவார். ஆனால், அந்தப் பத்து நாட்களில் ரோகிணியின் நிலையில் அளவற்ற மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. அப்படியொன்றும் அதிசயமான சிகிச்சையில் டே இறங்கிவிடவில்லை. சிகிச்சையைத் தொடங்கும்போது அவள் மனம் எங்கே ஊன்றி நிற்கிறதென்பதைத் தெரிந்துகொள்ளுவார்; அங்கிருந்து பேச்சை ஆரம்பிப்பார். பிறகு மெள்ள மெள்ள அப்பேச்சு உலக விஷயங்களுக்குத் தாவும். ரோகிணி தம் பேச்சைச் செவி மடுக்கிறாளா என்பதை அவர் அவ்வளவாகக் கவனிப்பதில்லை. அவளிடமிருந்து எவ்வித ஆமோதிப்பையோ, பதிலையோ எதிர்பார்ப்பதுமில்லை. தம்போக்கில் பேசிக்கொண்டே போவார். சில சமயங்களில் அவள் அவர் பேசுவதை ஊன்றிக் கவனிப்பாள்; சில சமயங்களில் கவனம் வேறெங்காவது சென்றுவிடும். இருந்தாலும் அந்தப் பத்து நாட்களுள் அதிசயிக்கத்தக்க முன்னேற்றத்தை அவள் அடைந்துவிட்டாள். மற்றவர்கள் பேசும் பேச்சுக்களை அவள் செவிகள் ஏற்றன. தன் உணர்ச்சி உண்டாயிற்று. பசி. தாகம் இவற்றைக்கூட உணர்வதாகக் காட்டிக்கொண்டாள். அவ்வப்போது பழைய புலம்பலும், நிலைத்த பார்வையும் தோன்றினாலும், பெரும்பாலான சமயங்களில் அவள் பைத்தியம் தெளிந்துவிட்டது போலவே காணப்பட்டாள்.

* * *

சிகிச்சை தொடங்கி இருபது நாட்களாகிவிட்டன. அன்று மாலையில் டே பாபு வந்ததும், “இன்று தான் ஆணி வேரைக் கிளப்பப் போகிறேன்; அது எவ்வளவு எளிதாகக் கிளம்புகிறதோ. அவ்வளவு சீக்கிரமாக உங்கள் சகோதரி குணமடைவாள்” என்று சொல்லிவிட்டு ரோகிணியின் அறைக்குள் நுழைந்தார்.

“நமஸ்தே ரோகிணி அம்மா; இன்று உங்களுக்கு அருமையான கதை ஒன்று சொல்லப் போகிறேன்” என்று ஆரம்பித்தார், அவர். வழக்கம்போல, நானும் பன்ஸேயும் அடுத்திருந்த அறையில் அமர்ந்து. ஆப்ரேஷனின் அந்த முக்கிய கட்டத்தை உன்னிப்பாகக் கவனித்திருந்தோம்.

டே புதிய கதை ஒன்றும் சொல்லவில்லை. ரோகிணி அநசூயா கதையைத்தான் வங்கத்துப் பெயர்களிட்டுச் சொன்னார். அதோடு தாயும் பெண்ணுமாக இருந்தவர்களைத் தந்தையும் மகனுமாக்கினார். ஆயினும், அக்கதையை அவர் சொன்ன பாணியைப்பார்த்து எழுத்தாளர்களாகிய நாங்களே திகைத்து விட்டோம். தாமே கதையின் ஒவ்வொரு பாத்திரமுமாகி, சிறந்த நடிகன் ஒருவனின் உணர்ச்சியோடு அவர் பேசினார். குஷியான கட்டங்களில் அவர் பேச்சில் களிப்பு மிதந்

தது. துயர் நிறைந்த இடங்களில் அவர் குரலில் அழுகை கலந்தது.

மிகவும் விறுவிறுப்பாகச் சென்று ஆணிவேர்ச் சம்பவத்தைத் தொட்டது, கதை. டே சொல்லிக்கொண்டிருந்தார்.

"விமலச் சந்திரபாபுவின் மதிப்பெல்லாம் போய்விட்டது. அவர் மகன் ஹரிகாத்தைப் போலீசாரும் பிடித்துக்கொண்டுபோய்விட்டார்களோ, அவர் காக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகவேண்டியதுதான். தாம் சாவதற்குத் தயாராகத்தான் இருந்தார் விமல் பாபு. ஆனால், தமது மறைவுக்குப் பிறகும் ஹரியின் துர்ச்செயல்கள் வளர்ந்து கொண்டுதானே போகும்? ஜெயிலுக்குப் போவான்; தண்டனையடைவான்; திரும்பி வருவான். ஜெயில் வாசம் சிறிதாவது அவனது பிறவிக்குணத்தை மாற்றிவிடப்போகிறதா? பிறகும் பழைய கதைதானே? ஊர்க்காரர்கள் இப்பொழுது பேசுவதைவிட இன்னும் கேவலமாகப் பேசுவார்கள்—'மகனை அடக்கத் துப்பில்லாத கோழை தற்கொலை செய்துகொண்டான். தகப்பனுக்குரிய கடமையுடனா அவன் நடந்துகொண்டான்? பிள்ளையைக் கையைக் காலை ஒடித்து அடக்கி ஒடுக்காமல், தன் மானமே பெரிதென்று தற்கொலை செய்துகொண்டானே; அவன்போய் விட்டால் என்ன? இன்று இத்தனை அட்டூழியமும் புரியும் ஹரி அவன் மகன்தானே? அவன் உதிரத்தில் உதித்தவன்தானே?''

விமல்பாபு தமது நரைத்த தலையைப் பிய்த்துக்கொண்டார். 'தெய்வமே, இதிலிருந்து தப்ப வழியே கிடையாதா?'' என்று முகத்தை மூடிக்கொண்டு பிரலாபித்தார். முகத்தை மூடிய கைகளை வேதனை மாறாமலே அகற்றினாரோ இல்லையோ, அவர் கண்களில் எதிரே சுவரில் தொங்கிய அந்த நீண்ட 'கிர்பான்' பட்டது. தேஷ்பூர் ஜமீந்தார் முன்பு ஒரு காலத்தில் அவருக்கு வெகுமதியாக அளித்த கத்தி, அது. விமல்பாபு கிராம முனிசிப்பாக இருந்த ஊரில் ஒரு சமயம் குடியானவர்கள் வரிகொடா இயக்கமொன்றை ஆரம்பித்துப் பெரிய கலகம் விளைவித்தனர். அதைச் சடுதியில் அடக்கி அமைதியை உண்டுபண்ணியதற்காக அவருக்கு அளிக்கப்பட்ட வெகுமானம் அந்தக் கிர்பான்.

இப்போது அதைப் பார்த்ததும் விமல்பாபுவின் சிரம் அவமானத்தால் கீழே சாய்ந்தது. அவர் நினைத்தார்: "சீ! இனி நான் இதை வைத்திருக்க அருகதையற்றவன். அன்று ஆயிரக்கணக்கான குடியானவர்களை அரை நொடியில் அடக்கினேன்! இன்று ஒரே ஒரு சிறுவனை அடக்க வழியறியாது தத்தளிக்கிறேனே! தத்தளிப்பென்ன? பெற்ற பாசம் கடுமையான செயல்களில் இறங்கவிடாமல் என்னைப் பின்னே இழுக்கிறது. ஆனால், இதனால் வரப்போகும் அவமானம் மாறிவிடப்போகிறதா?

"கூடாது; இந்தப் பாசத்தை நான் அறுத்து எறிந்துவிடத்தான் வேண்டும். உத்தமமான என் வமிசத்துக்கு ஏற்பட்டிருக்கும் இக்களங்கத்தைப் போக்கிவிடத்தான் வேண்டும். அதற்கு............''

விமல் பாபுவின் நினைவோட்டம் வெளியே கூக்குரலினால் தடைபட்டது. கதவை இவ்வளவு பலமாகத் தட்டுவது யார்? போலீஸார்தாம் வந்துவிட்டனரோ? அவர் கதவண்டை ஓடி நின்று கவனித்தார்.

"கிழட்டுச் சனியன், கதவைத் திறக்க எத்தனை நேரம்? உள்ளே கூத்தியாளுடன் குலாவிக்கொண்டிருக்கிறதோ? ஏ அப்பா; ஏ கிழட்டுப் பிணமே, கதவைத்திற,''

விமல் பாபு கதவைத் திறந்தார். வெளியே அவர் ஆயிரங்காலம் அருந்தவம் இயற்றிப் பெற்ற அருமந்த மகன் குடி வெறியில் தள்ளாடிக்கொண்டு நின்றான்.

"உன்னை எந்தச் சனியன் பிடித்திழுத்துக் கொண்டு போயிருந்தது? வாசலில் ஒரு மனிதன் கத்திக்கொண்டிருப்பது உன் காதுகளில் விழவில்லை?'' என்று அதட்டினான் ஹரிகாத்.

முன் போல, அவன் பேச்சை உணர்ச்சியற்ற கட்டையாகக் கேட்டுக்கொண்டிருக்கவில்லை, விமல் பாபு. அவர் கண்களில் என்றுமில்லாத ஒரு கோப வெறி பறந்தது. "சப்தம் போடாமல் உள்ளே போடா, பாவி'' என்று கூறிவிட்டு, வாயிற் கதவை அடைத்து உட்புறம் தாழிட்டார், அவர். பிறகு தள்ளாடி நின்ற மகனை வெறியோடு கூடத்துக்கு இழுத்துச்சென்று நிறுத்தினார். சட்டென்று சுவரில் தொங்கிய கிர்பானைக் கையிலெடுத்து அதன் உறையை உருவிக் கீழே எறிந்தார். "இது என்ன தெரியுமா?'' என்று அதை அவன் மார்புக்கு நேராகத் தூக்கிப் பிடித்தவாறு அனல் பறக்கக் கேட்டார்.

ஹரிகாத் கட கடவென்று சிரித்தான். "ஓஹோ! கொல்லப்போகிறாயா? கொல் அப்பா, தாராளமாகக் கொல். ஆனால், இன்று தான் என்னைக் கொல்லப் போவதாக எண்ணிவிடாதே. பிறப்பதற்கு முன்பே என்னைக் கொன்று தான் பிறப்பித்தாய். ஆம்; அன்று என் மனத்தைக் கொன்றாய்; இன்று உடலைக் கொல்லப் போகிறாய்.

என்று கிடைக்கும் இந்தப் பாக்யம்? என்று காத்திருந்தேன். இன்று தான் கிட்டிற்று. உம்; ஏன் தயங்குகிறாய்? கொல்லு சீக்கிரம்; இந்தா என் மனமற்ற மார்பு!"

ஹரிநாத் படீரென்று தனது சட்டையைக் கிழித்துக்கொண்டு அவர்முன் போய் நின்றான்

விமல்பாபுவின் வெறி உச்சியில் நின்றது. கொஞ்சங்கூடத் தயங்காமல் அந்தப் பாவி, தான் பெற்ற மகனின் மார்பில் கிர்பாணைப் பாய்ச்சிவிட்டார். அநியாயம்! அநியாயம்!"

மறு நிமிடம், "அபாண்டம்! அபாண்டம்!" என்று எதிரொலித்தது ரோகிணியின் குரல். "பொய்! பொய்!! விமல்பாபு கொல்லவில்லை, அவனை."

"ரோகிணியா பேசுகிறாள்? என் சகோதரியா பேசுகிறாள்?" என்று துள்ளி எழுந்த பன்ஸேயை நான் அமர்த்தி உட்காரச் செய்துவிட்டு, மேலே கவனிக்கலானேன்.

ஆணிவேர் அகப்பட்டுவிட்டது, டே பாபுவுக்கு. அதன் முளையை அவர் கிளறலானார்.

"பின் யார் கொன்றது அவனை. அவனே தற்கொலை செய்துகொண்டானா?"

"ஆம்; அப்படித்தான்; அவர் கையிலிருந்த அரிவாள்மணையை......"

"ஆமாம்; ஆமாம்; அரிவாள்மணைதான்! அதைக்கொண்டுதான் மகளைக் கொன்றாளா?"

"இல்லவே இல்லை. அவளைக் கொல்லும் எண்ணம் எனக்குச் சற்றும் கிடையாது. 'என்னை இப்படி வாட்டி வதைப்பதை விட இதோ இந்த அரிவாள்மணைகொண்டு, உன் கைகளாலே வெட்டிப் போட்டுவிடு' என்று அதை அவள் முன் நீட்டினேன். அதை அவள் வாங்கிக்கொண்டாள். பிறகு, ஏதோதோ பேசிவிட்டு, நான் சற்றும் எதிர்பாராத தருணத்தில் தன் கழுத்தை வெட்டிக்கொண்டுவிட்டாள்."

"அப்படியானால் நீங்கள் அவளைக் கொல்லவில்லையா?"

"இல்லை; நான் தான் அவளைக்கொன்றேன். ஆனால் அன்றல்ல; வெகுகாலத்துக்கு முன்பு என் கருவில் இருந்தபோதே"

புண்ணின் ஆழமான மூலைப் பகுதியிலிருந்து மேலே மேலே குணப்படுத்தி வரும் வைத்தியரைப்போல, ஆணி வேரிலிருந்து மேலே மேலே விஷயத்துக்கு வந்துகொண்டிருந்தார் டே பாபு.

"கருவிலிருக்கும்போது கொல்லுவது எவ்வாறு சாத்தியமாகும்?" என்ற அவருடைய அடுத்த கேள்வி, டே விஷயத்துக்கு வந்துவிட்டதை எங்களுக்கு விளக்கிற்று.

"அவளையல்ல; அவள் மனத்தைக் கொன்றுவிட்டேன்." என்றாள் ரோகிணி.

"எப்படி?"

"ஆமாம்; என் மனத்தில் தங்கியிருந்த விஷ நினைவு அவள் உள்ளத்தை மாசு படுத்திவிட்டது."

"உங்கள் உள்ளத்தில் விஷ நினைவா?"

"ஆம்: அது விஷ நினைவு தானே? ஒரு தடவையா? இரண்டு தடவையா? பத்து வருடங்களுக்கு, மாதம் ஒரு தடவையாவது நிச்சயமாக என் மனத்தில்தோன்றிய துர்நினைவு தானே, அவளிடம் செயலாகப் பரிணமித்தது?"

"நீங்கள் சொல்வது விளங்கவில்லையே?"

நொந்த புண்ணைக் கிறியதும் பீறிட்டுக் கொண்டுவரும் ரத்தமும் சலமும் போல மறுநிமிடமே ரோகிணியின் நொந்த உள்ளப் புண்ணிலிருந்த வேதனைகள் பீறிட்டுவந்தன.

"உங்களுக்கு விளங்காது; ஒருவருக்குமே விளங்கியிராது, என் மனப்போக்கு. ஏன்? எனக்கே அது விளங்கவில்லையே? 'எங்கே போகிறோம்? இந்தச் சிந்தனையின் முடிவு தான் என்ன?' என்பதை நானே புரிந்துகொண்டேனில்லையே! எனினும், துயரம் மிஞ்சும்போது மாதத்தில் ஒரு தடவையாவது அந்தக் கெட்ட எண்ணம் என்னிடம் தோன்றாமல் இருந்ததில்லை.

'என் அறிவென்ன? அந்தஸ்தென்ன? நான் ஏன் இந்த அறிவிலிக்கு வாழ்க்கைப்பட்டேன்? நெடுக வளர்ந்து, நிறையச் சம்பாதிக்கும் திறமை மாத்திரம் இருந்துவிட்டால் போதுமா? மனிதருக்குக் கொஞ்சமாவது பொது அறிவு வேண்டாமா? குழந்தை பிறப்பது என் இச்சையிலும், அவர் இச்சையிலுமா இருக்கிறது? அது ஆண்டவனின் அமைப்பு என்பது இவருக்கு ஏன் விளங்கவில்லை? அப்படிக் குழந்தைக்கு ஆசையாக இருந்தால், நான் தான் ஆயிரம் தடவைகள் அநுமதி அளித்து விட்டேனே— வேறொரு பெண்ணை மணந்துகொள்ளுவது தானே! அவ்வாறும் செய்யாமல் ஏன் என்னை இப்படிக் கஷ்டப்படுத்த வேண்டும்? என்னிடம்தான் தமக்குக் குழந்தை கிட்டவேண்டும் என்பது இவர் விருப்பமா? அப்படியானால் அதை நான் எவ்வாறு பூர்த்தி செய்ய முடியும்?' இவ்வாறு எவ்வளவு நாட்களுக்கு மண்டையை உடைத்துக்கொண்டிருக்கிறேன், தெரியுமா?

நடுஇரவில் படுக்கையில் எழுந்து உட்கார்ந்துகொண்டு சிந்திப்பேன்; சிந்திப்பேன்; சிந்திப்பேன். அருகே, நிர்ச்சலனமாகக் குறட்டை விட்டு உறங்கிக்கொண்டிருப்பார் என் கணவர். "பாவி உனக்காக-உன் நிமித்தமாக-இரவு பகல் ஊக்கமின்றி வாடித் தவிக்கிறேனே? என் கவலையில் ஓர் அணு அளவேனும் உனக்கு இருந்தால் இப்படித் தூக்கம் வருமா? இல்லை; உன் அந்தரங்கம், குழந்தை வேண்டும் என்பதல்ல; என்னைக் கஷ்டப்படுத்தவேண்டும்; நான் இப்படி விளக்கில் விழுந்த விட்டிலாகக் கருகிச் சாக வேண்டும் என்பது தான் உன் விருப்பம். அதனால் தான் நீ இப்படிக் கவலையின்றித் தூங்குகிறாய்.' இது போன்ற எண்ணம் ஏனோ என்னுள் எழத்தொடங்கிற்று.

நாளடைவில் அது வளர, வளர அவரை நான் உள்ளூர வெறுக்கலானேன். அவர் தொடர்பை அருவருத்தேன். அவர் முகத்தைக் காணவும் கசங்கினேன். அவர் பேச்சுக்கள் என் செவிகளில் சற்றும் உறைக்க

வில்லை. ஆயினும் மனைவியென்ற முறையில் அவர் இச்சைகளுக்கு அடங்கி-இல்லை, பயந்து நடந்து வந்தேன். ஆனால், அந்தச் சுடுசொல் மலடி என்ற அவர் கடுமையான சொல், என் செவிகளில் எப்பொழுதும் எதிரொலித்துக் கொண்டுதானிருந்தது.

என்னால் அதைப் பொறுக்கவேமுடியவில்லை; எதற்கெடுத்தாலும், அதே ஏசலா? குழம்பில் உப்பில்லையா? ‘மலடி; பெண்ணும் பிள்ளையும் பெற்றுக் குடும்பம் நடத்தியவளுக்கல்லவா, சமையல் வேலையில் பழக்கமிருக்கும்?’ என்பார். அவர் உடுப்புக்குப் பொத்தான்களிட மறந்துவிட்டேனா? அதற்கு ஒரு மலடிப் பட்டம்! அவருக்குத் தலை வலியா? அதற்கும் இந்த மலடிதான் காரணம். எங்கேயும், எப்பொழுதும், அவர் வாய் திறந்தால் ‘மலடி’ யென்ற அர்ச்சனைதான்.

நான் யாரிடம் சொல்லி அழுவேன்? அழுது தான் என்ன பயன்? என் விதிக்கு அவர்களால் என்ன செய்ய முடியும்? இருந்தாலும் துன்புற்ற மனது யார் மடியிலாவது முகத்தைப் புதைத்து ஆத்திரம் தீரக் கண்ணீர் சிந்த விரும்பிற்று. திரும்பத் திரும்ப பன்ஸே அண்ணாவிடம் தான் சொல்லிச் சொல்லிப் புலம்புவேன். அவனையும் கண்ணீர்விடச் செய்வேன்.

ஆனால், எனக்கு விடிவு? இந்தக் கஷ்டத்திலே மாய்ந்து மடிய வேண்டியதுதானா? இதற்கு ஒரு பரிகாரமும் கிடையாதா?

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் அடுத்த வீட்டுப் புஷ்பா ஊருக்கு வந்தாள். அவள் நவநாகரிக மங்கை. முற்போக்கான சுபாவங்களுடையவள். யாரையும், எதற்கும் பொருட்படுத்தமாட்டாள். தன் வரையில் சந்தோஷமாக வாழ்க்கை நடத்துவதையே பெரிதும் கவனிப்பாள். இல்லாவிட்டால், அறுபது வயதுக்கு மேற்பட்ட கிழவருக்கு வாழ்க்கைப்பட்ட பிறகும், சிறிதும் உல்லாசம் குன்றாதிருப்பாளா?

புஷ்பாவைப் பற்றி ஊரில் பலவிதமாகப் பேசிக்கொண்டார்கள். கலியாணமாகி ஆறு வருடங்களில் அடுக்கடுக்காக ஐந்து குழந்தைகளைப் பெற்றெடுத்து விட்டு, ஆறாவது பிரசவத்துக்குப் பிறந்தகத்துக்கு வந்திருந்தாள். புக்ககத்தில் அவள் கணவரின் மூத்ததாரத்துப் பிள்ளை, வயதான வாலிபன் ஒருவன் இருக்கிறானென்றும், அவனும் அவளும் மனம் ஒன்றி விட்டார்கள் என்றும் ஊர் வாய் அரற்றுவதை நான் அறிவேன்.

ஆனால், அதை நான் சற்றும் நம்பவில்லை. பெண் மனத்தைப் பெண்ணே அறியமாட்டாள். அது எத்தனை தூய்மையானது என்பது அவளுக்கே தெரியாது. எனினும், பிறரை அவதூறு கூறுவதில் மாத்திரம் அது சற்றும் சளைப்பதில்லை. அதுவும் தன் சக இனத்தின் மீது பழி சுமத்துவதென்றால் பெண்ணுக்குத்தான் எத்தனை உற்சாகம்! இதுதான் புஷ்பாவைப் பற்றி நிலவி வந்த வதந்தியின் அடிப்படை என்று நான் நம்பியிருந்தேன். அனால், அன்று புஷ்பாவே அதை ஒப்புக்கொண்டபோது-ஒப்புக்கொண்டதுமாத்திரமா?

அவள் சொன்னாள்:— “இதோ பார், ரோகிணி; என்னைக் கேவலமானவள் என்று வேண்டுமானாலும் நீ மதித்துக்கொள்; ஆனால் நான் உன்னைப்போல மனம் புழுங்கிச் செத்துக்கொண்டிருக்கவில்லை. ஆமாண்டீ; அறுபது வருஷத்தைத் தாண்டிய கிழவருக்கு வாழ்க்கைப்பட இசைந்தபோது அவரிடம் இத்தனை குழந்தைகளைப் பெற்றுக் களித்துவிட முடியுமென்று நினைத்தா மணந்துகொண்டேன்? அவரைக்கொண்டு எனக்குச் சற்றும் பயனில்லை; அவரிடம் எனக்கு ஒரு குழந்தை கூடப் பிறவாது என்பதை முதல் நாள் சந்திப்பிலேயே தெரிந்து கொண்டேன். ‘வாழ்வில் இன்பம்தான் நசித்துவிட்டது. அவர் சொத்துக்களில்கூட உரிமைகிடையாது, நான் மலடியாக நிற்க நேரும்’ என்றறிந்தபோது, துணிந்து விட்டேன். இப்பொழுது பார்; கிழம் தனது காயகல்ப சிகிச்சை அளித்த குழந்தைகளென்று களித்திருக்கிறது. நானும் சந்தோஷமாக இருக்கிறேன். என்னை மலரச்செய்த அவர் பிள்ளை—அவனும் உல்லாசமாக வாழ்கிறான். வாழ்வதும், வருந்துவதும் நம் கையில்தானிருக்கின்றன. என்னை நம்பினால், நம்பு; நம்பாவிட்டால் போ; உன் மலட்டுத் தன்மை உனது குற்றமல்ல; அது உன் கணவரின் மலட்டுத்தனத்தின் பிரதி பிம்பம். எனவே, நீ இதிலிருந்து மீளவேண்டுமானால், என்னைப் போலத் துணிந்து...............!”

“சீ! இவளும் ஒரு பெண்ணா?” என்ற அருவருப்பு எழவே, மேலே கேட்க விரும்பாமல் நான் விறுவிறு என்று எழுந்து வந்துவிட்டேன், என் வேகத்தைப் பார்த்துப் புஷ்பா எள்ளி நகைத்தாள். அவள் நகைப்பின் அர்த்தம் அப்பொழுது எனக்கு விளங்கவில்லை. ஒரு வருஷத்துக்குப் பின்தான் அது விளங்கிற்று.

என் கணவர், முப்பத்தைந்து வயதான அவ்வாலிபரும், அறுபது வயதுக் கிழவரும்

டால்டாவில் தயாரித்த ருசிமிக்க ஜவ்வரிசிக்கூழ்

உடலுக்கு "உஷ்ணத்தை" தரும் மாவுசத்து ஜவ்வரிசியில் ஏராளமாய் இருக்கிறது. ஜவ்வரிசி எளிதில் ஜீரணமாகக்கூடியது. தவிர உங்கள் குழந்தைகள் இந்தக்கூழை மிகவும் விரும்புவார்கள். ¼ கப் ஜவ்வரிசியை 1 மணி நேரம் தண்ணீரில் ஊறவைக்கவும். 1 கப் வடிகட்டின கெட்டியான வெல்லப்பாகுடன், சுக்கு, ½ தேக்கரண்டி உப்பு இவைகளை சேர்க்கவும். தெளிவாகும்வரை பாகையும் ஜவ்வரிசியையும் அடுப்பில் வைத்துக்காய்ச்சவும். பாத்திரத்தை குளிர்ந்த தண்ணீரால் கழுவினபின் அதில் கூழை ஊற்றி உறைய வைக்கவும். பிறகு ½ கப் வெல்லத்துடன் 2 பெரிய ஸ்பூன் டால்டா சேர்த்து கொதிக்கவைக்கவும். அதில் 3 பெரிய ஸ்பூன் தண்ணீர் சேர்க்கவும். அடுப்பிலிருந்து இறக்கி 2 பெரிய ஸ்பூன் அளவு எலுமிச்சஞ்சார் சேர்க்கவும். கூழை பாத்திரத்திலிருந்து அகற்றி பாகை அதன்மேல் ஊற்றி, முந்திரிப்பருப்பு முதலானவைகளை மேலே தூவவும். டால்டாவில் தயாரித்த உணவு சூடாகவோ, ஆறியோ எப்படி இருந்தபோதிலும் ருசி மிக்கதாய் இருக்கும். டால்டா ஒரு சுத்தமான தாவரக்கொழுப்பாகையால் அது அதிகநேரம் சூட்டைத்தாங்குகிறது—எனவே, உணவுகள் ஒழுங்காக முழுவதும் பக்குவமாவதற்கு போதுமான சாவகாசம் அளிக்கிறது.

உஷ்ணமான வேளைகளில் அருந்த
ஆரோக்கியமளிக்கும் பானங்கள்!

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது
என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்!

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 133-178 TM

ஒரே ஈடா? இவரா மலட்டுத் தன்மை படைத்தவர்? இல்லை இல்லை; இருக்கவே முடியாது. புஷ்பா ஒரு பதிதை. மூக்கறுந்தவள் கதையாக, எல்லோரையும் மூக்கறுக்க முயலுகிறாள். நான் பதிவிரதை. என் உடல் அறுந்தாலும் அறுமே யன்றி மூக்கு அறுபடுவதை நான் நினைக்கவே மாட்டேன்.

அன்று தொடங்கி என் நடையில் ஒரு விசேஷ மாறுதல் ஏற்பட்டது. 'எனக்கு இவரிடம் குழந்தை பிறக்கும்; நிச்சயமாகப் பிறக்கும்' என்ற நம்பிக்கை எப்படியோ ஊறிவிட்டது. முன்போல அவரை உதாசீனமாகப் பார்ப்பதை விட்டுவிட்டேன். மனமுவந்து அவருக்கு ஈடுபட்டேன். தாம்பத்ய உறவை அவரைவிட அதிகமாக – ஆவலாக – ஏற்றுக் கொண்டேன்.

ஒரு மாதமாயிற்று; என் நம்பிக்கைதானோ என்னவோ? நான் கருவுற்று விட்டதுபோல ஒரு தோற்றம் உண்டாயிற்று. அதற்கேற்ப விலக்க நாளும் தள்ளிப் போயிற்று. புஷ்பாவின் வாக்கைப் பொய்யாக்கிவிட்டேன் என்று இறுமாந்திருந்தபோது—

"என்ன மலடி! கொல்லையில் உட்காரவில்லையா? நாளாகி விட்டதே" என்ற வரவேற்புடன் என் கணவர் ஒரு மாலையில் வீட்டுக்கு வந்தார். 'மலடி' என்ற அந்த ஈட்டியைக் கடந்த ஒரு மாதமாகப் புஷ்பாணமாகவே ஏற்றுக்கொண்டிருந்தேன்; ஆனால் இன்று அதற்கு அவர் ஒரு காரணமும் காட்டியபோது, அது மீண்டும் ஈட்டியாகி என் நெஞ்சில் புகுந்தது.

அன்றிரவே நான் விலக்காகிவிட்டேன்!

இருந்தாலும், என் நம்பிக்கை மாண்டுவிடவில்லை. ஒரே ஒரு விலக்குத் தப்பிவிட்டால் போதும்; பிறகு குழந்தைக்குத் தாயாகிவிடுவேன் என்ற உறுதி என்னுள் இருந்துகொண்டே இருந்தது. ஆனால், அவர் அதற்கு இடமளித்தால் தானே! நாட்களை எண்ணிக்கொண்டிருப்பாரோ, என்னவோ? சரியாக முப்பதாவது நாள், 'என்ன கொல்லையில் தானே?' என்று தவறாது கூறி நான் கட்டிச் சேர்த்த நம்பிக்கையைச் சிதைத்துவிடுவார். அங்கும் இங்கும் சிதறிய மனலை ஒன்றாய்ச் சேர்த்து ஒரு விதமாக நான் வனைந்த கோட்டை, இப்படிப் பத்து முறைக்கு மேலாகச் சிதைந்து போயிற்று. அதோடு அந்த நம்பிக்கையும் உருவிழந்து நசித்துவிட்டது.

இனி, புஷ்பா கூறிய வழி ஒன்றுதானா, நான் பிழைக்க வழி? இந்தப் பாவ நினைவு இப்பொழுது மலடி என்ற வார்த்தையைக் கேட்கும்போதெல்லாம் என்னிடம் எழ ஆரம்பித்தது. தினமும் ஒரு தடவையா? இரண்டு தடவையா? ஆயிரம் தடவைகள்; அப்படி ஆயிரக் கணக்கான நாட்கள்—ஒரு ஆறு வருஷம்— இந்தத் துர்நினைவு என்னுள் எழுந்து எழுந்து அமுங்கிற்று.

அதிலும் விலக்குக் காலத்தில் அது உச்சநிலையை அடைந்துவிடும். இப்படிக் கஷ்டப்படுவதைவிட ஏன் அப்படிச்செய்துவிடலாகாது? அதிலாவது நான் தேறுகிறேனா எனப் பார்த்துவிட்டால்தான் என்ன? என்று கூடக் கேவலமாக ஓடும் கலங்கிய மனம். ஆனால், ஏதோ ஒரு தெய்வீக சக்தி— அதை அப்படித்தான் சொல்லவேண்டும்—என்னை இழிந்துவிடாமல் காத்துவந்தது.

பத்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நாள்— குமுறிக்கொண்டிருக்கும் வானம் திடீரென்று மழையைப் பொழிவதுபோல, என் உள்ளம் கட்டுக்கடங்காமல் பொழியலாயிற்று. அன்று அந்தத் துர்நினைவு ஆவேசம் கொண்டு ஆடிற்று, என்னுள்.

என் கணவர் அன்று காலையில் தெரிவித்த செய்தி ஒன்றுதான் அந்த ஆவேசத்துக்குக் காரணம். வியாபார நிமித்தமாக ரத்னகிரியில் இரண்டு மூன்று மாதங்கள் தங்கவேண்டும் என்றும், மறுநாளே தாம் புறப்படப் போவதாகவும் அவர் சொன்னார். 'இரண்டு மூன்று மாதங்கள்! உனக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!! வீட்டில் நீ தனி மனுஷி. உன் இஷ்டப்படி என்ன வேண்டுமானாலும் செய்யலாம். இப்பொழுதாவது புத்திசாலியாக நடந்துகொள்' என்று என்னைத் தூண்டிற்று அந்தத் துர்நினைவு.

ஆனால், சற்றைக்கெல்லாம் தூய அலைகள் எழுந்து அதை மூழ்கடித்தன. "நான் கெடவா? இந்த ரோகிணியின் உடல் அழுகுவதா? சீ! அதைவிட அது ஒரேயடியாக அழிந்துவிட்டால்தான், என்ன?"

அலை, கடலை நோக்கித் திரும்பிற்று. அது வடிந்ததும் மீண்டும் துர் எண்ணம் தலைதூக்கிற்று. மறுபடியும் ஓர் அலை; மறுபடியும் அந்த நினைவு; என்னுள் ஒரே கொந்தளிப்பு.

அதன் வேகத்தைத் தாங்க மாட்டாது, மனதை வேறு வழியில் இழுக்க, துளசி ராமாயணத்தை எடுத்து வைத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தேன். என் விதியை என்னவென்று சொல்லுவது? ராமாயணத்தைத் திருப்பிய போதுகூட என் கண்களில் பட்ட முதல் சுலோகம், சூர்ப்பனகை அயல் புருஷனை ராமனிடம் கொண்ட முறை தவறிய காதலை விவரிக்கும் கட்டம் தான். ராமாயணப் புத்தகத்தை மூடி

வைத்துவிட்டுச் சுவரோடு சாய்ந்துகொண்டேன். எவ்வளவுநேரம் அந்நிலையில் இருந்தேனோ, தெரியாது: "என்ன இது? வீட்டில் விளக்குக்கூட ஏற்றாமலிருந்தால், எப்படி இந்த வீடு விளங்கும்?" என்ற ஆர்ப்பாட்டமான கணவரின் குரலைக்கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து எதிரே சுவரிலிருந்த கடிகாரத்தைப் பார்த்தேன். மணி ஒன்பதுக்கு மேலாகிவிட்டது. ஓடிச் சென்று விளக்கு ஸ்விச்சுகளைப் போட்டுவிட்டு, குத்து விளக்கையும் ஏற்றிப் பூச்சூட்டி நமஸ்கரித்தேன்.

நமஸ்கரித்துவிட்டுத் திரும்பியபோது, கணவர் பின்னால் நின்று என்னையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டேன். அவருக்குப் பெரிய துரோகத்தைச் செய்துவிட்டதுபோலவும், அதற்கு மன்னிப்புக் கோரும்படியும் என்னுள்ளிருந்து ஏதோ ஒன்று உந்திற்று. ஓடிச்சென்று அவர் பாதங்களில் விழுந்தேன். வாயினின்று வார்த்தைகள் எவையும் வரவில்லையெனினும், கண்ணீர் மாலை மாலையாக வழிந்தது. விசித்து விசித்து அழுதேன். அவர் என்னைத் தூக்கி அணைத்துக் கொண்டு, "எதற்கு இப்பொழுது அழுகிறாய்?" என்று கேட்டார்.

நான் என்னசொல்ல முடியும்? பேசாமல், பரிதாபமாக அவர் முகத்தை நோக்கினேன். அதில் என்றும் காணாத ஓர் அன்பு வடிவதாகத் தோன்றிற்று. அந்த அன்பில் நான் ஈடு பட்டுவிட்டதுபோல அவரும் என்னிடம் ஈடு பட்டுவிட்டார், போலும்; அவர் அணைப்பு என்னை இறுக்கிற்று. அந்தத் தெய்வ சந்நிதானத்தில்—தீப லட்சுமியின் முன்—அவர் அன்பு அணைப்புக்கு முழு மனத்துடன் ஈடுகொடுத்தேன். அன்று அடைந்த திருப்தியை எப்படியென்று வருணிப்பது? அதுதான் அவரின் கடைசி அணைப்பு என்பதால் தான் அந்தத் திருப்தியோ?

மறுநாள் என் கணவர் ரத்னகிரிக்குப் போய்விட்டார். போனவர் போனவர்தான். ஆனால் அவர் சின்னம் என் வயிற்றில் தங்கிவிட்டது. முதல் விலக்கு, கெடுவைத் தாண்டிற்று. பின்னர் ஒரு கெடுவும் சென்றுவிட்டது.

என்னால் நம்பவே முடியவில்லை. நான் தாயாகப் போகிறேனா? காய்ந்த பாறையாகி வெடிப்பு விழுந்த என் வயிற்றிலும் பயிர் முளைக்கப் போகிறதா? எத்தனையோ புயல்களில் சிக்கி இறுதியில் அமைதியைக் கண்டுவிட்டேனா? அந்தப் பரத்தை புஷ்பாவைப் போல், கொண்ட கணவனிருக்க அயலானிடம் குழந்தை பெறாமல், என் கணவரிடம் எனக்கே ஒரு குழந்தை உண்டாகிவிட்டதா?

ஆம்; உண்டாகிவிட்டதென்ற உறுதியுடன் மூன்றாம் மாதமும் தாண்டிற்று.

பன்ஸே அண்ணாவிடம் தான் முதல் முதலாக இந்தச் செய்தியை அறிவித்தேன். அடேயப்பா! அவன் அடைந்த ஆறுதலையும் ஆனந்தத்தையும் அளவிடத்தான் முடியுமா? 'உன் கணவருக்குத் தந்தி கொடுக்கிறேன்' என்று கிளம்பிய அவனைத் தந்திச் சேவகன் ஒருவனே எதிர்கொண்டான்.

ஆமாம்; என் கணவரின் கொலைச் செய்தியை எடுத்து வந்தான் அவன். வாழ்வில் இரண்டாவது முறையாக என் மனம் செத்தது. முதல் முறை 'மலடி' யென்ற பட்டத்தினால் அது செத்தது. மறுபடி எப்படியோ உயிர் பெற்று எழுந்தபோது, இந்தச் செய்தி இன்னொரு முறை அதைக்கொன்றது. எவருக்காக—எவருடைய அமைதியான—சந்தோஷமான—முகத்தைக்காண—நான் கருவுற்றேனோ, அவர் போய்விட்டார். என் மூளை சுழன்றது. 'கொலை! கொலை!! கொலை!!!' என்ற வார்த்தையைத் தவிர வேறு எதையும் அது ஏற்கவில்லை.

எத்தனை மாதங்கள்?— ஏன்? இப்பொழுது கணக்காகச் சொல்லி விடலாம் — சரியாக ஏழு மாதங்கள் அந்தக் கொலைப் பைத்தியம் என்னைப் பிடித்திருந்தது. பிறகு, 'குவா' என்ற மதுரமான குரலொன்று என் செத்த மனத்துக்கு உயிர் ஊட்டிற்று. ஆஹா! எவ்வளவு அழகான குழந்தை, அது? பெண்ணானால் என்ன? என் குலம் விளங்க வந்த மணி விளக்கல்லவா அவள்? என் ஆவி அனைத்தும் அந்த நிமிஷமே அவளிடம் தாவிவிட்டது.

* * *

புலியின் வயிற்றில் பூனை பிறந்தாலும் பிறக்கும்; பூனையின் வயிற்றில் புலி பிறக்க முடியுமா? ஆனால் என் வயிற்றில் பிறந்தது புலியாகத்தான் வளர்ந்தது. பூனையின் சாதுத் தன்மையுடன் அவளை நான் கண்டதெல்லாம், இரண்டோர் ஆண்டுகள்தாம். அன்று கண்ட அவள் தோற்றத்திலிருந்து நான் எத்தனையோ ஆகாயக்கோட்டைகளை வனைந்தேன். ஆனால், கழுதையானது தனது குட்டியைப் பார்த்துவிட்டுக் குதிரையென்ற பெருமையை அடைந்தாற் போலத்தான் ஆயிற்று, என் நினைவெல்லாம்.

எவ்வளவு ஆசையோடு அவளுக்குக் கற்பரசியான அனசூயா தேவியின் பெயரைச் சூட்டினேனோ, அதற்கு நேர் மாறாக அவள் தலையெடுத்து விட்டாள். பெண்ணின் இலக்கணமாகிய கற்பு அவள் வரையில் விலைப் பொருளாயிருக்கிறது என்பதை அறிந்த

உடனே என் மனம் மூன்றாம் முறையும் செத்து விட்டது. அவள் எவ்வளவோ தறிதலையாகத்தான் திரிந்தாள். என் வார்த்தைகளைச் சற்றும் மதியாது எனக்கு எதிராகவே ஒவ்வொரு காரியத்திலும் நடந்தாள். அதையெல்லாம் நான் பொருட்படுத்தவில்லை. ஆனால், பெண் என்ற மாணிக்கம், சாதாரணக் கண்ணாடிக் கல்லைப்போல, சந்தைக் கடையில் விலையாவதை என்றால் சகிக்கவே முடியவில்லை. ஆயினும், அவளை அப்படியே விட்டு விடுவதா? திருத்தியாக வேண்டுமே?

'வெகு காலம் காய்ந்த பூமியில் முளைத்த செடி, மற்றச் செடிகளைவிட ருசியான கனியைத் தர வேண்டியிருக்க, அழுகிய கனியைத் தந்திருக்கிறதே? இதென்ன புதுமை?' என்ற திகைப்பையெல்லாம் கடந்து, 'அந்த அழுகலை எப்படியாவது பயனுள்ளதாகச் செய்துவிட முடியாதா?' என்று ஏங்கலானேன்.

என் ஏக்கத்தைத் தீர்க்கப் பன்ஸே அண்ணாதான் கடைசியாக ஒரு வழியைக் காட்டினான். 'இதில் தேறவில்லையானால், உன் கனியைக் குப்பையில் எறிந்துவிட வேண்டியதுதான்' என்று அனசூயாவைப் பூனாவிலிருந்த ஒரு வாலிபனுக்கு மனைவியாக்கி அனுப்பினான்.

'ஆனால், அவள் அங்கே தங்க மாட்டாளென்று என்னுள் ஏதோ ஒன்று சொல்லிக் கொண்டே இருந்தது. 'பெண்ணின் வேகம் பிரவகித்து வரும் ஆற்று நீரின் வேகத்தை ஒத்தது. கட்டியான கரைகளும், பலமான அணைக்கட்டும் இருக்கும்வரையில் அதன் வேகத்தைக் குறைத்துத் தேங்கச் செய்து, தகுந்தவாறு பயன்படுத்திக் கொள்ளலாம். இந்தக் கட்டுப்பாடுகள் இல்லையோ, அது எங்கே பொங்கி வழிந்து எவை எவற்றை அழித்துவிடும் என்பதைச் சொல்ல முடியாது. உன் மகள் கட்டுப்பாடுகளைத் தகர்த்தவள். எனவே அவள் ஓரிடத்திலும் நிலை பெற மாட்டாள்' என்று அது திரும்பத் திரும்ப முணு முணுத்தது.

அதன் முன்னறிவிப்பு வீண் போய் விடவில்லை. ஆறு மாதங்களில் அனசூயா திரும்பி வந்து விட்டாள். 'என் புருஷன் மாரடைப்பால் இறந்துவிட்டான்' என்றாள். எனக்கு அவள் சொல்லில் நம்பிக்கை பிறக்கவில்லை. "உண்மையைச் சொல்: உண்மையைச் சொல்" என்று நச்சரித்தேன். அவளுக்கே பொறுக்க வில்லை; கடைசியில் ஒருநாள் நடந்ததைச் சொல்லி விட்டாள் — தன் நடத்தை கணவனைத் தற்கொலை செய்து கொள்ளச் செய்து விட்டதென்று.

"நீ திருந்திவிடுவாய் என்று இறுமாந்தேனே பாவி?" என்று அலறி அழுதேன்.

"என்னை ஏன் பாவி என்கிறாய்? என்னைப் பிறப்பித்த நீதான் பாவி" என்றாள் அவள் பளிச்சென்று.

"என்ன? என்ன சொன்னாய்?" என்று வீறிட்டேன் நான்.

"பின் என்ன? இதரப் பெண்களைப் போல் அல்லாது எனக்கு மாத்திரம் தீராத வேட்கை எழுவானேன்! அழகிய வாலிபர்களைக் காணும் போதெல்லாம், அவர்களை அடைந்துவிட வேண்டுமென்ற ஆவல் தோன்றுவானேன்? அது பிறவியின் குறை. அக்குறையை எவராலும், எக்காலத்தும் நிறைத்துச் சரி செய்துவிட முடியாது. என்னுடைய இந்த வேகம் தணிய வேண்டுமானால், நான் சாக வேண்டும். ஆனால், நான் சாக மாட்டேன். எதற்காகச் சாகவேண்டும்? எனது நடத்தைக்குக் காரணம் நானல்ல என்ற போதில், நான் ஏன் சாவை நாடவேண்டும்? எனவே நீ வீணில் வருந்திப் பயனில்லை. தவறு செய்துவிட்டாய்; அதன் பலனை அநுபவித்துத்தான் ஆக வேண்டும். இனி என் வழிக்கு வராதே; என்னைப் பழி கூறவும் கூறாதே."

நான் திடுக்கிட்டுக் கல்லாய்ச் சமைந்து நின்றேன். "இவள் என்ன, பெண்ணா? பேயா?" என்று அதிசயித்தேன். தவறையும் செய்து கொண்டு என் மீதும் பழி சுமத்துகிறாளே? நான் இவளைப் பெற்றது குற்றமாமே? எத்தனை காலம் ஏங்கி, எவ்வளவு இன்னல்களைச் சகித்து இவளைப் பெற்றெடுத்தேன்? அதுவா என் குற்றம்? அது குற்றமானால், அதன் பலனை நான் அனுபவிக்கத்தான் வேண்டும்.

அதைத்தான் அனுபவித்து வந்தேன், ஐயா, நான்கு வருடங்களாக. வெளியே தலை நீட்ட முடியாத அவமானம். என் வீடோ, கிட்டத்தட்ட ஒரு விபசார விடுதியாக மாறிப் போயிற்று. யார் யாரோ வருவார்கள்: போவார்கள். தாய்க் கிழவியைப் போல மௌனமாக நான் உட்கார்ந்திருந்தேன், செத்த மனதைத் தாங்கிக்கொண்டு — அவளைப் பெற்ற பலனை அனுபவித்துக் கொண்டு.

இந்த முடிவே இல்லாத அநீதச் செயல் அவள் வாழ்வோடுதான் முடியும் என்ற போதில், நான் சாகுமளவும் அதைச் சகித்துத் தானே ஆகவேண்டும்? சகித்துக்கொண்டிருந்தேன். வீட்டைவிட்டு வெளியேறாமல், உள்ளூரில் இருக்கும் சொந்த சகோதரனைக்

199317

கூடப் பார்க்காமல், என் பாவத்துக்குப் பலனை ஏற்றுக் கொண்டிருந்தேன்.

“இப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டாவது ஏன் வாழ வேண்டும்? இந்த உயிரை ஏன் முடித்துக்கொண்டு விடலாகாது?” என்று சில சமயங்களில் தோன்றும். ஆனால், ‘என் பாவத்தின் பலனை இந்தப் பிறவியிலே முழுவதும் பெற்றுத் தீர்த்துவிட வேண்டும். அதை அடுத்த ஜன்மத்துக்கும் எடுத்துச் செல்லலாகாது’ என்றே செயற்கை மரணத்தை நாடாது, இயற்கை மரணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

ஆனால், அனசூயாவின் அட்டூழியங்கள் நான் எதிர் பார்த்த அளவையும் தாண்டிவிட்டன. ஒரு நாள் அவள் எங்கோ வெளியே போயிருந்தாள். அப்பொழுது, அவள் தோழர்களில் ஒருவன் விறைக்க விறைக்க ஓடி வந்தான். “வந்தது ஆபத்து; ரோகிணி அம்மா, உங்கள் பெண் தொலைந்தாள்” என்று பதறினான், அவன்.

நான் அவனுக்குப் பதிலே சொல்லவில்லை. ‘இப்பொழுது நடப்பதை விடப் பெரிய ஆபத்து என்ன வந்துவிடப்போகிறது? எப்படிப்பட்ட ஆபத்தாயிருந்தாலும் அவள் உயிரைக் கவர்வதை மிஞ்சிவிடப்போவதில்லையே. அப்படி அவள் உயிர் போவதாயிருந்தால், அது வரட்டும், அதை நான் வரவேற்கிறேன்’ என்ற நினைவுடன் மௌனமாக இருந்தேன்.

வந்தவன் என் மௌனத்தைப் பார்த்துத் திரும்பி விடுவானென்று நினைத்தேன். அவன் திரும்பவில்லை. உடல் பதற, மேலும் சொல்லலானான்: “கேல்கரும் அவளும் சில நாட்களாக நாணயங்கள் அச்சிட்டு வருகிறார்கள். அது வெளியாகிவிட்டது. போலீசார் இன்று இரவு இவ்வீட்டைச்சோதனையிட வரப்போகிறார்கள். கேல்கரின் வீட்டையும் சோதனையிடுவார்கள். என் அண்ணா ஒரு போலீஸ் ஜவான்; அவன் வழி இச் செய்தி எனக்குக் கிட்டிற்று, அனசூயாவுக்குச் சிறைவாசம் ஏற்பட்டுவிடும் என்றதும் எனக்குப்பொறுக்கவில்லை; ஓடி வந்தேன். அவளை உடனே தேடிப் பிடித்து எங்கேனும் ஓடிவிடச்செய்யுங்கள்”

தன் கடமையை நிறைவேற்றிவிட்டவன் போல அவன் போய்விட்டான். என்னை மற்றொரு வேதனை வந்து மூடிற்று.

இருக்கிற அவமானம் போதாதென்று இது ஒரு புதிய அவமானமா? இது வரையில் இந்த ஊரில் மாத்திரம் சந்தி சிரித்த இவள் பெயர் பத்திரிகை வாயிலாக உலகெங்கும் பரவிப் பெருகப் போகிறதா? என் பெற்ற வயிறு கொதித்தது. இத்தனைநாட்களாயில்லாத பெண்பாசம் எங்கிருந்தோ என்னுள் குதித்தெழுந்தது. அவளைத் தப்பி ஓடச் செய்துவிடவேண்டுமென்று உடனே எழுந்தேன் பன்ஸே அண்ணாவின் வீட்டுக்கு ஓடினேன், அவனை அனுப்பி அவளைத் தேடச் செய்ய. அண்ணா ஊரில்இல்லை, மதனியிடம் பரபரப்பாக விஷயத்தைத் தெரிவித்துவிட்டு, நானே அவளைத் தேடக் கிளம்பினேன்.

மால்வண் நகரெங்கும் அன்று நாயைப் போலச் சுற்றினேன். ஒரு போக்கிலி வீடு பாக்கியின்றி ஏறி இறங்கினேன். எங்கும் அவள் தென்படவில்லை. கடைசியில் யாரோ ஒருவன், அவளையும் கேல்கரையும் சினிமாக் கொட்டகையில் கண்டதாகச் சொன்னான். அங்கே ஓடி அவளைத் தேடிப் பிடித்து வீட்டுக்கு வர அழைத்தேன். அவள் வந்தால் தானே? ஆட்டம் முடியும்வரை காத்திருக்கச் செய்து பிறகு, “என்ன அவசரம்? எங்கே வந்தாய்?” என்று கேட்டாள்.

நான் விஷயத்தைச் சொன்னேன்: ஆனால், அவள் சற்றும் கலக்கமின்றிக் கேல்கரைப் பார்த்து, “நீ ஓடிப் போய்விடு, கேல்கர், முதலில்” என்றாள்.

“நீ?” என்றான் அவன்.

“என்னைப்பற்றிக் கவலைப் படாதே; உன் தலை தப்ப வேண்டுமானால், நீ ஓடி விடு.”

“சாமான்களெல்லாம் உன் வீட்டில் இருக்கின்றனவே, அனசூயா? உனக்கல்லவா முழு ஆபத்தும் வரும்.” என்று தயங்கினான் கேல்கர்.

அனசூயா அவனைச் சமாதானப்படுத்தி அனுப்புவதில் கவனமாயிருந்தாளேயன்றி, தன்னைப் பற்றிக் கவலைப்படுவதாகவே தோன்றவில்லை. ‘இவள் மனத்திலிருப்பதுதான் என்ன?’ என்று நான் திகைத்து நின்றபோது, அவள் கேல்கரை அனுப்பிவிட்டு, என்னிடம் திரும்பி, “வீட்டுக்குத்தானே கூப்பிட வந்தாய்; வா போவோம்” என்றாள்.

வீட்டுக்கு வந்தோம். வந்ததும் நான் அவசரம் அவசரமாகச் சில துணிமணிகளைப் பெட்டியொன்றில் எடுத்து வைத்து அவளிடம் கொண்டு வந்தேன். பிறகு பணப் பெட்டியிலிருந்து சிறிது பணத்தையும் எடுத்துவந்து அவளிடம் நீட்டி, “இந்தா, இதைக் கொண்டு எங்கேயாவது தொலைவுக்குப் போய்விடு” என்றேன்.

“என்னை எங்கேயடீ போகச் சொல்லுகிறாய்?” என்று எரிந்து விழுந்தாள் அவள்.

எஸ். வரலக்ஷ்மி
தனது சருமத்தை
அழகுடையதாக
இருக்கச்செய்ய ஏன்
லக்ஸ் டாய்லட்
சோப்பை
விரும்புகிறார்
என்பதை
உங்களுக்குத்
தெரிவிக்கிறார்

அவர் கூறுவதாவது:—

"நான் எனது மழமழப்பான சருமத்தை விசேஷ மதிப்புடையதாகக்கருதுவதால், எனக்குத் தெரிந்த மிகவும் சிறந்த பராமரிப்பை அதற்கு அளிக்கிறேன் — அதுதான் லக்ஸ் டாய்லட் சோப்பின் நேர்த்தியான பாதுகாப்பு. மேலும்," தொடர்ந்து அந்த அழகிய நட்சத்திரம் கூறுகிறார் "லக்ஸ் டாய்லட் சோப்பின் பரிமளம் உண்மையாகவே மகிழ்ச்சியைத் தருகிறது."

☆ இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தையும் வசீகரமாக செய்யும்!

LTS. 242-172 TM

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்



எமது முதல்தரமான
சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப்படுகின்றன !

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும் !

கே. சுவாமிநாதன் & கம்பெனி

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.
தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

பாத்ருடுவின்
பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளைதெரு, தெப்பக்குளம் போஸ்ட்.

“பின் போலீசார் கையில் சிக்கிக்கொள்ளப் போகிறாயா?”

“சிக்கிக் கொண்டதால் என்ன கெட்டு விட்டதாம்?”

“வேண்டாம், அனசூயா; இல்லாவிட்டால் அந்தச் சாமான்களை எங்கே வைத்திருக்கிறா யென்பதையாவது சொல். அவற்றை எடுத்துக் கடலில் எறிந்துவிட்டு வந்துவிடுகிறேன்.

“என்ன சொன்னாய்? கடலில் எறியவா? அதைச் சம்பாதிக்க நாங்கள் என்ன பாடுபட்டோம் என்பது உனக்குத் தெரியுமா?”

இப்படிப் பேசுபவளை எப்படி நான் தப்பச்செய்யமுடியும்? ஆயினும், நான் கெஞ்சினேன்; கதறினேன்; அவள் கால்களைப் பிடித்துக்கொண்டு மன்றாடினேன். அவள் கல்லாயிருந்தாள். துளிகூட அசையவில்லை.

என் துயரம் கடல் மடை திறந்தாற்போலப் பொங்கி ஓடிற்று. ஏதோ ஒருவிதப் பீதி என் உடல் முழுவதும் மின்சாரம்போலப் பாய்ந்தது. ‘இந்த அவமானத்தைத் தாங்கிக்கொண்டு உயிர் வாழ்வதா?’ என்று எண்ணினேன். மறு நிமிடம் உள்ளே ஓடி அடுக்களையிலிருந்த அரிவாள் மணையைத் தூக்கிக்கொண்டுவந்து அவளிடம் நீட்டினேன்; “இந்தா; ஒன்று, நான்சொல்லுகிறபடி எங்கேனும் ஓடிவிடு; அல்லது அந்தச் சாமான்கள் இருக்கும் இடத்தையாவது உடனே சொல்லு; இல்லையானால், என்னை இப்படி வாட்டி வதைப்பதை விட, உன் கைகளாலே கொன்று போட்டுவிடு.” என்று கத்தினேன்.

“உன்னைக் கொல்லவா?” என்று சொல்லிக் கட-கடவெனச் சிரித்தாள் அனசூயா; தொடர்ந்தாள்: “மாட்டேன்; மாட்டேன். நீ இப்படி வாடி வதங்கவேண்டுமென்று தானே இவ்வளவும் செய்து வருகிறேன். உன் மானத்தைப்போக்க, என் மானத்தைத் தானமாக வழங்கி வழங்கி அலுத்து விட்டேன்; அடுத்ததாக உன்னை வதைக்க என்ன செய்யலாமென்று, பல நாட்கள் சிந்தித்துச் செய்த செய்கையல்லவா, இது? என்ன, திடுக்கிடுகின்றாய்? நானே இச்சாமான்களைக் கேல்கரின் வீட்டிலிருந்து இங்கேகொண்டுவந்து வைத்துப் போலீசுக்கும் அநாமதேயக் கடிதம் எழுதிப் போட்டேன். நான் சிறைக்குப் போகவேண்டும்; தண்டனை அடையவேண்டும்; அதன் மூலம் உன் மானம் கப்பலேறவேண்டும்; என்று ஆலோசித்துச் செய்த செய்கையை நொடியில் அழித்துவிடச் சொல்லுகிறாயே? இது மாத்திரமா? இன்னும் உன்னை உயிருடன் கொல்ல என்னென்னவோ திட்டங்களெல்லாம் இருக்கின்றன; அவற்றை ஒன்று விடாமல் அனுபவித்து விட்டல்லவா, நீ சாகவேண்டும்? என் கொதித்த மனது குளிர வேண்டாமா? என் பழி தீர வேண்டாமா?”

“பழியா? அடி பாவி! உன்னைப் பல வருடங்கள் ஏங்கிப் பெற்றேனே; அந்தப் பாவத்துக்கு இதுவரை தீர்த்துக்கொண்ட பழி போதாதா?”

“ஏங்கிப் பெற்றாயா? அடி சண்டாளி! அந்த வார்த்தையை மற்றொரு முறை சொல்லாதே. என்னைக் கருவிலே மடிய வைத்துக்கொண்டல்லவா இருந்தாய், நீ? அந்தப் பாவி — உன் கணவன் — என் தந்தை — என்னைத் திரும்பத் திரும்ப உண்டாக்கினான்; அவன் ஆவல் அது, எத்தனை தடவைகள்! அட ஈச்வரா! உன் வயிற்றில் நீர்க்கருவாகத் தோற்றுவிப்பான். பத்து நாட்கள்கூடத் தங்க மாட்டேன்; உடனே, பாவி நீ, என்னை அழித்து விடுவாய். ‘மண்ணைக் காண மாட்டோமா? கண்டு, என்னை வதைக்கும் உன்னை உயிருடன் வதைக்க மாட்டோமா?’ என்று நானல்லவோ பல வருடங்கள் ஏங்கித் தவித்திருந்தேன்? அது மாத்திரமா? ஒவ்வொரு மாதமும், நான் தோன்றி நின்றபோதும், அழியு முன்பும், இந்தத் தீராப் புருஷ வேட்கையை நீயல்லவோ ஊட்டினாய்? நான் பிண்டத்திலிருந்து உருப்பெறும் காலம் வரையிலாவது, தூய வழியில், உன் கணவன் மூலம் நான் பிறப்பேன் என்று நீ நினைத்ததுண்டா? எப்பொழுதும் அதே தவறான நினைவுதான். எனவே, அதுவே என்னை இப்படிக் காமப் பித்தாக்கிற்று.

“கடைசியில், எப்படியோ ஒரு தடவை தவறிப்போய், என்னை நேர் வழியில் உருவாக்க இசைந்து விட்டாய். எந்த நிமிஷம் மண்ணில் விழுந்தேனோ, அந்த நிமிஷம் முதலே, நீ என்னைப் படுத்திய பாட்டுக்குப் பழி வாங்கத் துடித்தவளல்லவா, நான்? அதில் ஒரு சிறு பகுதியைக் கூட நீ அனுபவித்துவிட வில்லையே? அதற்குள் அவசரப்படாதே; இன்னும் எவ்வளவோ இருக்கிறது......”

என் மண்டையில், என் நெஞ்சத்தில், என் தேகத்தின் ஒவ்வொரு அணுவிலும் ஒவ்வொரு அம்பாகப் பாய்ந்தன அனசூயாவின் வார்த்தைகள். ஆம்; அவள் கூறியவற்றில் ஒரு வார்த்தைக்கூடப் பொய்யல்லவே! நான், என்னவோ, என்னைப் பதிவிரதையாகவும், ரொம்பவும் துயரடைந்தவளாகவும் கருதியிருக்க, என் உள்ளத்தில் எழுந்து எழுந்து படிந்த அந்தத் துர் நினைவும், துயரமென்று

எண்ணிய ஏமாற்றமும் என் கருச் சிசுவை எவ்வளவு பாதித்துப் பாழாக்கி விட்டன என்பதை அனசூயா எடுத்துக் காட்டியபோது நான் வெறி கொண்டவளாகிவிட்டேன். ஒரு விநாடிகூடத் தாமதிக்கவில்லை: கையிலிருந்த அரிவாள்மணையை என் கழுத்துக்கு நேராகத் தூக்கிவிட்டேன்.

அனசூயா சட்டெனத் தாவி அதைப் பிடுங்கிக்கொண்டாள். ''எங்கே தப்பிச் செல்லப் பார்க்கிறாய்? நீ சாகக்கூடாது. உன் குலத்தின்மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன்—என் பழி தீருமட்டும் நீ சாகக்கூடாது''

''இல்லை, அனசூயா; இந்தப் பாவி இனி உன் முன், உன் தாயென்று வாழமுடியாது—வாழக்கூடாது; தயவு செய்து என்னை மன்னித்துச் சாகவிடு'' என்று கதறினேன்.

அனசூயா சிரித்தாள். ''என்ன இருந்தாலும், என்னைச் சுமந்து பெற்றாயல்லவா? அதற்காக உன்னை மன்னிக்கிறேன். ஆயினும் நீ சாக அனுமதிக்கமாட்டேன். என் முதற் பழியின் காலம் திரு மட்டுமாவது நீ வாழத்தான் வேண்டும். வாழ்ந்து குறை நிற்கும் பகுதியை அனுபவித்துத் தீர்த்தாலன்றி என் ஆவி சாந்தி அடையாது. ஆனால், என் கண்முன்னால் வாழமுடியாது என்றாயல்லவா? அதற்காக..........''

அவள் வார்த்தையை முடிக்காமலே, தன் கையிலிருந்த அரிவாள்மணையைக் கழுத்தில் ஓங்கி வீசிக்கொண்டாள்.

அவள் உதிரத்தைக் கண்ட விநாடியே, என் சிரம், உடல், உலகம் அனைத்தும் சுழல ஆரம்பித்துவிட்டன. பிறகு என்ன நடந்ததென்பது எனக்குத் தெரியாது'' என்று கூறி முடித்தாள், ரோகிணி.

* * *

பிறகு என்ன நடந்தது என்பதை நானும் சுருக்கமாகவே கூறிவிடுகிறேன்; கதை ரொம்பவும் நீண்டுவிட்டது.

அனசூயாவின் முதற் பழிக்காலம் அன்றுடன் தீர்ந்துவிட்டதென்று, பிடித்துக்கொண்டு, நீதிபதியின்முன் எதிர்க்கட்சியின் வாச்கு மூலத்தில் பலக் குறைவான இடத்தைப் பிடித்துக்கொண்டு வாதாடும் வக்கீலைப்போல, டே, வாதாடினார். உண்மையும், உண்மைக்குப் புறம்பானதுமான பல ஆதாரங்களை ரோகிணிக்கு எடுத்துரைத்து, பின்னும் ஒரு பத்து நாட்கள், மனச் சிகிச்சை செய்தார். அவள் மனப்புண் கொஞ்சம் கொஞ்சமாக ஆறிற்று. முற்றிலும் புதிய மனுஷியாகத் தமது சகோதரியை அழைத்துக்கொண்டு பன்லே, மால்வண்ணுக்குத் திரும்பிச் சென்றார்.

இப்பொழுது 'மரைன் லேன்'ஸிலுள்ள டேயின் சிகிச்சை நிலையத்தை மனநோய்க்காரர்கள் மொய்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால், அதற்கு அவர் முதல் கேசு அடைந்த அமோக வெற்றியே காரணம்! * * *

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள் நாடு			மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு		
	ரு.	அ.	பை.	ரு.	அ.	பை.
ஒரு வருஷம்	6	0	0	7	8	0
அரை வருஷம்	3	0	0	3	12	0
தனிப் பிரதி ஒன்றுக்கு	0	8	0	0	10	0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், ''காவேரி,''
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

பெண்களுக்கு மட்டும்

ஷிபாலி சௌத்ரி—சாரி

சுசீலாவின் தபால்பெட்டி

இந்த மாதம் தங்கச்சிகளிடமிருந்து வந்த அநேக கடிதங்களுக்குப்பதில் கீழே எழுதுகிறேன். ஒவ்வொன்றும் பல விஷயங்களைக் குறித்து இருப்பதால் என் பதிலை, கதம்பம் என்கிற தலைப்பில் கொடுக்கிறேன். மற்ற நண்பர்க்கும் இவை உபயோகமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மைதாமாவுத் தேன்குழலும், பீட்ரூட் போண்டாவும் மிக்க ருசியானவை. செய்து பாருங்கள்.

தையல் பகுதியில் உள்ள வாயில் புடவையைத் தைத்து உடுத்திக்கொண்டால், வெகு அழகாயிருக்கும்; செலவும் அதிகமில்லை.

சுசீலா

கதம்பம்

அழகு ரகசியம்:— கண் இமை மயிர்கள் நீண்டு அழகாய் வளர இதைச் செய்து பாருங்கள். ஒரு சிறிய துண்டு ஐஸ் கட்டியை மேல் இமை மயிர்க் கால்களில், சூடு உண்டாகி, விறுவிறென்று இருக்கும் வரை தேய்க்கவும். பிறகு நன்றாகத் துடைத்து கொஞ்சம் விளக்கெண்ணெயை இளஞ்சூடாக்கி நிறையத் தடவவும். இந்தச் சிகிச்சையினால் மயிர்க்கால்கள் தூண்டிவிடப்பட்டு, மயிர் வளரும். நீண்ட இமை மயிர், முகத்தில் வசீகரத்தை எவ்வளவு அதிகப்படுத்தும் என்று சொல்லவும் வேண்டுமோ?

(2) தம்பியின் 'லிவர்' மந்தமாக இருந்தால்:— கீழ்வாய் நெல்லி இலையைக் கொணர்ந்து அம்மியில் அரைத்து, புளிப்பில்லாத தயிரில் குழப்பி, தினமும் காலையில் ஒரு அவுன்ஸ் வீதம், ஒரு வாரம் கொடுக்கவும்.

(3) எலுமிச்சம்பழ மூடியைப் புதிதாய் வைக்க:- ஒரு தட்டில் வைத்துச் சிறிய கண்ணாடி டம்ளரால் மூடவும். உப்புப் பல்லாயில் வைத்து மறந்துபோய், தேவையானபோதெல்லாம் புதிய பழம் நறுக்குவதை நிச்சயமாய்த் தவிர்க்கும்! காற்றுப் புகாமல் மூடப்படுவதால் கசந்தும் போகாது.

(4) தொண்டையை அலம்பும்Gargle க்கு:- ஒரு டீஸ்பூன் எ. பழச் சாற்றைச் சூடான தண்ணீரில் கலந்து உபயோகிக்கவும். ஒரு டேபிள்ஸ்பூன் சாறுடன் அதே அளவுக்குத் தேன் கலந்து உட்கொண்டால், தொண்டைப் புண், இருமல் இவைகளுக்கு இதமாக இருக்கும்.

(5) பட்டுப்புடவையில் எண்ணெயைக் கொட்டிக்கொள்ளும் துரதிர்ஷ்டம் சிலருக்கு ஏற்படும்:- அதற்கு நான் தேடும் சிகிச்சை இது. நல்ல பலன் கிடைக்கும். எண்ணெய்க் கறைமீது நிறைய விபூதியைக் கொட்டிப் பரத்தி, 10 நிமிஷம் வைத்து, பிறகு தட்டிப் பார்க்கவும். எண்ணெய்க்கறை இன்னும் தென்பட்டால் மீண்டும் ஒரு முறை விபூதிப் பூச்சுப் பூசவும், பிறகு பூந்திக் கொட்டை சேர்ந்த ஜலத்தில் அலசிப் பிழிந்து சுத்தம் செய்யவும். கறை நீங்கிப் போகும்.

அவசரத்தில் விபூதி கைக்குக் கிடைக்காவிட்டால், டாய்லட் பௌடர் உபயோகிக்கலாம்.

(6) நிறையத் தையல்வேலை செய்பவர்க்கு:— இந்தக் காலத்தில் மாத்திரைகள் வரும் சிறிய சீஸாக்களும், கண்ணாடிக் குழாய்களும் மிக்க உபயோகமாயிருக்கும். அவைகளைச் சுத்தம் செய்து, Press Buttons, Hooks, துணி பித்தான்கள், குண்டூசிகளைப் போட்டு, தையல் பெட்டிக்குள் ஒழுங்காய் வைத்திருந்தால், இச் சிறிய சாமான்களை அவசரத்தில் தேடவேண்டிய சிரமம் ஏற்படாது.

(7) உபயோகமில்லாத பழைய பல் துலக்கும் பிரஷ்களைத் தூர எறியவேண்டாம்! கீழே கண்ட 2, 3 காரியங்களுக்கு அவை உபயோகப்படும். உங்கள் சீப்புக்கள் அழுக்கடைந்து

விட்டால், சுடு தண்ணீரில் நனைத்து, துளி சோப்பைப் பூசி, பிரஷ்ஷை ஜலத்



தில் நனைத்துச் சுத்தம் செய்யுங்கள். அழுக்கெல்லாம் பறந்துபோய் விடும்.

பழைய பல் துலக்கும் பிரஷ்ஷின் இன்னொரு நுனியை அடியிற்கண்ட விதம் பிரயோஜனப் படுத்தலாம்; பாவாடை நாடாக்கள், பைஜாமா, டிராயர் நாடாக்களைக் கோப்பதற்கு இது உபயோகப்படும். பிரஷ்ஷின் தலையைக்கிள்ளி எடுத்துவிட்டு ஓரத்தைத் தேய்த்து மழுப்பி, பின்னால் உள்ள துவாரத்தில் ஒருசிறிய பட்டுக்கயிறு கட்டிவைக்கவும். நாடா



கோக்க வேண்டும்போது, அதை இந்தப் பட்டுக் கயிற்றுடன் முடிந்துகொண்டு, பிரஷ்ஷின் பிடியால் துணிக்குள் கோத்தால், எளிதாக வரும்.

அழகிய கம்பிவேலை — Filigree — செய்த தங்க, வெள்ளி நகைகளையும், நகாசு வெள்ளிச் சாமான்களையும் சுத்தம் செய்யும்போது பழைய பல் துலக்கும் பிரஷ்ஷை மறந்துவிட வேண்டாம்! சூடான சோப் ஜலத்தில் சாமான்களைக் கழுவும்



போது மூலை முடுக்கில் உள்ள அழுக்கை, பிரஷ்ஷின் உதவியினால் நீக்கலாம்.

(8) தோல் சாமான்கள், பூட்சுகள், பாதரக்ஷைகள் அதிக நாள் உள்ளே போடப்பட்டிருந்தால், கடினமாகிவிடுவதைக் காண்கின்றோம். விளக்கெண்ணெயைத் தோலில் தேய்த்துத் தடவி, சில மணி நேரம் ஊறவைத்துத் துடைக்கவும். வழக்கம்போல் பாலிஷ் ஏற்றினால், தோல் மிருதுவாகி, பள பள வென்றிருக்கும்.

தையல் பகுதி

(1) இரண்டு வயது நிர்மலாவின் ஜட்டிக்கு, இம்மாதிரி ஓரம் தையுங்கள். பார்க்க அழகாக இருக்கும். வழ வழப்பான லாங்கிளாத்தினால், இந்தச் சிறு ஜட்டிகளைப்படத்தில் கண்டமாதிரி வெட்டிக்கொள்ளவும். பக்கத்தைச் சேர்த்துத் தைக்குமுன், $\frac{1}{4}$ இஞ்சு அகலம் கால் விளிம்பிற்குப் பட்டி மடித்துக்கொண்டு 4

தையல் (Hem Stitch) தைக்கவும்; பிறகு ஒரு தையல் (Button Hole Stitch) ஆக இழுத்துத் தைக்கவேண்டும்.



இம்மாதிரி மாறி மாறித் தைப்பதால் ஓரத்தில் வளைந்து Scallop மாதிரி ஏற்படும்.

பிறகு பக்கங்களைச் சேர்த்துத் தைத்து, மேலே ஒரு அகலப் பட்டி செய்து, அதில் Elastic கோக்கவும்.

இதே மாதிரி தையலை உங்கள் கைக்குட்டை, தாவணி, புடவைத் தலைப்புக்கும் உபயோகிக்கலாம்.

(2) சாதாரண வாயில் அல்லது மல் புடவையை அழகுபடுத்தச் சில துண்டு (Bias Binding) இருந்தால் போதும்! சிகப்பு, நீலம் அல்லது உங்களுக்குப் பிடித்த நிறத்தில் இரண்டு பாக்கெட் பைண்டிங் தேவை. முதலில் இதை கரைக்குத் தைத்துக்கொண்டு, பாட்டி பல்லுவுக்கு, பல நிறங்களில் உங்கள் தையற்பெட்டியில் மிகுந்திருக்கும் (Bias Binding) துண்டுகளை உபயோகித்து, படத்தில் உள்ளமாதிரி கோடுகள் போல் தைக்கவும். கோடுகளுக்கு மத்தியில் நிறையப் பல நிறப் புள்ளிகள் தைத்தால் புடவை ஜோராக இருக்கும்.

சமையல் பகுதி

(1) ஐஸ் பீரோ இல்லாமலே புருட் ஸாலட் செய்வது பிரமாதமில்லை!

மூன்று மாம்பழம்
நான்கு மலை வாழைப்பழம்
ஒரு ஆரஞ்சு
அன்னாசிப்பழத்துண்டுகள். (கொஞ்சம்)
திராக்ஷைப்பழம் 2 டேபிள்ஸ்பூன்.

பழங்களைக் கிளாஸ் கிண்ணத்தில் நறுக்கிச் சேர்த்து, ஐஸ் நிறைந்த ஒரு ஆழமான தட்டில் ¼ மணி நேரம் வைக்கவும். இதற்கு இரண்டு பவுண்டு ஐஸ் போதுமானது. 1½ ஆழாக்குப்பாலைப் பாதி அளவுக்குக் கெட்டியாக்கி 3 டீஸ்பூன் சர்க்கரை சேர்த்துக் குளிர வைத்து, தட்டுக்களில் புருட் ஸாலட் எடுத்து, மேலே இந்தக் கெட்டிப்பாலைஊற்றிச் சாப்பிடக் கொடுக்கவும். மேலே சொன்னது 4 பேர் சாப்பிடக் கூடிய அளவு.

(2) கோடை நாளில் மாம்பழம் சாப்பிட ஒரு தனி வழி! கெட்டியான சில மாம்பழத்தைத் தணலில் சுட்டு, தோலை

உரித்து, சதையைச் சேர்த்து நன்றாக மசிக்க வேண்டும். கொழ கொழப்பாய் வரும் அளவிற்கு மாம்பழத்தில் பால் சேர்த்து, இனிப்புப்போட்டு, குங்குமப்பூ, பச்சைக்கர்ப்பூர வாசனை கலந்து, ஐஸில் வைத்துச் சாப்பிடவும்.

(3) மைதா மாத் தேன் குழல்.

5 கப் மைதா மாவு
1 கப் வறுத்துப் பொடித்த உளுந்து மாவு
1 டேபிள் ஸ்பூன் நெய்
உப்பு
பெருங்காய ஜலம் } வேண்டிய அளவு
சீரகம்

மாவை ஒரு மெல்லிய துணியில் முடிந்து, இட்டிலித் தட்டில் வைத்து, 20 நிமிஷம் ஆவியில் வைக்கவும். எடுத்து ஒரு தட்டில் கொட்டி, உதிர்த்துவிட்டு, உளுத்த மாவு சேர்த்து, நெய்விட்டுக் கலந்துகொள்ளவும். பிறகு உப்புஜலம், பெருங்காய ஜலம் விட்டுப் பிசைந்து, சீரகம் சேர்த்து, நாழியில் போட்டு, பிழியவும். மாவு சற்றுத் தளர இருக்கவேண்டும். இது அரிசித் தேன் குழலை ருசியில் தோற்கடிக்கும்!

(4) பீட்ரூட் போண்டா

பச்சையாக 2, 3 பீட்ரூட்களை நன்றாக அரைத்து, பாதி அளவுக்கு அரிசிமா சேர்த்து உப்பு, மிளகாய்ப் பொடி, பச்சை மிளகாய்த் துண்டங்கள் போடவும். இந்த மாவை நன்றாகக் கலக்கவும். சூடான எண்ணெய், அல்லது நெய்யில் இதில் ஒரு சிறு கரண்டி எடுத்துவிட்டு, சிவக்கவிட்டு எடுக்கவேண்டும். இந்தப் போண்டாக்கள் ருசியாயும் கரகரப்பாகவும் இருக்கும்.

DON'T WORRY!!

Try "KUMARI" (Tablets) to remove your anxieties over difficult days and fear of periodical delays at any stage, under any circumstances and prevent future troubles! Speedy and harmless!! Thousands satisfied!!! Normal potency Rs. 3. Special Rs. 5. Extra Special Rs. 8. (V. P. Extra)

"RASAYAN" (Tabs.) Gives youthful vigour, increases energy, purifies the blood and valuable in nervous debility and premature old-age. On the whole, it is a BOON to married couples. Each tube Rs. 4/-. 3 tubes Rs. 10-8. (V. P. Extra.)

Mrs. P. DEVEE, F. D. S. (C. M.)
TOLLYGUNGE, CALCUTTA - 33.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

1. இண்டோ மெடிகல் ஸப்ளைஸ், 29, வைத்யநாத முதலித் தெரு, சென்னை—1.
2. ராகவன் & கோ., ஸ்ரீ நரஸிம்ஹராஜா ரோட், பங்களூர் ஸிடி.
3. ஸிந்தி, 172—A, பிரின்ஸெஸ் தெரு, (ஹநுமான்மந்திர் மேல்புறம்) பம்பாய்—2.
4. எல். எம். முகர்ஜி & ஸன்ஸ் லிமிடெட், 167, தரம்தாலா தெரு, கல்கத்தா
5. இங்க்லீஷ் கம்பெனி, ஆலப்புழை. (திருவாங்கூர்)
6. பயனீர் பார்மஸி, 183, மெயின் தெரு, பேட்டை, கொழும்பு (ஸிலோன்)

திருந்திய தவறு

கே. சுந்தரம்மாள்

“பிரிய பாமினி,

உன் அன்புமிக்க கடிதம்கண்டு மகிழ்ச்சியடைந்தேன். உன் தாம்பத்ய சக்கரம் சரளமான பாதையில் உருண்டோடுவதைக் கேட்டு என் மனம் மிக்க குதூகலமடைகின்றது. நீ பி. எஸ், ஸியிலோ ஆனர்ஸ்ஸியிலோ சேரப்போவதாகச் சொல்லிக்கொண்டிருந்தாயே, நிறைய மார்க்கும் வாங்கியிருந்தாயே, சிபார்சிற்கு வேண்டிய மனிதர்களும் இருக்கிறார்களே: அப்படியிருக்க, நீ ஏன் வெறும் பி. ஏ. வகுப்பில் சேர்ந்தாய்? என்னைப்போல் பாதியில் நிறுத்தவேண்டிய அவசியமும் ஏற்படக் காரணமில்லை. உனது ஆசைக் காதலன் அத்தான் அமெரிக்காவிலிருந்து திரும்ப மூன்று வருஷமாகும். பிறகுதான் உன் திருமணம்; பி. எஸ். ஸி. ஆனர்ஸ் என்றால் உத்யோக முறையில் நீ அவருக்கு உதவியாக இருக்கமுடியும். இவ்வளவு அனுகூலங்களிருந்தும், நீ ஏன் இவ்விதம் செய்தாய்?” என்று கேட்டிருக்கிறாய். காரணம் நீ செய்த ஒரு தவறை நான் செய்யாமல் தப்புவதற்கே இவ்விதம் செய்தேன்.

மேலே படிக்க முடியாமல் வேறு திசையை நோக்கித் தாவிற்று, பாமினியின் மனம். “நான் செய்த தவறு! அது தவறா? ஆம், மனமறிந்த தவறுதான் நடந்த விஷயம்!”

* * *

அஸ்தமனமாகப் போகும் ஆதித்யனது அழகிய ஜோதியானது அந்த ஏரியில் எழும்பும் சிறுசிறு அலைகளின் மீது ஆனந்த நர்த்தனம் செய்வதுபோலிருந்தது. ஏரியின் ஒரு புறத்தில், படித்துறையையும், அதன் கரையில் அரச மரத்தடியில் அமர்ந்திருக்கும் ஆனைமுகனின் அபிஷேகம் செய்த எண்ணெய்த் திருமேனியையும், சாத்தியிருக்கும் குங்குமப் பொட்டையும். கொன்றைப்பூ மாலையையுங் கூட வர்ண ஜாலங்காட்டி மின்னும்படி செய்தது. அந்திச் செவ்வானத்தின் அழகொளி. மற்றோர்புறம் வானோங்கி வளர்ந்து நிற்கும் மா, புளி முதலிய மரங்களுடன் கூடிய சாலையின் மீது பார்வையை ஓட்டினால், வாழ்க்கைப் பிரயாணத்தைத் தொடங்கும் முதல்படியில் காலை வைத்துக் கொண்டு உலகைத் திரும்பி நோக்கும், பூர்ண யௌவன சோபையுடன்கூடிய பெண் மணியைப் போல் மாந்தளிர்களும், புஷ்பங்களும் காட்சியளித்தன.

ஏரியின் மத்தியில் சிறு தோணியைத் தாங்களே வலித்துச் செலுத்திக்கொண்டிருந்தார்கள் பாமினியும் பத்மநாபனும்.

“ஆஹா! நமது கிராமம் மிக்க அழகுள்ளதும் சகல வசதியும் பெற்றதுமாக விளங்குவது நமது பாக்கியமே” என்றாள் பாமினி.

“எப்படி? இந்த ஏரியும் தோட்டமுமே சுகவாசத்தின் அத்தாட்சி. அத்துடன் ஒரு மைலுக்குள் பெரிய பட்டணம் இருப்பதினால்தானே காலேஜில் படித்துக்கொண்டு, கிராம சுகவாசத்தையும் ஒருங்கே பெறமுடிகிறது. அதனால் நமது கிராமம் மாகாணத்துள் சிறந்து விளங்குகின்றது என்பது பொய்யா?”

“இல்லை. இல்லை. அழகும் அறிவும் ஒன்றாக அமைந்த உன்னைப்போலிருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன்”

“ஏன் உங்களைப்போலத்தான் இருக்கட்டுமே”

“சரி, இருவரையும்போல் இருந்துவிட்டுப் போகட்டும். ஏனென்றால் இருவரின் பெற்றோர்களும் பென்ஷன்தாரர்களாக இக்கிராமத்திலிருப்பதினால் இருவரின் பிறப்பிடமும் இதுவாகத்தானே வேண்டும் அதனால்.......” என்று முடிக்குமுன்,

“இருவரையும்போல் என்றுதானே சொல்ல வருகிறீர்கள்”

“ஆமாம். சரி, இந்த விளையாட்டுப் பேச்சு இருக்கட்டும், நீ மேலே படிக்கப் போகி

ருயா? அதைப் பற்றிப் பேசத்தானே இவ்விடம் வந்தோம்."

"என்ன செய்யவேண்டும் சொல்லுங்கள்; அதன்படி செய்கிறேன்."

"இதைப் பார். என் கொள்கை அறிந்தும் நீ இப்படிக் கேள்வியை எழுப்புவது சரியல்ல. உனக்குப் பேசச் சுதந்திரம், படிக்கச் சுதந்தரம், நடக்கச்சுதந்திரம், சாப்பிடச்சுதந்திரம், தூங்கச் சுதந்திரம், போக்கு வரத்து சுதந்திரம்.........என்று சொல்லும்பொழுதே

"அதென்ன போக்குவரவு சுதந்திரம்? அரசியல் நிர்ணய சபையில் கூட இந்த மாதிரி சுதந்திரத்தைப்பற்றிய சர்ச்சை செய்ததாகத் தெரியவில்லையே."

"அரசியல் நிர்ணய சபையில் அது கிடையாது. குடும்ப நிர்ணய சபையில் அது நிச்சயம் உண்டு. இதென்னவென்றால், உன் சிநேகிதர்கள் வீட்டிற்கோ வேறு எந்த இடத்திற்கோ, நீ நினைத்தால் போய் வரலாம். ஏன் என்னிடம் சொல்லாமல் சென்றாய்? என்று நான் கேட்கமாட்டேன்."

"அப்படியானால் நானும் உங்களைக் கேட்கக் கூடாது"

"அது உன்னிஷ்டம். கேள்வி கேட்கும் சுதந்திரமும் உண்டு"

"உங்களுக்கும் அது கிடையாதா?"

"இதென்ன கேள்வி? மரியாதைகொடுத்துத்தானே மரியாதை வாங்குவது பழக்கம்" என்று சிரித்தவாறே கூறினான்.

"இதற்குப் பெயரென்ன தெரியுமா? குழந்தையையும் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டும் சுதந்திரம் என்று பெயர்"

"எந்தவிதமான நாமகரணம் வேண்டுமானாலும் செய்ய உனக்குச் சுதந்திரமுண்டு"

"நல்ல சுதந்திரம்" என்று சிரித்தாள்.

"இருவர் மனமும் ஒன்றுபட்ட அன்பில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையானது, சுதந்திரமாகவே உதயமாகிவிடும். அதனால் உன் அபிப்பிராயத்தைச் சொல்லு."

"நீங்கள் மேலே என்ன செய்யப்போகிறீர்கள்? முதலில் அதைச் சொல்லுங்கள். அதற்குத் தகுந்தபடி என் விஷயத்தை முடிவு செய்வேன்."

"எனக்காக நீ உன் சௌகர்யத்தை மாற்றிக்கொள்ளக்கூடாது என்பதுதான் என் கொள்கை, அதனால் முதலில் உன் விஷயத்தைச் சொல்லு"

"இதென்ன பேச்சு? சுதந்திரம் கொடுத்துவிட்டேன் என்று வாய் சொல்லுகிறது. செய்கையில் என்னிஷ்டப்படி நடக்கமாட்டேனென்று சொல்லுகிறீர்களே"

"எப்படி"

"உங்களுக்குத் தகுந்தபடி படிக்கவேண்டுமென்பது எனது அந்தரங்கமான அளவற்ற ஆவல். அதற்குச்சுதந்திரமில்லையென்றுகிறதல்லவா? உங்கள் கேள்வி"

"அடேயப்பா, என் வார்த்தையினாலேயே என்னை மடக்குகிறாய் போலும், அதுவும் உன் சுதந்திரமே. சொல்கிறேன் கேள்; அமெரிக்கா ஆப்ரிக்கா என்றெல்லாம் நான்போகப் போவதில்லை."

"ஆப்பிரிக்காவில் உள்ளவர்களையேவிரட்டியடிக்கும் பொழுது உங்களை யார் அழைத்தார்கள்?"

"பேச்சிற்குச் சொன்னேன்; அதற்குள் மடக்குகிறாயே? நான் சொல்லி முடிக்குமட்டும் குறுக்கே பேசாமல் இருக்கும்படியான சுதந்திரத்தை எனக்கு அளிக்கும்படி பணிவாக வேண்டிக்கொள்ளுகிறேன்"

"அவ்வித சுதந்திரம் அளித்தேன் பக்தா, கவலையில்லாமல் சொல்லுங்கள்"

"என் மாமாவின் தொழிற்சாலையிலே முதலில் உதவி மானேஜராக எடுத்துக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார், அதை ஏற்றுக்கொண்டு அவர்கள் ஏற்படுத்தியிருக்கும் பரீக்ஷையைப் பாஸ் செய்தால் எந்தக் கிளையாபீஸிலாவது மானேஜராகப் போட்டுவிடுவார். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்போலவே எல்லா வசதிகளும், பென்ஷன்கூட ஏற்படுத்தியிருக்கிறார். இதுதான் என்னுடைய தீர்மானம். இது தவறாகத் தோன்றுகிறதா? உனக்குப் பிரியமில்லாவிடில் அதையும் சொல்லிவிடு"

"பிரியமில்லாமலா? உங்கள் சுதந்திரத்தில் நான் குறுக்கிடுவது என்பது கனவில்கூட நடக்காத விஷயமல்லவா? உங்கள் மாமாவின் தொழிற்சாலையைபற்றி என் தகப்பனார் மிகவும் சிலாகித்துப் பேசுவார். "வேலை நிறுத்தம்" என்ற தொத்துநோய் அந்த வாசலைக்கூட இதுவரை அணுகினது கிடையாதாம். "தொழிலாளி முதலாளி ஒற்றுமை" என்பதை அவ்விடத்தில் காணமுடியும் என்று அடிக்கடி சொல்லுவார். உங்கள் சப்ஜெக்ட்டும் அதற்கேற்றாற்போல் அமைந்துவிட்டது. ஆனர்ஸ் படிப்பே அதிகம். மெத்த சந்தோஷம். நானும் உங்கள் தொழிற்சாலையில் உத்யோகம் பார்க்கமுடியுமா?

"ஓ, பார்க்கலாம். ஆண் பெண் சமவுரிமை. பெண்களுக்கு ஒரு சலுகை அதிகம்"

"என்னவோ?"

"பிரசவ ராஜா?"

"அப்படியா! மிகவும் சந்தோஷம்" என்று சிரித்தாள்"

,,ஏன் சிரிக்கிறாய்?,

"பின் நீங்கள் சொல்லுவதற்கெல்லாம் அழுதால் கட்டி வருமா?"

"அப்படியானால் நான் முரடனா?"

"பார்த்தீர்களா! வம்பு வளர்க்க விஷயம் தேடுகிறீர்கள்; நீங்கள் சரஸி என்பதற்கே அவ்விதம் சொன்னேன். விஷயத்தைவிட்டு விட்டு வெகுதூரம் போகாமல் திரும்பு வோம்"

"சரி, மேலே சொல்லு."

"நேற்றுக் காலேஜ் பிரின்ஸ்பாலைப் பார்க்கச் சென்றேன். பி. எஸ். ஸி. கோர்ஸில் சேர விரும்புவதாகச் சொன்னேன்?" என்று நிறுத்தினள்.

"சரி, ஸீட் ரிஸர்வ் என்று சொல்லியிருப்பார்"

'அதுதான் இல்லை"

"என்ன? இல்லையென்ரு சொன்னார்? யாரென்று நினைத்தார் உன்னை? சிபார்சுக்கு ஐ. ஸி. எஸ். மினிஸ்டர், இவர்களில்லையா? எவ்வளவுபேர் வேண்டும்?"

"இல்லையென்று சொல்ல அவருக்கு அவ்வளவு தைரியமா? சப் கோர்ட் கிளர்க் வாசுதேவனுடைய பிள்ளை ராம் குமாரும் நானும் ஒரே சப்ஜெக்ட். ஒரேமார்க் வாங்கியிருக்கிறோம். அவனும் பி. எஸ். ஸியில் சேர விரும்புகிறான். ஆனால் இருக்கும் நிலைமை எனக்குக் கொடுத்தால் அவனுக்கு இல்லை. அவனுக்குக் கொடுத்தால் எனக்கு இல்லை. பிரின்ஸ்பால் என்ன செய்வார்?"

"பெண்மைக்குத்தான் முதல் ஸ்தானம் கொடுக்கவேண்டும்"

"கொடுக்கத்தான் போகிறார், ஆனால் சில விஷயங்கள் சொல்லி நன்ருக ஆலோசனை செய்து முடிவிற்கு வரும்படி ஒரு நாள் அவகாசம் கொடுத்திருக்கிறார்"

"என்ன விஷயங்கள் சொன்னார்."

"பாமினி! இந்தவருஷம் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாயல்லவா?" என்றார்.

"அப்படித்தான் பெரியோர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்" என்றேன்.

"நான் சொல்லுகிறேனென்று என் மீது வருத்தப் பட்டாலும் பாதகமில்லை. 'கடமை' என்பதைச் செய்தே தீரவேண்டும். மனசாக்ஷி சொல்வதற்கும் சற்று செவி சாய்க்க வேண்டுமல்லவா? கல்யாணமாகிவிட்டால் படிக்க முடியுமா?" என்றார்.

"மாமா பிள்ளையாதலினால் படிக்க முடியும் என்பதினால் தான் கேட்கிறேன்" என்றேன்.

"சரி. படித்தபின்பு உத்யோகம் பார்க்கப் போகிறாயா?" என்றார்.

"அது நிச்சயமாகச் சொல்ல முடியாது" என்றேன்.

"பாமினி! நீ உத்யோகம் பார்க்கவேண்டிய அவசியமேயில்லை. பகவான் அருளால் சகல ஸௌபாக்யங்களும் நிறைந்திருக்கின்றன.

உலக விவகாரம் தெரிந்து கொள்ள வேண்டிய அளவு ஆங்கிலம் முதல் யாவும் உனக்கு வந்துவிட்டன. குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்த, கற்றவைகளே உனக்கு உதவியளிக்கப் போதுமானவை. அதனால் விட்டுக் கொடுத்து நீ பி. ஏ, யில் சேர்ந்துவிடு. பாவம்! ராம் குமார் பி. எஸ். ஸியில் சேரட்டும். சாதாரண நிலையிலுள்ள குடும்பத்தின் மூத்த பிள்ளை முன்னுக்கு வந்தால் அக்குடும்பத்திற்கு மிகவும் உதவியாக இருப்பான். உள்ளூரிலேயே படிப்பதினால் அவர்களுக்குச் செலவு குறையும். நீ விட்டுக் கொடுக்காவிட்டால், அவன் பி. ஏ. யில் தான் சேர முடியும். அயலூருக்கு அனுப்பி, பணம் செலவிட அவன் தந்தை அசக்தர். ஆணுக்குப் பெண் சமம் என்பதற்கு எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன. அந்தச் சக்தியை அந்தந்தச் சந்தர்ப்பங்களில் உபயோகித்துக் கொள்ளலாம். இச்சிறு விஷயத்தில், சம உரிமை பற்றிச் சிந்தனை செய்தாயானால் தியாக மனப்பான்மை தோன்ருது. தியாகத்தை மட்டும் சிந்தனை செய்தாயானால், உன்னால் ஒருகுடும்பம் முன்னேற்றமடைந்த புண்யம் உனக்குக் கிடைக்கும், காலேஜில் இடநெருக்கடி ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில், படிப்பினால் சமூகத்திற்கோ, குடும்பத்திற்கோ உதவக் கூடியவர்களைப் பின் தங்கவிடுவது நியாயமாகுமா? ஆண் என்பதற்காக நான் சொல்லவில்லை. பெண்ணும் இந்த நிலைமையிலிருந்தால் அவர்களுக்காகவும் நான் இந்த விஷயத்தில் என்னாலானதைச் செய்வேன். உங்களையும் செய்யும்படி வேண்டுவேன். இதில் அசிரத்தை காட்டினால் முன்னேறுகிறவர்களையும் சமூகத்துக்குப் பயன்படக்கூடியவர்களையும் தடுத்து

விட்ட பொறுப்பை ஏற்றுக்கொண்டவனு வேன். உன்னையும் எச்சரித்தேன். சிந்தனை செய்து நாளை நின்று எனக்குப் பதில் தெரிவி" என்றார்.

"அப்படியே" என்று சொல்லிவிட்டு வந்தேன்"

"என்ன முடிவிற்கு வந்தாய்?"

"உங்களிடம் கலந்து யோசிக்கலாம் என்றுதான் வந்தேன்."

"இதில் என் யோசனை கேட்கவேண்டிய அவசியமே யில்லையே. ராம்குமாருக்கு முன்னேற அதிருஷ்ட மிருக்குமாகில் உன் மனம் உபயோகமில்லாத படிப்பை விரும்பாது."

"அப்படியானால் நான் பி. எஸ். ஸியில் சேரவேண்டாமென்பது உங்கள் அந்தரங்கம் போலும். படித்து என்ன செய்யப்போகிறாய் என்பதுதானே?"

"சே, அப்படியா சொன்னேன்? நீ படித்துப் பட்டம் பெற்றால் எனக்கு உபயோகம் அதிகமல்லவா? பி. எஸ். ஸி. பாஸ் செய்தால் நிச்சயம் எங்கள் தொழிற் சாலையில் வேலை கிடைக்கும். நீ சிரமப்படவேண்டாமே என்பதற்காகவே அவ்விதம் சொன்னேன். உனக்கு விருப்பமானால் பி. எஸ். ஸியில் சேர்ந்துவிடு. உன் படிப்பு முடியுமட்டும், கல்யாண மானாலும் பிரும்மசாரியாகவே காலம் கழித்துவிடுகிறேன். உன் மனப்படி நீ நடக்கவேண்டும், அதுவே என் லக்ஷியம்.

"அவன் எப்படியாவது போகட்டும். பிறர் நலனையே கவனித்துக்கொண்டிருந்தால் நாம் முன்னேறுவது எப்படி?"

"உண்மையாகவா பேசுகிறீர்கள்? அல்லது கேலியாக........"

"கேலி ஒன்றுமில்லை. உண்மையாகவே சொல்லுகிறேன். அவன் படித்துச் செய்யும் சமூக சேவையை நீ செய்யமாட்டாயா என்ன?"

"அதுதான் நானும் நினைக்கிறேன். பிரின்ஸ்பால் என்னவோ பெண்கள் காலேஜில் சேருவதினால் ஆண்கள் முன்னேற்றம் தடை படுவது போலவும், பெண்களுக்குத் தொழில் படிப்பு அனுவசியம் என்பதுபோலவும் பேசுகிறார். நான் விட்டுக்கொடுக்கப் போவதில்லை."

"ரைட், அப்படியே செய்! ஆனால் பிரின்ஸ்பால் ஓர் முஸ்லீம்; அவரே இவ்வளவு விளக்கமாகப் பேசுவதென்றால் ஆச்சர்யமே.?

"எந்த மதத்திற்கும் ஆண்களின் சுயநலம் பொதுவானதுதானே"

"நான் சொல்லுவது தவறு என்றால் மன்னித்துவிடு. ஏதோ மனதில் தோன்றுவதைச் சொல்லுகிறேன். அவர் சொல்லில் சுயநல மிருப்பதாகத் தோன்றவில்லையே. ஓர் நெருக்கடியான சந்தர்ப்பம் தோன்றினால் முக்யத்வம் பெறக் கூடியது எது என்பதை நிர்ணயிப்பது எவ்வளவு சிரமசாத்யம். சமீபகாலத்தில் எல்லாவித மான பஞ்சமும் ஏற்பட்டிருப்பதுபோல், படிப்பதற்கும் இடப் பஞ்சமேற்பட்டிருக்கிறபடியினால் உன்போன்ற குடும்பத் தலைவியாக, சுதந்திர ராணியாக விளங்கப்போகிறவர்கள், தேகத்தைச் சிரமப்படுத்திக்கொண்டு, பிறர் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பானேன் என்ற பச்சாத்தாபத்தினால் சொல்லியிருக்கலாமல்லவா? அவரது கடமையைச் செய்தார் என்றே ஏன் நினைக்கக் கூடாது?"

"உங்களுக்கு நான் பி. எஸ். ஸியில் சேருவது அனுவசியம் என்று தோன்றுகிறது போல் இருக்கிறதே உங்களின் பேச்சு."

"அப்படி அர்த்தங் கொள்ளாதே பாமினி! பொது நோக்காகச் சொன்னேன். உன் இஷ்டத்தை நீ நிறைவேற்றுவதில் நான் தடையேதும் கூறமாட்டேன். நீ நாளை சென்று என் பிரியப்படி பி. எஸ். ஸியில் சேருவதாகச் சொல்லிவிடு" என்று ஜலத்தையே வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்த அவள் மோவாயைப் பிடித்துத் தன் பக்கம் திருப்பினான்.

அன்பும் சாந்தமும் தவழும் புன்னகை ததும்பும் அவன் பார்வையானது அவள் மனதில் உற்சாகத்தையும் குதூகலத்தையும் உண்டாக்கின.

"அதோ பார்த்தீர்களா? வானத்து முகட்டில் தங்கள் மதிமுகம் காண பௌர்ணமி மதி எட்டிப் பார்க்கிறான்" என்றாள்.

"இல்லையடி பாலே! செந்தாமரை யொத்தமுககமலத்தில் நீலோத்பலம்போன்ற இரு நேத்திரங்களைக் காண வெட்கி, மேகத்தினுள் மறையப்பார்க்கிறான்" என்றுசொல்லி, அவள் கையைப்பிடித்து, படகிலிருந்து இறக்கிவிட்டான்.

* * * *

"பிரிய பாமினி.

உனது சொற்சுவை பொருட்சுவை நிறைந்த கடிதங்கண்டு மிக மன மகிழ்ந்தேன். 'தற்சமயம் டிசம்பர் விடுமுறை உங்களுக்கில்லா விட்டாலும், எனக்கு உண்டு. அதனால் ஒருமாத ரஜா எடுத்துக்கொண்டு அவசியம் வாருங்கள், என்று எழுதியிருக்கிறாய் வருவது பற்றி எனக்குத் தயக்கமேயில்லை. என் வர

வினால் உன் பரீக்ஷைக்குச் சற்றுப் பாதகம் ஏற்பட்டு விட்டால்? என்று என் மனம் அஞ்சுகின்றது. யோசனை செய்து பார்த்தாயானால் நான் வராமலிருப்பதே மேல் எனத் தோன்றும். தற்சமயம் நான் பதினைந்து நாள் ரஜா எடுக்கத்தான் போகிறேன், மூன்று பெண்கள், மூன்று ஆண்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒருசிறிய சுற்றுப்பிரயாணம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம், என்னைத் தவிர மற்ற ஐவரும் கல்யாணமாகாதவர்கள். நானும் கல்யாணம் என்ற பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறேனே தவிர, மற்றப்படி அவர்களைப் போலத்தான் என் நிலைமையும். அதனாலேயே தங்களுடன் வர அனுமதித்தார்கள். இன்றைக்கு எட்டாவது நாள் புறப்பட உத்தேசித்துள்ளோம், உன் படிப்பு பூர்த்தியடையுமட்டும் நாம் சந்திக்காமலிருப்பதே நன்மைதரும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையிலிருந்தால்தானே தாம்பத்ய ஒற்றுமை இருக்கமுடியும். நான் வரவில்லையென்று வருத்தப்படாதே. சதா உன் நினைவாகவே தான் இருந்து வருகிறேன், இன்னும் ஒருவருஷமும் ஒருநிமிஷமாக ஓடிவிடும். பிறகு பீ. எஸ், ஸி பட்டத்துடன் இணைபிரியாமல் வாழ்க்கை நடத்தலாம். கவனமாகப்படி, போட்டியில் வெற்றி பெறு.

இப்படிக்கு
உன் அன்பன் பத்மநாபன்

இக்கடிதத்தைப் படித்ததும் ஏமாற்றமடைந்த மனமானது சொல்லொணா வேதனையை அடைந்தது. காரணம் விளங்காமல் அழுகை வந்தது. படுக்கையில் சாய்ந்து சற்றுநேரம் அழுதாள். கோவிலின் சாயரக்ஷை மணியின் ஓசை அவளைத் திடுக்கிட்டு விழிக்கச் செய்தபொழுதுதான் தான் சற்றே கண்ணயர்ந்துவிட்டதை உணர்ந்தாள். ஜன்னலின் வழியாகத் தெரியும், காற்றினால் அசைந்தாடும் தென்னைமரத்தையே உற்றுநோக்கிய வண்ணம் உட்கார்ந்திருந்தாள். அஸ்தமன சூரியனின் அழகிய மஞ்சள் வெயில் தென்னைமட்டைகளின் மீது தவழ்ந்து விளையாடுவதைக் கண்டதும் ஏரியின் சோலை நினைவில் தோன்றவே சற்றுநேரம் அவ்விடம் உலாவிவிட்டு வந்தால் மனதிற்குச் சற்றே ஆறுதலாகவிருக்கும் என்ற எண்ணம் எழவே, எழுந்து முகங்கழுவி உடுத்துக்கொண்டு ஏரியை நோக்கி நடந்தாள்,

ஜலக்கரையின் ஓரமாக இருந்த பெரிய மாமரத்தின் வேரின் மீது, கால்கள் ஜலத்தைத் தொடும்படி உட்கார்ந்து கொண்டிருந்த பாமினியின் கண்கள் நடுமத்தியில் படகில் செல்லும் உல்லாஸ தம்பதிகளை நோக்கின. நீண்ட மூச்சு எழுந்தது. "நீயாக ஏற்படுத்திக் கொண்டது தானே" என்றது மனம். காலேஜ் மூடி மூன்று நாட்களாகி விட்டன. விடுமுறை நாட்களைப் பத்மநாபனில்லாமல் கழிப்பது இதுவே முதல் தடவை. மனம் எதிலும் செல்லவில்லை. புஸ்தகத்தை ஏறிட்டுப் பார்க்கவே மனம் விரும்பவில்லை.

"தன்னை விட்டுவிட்டு மற்றப்பெண்களுடன் சுற்றுப் பிரயாணம்! என்ன நியாயம்?"

"இது யாரால் ஏற்பட்டது?"

"இதில் சந்தேகம் வேறு? உன்னால்தான்"

"என்னாலா? எப்படி?"

"பி. எஸ். ஸி படிப்புத்தான் முக்யம் என்று கருதினது யார்?"

"அவருடைய சம்மதத்தினால்தானே விரும்பினேன்"

"லக்ஷ்யவாதியானவன் லக்ஷியத்தைச் சிதைக்க விரும்புவானா?

'உன்னிஷ்டத்தில் நான் குறுக்கிடவில்லை. என்னிஷ்டத்தில் நீ குறுக்கிட வேண்டாம் என்ற நீதியில் நடப்பதானால் பலன் மனவேதனை தானா? இதைவிட நேர்முகமாகப் படிக்கவேண்டாம் என்று சொல்லியிருந்தால் எவ்வளவு நிம்மதியாக இருக்கும்"

"அது அவன் கொள்கைக்கு விரோதமல்லவா?"

"இப்போது அவன் செய்வது என்னவாம்?"

"தவறு என்ன? உன்னுடைய படிப்பிற்கு இடையூறு கூடாது. அதற்காக அவன் மனம் புழுங்கி, காலம் கடத்தவேண்டுமா? சிநேகிதர்களுடன் தமாஷாகப் போவதில் தவறு என்ன?"

"சிநேகிதர்களா? பெண்களும்கூட வருகிறார்கள். அவருக்கு உல்லாஸம். நான் இவ்விடம் தவிப்பது. இதுவரை ஒவ்வொரு விடுமுறையையும் இருவரும் சேர்ந்துதானே கழிப்பது வழக்கம்."

"இதுவரை காலேஜ் நண்பர்கள். இப்பொழுது கணவன் மனைவி. அதனால்தான் இந்த நிலைமை."

"எப்படியானாலென்ன? இந்த நிலைமையை என்னால் சமாளிக்க முடியாது போலிருக்கிறதே. வழி"

"பாமினி! நீ ஒரு அசட்டுப்பெண். என்ன படிப்பு வேண்டியிருக்கு? மன்மத சொரூபமான கணவன், அழகிய பங்களா? ஏவினதைச் செய்ய ஆட்கள், உயர்ந்த உத்யோக அந்தஸ்து, இவையெல்லாம் உன்னை நாடி வந்திருக்க அவைகளை உதறி விட்டிருப்பது என்ன புத்திசாலித்தனம்? நான் வரும்பொழுது ஒருநாள் தங்கிப் பார்த்து விட்டுவந்தேன். 'ஏன் இந்தப் பெண் இப்படியிருக்கிருள்?' என்று தோன்றினது. பாமினி! நான் சொல்லுவதைப் புத்தியாக நினை. போதும் படிப்பு உடனே உன் புருஷனிடம் புறப்பட்டுச்செல். பொறுமையின் அவதாரம் அவன். உன் அத்திம்பேராக இருந்தால் இப்படி விட்டுப் பார்த்துக் கொண்டிருக்கமாட்டார். இரண்டிலொன்று தீர்த்துக்கட்டியிருப்பார். அவன் குழந்தை முதலே பொறுமையைக் கடைப் பிடிப்பவன் என்றாலும் எதற்கும் எல்லையுண்டு. பின்னால் வருத்தப்பட்டு உபயோகமில்லை" என்ற மூத்த சகோதரி பவானியின் சொற்கள் மனதில் உருப்பெற்றன.

"எவ்வளவு உண்மை? வருந்தவேண்டிய காலம் அதிக தூரத்திலில்லை."

"ஏன் வருந்த வேண்டும்?" நினைத்தால் நாளை இந்நேரம் அவனருகில் இருக்கலாமே."

ஆனால் சுயமரியாதை? "ஸார்! என்ன இடையூறு நேர்ந்தபொழுதிலும் விடாமல் படிப்பை முடிக்கும் தைரியம் எனக்குண்டு. அதனால் எனக்கு, பி.எஸ் ஸி இடம் கொடுத்துத்தானாகவேண்டும்" என்று பிரின்ஸ்பாவிடம் மார்தட்டிப்பேசி, காலேஜில் சேர்ந்தது என்னவாகும்?"

இப்படியாகக் கேள்வியும் பதிலுமாக அவள் மனதில் போராட்டம் நிகழ்ந்ததே தவிர, ஒரு முடிவிற்கும் வரமுடியவில்லை. அந்தச்சமயம், "பெண்புத்தியால் வீண்கனவு கண்டேன்" என்று உத்யான வனத்திலிருந்த ரேடியோவிலிருந்து கீதம் காற்றினில் மிதந்துவந்து அவள் காதில் மோதவே, "ஏன் முயற்சி எடுத்தால்?" என்ற ஒரு எண்ணம் எழவே சட்டென எழுந்து வீட்டைநோக்கி நடந்தாள்.

மூன்றாவதுநாள் காலை, காபி அருந்திவிட்டு முன் ஹாலில் பேபர் வாசித்துக்கொண்டிருந்த பத்மநாபனின் கவனத்தைப் போர்டிகோவில் நின்ற டாக்ஸியின் ஹாரன் சப்தம் திருப்பவே எழுந்து வாசல்பக்கம் வந்தவன் ஆச்சர்யத்தினால் அகலவிழித்தபடி நின்று விட்டான் வந்தவர்களை வரவேற்கக்கூட மறந்து.

"என்னப்பா ஸௌக்கியமா?" என்ற மாமனாரின் கேள்வியினால் விழிப்புற்று, "வாருங்கள், வா பாமினி" என்று சொல்லிவிட்டு, "ஏன் கடிதம் எழுதவில்லை. தந்தி கொடுத்திருந்தால் ஸ்டேஷனுக்கு வந்திருப்பேனே. முன்னறிவிப்பில்லாமல் உங்களைப் பார்த்ததும், வாருங்கள் என்று சொல்லக்கூட முடியாத ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிட்டேன்."

"நீ அவ்விடம் வருவாயென்று எதிர்பார்த்தோம், நீ வரவில்லையென்றும், ஏதோ உல்லாசப் பிரயாணம் போகப்போவதாகவும் எழுதியிருந்தாயாம். 'நானும் போகவேண்டும் இந்த க்ஷணம் கொண்டுவிடுங்கள்' என்றாள். பொருளை உடையவனிடம் சேர்ப்பதில் முன்னறிவிப்பென்ன வென்று புறப்பட்டுவிட்டேன்" என்றார்.

மூலதனம்

அதிகாரம் பெற்றது	ரூ.	1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்டது	,,	72,00,000
செலுத்தப்பட்டது	,,	53,00,000
ரிஸர்வ் நிதி	,,	62,00,000

எல்லாவித பாங்கு அலுவல்களும்
நடத்தப்படும்.

N. கோபால அய்யர்,
ஸெக்ரெடரி.



தி
இந்தியன் பாங்க் லிட்.

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 ***SUNDARI ELIXIR***
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 ***PHOSPHORUS OIL***
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 ***MASTANA PILLS***
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 ***DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA***
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.
250, China Bazaar, MADRAS.

ஜனங்கள் என்ன சொல்லுகிறார்கள்?

DEVI PILLS (தேவி பில்ஸ் Patent Regd. No. CDL/688)

ஆயிரக்கணக்கான பாராட்டுக் கடிதங்களிலிருந்து எடுக்கப்பட்ட சில விவரங்கள்:

> **NOTE**
> Our product DEVI PILLS has been duly analysed by the Director Central Drugs Laboratory of India under Patent Regd. No. CDL/688.

Colombo
3-12-49

அன்புடையீர்

தங்கள் மாத்திரை என் மனைவிக்கு ஓர் வரப்பிரசாதம். பல மருந்துகள் சாப்பிட்டும் பிரயோஜனம் இல்லாது சென்ற மே மாதம் சோர்ந்துவிட்டாள். தங்கள் மாத்திரைகள் காந்தம் போன்று வேலை செய்தன. ஒரு புட்டி காலியாவதற்கு முன்பே அவளது தொடர்ந்திருந்த கவலைகள் மறைந்து மிகவும் சந்தோஷம் அடைந்தாள். எனது மனமார்ந்த நன்றி தங்களுக்கு உரியது.

(Sd) G. Ramaswami,
Monaragal

* * * *

Trivandrum
30-11-49

அன்புள்ள ஐயா,

ஒரு புட்டி ஸ்பெஷல் தேவி மாத்திரையை உபயோகித்ததில் பரிபூரண குணம் ஏற்பட்டது. இம் மாத்திரையை உபயோகிக்கும்படி நோயாளிகளை முழு மனத்துடன் ஆதரிக்கிறேன்.

(Sd) K. Ramaswami,
Head Acctt., Nadiyar, Estate

* * * *

Thennur
29-11-49

அன்புடையீர்

தேவி மாத்திரைகளை உபயோகித்ததும் வேண்டிய பலன் அளித்ததுடன், எங்கள் கஷ்டங்களையும், கவலைகளையும் போக்கினதால் நான் மகிழ்ச்சி அடைகிறேன். தங்களுக்கு எங்கள் நன்றி உரியது. தங்கள் கம்பெனி முன்னேற்றமும் செல்வாக்கும் பெற வேண்டுகிறோம்.

(Sd) P. Subramanian,
Bapu Chetty Street, Tiruchi

* * * *

Nanjangudu
7-12-49

அன்புடையீர்,

சென்னை, சீனு அண்டு கம்பெனியாரின் (தபால் பெட்டி நம். 1638) தேவி மாத்திரைகளை 12-8-49-ல் வி. பி. யில் வரவழைத்தேன். அவைகள் திருப்திகரமான பலனை அளித்தன. பொது மக்கள் இதனை வாங்கி ஆதரிப்பார்களாக.

(Sd) S. K. Chenna Thevaru,
Process Nazir, M-Court

* * * *

Anakapalli

ஐயன்மீர்,

உங்கள் 'தேவி மாத்திரை'கள் மிகவும் நல்ல மருந்து. என் நோயாளிக்கு 15 தினங்களில் குணம் உண்டாயிற்று. என் அனுபவத்தில் கண்டவரை 15 தினங்களில் பலன் கிடைத்துவிடுமென்று உறுதி கூறுகிறேன்.

(Sd) C. H. Narayana Rao & Co.,
Main Road

மாத விடாய்!

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ் ரிஜிஸ்டர்ட்) எக் காரணத்தினாலும், எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும், அதி சீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். ஆயிரக்கணக்கான மக்களின் நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற ஔஷதம். உத்தரவாதமுள்ளது. போலி மருந்துகள் வாங்கி ஏமாறுதீர்கள். விலை ரூ. 7—0—0. சாதாரண கேஸுகளுக்கு Ordinary விலை ரூ. 9-0-0. நாள்பட்ட கேஸுக்கு Special (த. செ. தனி.)

கர்ப்பத் தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) 12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருடத்துக்கு சாஸ்வதமாக கர்ப்பத்தைத் தடுக்கும். மாதவிடாய் தவறாது (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரரியாக கருவைத் தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 10-0-0. ஜெல்லி விலை ரூ. 5-8-0 (த. செ. தனி)

யானைக்கால் நிகரற்ற மருந்து (எலப்டோ பில்ஸ்)

ஆரம்பம் அல்லது கடுமையான யானைக்கால் பயிலேரியா வியாதிகளுக்கு நிச்சயமான நிவாரணி பல நாள் அனுபவத்தின் பயனாக தயாரிக்கப்பட்டது, உத்தரவாதமுள்ளது ஆபத்தில்லாதது, விலை ரூ. 9—8—0 த. சி. தனி.

சிலோனுக்கு இங்குள்ள விலையைவிட 30 சதவிகிதம் அதிகம்.

Manufacturers: **SEENU & Co.**
P. B, No, 1638 (3) Madras - 1,

Branch :— 134, Serangoon Road,
SINGAPORE.

Ceylon Agents:—
New Colombo Medical Stores,
82, Main Street, COLOMBO 11

Mattuppatti
14-1-50

ஐயா,

தங்கள் தேவி மாத்திரைகளை உபயோகித்ததால், மாதவிடாய் ஒழுங்காக ஏற்படாததால் உண்டாகிய கொடிய தலைவலியிலிருந்து விடுதலை அடைந்தேன்.

(Sd) Mrs. M. B. Raju,
Maduppatti Estate

Pollachi
1-11-49

அன்பார்ந்த ஐயன்மீர்,

3 மாதங்களாக மாத விடாய் தொந்தரவினால் கஷ்டப்பட்டுவந்த ஒரு நோயாளிக்குத் தேவி மாத்திரைகள் கொடுத்ததில் கஷ்டமில்லாமல் 2 நாட்களுக்குள் ஒழுங்காக மாத விடாய் வருகிறது. வலியோ ஜுரமோ இல்லை. தேவி மாத்திரைகளைத் தவிர வேறு எந்தக் கைகண்ட மருந்தும் இல்லை என்பதை உறுதியாக கூறுகிறேன்.

(Sd) K. Kandaswami
Kedangipatti

* * * *

Mysore
6-12-49

அன்புள்ள ஐயா,

தேவி மாத்திரைகள் இரண்டு உபயோகித்ததும் பூரண குணம் ஏற்பட்டது. அது கெடுதி விளைவிக்காததுடன், உபயோகித்த இரண்டு நாட்களுக்குள், வராமல் இருந்த மாத விடாய் வரும்படி செய்துவிட்டது. தங்களுக்கு எனது வந்தனம்.

(Sd) P. R. Balakrishna Rao,
Engineer; M. S. Co., Ltd., Mandya

* * * *

Bangalore
24-4-49

ஐயன்மீர்,

தாங்கள் அனுப்பிய தேவி மாத்திரைகள் (ஸ்பெஷல்) உபயோகித்ததால் கைமேல் பலன் ஏற்பட்டது என்பதைச் சந்தோஷத்துடன் தெரிவிக்கிறேன்.

(Sd) Dr. V. M. Rajabather Mudaliar,
Raja Medical Hall.

* * * *

Mathurai

ஐயா,

தங்கள் தேவி மாத்திரைகளை உபயோகித்ததினால் நின்றுபோன மாதவிடாய் யாதொரு கஷ்டம் இல்லாது ஏற்பட்டது. தங்கள் பத்திரிகை விளம்பரம் உண்மையானதே. பாக்கியுள்ள மாத்திரைகள் எனது நண்பருக்கு உதவினேன். அதனை உபயோகப்படுத்தினதால் தவறாது மாதவிடாய் ஏற்படுவதுடன் நல்ல பலனையும் அளித்து வருகிறது.

(Sd) C. P. Chandra
Photographer

* * * *

Vijayawada

அன்புள்ள ஐயன்மீர்,

இதை என் குடும்பத்தில் வலியுடன் கூடிய மாத விடாய்க்கும் ஒழுங்கு தவறிய மாத விடாய்க்கும் உபயோகித்தேன். அதனால் மிகவும் குணமாயிற்று.

(Sd) M. Chakradara Rao,
Draftsman, P.W.D.

“அப்படியா சந்தோஷம்” என்று கூறியபடி கடைக்கண்ணால் பாமினியை நோக்கினான். வெற்றிச் சிரிப்புடன் அவனை நிமிர்ந்து நோக்கினாள் பாமினி.

“அடேய் ராமா, சாமான்களை உள்ளே கொண்டு வை” என்று உத்தரவிட்டு, “வாருங்கள் பல் தேய்த்துக், காப்பி சாப்பிடலாம்” என்றவாறு நடந்தான்.

தன் அறையில் பீரோவிலிருந்து ஏதோ காரியாலயத்தின் காகிதங்களை அடுக்கி வைத்துக்கொண்டிருந்த பத்மநாபன் அறையின் கதவு சாத்தப்படும் சப்தம் கேட்டுத் திரும்பினான். கையில் காப்பியுடன் அவனை நோக்கி வந்துகொண்டிருந்த பாமினியைப் பார்த்து, “நான் காப்பி சாப்பிட்டாய்விட்டதே” என்றான்.

“நீங்கள் இரண்டாவது தடவை சாப்பிடும் வழக்கம் கிடையாதோ? அந்த மாமிகூடத் தான் கொண்டுபோய்க்கொடு என்றுசொன்னாள்” என்று சிரித்தவாறே கூறினாள்.

“சாப்பிடமாட்டேன் என்று சொல்லவில்லையே; அதுவும் உன்கையினால் கொடுக்கும்பொழுது மறுக்க மனம் வருமா? சற்று நேரத்தில் சாப்பிட வேண்டும் என்பதற்காகச் சொன்னேன். அது போகட்டும்; அந்த மாமி யாரென்று தெரியுமா? சமயல்காரி என்று தானே நினைத்தாய்?” என்று காப்பியைக் கையில் வாங்கிக்கொண்டான்.

“அப்படி நினைத்தேனென்று ஏன் தோன்றுகிறது? போனவாரம் உங்கள் அம்மா வந்திருந்தபொழுது எல்லா விபரமும் சொன்னார். மரியாதையாக நடந்துகொள்ளவும் படித்திருக்கிறேன்.”

“மன்னித்துக்கொள். நீ இவளைப் பார்த்ததில்லை. அம்மாவிற்கு உறவினள். நீ சமயலம்மா என்று நினைத்துச் சாதாரணமாகப் பேசிவிட்டாயானால், மாமி மூட்டையைக் கட்டிவிடுவாள். பிறகு என்பாடு திண்டாட்டமாகிவிடும். நல்ல சாப்பாடு............” என்று முடிக்கு முன்,

“எனக்கு நன்றாகச் சமைக்கத் தெரியாது என்பதற்கு முகவுரை போடுகிறீர்களாக்கும். மாமி பெரியவராக இருக்கவேண்டியது அவசியம். ஆனால், குடும்பப் பொறுப்பும், அடுப்பு வேலையும் தெரியாமல் வளர்ந்த பெண்ணல்ல நான். ‘என் பெண்ணிற்கு அடுக்குள் என்றாலே தெரியாது’ என்று பெருமைப்படும் தாயாருமல்ல உங்கள் அத்தை.”

“பாமினி, கோபித்துக் கொள்ளாதே. குடும்பதின் வரவு செலவு முழுவதும் உன் கையில் என்பது நான் அறியமாட்டேனா? சமையலையும் நான் சாப்பிடாதவனா? இன்னும் ஒரு வருஷம் நான் அவள் ஆதரவை நாடவேண்டியது அவசியமல்லவா? அதற்காக முன்னெச்சரிக்கை எடுத்துக்கொண்டேன். சரிதானா? என் மீது கோபமா” என்று காப்பி டம்ளரைப் பக்கத்திலிருந்த ஜன்னல் மீது வைத்துவிட்டு, தரையைப் பார்த்தவண்ணமிருந்த அவள் முகத்தை நிமிர்த்தினான்.

“எதற்காகக் கோபம் வரவேண்டும்” எனப் புன்னகை பூத்தாள்.

இருவரும் ஒருவரையொருவர் ஊடுருவிப் பார்த்தவண்ணம் நின்றார்கள் அந்த நிலைமையில்.

“பாமினி!”

“ஏன்” என்பதுபோல் விழிகளை உயர்த்தினாள்.

“ஏது, இவ்வேழையின்மீது இவ்வளவு தயவு வைத்துப் புறப்பட்டு வந்தாய்?” என்றான்.

“அவ்வளவே. அடுத்த கணம் அவள் கண்களில் நீர் முட்டி நின்றது. எந்த நிமிஷமும் உருண்டோடும் நிலைமையில்.

அதைக் கண்டு திடுக்கிட்டவனாக, “அட, அசடே! ஏன் அழுகிறாய்? நான் என்ன சொல்லிவிட்டேன்? உன் படிப்பிற்கு இடைஞ்சலாக நான் வரவேண்டாமென்று நான் வராமல் தங்கினாலும் என் ஹ்ருதயம் உன்னையே வட்டமிட்டுத் தவித்தது. அதையறிந்தவள்போல் வந்த உன் அன்பைக் கண்டு மகிழ்ந்தே அவ்விதம்சொன்னேன்” என்று அருகில் இழுத்து, தன் ஷர்ட் ஓரத்தினாலேயே கண்களைத் துடைத்தான்.

“லக்ஷியவாதி, சுதந்திர மனப்பான்மை, என்று வாய் பேசுகிறது. காரியாம்சத்தில், ஏன் பி. எஸ். ஸியில் சேர்ந்தோமென்று தவிக்கும்படி செய்து விட்டீர்கள். தயவு காட்ட வேண்டியது தாங்கள். நான் தயவு காட்டினேனென்றால்”

“இக் குற்றச்சாட்டுக்கு ஆதாரமேயில்லை. உன் நன்மையையே என்மனம் நாடும். உல்லாஸப் பிரயாணத்தில் நீயும் உடனிருக்க வேண்டுமென்பதுதான் என் அந்தரங்க ஆசை. சுதந்திரத்தில் குறுக்கிடுவதில்லையென்று சொல்லிவிட்டுச் சுயநலத்தில் கண்ணாக உன் படிப்பிற்கு இடையூறு செய்யக் கூடாது என்றுதான் நான் உன்னை வரும்படி எழுதவில்லை. “கொண்டான் குறிப்பறிவாள்” என்ற வாக்கியத்தின்படி நீ வந்ததானது; அன்பில் தோய்ந்த வாக்யம் அப்படி வந்துவிட்டது. அவ்வளவுதான். சரி.

இவைபற்றி இத்துடன் நிறுத்திக்கொள்வோம். இன்று சாயங்காலமே நாம் புறப்படவேண்டும். உன் அப்பாவும் நம்முடன் வருவாரல்லவா ?"

"அவர் சாப்பாடானதும் உங்களுடனேயே புறப்பட்டு, சித்தப்பா வீட்டிற்குச் சென்று விட்டு இன்று இரவே ஊருக்குப் போகப் போகிறார்."

"ஏன் இவ்வளவு அவசரம் ?"

'ஊரில் ஏதோ வேலையிருக்கிறதாம்."

"இருந்தாலும் நான் சொல்லிப் பார்க்கிறேன். நாலு மணிக்கு நான் வந்துவிடுவேன். நீ தயாராக இரு. எல்லோரும் இவ்விடமே வருவார்கள். இவ்விடமிருந்தே யாவரும் ஸ்டேஷனுக்குப் போகவேண்டும். உன்னைப் பார்த்தால் மிகவும் சந்தோஷப்படுவார்கள்."

* * *

அந்தப் பிரயாணம் மிகவும் உல்லாசமாகவே இருந்தது பாமினிக்கு. கூட வந்த பெண்கள் இருவரைப்பற்றி அவள் அறிந்துகொண்டது: வஸுமதி சாதாரண குடும்பத்தில் மூத்த பெண்ணாகப் பிறந்தவள். பி. ஏ. பாஸ் செய்தவள். குடும்ப பாரத்தினிமித்தம் காரியாலயத்தில் உத்யோகம் பார்க்கிறாள். தம்பிக்குப் படிப்பு முடிய இன்னும் ஒரு வருஷமே பாக்கியிருக்கிறது. அது முடிந்து அவன் உத்யோகம் ஏற்றதும் நிச்சயம் செய்து வைத்திருக்கும் பாஸ்கரனை மணந்துகொண்டு இல்லறம் நடத்தப்போகிறாள். கல்யாணம் ஆனதுமே உத்யோகத்தை ராஜினாமா செய்துவிடப்போகிறாள். "கல்யாணம் செய்துகொண்டபின் தம்பி வரும்வரை உத்யோகம் பார்க்கக்கூடாதா" என்று கேட்ட பாமினிக்கு,

"கல்யாணம் ஆகிவிட்டால் இருவர் வாழ்க்கையும் சுயநலத்தையொட்டியே அமையும். அதனால்தான் செய்துகொள்ளவில்லையென்றும், நீங்கள் படிப்பது அனாவசியம். இப்படியே நீங்கள் குடும்ப வாழ்க்கையில் பங்கெடுத்துக்கொள்ளுங்கள். ஒற்றுமையுள்ள தாம்பத்ய வாழ்க்கையைவிட இவைகளில் என்ன இன்பம் இருக்கப்போகிறது? எங்களைப்போலுள்ள சாதாரண குடும்பத்திலுள்ளவர்களும் சுரபியைப்போல், (பக்கத்தினின்ற தோழியைச் சுட்டிக்காட்டி) விதியினால் சதிசெய்யப்பட்டவர்களும் இவ்வழியில் பிரவேசிப்பது அவசியமாகிறது, இன்பதுன்பத்தைக் கவனியாமல்; என்ற பேச்சிலிருந்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும், தற்கால உலக நிலைமையையும் அறிய முடிந்தது. மேலும் காரியாலயத்தில் பத்மநாபன் எல்லோரிடத்தும் அன்பாகவிருப்பதையும், பெண்களுக்குத் தனி மரியாதை கொடுப்பது பற்றியும் வானளாவப் புகழ்ந்து பேசினார்கள். அத்துடன் ஓரிடத்தில் டிபன் தயார்பண்ண வேண்டியிருந்தது. சுரபிக்குப் பொறுக்க முடியாத தலைவலி ஏற்பட்டு விட்டது. அது வரை காரியாலயத்தின் 'ஆபீஸர் மனைவி' என்பதற்காகப் பாமினிக்கு ஒரு வேலையும் அவர்கள் வைப்பதில்லை. அன்று வஸுமதிக்கு உதவி செய்யச் சென்ற பாமினியை "வேண்டாம் அம்மா, உங்களுக்கு வேலைசெய்து பழக்கமிருக்காது; இனியும் செய்யவேண்டிய அவசியமிருக்காது. நானே செய்து விடுவேன்" என்று சொன்னதற்கு,

"வஸுமதி, தாங்கள் அவ்விதம் எண்ணுவது தவறு என்பது பாமினியைச் செய்ய விட்டுப் பார்த்தபிறகு தெரியும். படித்தாலும், சிறுவயதுமுதல் வீட்டு வேலைகளில் அவள் தாயார் பழக்கியிருக்கிறார்கள். வாசல் தெளிப்பதிலிருந்து நெல்குத்திப் புடைக்கும் வரை சகல வேலையும் தெரியும்" என்று பத்மநாபன் பெருமையுடன் சொன்னதைக் கேட்ட பாமினியின் உள்ளம் மட்டற்ற மகிழ்ச்சியை அடைந்தது. அந்தப் பிரயாணத்தில் கணவனுக்கு வேண்டியதைக் குறிப்பறிந்து செய்வதில் உண்டாகும் திருப்தியின் உணர்ச்சியைப் பூர்ணமாக அனுபவித்தறிந்தாள். இதைவிட வேறு இன்பம் என்ன வேண்டும் என்றுகூடத் தோன்றலாயிற்று.

பிரயாணம் முடிந்துவந்த அன்று இரவு, பிரயாணத்தில் தனிமையில் மனம் விட்டுப் பேசச் சந்தர்ப்பமில்லாமலே போய்விட்டபடியினால் அன்று நிறையப் பேசித்தீர்த்துவிட வேண்டும் என்ற அவாவுடன் பால் பாத்திரத்துடன் அறையில் நுழைந்த பாமினியின் மனம் ஏமாற்றத்தினால் தடைபட்டது. கொசுவலையுடன் கூடிய கட்டிலில் படுக்கை விரித்திருந்தது. மற்றொரு பக்கம் ஒரு காம் காட்டில், போர்வையினால் காலோடு தலை போர்த்திக்கொண்டு படுத்திருந்தான் பத்மநாபன். அருகில் வந்து முகத்திலிருந்த போர்வையை விலக்கி, "பால் சாப்பிடுங்கள்" என்றாள்.

"எழுந்து உட்கார்ந்து பாலை வாங்கிச் சாப்பிட்டுவிட்டுப் பாத்திரத்தை அவள் கையில் கொடுக்கும் பொழுது, "பாமினி! அதோ அந்தக் கட்டிலில் உனக்குப் படுக்கை போட்டிருக்கிறது. அலுப்பாக இருக்கும்; சீக்கிரம் படுத்துத் தூங்கு" என்று சொல்லிவிட்டு அவள் பதிலை எதிர்பாராமல் மறுபடியும் மூடிப் படுத்துவிட்டான். காரணம் கேட்கலாமா? என்று எண்ணியவளைப் பெண்மையின் சுயமரியாதை தடுத்து விளக்கை யணைத்துப் படுக்கச் செய்துவிட்டது.

அடுத்த நாளும் இரவு பத்துமணிவரை ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். பாமினிக்கு மனதிலுள்ளதைக் கேட்க ஏனோ தைரியம் ஏற்படவில்லை. பாலைச் சாப்பிட்டதும் "என் வார்த்தையைக் காப்பாற்றிவிடுவேன் பாமினி. நாழிகையாய்விட்டது. எனக்குத் தூக்கம் வருகிறது, உனக்குப் படிக்கவேண்டுமானால் படி. விளக்கெரிவதில் என் தூக்கம் கெடாது. உன் சுதந்திரத்தில் நான் தலையிடமாட்டேன்" என்று காம் காட்டில் முக்காடிட்டுப்படுத்துவிட்டான். "சுதந்திரம் மண்ணாய்ப்போக" என்று முணுமுணுத்தாள். அதுகூட அவன் காதில் இலேசாகப்பட்டாலும் படாதுபோலவே இருந்துவிட்டான்.

காலையில் இருவரும் காபி அருந்திவிட்டுப் பத்திரிகை படிப்பது, ஏதாவது சர்ச்சைசெய் செய்வது. ஒன்றாகச் சாப்பிட்டுவிட்டு, காரியாலயத்திற்குப்புறப்படும்பொழுது, "பாமினி ஓய்வு எடுத்துக்கொண்டு தூங்கு. அல்லது வண்டி வீட்டிற்கு வந்துவிடும், எங்காவது உன் சிநேகிதிகளைப் பார்க்கவேண்டுமானால் பார்த்துவிட்டுவா. நான் சீக்கிரம் திரும்பிவிடுகிறேன். சாயங்காலம் கடற்கரைக்கோ, சினிமாவிற்கோ போகலாம். நான் வரட்டுமா?" என்று புன்சிரிப்புடன் அவள் கன்னத்தில் இலேசாகத் தட்டிவிட்டுச் செல்லுவான். அநேகமாக மாலை மூன்று மணிக்கே திரும்பிவிடுவான். இந்த நிலைமையிலேயே பதினைந்து நாட்கள் சென்றுவிட்டன. அவன் அளவு கடந்த அன்பை அள்ளி வீசுகிறான். ஆனால் அது அவள் மனதிற்கு மேலுக்குச் செய்வதுபோல் தோன்றுகிறதே! ஏன்? புதிர் புரியாமலே விடை தேடிக்கொண்டிருந்தாள். "இன்னும் இரண்டுநாளில் காலேஜ் திறந்துவிடுவார்கள். போகவேண்டுமே" என்ற அசிரத்தை தோன்றிற்று. பாட புத்தகங்களைப்பார்க்கவே அவள் மனம் விரும்பவில்லை. 'இந்தச் சஞ்சலம் தீர என்ன வழி' என்ற சிந்தனையில் ஜன்னலருகில் நின்று தோட்டத்தை உற்றுப்பார்த்தவண்ணம் நின்றுகொண்டிருந்தாள்,

"பாமினி!" என்ற குரல்கேட்டுத் திரும்பினாள்."

"நாளை மறு நாள் காலேஜ் திறக்கிறார்கள் போலிருக்கிறது" என்று சொல்லியபடி அவள் அருகில் வந்துநின்றான்.

"உம்" என்றாளே தவிர வேறுஒன்றும் பேசவில்லை.

அவள் மன நிலைமையை ஒருவாறு புரிந்துகொண்டாலும் இந்த இருபத்துமூன்று நாளும் ஒரே இன்பமயமாகக் கழிந்தன. 'என்ன செய்வது? ஆகவேண்டியகாரியங்கள் ஆகவேண்டாமா? சுயநலம் கோருவது நியாயமா?" என்றான்.

"பதில் அவனை நிமிர்ந்து ஒருமுறை நோக்கினாள்"

"நான்போய் கையெழுத்துப்போட்டுவிட்டு வந்துவிடுகிறேன். பிரயாணத்திற்கு வேண்டியதைத் தயார் செய்துகொள். உனக்கு ஏதாவது வாங்கவேண்டுமா? வேண்டுமானால். நான் வந்ததும் கடைக்குப்போய் வருவோம்" என்றான்.

"எனக்கு வேண்டுவது புதிருக்கு விடை" என்றது மனம். ஒன்றும் வேண்டாம் என்றது வாய்.

"ஊருக்குச் சென்ற வாஸன் வந்துவிட்டானானால், நானே உன்னைக் கொண்டு விட்டுவிட்டு வருகிறேன். இல்லையென்றால் கிளார்க் விச்வத்தைத் துணைக்கு அனுப்புகிறேன். சரிதானே" என்றான்,

'சரி' என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தாள்.

"ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?"

"ஒன்றுமில்லையே" என்று சிரிப்பை வரவழைத்துக்கொண்டு கூறினாள்.

மத்யானம் மூன்று மணிக்கு, "பாமினி" என்றழைத்த வண்ணம் அவள் அறையில் நுழைந்த பத்மநாபனுக்கு எதிரொலிதான் பதிலளித்தது. கோட்டையும் பூட்ஸையும் கழற்றிப் போட்டுவிட்டு, சமையல் அறைக்கு வந்தான் மாமியைத்தேடி. ஆனால் அவன் கண்டது மஸாலா தோசை செய்துகொண்டிருக்கும் பாமினியை.

"ஏன் பாமினி, நீ செய்கிறாய்? மாமி எங்கே!" என்றான்.

"அவர் உறவினர் யாரோ ரொம்ப சீக்கா இருப்பதாக ஆள் வந்தான். உங்களிடம் சொல்லும்படி சொல்லிவிட்டுச் சென்றார்." அவனை நிமிர்ந்து பாராமலேயே தோசையைக்கல்லிலிருந்து எடுத்துத் தட்டில் போட்டாள்.

"அப்படியானால் நீ ஏன் சிரமப்படவேண்டும்? இரவு ரயிலுக்குப் போகவேண்டியவள்" என்றான்.

"ஏன் நான் நன்றாகச் செய்ய மாட்டேனா? சாப்பிட்டுப் பாருங்கள். கை கால் அலம்பிவிட்டு வாருங்கள். நான் தோசை கொண்டு வருகிறேன்" என்றாள்.

"வேண்டாம் நானே இவ்விடம் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சென்ற

வன் இரண்டு நிமிஷத்தில் திரும்பிவந்து அவள் பக்கத்திலேயே உட்கார்ந்துகொண்டான். தட்டில் வைத்த தோசையைச் சாப்பிட்டுக்கொண்டே "நீ நன்றாகச் செய்ய மாட்டாய் என்பதற்காகச் சொல்லவில்லை பாமினி! ரயிலுக்குப் போகவேண்டும். இப்பொழுது கடைக்குப் போகவேண்டும். நான் உடனே வருவதாகச் சொல்லிச்சென்றேன். அதன்படி வரமுடியவில்லை. இந்த வேலையை ஏற்படுத்திக்கொள்ளா திருந்தாயானால் இப்படியே கிளம்பிப் போய் ஹோட்டலில் டிபன் சாப்பிட்டபின் தமாஷாகச் சுற்றிவிட்டு வரலாம் என்பதற்காகச் சொன்னேன். இப்பொழுது உன் கையால் போடப்படும் தோசையின் ருசியானது எப்படியென்று சொல்லப் பதமே கிடைக்கவில்லை. சுடச்சுட நீ போட்டுக்கொண்டேயிருக்கிறாய். நான் சாப்பிட்டுக்கொண்டே யிருக்கிறேன். எண்ணிக்கை ஏழு எட்டு என்று ஆகியிருக்கும் என்று தோன்றுகிறது"

"அப்படியொன்றுமில்லை, நாலுதான் ஆகியிருக்கிறது. ஒன்பதுமணிக்கே சாப்பிட்டுவிட்டுப் போனது. பசியாக இருக்கும் கணக்கு எண்ணாமல் சாப்பிடுங்கள்" என்று மற்றொரு தோசையைப் போட்டாள்.

"எனக்குப் போதும். நீயும் சாப்பிடு; நான் வார்க்கிறேன்" என்றான் சிரித்தவாறே.

"ஐயோ! வேண்டாமே, உங்கள் சேவை போரும். ஆகிவிட்டது. இதிலிருப்பது எனக்குப் போக மிஞ்சும்" என்று தானும் ஒரு தட்டில் தோசையை எடுத்துவைத்துக் கொண்டு சாப்பிடலானாள்.

"இப்பொழுது நீரையச் சாப்பிட்டாய்விட்டது. இரவு லைட்டாக ஏதாவது சாப்பிட்டால் போதும். சமையல் செய்யவேண்டாம். ஹோட்டலிலிருந்து வரவழைத்துவிடுகிறேன். மாமி இல்லாததினால் வீட்டைப் பூட்டிவிட்டு அவுட் அவுஸில் இருப்பவர்களிடம் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டுப் போகவேண்டியதுதான். நான் உன்னைக் கொண்டுவிட வரப்போகிறேன்." என்றான்.

அவன் பதிலை எதிர்பார்த்தான். மௌனமாகவே தோசையைச் சாப்பிட்டு முடித்தான்.

சற்றுப் பொறுத்து, "என்ன பாமினி! மௌன விரதம் எடுத்திருக்கிறாயா? சரியான படி பேசமாட்டேனென்கிறாயே"

கிண்ணத்திலுள்ள காப்பியைக் கரண்டியினால் கிளறி ஜீனியைக் கலந்தவாறு, "நான் ஊருக்குப் போகப்போவதில்லை" என்றாள்.

"ஏன்" என்றான் திடுக்கிட்டவன்போல்.

"ஏன் அப்படிச்செய்ய எனக்குச் சுதந்திரமில்லையா? போக்கு வரவு சுதந்திரம்" என்றாள் காப்பியுடன் அவனருகில் வந்து.

"அப்படிச் செய்யும் சுதந்திரம் உனக்கு நிச்சயமாக உண்டு. ஆனால் காலேஜ் திறந்துவிடுவார்களே........"

"காலேஜுக்குப் போவதானால்தானே அந்தப் பிரச்னை?"

"என்ன சொல்லுகிறாய்?" என்று உறிஞ்சிக்கொண்டிருந்த காப்பிக் கப்பைக் கையிலெடுத்த வண்ணம் அவளருகில் சென்றான்.

"ஏன் காதில் விழவில்லையா? நான் இனிமேல் காலேஜிற்குப் போகப் போவதில்லை. அதனால் இன்று ஊருக்குப் போகப் போவதில்லை" என்றாள் அவனை நிமிர்ந்து நோக்கியவாறு."

'காரணம்?"

"எனக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். என் படிப்பு இனி காலேஜில் இல்லை"

"இல்லை பாமினி. நீ அவசியம் போகவேண்டும். காலேஜிலும் சேரவேண்டும்."

"எதற்காக?"

"எவ்வளவு சிரமப்பட்டு இடம் பெற்றாய்? ராம்குமார் போட்டியில் வெற்றி பெற்றாய். நடுவில் நிறுத்தினால் யாவரும் முக்யமாகப் பிரின்ஸ்பாலே உன்னை நொந்து கொள்வார்கள். அன்று போட்டியில் போகும்பொழுது எவ்வளவு உறுதிமொழி சொன்னாய். இப்பொழுது உன்னிஷ்டமாக நிறுத்தினால்கூடப் பழி என்னைத்தான் சேரும். 'சுயநலக்காரன்' என்று என்னையே யாவரும் ஏசுவார்கள். அதனால் எனக்காக வேண்டியாவது நீ போகத்தான்வேண்டும். திடீரென மனமாற்றம் எப்படி ஏற்பட்டது?"

"உங்களால் தான்"

"என்னாலா எப்படி? உன்னிஷ்டத்திற்கு விரோதமாக நான் நடந்ததாகத்தெரியவில்லையே. பார்த்தாயா நீயே என்மீது பழி சுமத்துகிறாயே. பிறகு மற்றப் பெயரைப்பற்றிக் கேட்கவேண்டுமா?"

"எனக்காக இப்பழியைச் சற்றுத் தாங்கிக்கொள்ள உங்களுக்குச் சுதந்தரமில்லையா?"

"சுதந்திரமிருக்கிறது. ஆனால் அதற்காக அனாவசியமான பழியை ஏற்பானேன்? காரணத்தை அறியாமல்"

துணிகள்
வெண்மையாக
சலவை செய்யப்
பட்டுள்ளன...
துணிகள்
பிரகாசமாக
சலவை செய்யப்
பட்டுள்ளன...
SUNLIGHT
SOAP
ஸன்லைட்
சோப்பினால்
தான்
துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும்
சலவை செய்கிறது !
S. 127-50 TM.

“காரணம் உங்கள் மனம் அறியாததோ? காரணம் கேட்டு என் மானத்தை ஏன் வாங்குகிறீர்கள்?” என்றாள்.

“பாமினி? என்ன இப்படி பேசுகிறாய்?” என்று தரையை நோக்கியிருந்த அவள் முகத்தை நிமிர்த்தினான். கண்ணீர் முட்டி நின்றது.

“என்ன இது? ஏன் அழுகிறாய்? இன்று புதுப் பாமினியாக நடந்துகொள்ளுகிறாயே? உன்னைப் புரிந்து கொள்ளவே முடியவில்லையே. நாம் ஒப்பந்தம் செய்து கொண்டபடி உன் அனுமதியின்றி உன்னை விரலால்கூடத் தீண்டுவதில்லையே. நான் எவ்வளவு முன்னெச்சரிக்கையாக நடந்து வருகிறேன். நமது ஒப்பந்தப்படி படிப்பை முடித்துக்கொண்டு, பரீக்ஷை எழுதின மறுதினமே இவ்விடம் உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். விண்வாதம் ஒன்றும் செய்யாமல் இரவு புறப்படுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்” என்றான் அவள் கண்ணீரைத் துடைத்தவாறே.

“நான் போகப் போவதில்லை, அது நிச்சயம் தான்”

“இல்லை நீ போகத்தான் வேண்டும்”

“ஏன் நான் இவ்விடமிருப்பது உங்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறதா? உங்கள் உல்லாசம் கெடுகிறது போலும்”

“அட பைத்யமே, இதற்காகவா படிப்பை நிறுத்துகிறேனென்று சொல்லுகிறாய். பெண்களின் இந்தச் சுபாவம் மட்டும், படித்துப் பட்டம் பெற்றவர்கள், பாமரப் பெண்கள் யாவருக்கும் பொதுவானது போலும். இவ்வளவு நாள் பழகியும் என்னை நீ அறிந்து கொள்ளவில்லையே. நீ எவ்விதமெல்லாம் வாக்குத்தத்தம் கேட்கிறாயோ அவ்விதமெல்லாம் தருகிறேன், படிப்பைப் பாதியில் நிறுத்தாதே.”

“படிக்கும் சக்தி என்னிடமிருந்து விடைபெற்றுவிட்டது. என்னை என் இஷ்ட விரோதமாக அனுப்பவில்லை என்ற வாக்குறுதி தான் எனக்கு வேண்டும்.”

சற்று நேரம் அவளையே வெறித்துப் பார்த்த வண்ணம் நின்றான். சற்றுப் பொறுத்து, “பாமினி! நான் காண்பது கனவா? நனவா? உன்னை இன்று என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை” என்றான். அவள் இரண்டு கைகளையும் தன் கையில் எடுத்தவாறு.

“உங்களை நான் புரிந்துகொண்டுவிட்டேன். என்னையும் நீங்கள் இனிமேல் புரிந்து கொண்டுவிடுவீர்கள்”

“அப்படியானால் நீ படிப்பை நிறுத்தக் காரணம் நான் நினைப்பது?” என்று முடிக்கு முன், “அதே தான்” என்று அவனைப் பார்ப்பதற்கு லஜ்ஜையுற்றவள் போல் அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

“பாமினி! என் ஆனந்தத்தை வெளியிடப் பதம் இல்லை. புரிந்துகொள்ள நான்தான் தவறிவிட்டேன்.”

“நீங்கள் தவறவில்லை. நான் தவறைத் திருத்திக்கொண்டுவிட்டேன்” என்றாள்.

நாலைந்து தினங்களுக்கு முன், மத்யானம் பத்மநாபன் ஆபீஸ் சென்றபின்பு, மாமியானவள் “அடி பெண்ணே நாங்கள் படிக்கவில்லை, பட்டம் பெறவில்லையென்றாலும் பெரியவர்கள் அனுபவித்துச் சொல்லும் வாக்கியங்களைப் பொன்வாக்யமாக மதித்து நடந்துவந்த அனுபவத்தின் மீது உனக்கு ஏதோ சொல்லுகிறேன். சொல்லவேண்டியது என் கடமை. சகல பாக்யங்களும் நிறைந்திருக்கும் புருஷனைத் தனியே விட்டுவிட்டு நீ படிக்கும் பட்டப்படிப்பு எதற்காம்? மெட்டிகுலேஷன் படித்தாலே எல்லாரூர் இங்கிளீஷும் பேசலாமாமே. உனக்கு அது போருமே. உத்யோகம் பார்க்கணும்னு உனக்கு விதிக்கவில்லை. வேலைசெய்து அலுத்துவரும் புருஷனுக்கு வீட்டில் கட்டினவள் மலர்ந்த முகத்தைப் பார்த்தவுடனேயே அலுப்பெல்லாம் எங்கோ பறந்து ஓடிவிடும். சூன்யவெளியைப் பார்த்துக்கொண்டு அந்தப் பிள்ளை உட்கார்ந்துகொண்டிருக்கும் பொழுது, என்னகு என்னமோபோலிருக்கும். ஆரெல்லாமோ வரா போரா, பெண்களும் வந்துபோவார்கள். சிறுபிள்ளை தானே. ஏதாவது ஏற்பட்டாலும் அதிசயமில்லை. நீ இப்படியே இவ்விடமிருந்துவிடு. இல்லையானால் பின்னால் வரப்போவதை அனுபவிக்கத் தயாராக இருக்கவேண்டும்” என்று உபதேசம் செய்ததின் பலன் இப்படிக் கைமேல் கிடைத்ததென்பதை பாமினியின் அந்தராத்மா மட்டுமே அறியுமே தவிர, அன்று ரயிலில் இருக்கவேண்டிய அதே நேரத்தில் மேல்மாடியில் நிலவொளியில் மறுநாள் முதல் தொடங்கும் புது வாழ்க்கைக்குத் திட்டம் வகுத்துக்கொண்டு உல்லாஸமாகப் பேசி, சிரித்து மகிழும், பாமினி பத்மநாபனின் பத்மநாபனுக்கு எப்படித் தெரியும்?”

பிறகு இரண்டு வருஷங்கள் எப்படி இன்பமாகச் சென்றன. அதன் பிறகு? சிந்தனை தடைபட்டது. திரும்பினாள் எட்டு மாதமே சென்ற பாலன் தொட்டிலில் பூர்ண சந்திரனோ வென்று ஐயுறும்படியான தேஜஸுடன் உறங்குவது கண்ணில்பட்டதும் மனம் பெருமிதம் கொண்டது. மறுபடியும் சிந்தனை ரதம் ஓடத் தொடத்தொடங்கினது

நாலைந்து தினங்களுக்கு முன்பு, காரியாலய விஷயமாகப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, உதவி மானேஜர் சொந்த ஊருக்கு ஏதோ சொந்தப் பிஸினஸ் செய்யப் போய்விட்டதாகவும் அதற்குச் சரியான ஆளாகப் பார்க்கவேண்டுமென்றும் சொன்னான் பத்மநாபன்.

"உங்கள் காரியாலயத்தில் பெண்களுக்கும் இடமுண்டல்லவா?"

"நிச்சயமாகவுண்டு"

"அப்படியானால் எனக்குக் கொடுங்கள்; திறமையுடன் வேலைசெய்கிறேன்."

"உன் திறமையில் எனக்கு மிக்க நம்பிக்கையுண்டு. ஆனால் குழந்தை?"

"குழந்தைக்கு எட்டுமாதமாகிறது. நாலு மணி நேரம்தானே நான் வேலைசெய்யவேண்டியிருக்கும். அதுவரை மாமி பார்த்துக் கொள்ளுவார். என்னைவிட அவர் நன்றாகக் கவனித்துக் கொள்வார்."

"என்மீது ஏற்பட்ட அபரிமிதமான அன்பினால் ஆர்வத்துடன் சேர்ந்த பி. எஸ். ஸிப் படிப்பைப் பாதியில் நிறுத்தினாய். உத்யோகமாவது கொஞ்சகாலம் பார். இது என்னிரில்தானே உட்கார்ந்திருக்க வேண்டும். பிரிய வேண்டிய விஷயமல்லவே? ஆனால் விளம்பரப்படுத்தாமல், ஐந்தாறு மனுக்களைப் பரிசிலனை செய்யாமல், வேலை கொடுப்பது ஆபீஸ் சட்டத்திற்கு விரோதமானது. நீயும் மனுப் போடு. மனுவை ஆராய்ச்சி செய்பவர் என் மனைவிமீது குற்றம் காண முடியுமா? நிச்சயம் வேலை உனக்குத்தான்!"

அன்று காலை கமிட்டித் தலைவர் வந்து சென்றபிறகு உள்ளே வந்த பத்மநாபன்.

"பாமினி! முன் ஜன்மத்தில் நீயும் ராம்குமாரும் தாயாதிகளாக இருந்திர்களோ என்னவோ? அவனும் வேலைக்கு மனுப் போட்டிருக்கிறான். மனுக்கள் பரிசிலனையில் அவனுக்குத்தான் நியாயப்படி உத்தியோகம் கொடுக்க வேண்டும். அடுத்தபடிதான் நீ. என் மனைவி என்பதற்காக, ஏதோ நொண்டிச் சாக்குச் சொல்லி, மனச்சாக்ஷிக்கு விரோதமாக உன் மனுவை எடுப்பதாகக் கமிட்டித் தலைவர் சொல்லிச் சென்றார்.

"இன்று சாயங்காலம் ஐந்து மணிக்கு இண்டர்வ்யூ நீயும் வா. சில கேள்விகளின் பதிலுக்கு ஒரு புஸ்தகம் கொடுத்துவிட்டுப் போகிறேன். படித்துவைத்துக் கொள். இருவரையும் சேர்த்து வைத்தே

கேள்விகள் கேட்கப்படும். அப்பொழுது நீயே வெற்றிபெறுவாய்!"

அப்புத்தகத்தை வைத்துப் பாராயணம் செய்து கொண்டிருக்கும் பொழுதுதான், 'போஸ்ட்' என்ற அந்த அமைதியைக் கலைக்கும் கடிதம் வந்தது. "நீயே வெற்றிபெறுவாய்" என்ற வாக்கியத்துடன் சிந்தனை தடைபட்டது. மறுபடி கடிதத்தைப் படிக்கலானாள்.

"நான் செய்யாத தவறு என்னவென்று கேட்பாயானால் சொல்லுகிறேன். உனக்கும், ராம்குமாருக்கும் போட்டி வந்தது போல் எனக்குர், நம் வீடுகளுக்கு ஜலம் எடுத்துக் கொடுத்து. மற்றும் அநேக வேலைகள் செய்துகொடுக்கும் சாரதா மாமி பிள்ளை நடராஜனுக்கும் போட்டி வந்தது. என்றாலும், அவனைவிட ஒரு மார்க் நான்தான் அதிகம் வாங்கியிருந்தேன், நமது சரித்திர ஆசிரியை சுசீலா தேவியவர்கள் என்னை அழைத்து, நிலைமையை எடுத்துக் கூறி உனக்கு அவசியம் படிக்க வேண்டுமென்றால் இடம் உனக்குத்தான் நிச்சயம் அளிக்கப்படும். ஆனால் சற்று நிதானமாகச் சிந்தனைசெய்து பார்த்தாயானால் நடராஜனுக்கு விட்டுக் கொடுத்தாயானால், அந்தச் செய்கை எவ்வளவு உண்மையான சேவையைத் தாங்கி நிற்கும் தெரியுமா? தியாகம், சமூக சேவை, உன்னத லக்ஷியம் இவை யாவும் அதற்குள் அடங்கியவையே. இன்று இரவு முழுவதும் சிந்தனை செய்து நாளை பதில் தெரிவி" என்று சொன்னாள்.

இரவு சாப்பாட்டிற்குப்பின் மேல் மாடிக்குச் சென்று பௌர்ணமி நிலவில் கைப்பிடி சுவரில் உட்கார்ந்து சுவரில் சாய்ந்துகொண்டபடி தண்மதியை நோக்கியவாறே, சுசீலாதேவி சொன்ன விஷயங்களைப் பற்றிய ஆராய்ச்சியிலிறங்கினேன். விஞ்ஞானத் துறையில் செல்லவே இந்தப் பட்டப் படிப்பு படகுபோல் உதவும். அதற்காகவே நடராஜனுக்கு விட்டுக் கொடுக்கும்படி கேட்கிறார்கள். ஏன் நானே அந்தத் துறையில் சென்றால் வெற்றிபெற மாட்டேனா? நடராஜன் செய்யும் சமூகசேவை என்னால் செய்ய முடியாததா? அவன் மேலும் மேலும்விருத்தி செய்துகொண்டு போவதற்கு ஒருவிதமான தடையும் ஏற்படாது என்பது உண்மை. அவனால் சமூகத்திற்கு, தொழிலபிவிருத்திக்கு, அநேகமான உதவிசெய்யமுடியும். அயல் நாடுசென்று தொழில் நுணுக்கங்களைக் கற்று வரமுடியும். ஏன் நானும் அவ்விதம் செய்ய முடியாதா? முடியும் ஆனால்? ஆனாலென்ன? சொல்லத் தவக்கமென்ன? குடும்பத்தில் ஈடுபடாமல் கன்னிகையாகவே இருந்தால்தான் முடியும். நமக்கு அதற்குத் தைரியமுண்டா. அவசியந்தானா? குடும்பப் பொறுப்பை ஏற்று, திறம்பட நடத்தி, கணவன், குழந்தைகள், சமூகம் யாவருக்கும் உபயோகமாகும்படி நடப்பது மன நிம்மதியளிக்குமா? இவையாவையும் நிராகரித்துவிட்டு ஆண்களுக்குச் சரியாகப் போட்டியிட்டு, உத்யோகம் ஏற்று, சமூகசேவை செய்வது மன நிம்மதியளிக்குமா? ஏன்? என் அம்மாவை எடுத்துக்கொண்டால் சமூக சேவையென்று வெளியே சுற்றாவிட்டாலும் குடும்பத்திலிருந்தே எவ்வளவு செய்கிறாள்? வேலைக்காரர்களை அன்புடனும் ஆதரவுடனும் நடத்துகிறாள். பந்து ஜனங்களில், ஏழ்மையுற்றவர்களுக்கு, சமயமறிந்து உதவி செய்கிறாள். குழந்தைகளை, எங்களை, கண்டிப்பாகவும், அன்பாகவும், உன்னதமான முறையில் வளர்த்துவருகிறார்கள். அம்மா சொல்லிக்கொடுத்த ஸ்லோகத்தினால்தானே, வியாசப் போட்டியில் பரிசு பெற்றான் ராஜு. அவர் எந்தக் காலேஜில் சேர்ந்து படித்தார்? ஆங்கிலம் தெரியவில்லையென்ற குறையினால்தான் எங்களைப் படிக்கவைத்தார். நமக்கு அந்தக் குறையில்லை. நன்றாக ஆங்கிலம் பயின்றுவிட்டோம். அவ்வேழையை முன்னேறவிடாமல் நாம் படித்துச்செய்யப்போவது என்ன? கல்யாணம் நிச்சயம் நடக்கப்போகிறது. பிறருடைய நிர்ப்பந்தத்தினாலில்லை. என் மனப்பூர்வமான காதலால். அமெரிக்கா சென்ற அன்பன் வரும் வரை பொழுதுபோக்காக ஏதேனும் சேர்ந்து படிக்கவேண்டியதுதான். ஆண்களிடம் போட்டியிட, குடும்பத்திலேயே எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன. இதற்கு ஒருவருடைய முன்னேற்றத்திற்குத் தடையாக நிற்பானேன்? இப்படிச் சொல்வதினால் ஸ்திரீகள் படிக்கவேண்டாமென்பது என் எண்ணமா? அல்ல. உறுதிகொண்ட பெண்கள், விதியின் ஆட்சியில் சிக்கியபெண்கள், இச் சேவையில் நன்கு ஈடுபடலாம். என் போன்று பொழுது போக்காகப் படிப்பவர்கள், ஆண்களிடம் போட்டியிடுவது அபத்தமான செய்கை." என்ற முடிவே மேலோங்கி நின்றது. அதனால் நடராஜனுக்கு விட்டுக்கொடுப்பதென்ற தீர்மானத்திற்கு வந்ததுதான் நான் செய்யாத தவறு.

நீ கேட்கலாம், நாமும் பெண்கள்தான், நாட்டில் மந்திரியாகவும் கவர்னராகவும், ஸ்தானிகராகவும் இருப்பவர்களும் பெண்கள்தான், ஏன் நாம் மட்டும் பின்தங்க வேண்டுமென்று. முதலாவது, லக்ஷியம் ஒன்றே குறிப்பாக மற்ற விஷயங்களைக் கவனிக்காமல் நடக்க மன உறுதி வேண்டும்.

ஐந்து விரலும் ஒன்ருக அமையவில்லையல்லவா? அதுபோல் எல்லாப் பெண்களுக்கும் அவ்விதப் மனப்பான்மை ஏற்படுமா? இரண்டாவது எல்லாப் பெண்களுமே கவர்னராகவும் மந்திரியாகவும் இருக்கமுடியுமா? நமது சூழ்நிலை அமைந்திருக்கும் தன்மைக்கேற்ப நமது வாழக்கைப் பாதையை வகுத்துக்கொள்வதே நமக்கும், சமூகத்திற்கும் நன்மை செய்வதாகும். நான் செய்வதென்னவோ மஹத்தான தியாகம் ஒன்றுமில்லை. ஆனாலும் சமூகத்திற்கு ஏதோ நன்மை செய்ததுபோன்ற திருப்தி உணர்ச்சி தோன்றுகிறது. மூன்றுவருஷப் படிப்பும் தடையின்றிப் படிக்க எனக்கு வசதியிருக்கிறது. ஆனல் படிப்பினுல் ஏற்படக்கூடிய பலனை அடைய விரும்பும் சமயம்தான் தடங்கல்கள், படிப்பினுல் அல்ல. என்னுடைய சுய உணர்ச்சியேதான் தடங்கல். ஒன்று சமூக சேவைக்கே நமது வாழ்நாளை அர்ப்பணம் செய்ய வேண்டும். அல்லது குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்த வேண்டும்; அப்படி நடத்தும் பொழுது அதற்குட்பட்ட சமூக சேவையைமட்டும் மேல்கொள்ள வேண்டும். சில ஆட்கள் சேர்ந்தது ஒரு குடும்பம். பல குடும்பங்கள் சேர்ந்தது ஒரு சமூகம். அதனல் குடும்பத்தை ஒழுங்காக நடத்தினல் அதுவே சமூக சேவையாகும்.

ஒரு அம்மாள், சமூக சேவையில் ஈடுபட்டவர். ஒரு மேடைப் பிரசங்கத்தில் "வறுமை மிக்க இந்நாளில், உடைகளில் சிறிது கிழிசல் ஏற்பட்டதும் மூலையில்போட்டுவிடாமலும், தையற்காரனுக்குக் கூலி கொடுக்காமலும், நாமே அதை அழகாகத் தைத்துக்கொள்ள வேண்டும்" என்று சொன்னர். மறுநாள், அவரும், பிரசங்கம் கேட்ட அவரது பிரிய சிநேகதியுமாகப் பஸ்ஸில் போய்க்கொண்டிருந்தார்கள். முன் சீட்டில் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவர் ஷர்ட்டில் பின்புறம் கழுத்தின் பக்கத்தில் சிறிய கிழிசல் தென்பட்டது, "நீங்கள் நேற்றச் சொன்னதை இந்த ஆசாமியின் மனைவி கேட்டிருந்தால் இவர் இந்த ஷர்ட்டுடன் வெளியே வந்திருக்க முடியாது" என்ருள் சிநேகதி. அந்தச் சமயம் பஸ் நின்றது. அந்த மனிதர் கீழே இறங்கினர். அவரைப் பார்த்ததும் இருவரும் வெவ்வேறு திக்காக நோக்கினர்கள். இறங்கியவர் பிரசங்கியம்மாளின் சாக்ஷாத் கணவரே ஆவர்" என்பதாக எப்பொழுதோ ஏதோ ஒரு பத்திரிகையில் படித்ததாக நினைவு. எப்படி சமூக சேவை? இதைப்பற்றி எழுதிக்கொண்டே போனல் கடிதம் விரிந்துவிடும். ராம்குமாருக்கு இடமில்லாமல் செய்தாயே தவிர நீ லக்ஷியத்தை நிறைவேற்றச் சக்தியற்றவளானய். அதன் விளைவு வெறும் B. A. க்கு வேலை கிடைக்காமல் ஆறு மாதமாகத் திண்டாடுகிருன். போதாக்குறைக்கு, ஏழ்மையில் உழலும் அவனது மாமாவின் பெண்ணை வேறு கல்யாணம் செய்துகொள்ள வேண்டியதும் அவசியமாயிற்று. மாமனர் சிபார்சும் இல்லை. இப்பொழுது இரண்டு மாதமாக, (கல்யாணமான உடனேயே) இளம் மனைவியை விட்டுவிட்டு வேலைக்காக ஊர் ஊராகச் சுற்றப் போயிருக்கிருன். அவன் குடும்ப நிலைமையோ உனக்குத் தெரியாத விஷயமல்ல. தற்சமயம் அந்தப் பெண், என் அம்மாவின் சிபார்சினல் நமது பெண்கள் ஸ்கூலில் ஹிந்தி ஆசிரியையாக வேலை பார்த்து வருகிருள். அந்த நிலைமையில் உள்ளவர்களுக்குப் பட்டப்படிப்பு அவசியமே. இளங்காதலர்கள் பிரிவுத் துன்பத்தில் வருந்துகிருர்கள், இதுதான் நீ செய்த தவறு.

"தற்சமயம் உங்கள் காரியாலயத்தில் ஏதாவது வேலை போட்டுக் கொடுக்கும்படி சிபார்சு செய்தாயானல் உனது தவறு திருந்தியதாகும் என்பது எனது அபிப்பிராயம். பிறகு உனது ஸௌகரியம். உன் குழந்தைக்கு என் அன்பு. நான் எழுதிய விஷயங்கள் தவறு என்று தோன்றினல் மன்னித்துவிடு.

இப்படிக்கு,
உன் அன்புமிக்க,
ஸௌதாமினி

N. B:— இன்னெரு விஷயத்தையும் சொல்லி முடித்து விடுகிறேன். அந்த நாளில் பெண்களுக்கு வீட்டுவேலை தெரியாவிட்டால் அது மிகவும் கேவலமாக மதிக்கப்பட்டு வந்ததினல் சிறுவயதுமுதலே பழக்கிவந்தார்கள். அவர்கள் மூடர்களாகவோ யாவரும் இருந்ததில்லை. சித்திரம் முதலிய விஷயங்களில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தார்கள், கொஞ்சகால முன், படிக்க என்று பெண்களைத் துணிந்து காலேஜில் அனுமதித்த பெற்றேரர்கள், "எங்கள் பெண்ணுக்கு அடுக்களை என்பது எப்படியிருக்குமென்று தெரியாது" என்று பெருமையடித்துக் கொண்டிருந்தார்கள். சமையல்காரனுக்கு பாதிச்சமையலில் தேள் கொட்டிவிடுகிறது என்று வைத்துக்கொள்வோம். குறைச் சமையலைப் பூர்த்திசெய்ய யஜமானிக்குச் சக்தியில்லையென்ருல் என்ன ஆகும்? ஆனல் அந்தக் காலம் மலையேறிவிட்டது. டஞ்சப்பேய் தலைவிரித்தாடும் இக்

காலத்தில் எவ்வளவு சம்பாத்யம் செய்தாலும் காலக்ஷேபம் செய்வது சிரம சாத்யமாக இருக்கும்பொழுது ஆளையும் தேளையும் எப்படிவைத்துக்கொள்ள முடியும்? பெண்ணுக்குப் பாடத் தெரியுமா? ஆடத்தெரியுமா? என்பதோடு வீட்டுவேலை தெரியுமா? என்ற கேள்வியுடன் வீட்டு வேலைதெரியாவிட்டால் இழிவு என்ற மனப்பான்மையும் தோன்ற ஆரம்பித்து விட்டது. காலேஜில்கூட குடும்ப வேலைகளைப் பற்றிக் கற்பிக்கவேண்டுமென்று மேடையேறிப் பேசவும்தொடங்கி விட்டார்கள். எதற்கு இவைகளை எழுதினேனென்றால் பெண்கள பதவி மோகமும், இந்த நிலைமைக்குக் கூடிய சீக்கிரம் மாறிவிடுமென்பது எனது அபிப்பிராயம்.

ஸௌதா.

கடிதத்தைப் படித்து முடித்ததும், மேஜை மீது கடிதத்தைப் போட்டுவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டாள். எதிரிலுள்ள சுவரில், கஸ்தூரிபாயும் மஹாத்மாவும் சேர்ந்து நிற்கும் படம் ஒன்று மாட்டியிருந்தது அவள் கண்களில் தென்பட்டது. இவர்கள் தாம்பத்தியத்தில் எவ்வளவு உன்னத லக்ஷியம் அடங்கியுள்ளது என்றது அவளது மனம். தெய்வப் பிறவியாகிய உத்தம தம்பதிகளே நான் தவறைத் திருத்துவது எப்படி? என்று இரு கையையும் எடுத்துக் குவித்தாள். அதற்குள் குழந்தை விழித்துக் கொண்டு அழத் தொடங்கினது. சட்டென எழுந்து குழந்தையை எடுத்து ஒரு கையினால் அணைத்துக்கொண்டு, டெலிபோன் பக்கத்தில் சென்று போனைக் கையிலெடுத்தவண்ணம், மஹாத்மாவின் படத்தை மற்றொரு முறை திரும்பிப் பார்த்துவிட்டு ஹலோ என்றாள். பிறகு "ராம் குமாருக்கே அந்த உத்யோகத்தைக்கொடுத்துவிடுங்கள். நான் இண்டர்வ்யூவிற்கே வரவில்லை. காரணம் விசேஷமானதன்று. அதனால் நீங்கள் வந்தபின்பு சொல்லுகிறேன். அவசியமாக ராம்குமாரை உத்யோகத்தில் சேர்த்துக்கொள்ளுங்கள்" என்றாள். "பெண்கள் மனமே விசித்ரம் போலும்" என்று பத்மநாபன் மனதிற்குள் முணுமுணுத்துக் கொண்டது கூட பாமினியின் காதில் விழுந்தது. போனைக் கீழே வைத்தாள். ஏதோ செயற்கரிய காரியத்தைச் செய்துவிட்டதுபோன்றதொரு உணர்ச்சி தோன்றவே என் தவறைத்திருத்திவிட்டேண்டா கண்ணா! என்று போனை எடுக்கத் தாவிய குழந்தையை அன்புடன் அணைத்து முத்தமிட்டாள்.

பிரிய சௌதாமினி,

சமய சஞ்சீவி போன்று வந்த உன் கடிதம்

நமது நட்பின் பெருமையை நன்கு எடுத்து விளக்கிற்று. லேடீஸ் கிளப்பில் பிரஸிடெண்ட், சேவாசதனத்தில் காரியதரிசி, அநாதை ஆஸ்ரமத்தில் மெம்பர் குடும்பத்தில் தலைவியின் பொறுப்பு இவைகளை நம்போன்றவர்களே ஏற்று நடத்த முடியும். தனியொருத்திதான் உத்யோகம் ஏற்கவேண்டும்' என்ற படிப்பினையை உன் கடிதந்தான் கொடுத்தது. அதற்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று எங்கள் காரியாலயத்திலேயே உத்யோகம் ஏற்கச் சித்தமாக இருந்தேன். நீ எழுதுவதற்கு முன்பே ராம்குமார் மனுப் போட்டிருந்தான் உன் கடிதம் கண்ட அந்த க்ஷணமே, மஹான் காந்தி தம்பதிகள் படத்தின் முன் உறுதிசெய்துகொண்டு, நான் ஏற்கவிருந்த உத்தியோகத்தை ராம் குமாருக்குக் கொடுக்கும்படி செய்துவிட்டேன் எங்கள் தோட்டத்து வீட்டையே ராம்குமார் தம்திபகளுக்குக் குடியிருக்கவும் கொடுத்து விட்டேன். (வீடு கிடைக்காது சென்னையில் என்பதற்காக) இன்னும் எட்டு நாள்களில் தம்பதிகள் ஒன்று கூடி விடுவார்கள். சரிதானே? என் தவறு திருந்திவிட்டதல்லவா?

இப்படிக்கு,
உன் அன்புள்ள சகி,
பாமினி.

என்ற கடிதத்தைப் படித்த ஸெளதாமினி "வாழ்க பாமினி தம்பதிகள். தவறு திருந்தக் காரணமாக அமைந்தது என் கடிதம், என்பதற்காகப் பகவானுக்கு என் நன்றி" என்று இருகையையும் குவித்தாள் ஸெளதாமினி. ●



ஹரித்துவாரில் சமீபத்தில் நடந்த 'கும்பமேளாவில்' ஸாதுக்கள்
ஊர்வலமாகச் செல்லும் காட்சி

ஜெய் ஸோம்நாத்

தொடர் கதை

கே. எம். முன்ஷி — ஸுரேந்திரநாத் சாஸ்திரி

மொழி பெயர்ப்பு — கீழையூர் தி. சேஷாத்திரி

தெய்வத்தின் கோபமா ?

கோயிலிலே சேர்ந்திருந்த கூட்டத்திலே குழப்பம் உண்டாயிற்று. ஜனங்கள் ஆரவாரம் செய்ய ஆரம்பித்தனர். யாரோ ஒருவன் அந்தக் கூட்டத்தில் முண்டியடித்துக்கொண்டு வர முயலுகிருன் என்பது தெரியவந்தது. கூட்டம் இரு பகுதிகளாகப் பிரிந்தது. நடுவே வழி தோன்றிற்று. அதன் வழியே வெறி கொண்டவன்போல் ஒருவன் மேலேறி வந்துகொண்டிருந்தான். "பீமதேவ மஹாராஜாவுக்கு ஜே!" என்று அவன் ஜயகோஷம் இட்டான். அவன் தொண்டை கனைப்புக் காரணமாகக் கம்மியிருந்தது. பீமதேவர் இந்தக் கோஷத்தைக் கேட்டுத் துடித்து எழுந்தார்; எதிரே வந்தார்.

'யாரது?' என்று ஸர்வக்ஞர் பக்கம் திரும்பி, பீமதேவர் கேட்க, ஸர்வக்ஞர். "யாரது? அவனை இங்கே வரச்சொல்!" என்று உத்தரவு இட்டார். வந்தவனும் தட்டுத்தடுமாறி உள்ளே வந்து சேர்ந்தான். அவன் கண்கள் கலங்கி உடைகள் கலைந்து அழுக்கேறி இருந்தன. அவன் வந்து சர்வக்ஞர் கால்களில் விழுந்தான். எப்படியோ அவன் வாய் "நம: சிவாய" என்று உச்சரித்தது.

"சிவாய நம:" என்று ஆசீர்வதித்த அந்த மகான், "நீ யாரப்பா?" என்று கேட்டார். இதனிடையே அவன் அருகே வந்த பீமதேவர் அவனை அடையாளம் கண்டு, "யாரது மூலாராட்டௌரா? "என்ருர்.

"எந்தையே! எந்தையே!" என்று மிகவும் கஷ்டப்பட்டு உட்கார்ந்து அந்த மனிதன் கை கூப்பினான். "போங்கள்; போய்ப் பாருங்கள். மேதா அவர்கள் உடல் நொறுங்கிக் கொண்டிருக்கிறது. உயிர் போய்க்கொண்டிருக்கிறது. போங்கள்!" என்று பரபரப்புடன் மிகவும் இயலாத வகையில் சொல்லி முடித்தான்.

"மேதாவா? தாமோதரரா? ஏன்? என்ன ஆயிற்று? அவர் எங்கே?" என்றெல்லாம் மந்திரி விமலர் பரபரப்புடன் கேட்க ஆரம்பித்தார். கேட்டுக்கொண்டே மூலாவின் தோள்பட்டைகளைப் பிடித்து அசக்கிய அவர், "உனக்கு என்ன மூளை பிசகிவிட்டதா? நீ எங்கிருந்து வந்தாய்? மேதா சபாதலக்ஷமல்லவா போயிருக்கிறார்?"

களைத்துப் போயிருந்த களைப்பு மேலீட்டின் காரணமாக மூலா பெருமூச்சு விட ஆரம்பித்தான். "என் அப்பனே! நான் உண்மையே சொல்லுகிறேன். அவர்...அங்கே இல்லை...இதோ இங்கு...வாயிற்படியில்...சாவுக்கு வரவேற்பு அளிக்கத் தயாராய்...பத்து நாட்களாக நாங்கள் ஒன்றும் சாப்பிடவேயில்லை...தூங்கவும் இல்லை. மணிக்கு ஒரு யோஜனை தூரம்வரை செல்லும் நான்கு ஒட்டகங்கள் மடிந்து பட்டன. எந்தையே! சீக்கிரம் போங்கள். இல்லை என்றால் மேத்தா அவர்களை யமன் கவர்ந்து சென்றுவிடுவான். பிறகு ஒன்றும் இருக்காது...எல்லாம்கஷ்டமாய்விடும்..."

பீமதேவருடைய அறிவுக்கு ஒன்றும் தேற இயலவில்லை. அவருடைய தூதன் சண்டை உடன்படிக்கைக்கு ஏற்றபடி பேசி வருகிறவன். தாமோதரமேதா ஸபாதலக்ஷத்தின் அரசனுடன் பேசி வரப் போயிருந்தார். மூலா அவருடைய உண்மை ஊழியன். இந்தச் சமயம் மூலா பிரபாஸி க்ஷேத்திரத்தில் எப்படி வந்தான்? தாமோதரன்தான் எப்படி உயிர் விடும் நிலைக்கு வரும்படி ஏற்பட்டது?

"போங்கள் ஐயனே!" என்று மறுபடியும் மூலா தூண்டினான்,

மந்திரி விமலரும், "சரி, கிளம்பு. சீக்கிரம் வா" என்றார்.

சர்வக்ஞர் மூச்சை உள்ளிழுத்து அதை விரலால் அளந்தார். ஏதோ தீர்மானம் செய்தவராக, சர்வக்ஞர் சொல்லலுற்றார்: "சிவராசி! இதில் ஏதோ ஆபத்திருக்கிறது என்று தோன்றுகிறது, போ. அங்கே சென்று தாமோதரனை என் இருக்கைக்கு அழைத்து வா. நானும் நேரே அங்கே போகிறேன்." என்று உத்தரவிட்டார்.

சிவராசி இரண்டு சாதுக்களை உடனிட்டுக்கொண்டு பீமதேவர், மந்திரி, மூலா மூவடருனும் தாமோதரரைத் தேடிச் சென்றார். இரண்டு திவட்டிகள் அவர்களுக்கு வழிகாட்டி முன்னே சென்றன.

சர்வக்ஞரின் உள்ளத்தில் வாக்கு உண்டாயிற்று. அவர் ஸோமநாத பகவான் பக்கம் திரும்பி நின்றுகொண்டார். மௌனமாக அவரிடம் கேட்கலானார்! "தேவாதி தேவா! இது என்ன இது?" தெளிவான பதில் கிடைக்காததினால் ஸாதுக்களுக்கு இயற்கையான தீனத் தன்மை காட்டி அவர் தம் எண்ணங்களையும் கடவுள் அடிமலரிலேயே சமர்ப்பித்தார்.

2

கொஞ்ச நேரம் சென்று சர்வக்ஞர் மடத்தில் அவர் சபையில் எல்லோரும் கூடினர். தாமோதர மேதா பாதி உணர்விழந்தவராய், படுக்கையில் கிடத்தப்பட்டிருந்தார். அவருக்குச் சுமார் நாற்பது வயது இருக்கும், அவர் அழகொளி பொருந்திய முகம் தற்பொழுது களைத்துச் சுருங்கி, கவலைக் குறிகள் காட்டி வேதனைகொண்டு காந்தியிழந்து காணப்பட்டது. அவர் பெரிய கண்களில் வீக்கமும் ஏற்பட்டிருந்தது.

விமலர் அவரருகில் அமர்ந்து தலையை அமுக்கிக் கொண்டிருந்தார். சர்வக்ஞரின் ஒரு சிஷ்யன் வெண்கலக் கிண்ணத்திலிருந்து நெய் எடுத்து அவர் காலில் தேய்த்துக் கொண்டிருந்தான். பீமதேவர் பரபரப்புடன் அவர் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். அவர்களுக்கருகே சர்வக்ஞர் தம் ஆசனத்தில் ஆசனமிட்டு நேராக நிமிர்ந்து அமர்ந்திருந்தார். அவரருகிலேயே சிவராசியும் நின்று கொண்டிருந்தார்.

பீமதேவர் துடிப்புடன் சர்வக்ஞரின் பக்கம்திரும்பி, "குருதேவா! தாமோதரர் பிழைக்காமலேயே போய் விடுவாரோ?" என்று கேட்டார். அவருக்கு அவ்வளவு ஆத்திரம்.

ஒரு மூலையில் மற்றொரு சிஷ்யன் கலுவத்தில் மருந்து அரைத்துக் கொண்டிருந்தான். மூலா ஒரு தூண் மறைவில் உட்கார்ந்துகொண்டு ஆடிவழிந்தான்.

சர்வக்ஞர் பீமதேவரின் கேள்வியைக் காதில் வாங்கினுர். அவருக்கு அவர் உள்ளத்துடிப்புத் தெரியும். அதனுல் அவர் நம்பிக்கையூட்டும் வண்ணம் "அவன் பிழைத்து விடுவான், பயப்படாதே. நான் சொல்கிறேன், போ." என்று தைரிய வார்த்தைகள் சொன்னுர். பிறகு அவரே எழுந்து சிஷ்யன் அரைத்த மருந்தை எடுத்து, தாமோதரர் அருகில் வந்து வாயைத்திறந்து உள்ளே செலுத்தினுர். கொஞ்சநேரம்வரை அவர் மயங்கியிருந்த தாமோதரர் முகத்தையே விடாமல் பார்த்துக்கொண்டு நின்றுர். தாமோதரரின் அசைவற்றமுகத்தின்மூக்கு சற்று நேரத்தில் சற்றுப் பிரிய ஆரம்பித்தது. மூச்சு உள்ளேயும் வெளியேயும் செல்ல ஆரம்பித்ததைக் கண்ட சர்வக்ஞர் முகத்தில் மலர்ச்சி எற்பட்டது. தாமோதரர் கண்ணிமைகள் அசங்கின. உதடுகள் பிரிந்து கொஞ்சம் மருந்து வெளியே வந்தது. அவர் கண்களைத் திறந்தார்.

"தாமோதரா! தாமோதரா!" என்று பீமதேவர் அன்பைக் கொட்டி விளித்தார். தாமோதரர் கண்கள் உயிர்பெற்றன. அவர் பீமதேவனை அறிந்துகொண்டார். "அன்னம் அளிப்பவரே! பாபூ! நீங்களா? உண்மைதானே. நான் கனவு காணவில்லையே!" என்று ஆவலுடன் கூறிக்கொண்டே அவர் திடீரென்று ஒரேயடியாய் எழுந்து உட்கார்ந்தார். அருகே குனிந்துநின்ற பீமதேவரைத் தம் இருகைகளாலும் கட்டிக்கொண்டார்.

'என் மேதாஜி!' என்று கூவியவாறே பட்டணின் அரசரும் தம் மந்திரியைத் தம் மார்புறத் தழுவினுர்.

ஸர்வக்ஞர் இதைப்பார்த்து நின்று விட்டு, "தாமோதரனுக்கு ஒரு தலையணை கொண்டுவா" என்று உத்தரவிட்டார்.

அவர் குரலைக் கேட்ட தாமோதரர் அவர் பாதங்களில் முடியைத் தாழ்த்தி, "நம: சிவாய" என்று வணக்கம் தெரிவித்தார். சர்வக்ஞரும் 'சிவாய நம:" என்று ஆசிர்வாதம் செய்து, தாமே தாமோதரரைத் தலையணையில் சாய்த்து உட்காரவைத்தார்.

பிறகு சர்வக்ஞர் தாமோதரரைப் பார்த்து, "தாமோதரா! இப்பொழுது கவலையை விட்டு எல்லாவற்றையும் சொல். என்ன விஷயம்?' என்று கேட்டார்.

"பூஜ்ய பாதரே!" என்று தாமோதரர் மீண்டுமொருமுறை சிரம் குனிந்தார். அவர் குரல், பாஷை இரண்டுமே சுத்தம்பெற்று, பண்பாடடைந்து இருந்தன. கொஞ்சம் தொண்டையைச் சுத்தம் செய்துகொண்டு வந்த இருமலை நிறுத்தி மேலே பேச ஆரம்பித்தார்.

"தாமோதரா! மெதுவாக, மெதுவாக!'

"பாபூ, எந்தையே!" என்று ஆரம்பித்த தாமோதரர் அவசரம் குதிக்கும் குரலில் "இங்கே உட்கார்ந்திருக்கிறீர்களே? போங்கள் பட்டணுக்கு" என்று ஆத்திரமாகச் சொல்ல ஆரம்பித்தார்.

பீமதேவர் வியப்புற்றுர். "ஏன் என்ன சமாசாரம்?" என்று கேட்டார்.

"ஏன் என்ன? கஜினியின் அமீர் படை எடுத்துவருகிறுன்." என்ற புதிரைக்கேட்டு, சவர்க்ஞர் பீமதேவர் இருவருமே "என்ன சொல்கிறுய்?" என்றனர்.

"ஆம், அமீருடைய ஆட்கள் ஈசல் கூட்டம்போல் சபாதலக்ஷப் பிரதேசத்தில் பறந்து வந்துகொண்டிருக்கின்றனர். நாளைக் காலைக்குள் இங்கே வந்துவிடுவார்கள்."

"இங்கேயா?" என்று கேட்ட சர்வக்ஞர் குரல் ஆழத்திலிருந்து மிகுந்த கம்பீரங்கொண்டு வந்தது.

"ஆம், எந்தையே! அவன் தானேசுவரத்தைக் கொள்ளையிட்டுவிட்டான். கனோசியைச் சூறையாடிவிட்டான். தங்களுக்குத் தெரியாதா? இப்பொழுது அவன்

பகவான் ஸோமநாதருடைய இருப்பிடத்தை மண்ணாக்க வருகிறான். ஒரு நிமிஷம்கூட வீணாக்கக்கூடாது; சும்மா இருக்கக் கூடாது நாம். போங்கள். என்னப்பா! கூர்ஜர பூமியைக் காப்பாற்றுங்கள்."

"அவன் கஜினியிலிருந்து எப்பொழுது புறப்பட்டான்?"

"ஒரு மாதம் கிட்டத்தட்ட ஆகியிருக்கும். எனக்கு விஷயம் தெரிந்த அந்தக் கணமே புறப்பட்டு வந்தேன். தங்களுக்குச் சொல்லிவிடவேண்டும் என்ற முடையால் இன்று பத்து நாட்களாக என் கால்கள் தங்கியறியவேயில்லை."

"பகவான் ஸோமநாதருடைய கோயிலையா உடைக்க வருகிறான்?" என்று சர்வக்ஞர் பெருமிதம் நிறைந்த குரலில் கேட்டுக் கொண்டார்.

"ஆம். சபாதலக்ஷத்துக்கும் வழி விடும்படி சொல்லி அனுப்பினான்."

"எவ்வளவு நாட்களில் இங்கே வருவான்?"

"எப்படிச் சொல்வது? லக்ஷக்கணக்கில் சேனையை அழைத்துக் கொண்டு பாலைவனம் தாண்டுகிறவனைப்பற்றி என்ன நிச்சயம் சொல்ல முடியும்?"

"அந்த யவனன் நம் தேவதேவனின் கொடியைக் கீழே இறக்கிவிடுவானா?" சர்வக்ஞர் ஒரு அலட்சியச் சிரிப்புடன் கேட்டார். "அகங்காரம் கொண்டவனே! இந்த மனிதன் கடவுளிடம் கூடப் பயப்படமாட்டான்!"

"கஜினி முகம்மது யமராஜனைவிடப் பயங்கரமானவனாயிற்றே!"

"வரட்டும். மூன்றாம் கண்ணைத் திறந்து யமனுக்கு நமனுலகு தந்த முக்கண்ணன் கண் ஜோதி அணைந்தா விட்டது?" என்று தைரியம் சொல்லி, சர்வக்ஞர் பீமதேவரைப் பார்த்து, "பீமா, தாமோதரன் சொல்வது உண்மைதான். நீ நாளைக் காலையிலேயே பட்டண் செல்லத் தயாராகு."

"மகாராஜ்! நான் தயார். கஜினியாட்கள் பட்டண் வாசிகளின் புயவலிமையை அறியமாட்டார்கள்! மேதா! யவனனுடன் எவ்வளவு ஆட்கள் இருக்கின்றனர்."

"எப்படிச் சொல்வது? எல்லாம் வதந்தியாகவும் இருக்கலாம். அவன் சேனை லக்ஷக்கணக்கில் இருப்பதாகத்தான் கேள்வி."

"பினாக பாணி காப்பாற்ற நிச்சயித்தால் அவனை யார் சீண்டமுடியும்" என்று சொல்லி, சர்வக்ஞர், "எழுந்திரு, பீமா. ஸோமநாதர் உன்வசம் இருப்பார்!" என்று ஆசீர்வாதம் தந்தார்.

"குருதேவா!" என்று விளித்த பீமதேவர் குரலில் ஒரு இறுமாப்புக் கலந்து இன்பக் காற்றடித்தது. "நான் இதுவும் என் நன்மைக்கே ஏற்பட்டதென்று எண்ணுகிறேன். நானே வெகு நாளாகவே யுத்தத்துக்கு ஏங்கிக் கிடந்தேன். எனக்குக் கஜினி அமீர் போன்ற வீரன் சண்டைக்கெதிர் கிடைத்தால் பிறகு என்ன வேண்டும்? இனி நீங்கள் பீமனின் சரவரிசையின் உரத்தைக் கண்டு களிக்கலாம்! எழுந்திரு, விமலா! ஏற்பாடு செய்."

"உண்மைக்கு வெற்றியுண்டு, குழந்தாய்! ஸோமநாதரின் கிருபை நம்பிக்கையுள்ள பக்தன் காரணமாகத் தபஸ்விகளைக்கூடக் காப்பாற்றியிருக்கிறது. கடவுள் அவசியம் உனக்கே வெற்றி தருவார்.

3

பீமதேவனின் காதுகள் அதற்குள்ளேயே யுத்தகங்கணங்கள் மனதை வெறி கொள்ளவைக்கும் நாதம் செய்வதைக் கேட்க ஆரம்பித்துவிட்டன. புலனின்பங்களில் அழியும் தந்தையையும் ஆண்மையற்ற சகோதரனையும் பட்டண் சிம்மாஸனத்திலிருந்து இறக்கி அந்த இடத்தில் தாமே ஏறிக் கொள்ளவேண்டும் என்று திட்டமிட ஆரம்பித்து விட்டார்.

அவர் மாளவாவுடன் யுத்தம் செய்ய ஏற்பாடு செய்துகொண்டிருந்தார். அதில் வெற்றி கிடைத்துவிடும் என்று அவர் மிகுந்த நம்பிக்கையும் வைத்திருந்தார். அவருக்கு ஈடு கொடுத்து யுத்தம் செய்ய ஒரு வீரனும் பிறக்கவில்லையே என்று

அவர் மிகவும் வருந்தியதுண்டு. இப்பொழுது கடவுளே கருணை கொண்டு இந்தச் சண்டையைத் தந்தார் என்று எண்ணி மதம் கொண்டார்.

அவரும் மிலேச்ச அரசனைப் பற்றி அநேக கதைகள் கேட்டு இருந்தார். அவன் லவகோட்டையின் ராணுவைத் தோற்கடித்திருந்தான். தானேசுவரத்தையும் சூறையாடியிருந்தான். கனோசியும் அவனெதிரே மண்ணுயிற்று. ஆனால் அவன் இப்பொழுது ஒரு பெரிய பாலைவனத்தைத் தாண்டி உலகத்துக்கு இப்பாலுள்ள கூர்ஜரபூமியைப்போன்ற வீர பூமியை மிதிக்க வருவான். அவ்வளவு அசட்டுத் தைரியத்தை அவன் கொள்வான் என்று பீமதேவர் கனவில்கூட எண்ணியதில்லை. ஆனால் இன்று மஹாதேவன் எப்படியோ அந்த அருமையான வாய்ப்பின் அதிர்ஷடத்தை அவருக்கு அளித்துவிட்டார். இந்தப் பரமேசுவரனுடைய கோயிலை உடைக்கவரும் யவனன் பல்லைப் பிடுங்கி, யவனர்களின் ரத்தத்தில் மஞ்சள் நீர் விளையாட்டு விளையாடுவதைவிட ஒருவனுக்கு வேறு என்ன உத்ஸவம் செய்யக் கிட்டும்? அரசர் பீமதேவரின் உடல் முழுவதும் புல்லரித்தது!

நடு இரவு கழிந்தது. விமலர் கிளம்புவதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தார். கிளம்புவதற்கு இன்னம் நான்கு மணி நேரங்களே எஞ்சியிருந்தன.

அரசரும் அஸ்திரசஸ்திரங்கள் அணிந்து தயாராயிருந்தார். ஆனால் கிளம்புவதற்கு நேரம் இருந்தது. பசி கொண்ட சிங்கத்தைப் போல் அமைதி கிட்டாமல் அவர் அங்குமிங்கும் அலையத் தொடங்கினர். அவர் கால்கள் அவரைக் கோயில் பக்கம் அழைத்துச் சென்றன. ஆம்! ஊருக்குக் கிளம்புமுன் மீண்டுமொருமுறை பகவான் ஸோமநாதரைத் தரிசனம் செய்து ஆசீர்வாதம் பெறக் கூடாது?

அவர் சர்வக்ஞருடைய மடத்தின் மதில் வாயிலைத் தாண்டினர். மைதானத்திலிருந்த கூட்டம் முழுதும் காற்ருய் விட்டிருந்தது. ஓரிருவர் அங்கே இங்கே உட்கார்ந்து ஆடிவழிந்துகொண்டே பேசிக்கொண்டிருந்தனர். அநேக விளக்குகள் அணைந்துவிட்டிருந்தன.

அவர் மெதுவாகச் சபைமண்டபத்துக்கு வந்தார். ஒருபுறம் யாரோ, பாவம், கஷ்டத்துக்குள்ளான யாத்திரிகர் உட்கார்ந்து சிவகவசத்தை ஜபித்துக்கொண்டிருந்தார். யத்தத்துக்கு இறகடித்து நிற்கும் அவர் உள்ளத்தின் ரஸம் பருகும் ஆசை ஒரு இனிய குளிர்ந்த காற்றலையை வீசிற்று. அவர் மெதுவாகக் கர்ப்பத்வாரத்தினருகே சென்ருர். கர்ப்பக்கிருஹத்தில் சில நெய்த்தீபங்கள் மினுக்கிக் கொண்டிருந்தன.

மகா தேவனுடைய மூர்த்தியையே பார்த்துக்கொண்டு முன்னேறிக் கொண்டிருந்த அவருடைய கண்கள் திடீரென்று ஒரு தூண் அருகே மறைவில் நின்றிருந்த ஒரு உருவத்தைக்கண்டு திடுக்கிட்டன. உடனே அவர் மனம் ஒரு கணம் நிலையிழந்தது. அவர் கற்சிலைபோல நின்ருர்.

தூணுடன் ஒன்றி நின்ற அந்த உருவம் மிகவும் பயங்கரமாயிருந்தது. அதனுடைய தலையின்மேல் அழுக்கடைந்த வெண்ணிறச் சடை தொங்கிக்கொண்டிருந்தது. கழுத்தில் மண்டையோட்டு மாலை தொங்கிக்கொண்டிருந்தது. தொடைகளிலும் கால்களிலும் சிறிய சிறிய எலும்பு மாலைகள் சுற்றி இருந்தன. கையிலேயும் ஏதோ ஒரு பெரிய மிருகத்தின் எலும்பு காணப்பட்டது. இரண்டு மூக்குத் துவாரங்களும் மலர்ந்து மலர்ந்து தோல் படபடத்துக் கொண்டிருந்தது. மேல் உதடு வெட்டப்பட்டிருந்ததால் உள்ளிருந்து பெரிய பெரிய பற்களின் வரிசை அப்படியே ரத்தத்தைச் சுருட்டும்படி பயமுறுத்தும் தோற்றம் அளித்தது. போதாததற்கு அந்தப் பயங்கரமான முகம் ஆள் அலறி மடியும்படி பயங்கரமாகச் சிரித்துக் கொண்டிருந்தது!

பீமதேவர் உள்ளூற அலறி நடுங்கினர். முதலிலே சாக்ஷாத் பைரவரே ஆலயத்தைக் காவல் காக்க நிற்கிருரோ என்றெண்ணினர். ஆனல் பயத்தை அடக்கி மனதை ஒரு நிலைப்படுத்திப் பார்த்ததில் அவர் அந்த உருவம் காலமுகர் சம்பிரதாயத்தைச் சேர்ந்த ஒருபக்தர் என்று தெரியவந்தது. பைரவரா இப்படித் தோற்றமளிப்பார்? எவ்வளவு பயங்கரமாகத் தோற்றமளித்தாலும் அதில் தெய்வீகத்தன்மை இருக்குமே! இது உயிருள்ள

காபாலிகனல்லவா! அதுதான் இந்தக் கோரமும் பயங்கரமும்! பீமதேவரின் மயிர்கள் குத்திட்டு நின்றன, பயம் அருவருப்பாக மாறி

அவர் அந்த இடத்தைவிட்டு வெளியேற எண்ணினார். ஆனால் அவர் கால்கள் எழும்பவில்லை, காபாலிகன் யாரைப் பார்த்துக்

கொண்டிருந்தான் என்பதைப் பார்க்க வேண்டி, அவரும் கர்ப்பக்கிருஹத்தின் பக்கமாய்ப் பார்வையைச் செலுத்தினார். சிவந்த, சாராயத்தின் வெறியுண்ட, அந்தக் காபாலிகனுடைய பயங்கரக் கண்கள் மனிதருக்கு மீறிய ஒரு ஸ்திரமான பார்வையை அங்கேயுள்ள ஓர் பொருள்மீது செலுத்திக்கொண்டிருந்தன. அதைக் கண்ட பீமதேவரும் அந்தப் பொருளை ஊன்றிக் கவனிக்க ஆரம்பித்தார்.

முதலில் அவர் பூக்கள்தான் குவியலிட்டுக் கிடக்கின்றனவோ என்று எண்ணினார். ஆனால் அந்தக் குவியலில் மனித உருவின் ஓரக் கோடுகள் தென்படவே அவர் எண்ணத்தை மாற்றிக்கொண்டார். அழகாய் அமைந்த கழுத்து, சிறிய பூங்கைகள்; மனதை மயக்கும் கட்டமைந்த பின்னழகு இவைகளின் எல்லைக் கோடுகளை அரசர் நன்றாய்க் கவனித்தார். இதயத்தின் கம்பிகள் முறிவது போன்ற ஓர் உணர்ச்சியுடன் அவர் அவளை யார் என்று கண்டுபிடித்துவிட்டார். அவள்தான் சௌளா குமாரி: மகாதேவரின் நர்த்தகி.

அவள் தலையைத் தாழ்த்திப் பூமியில் தாங்கி, பிரார்த்தனை செய்துகொண்டிருந்தாள். அவள் ஒரு அங்கம்கூட அசையவில்லை. ஏன்? அவள் என்ன அந்த முத்திரையிலேயே உடலை விட்டுவிட்டு இறந்துவிட்டாளா? பீமதேவர் அதை எண்ணிய மாத்திரத்தில் ஏதோ தன்னுள்ளே எரிந்த ஓர் விளக்கு அணையப் படம் காட்டுவதுபோல் உணர்ந்தார். அது இருக்கட்டும், காபாலிகன் ஏன் இப்படிப் பார்த்துக்கொண்டிருக்கிறான்?

அவனும் அசைவின்றி அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அவன் கண்களும் குனிந்து படுத்திருக்கும் சௌளாதேவியின் உடலில் ஒட்டி நின்றன.

சற்றுநேரம் சென்று சௌளாதேவியின் தலை ஆடிற்று. அவள் உயிருடன்தான் இருக்கிறாளா! அந்தக் காபாலிகன் இவளை எவ்வாறு இங்கே இட்டுவந்தான்? அவன் அவளை எதிர்பார்த்துத்தான் இங்கே நிற்கிறானா? சற்றுநேரம் பீமதேவரும் அசையாமல் நின்றார். சௌளாவும் அசையவில்லை. காபாலிகனும் கல்லாய் நின்றான். பிறகு நிமிர்ந்து உட்கார்ந்த சௌளா கையைக் கூப்பித் துதிக்க ஆரம்பித்தாள். பிறகு பந்தைப்போல் ஒரேயடியாய்க் குதித்து எழுந்து நின்றாள். உத்ஸாகம் நிறைந்த இன்பம் பொங்கும் சந்தோஷச் சிரிப்பால் அவள் ஸோமதேவனை மயக்கிக்கொண்டிருந்தாள். தன்பால் இழுத்துக்கொண்டிருந்தாள். அவள் முறுவலித்தாள்.

கால்களைத் தூக்கி வைத்து மூன்று தாளம் கொடுத்தாள். பிறகு காதல் ததும்பும் கனி ரசக் குரலில் அவள் முணுமுணுத்தாள்: “என் காதரே! நான் உம்முடையவள்; உம்முடையவளே!” என்று சொல்லிக்கொண்டாள். பிறகு அவள் பின்னால் நகர்ந்தாள் சிரித்துக்கொண்டு வெற்றி வெறி பூண்ட கண்களுடன், அதிசய அங்க ஆட்டம் காட்டி, அவள் கர்ப்பக் கிருஹத்தை விட்டு வெளியேறி, தெற்குப் பக்கமாகப் போக ஆரம்பித்தாள்.

பீமதேவரும் பின்னிடைந்தார். காபாலிகனும் தூணில் மறைந்து நழுவினான். சௌளா தேவியும் வஸந்தகாலத்தின் பனியைப்போல் ஆனந்தக் கூத்து ஆடிக்கொண்டு குதித்து நடந்தாள்.

பீமன் சற்று நேரம் கஜினியின் யவனன், பிரபாஸி நகரின் ஸோமதேவ பகவான் இருவரையுமே மறந்தார். அவர் உள்ளம் அந்த இளவேனில் கிளியின்மேல் சென்று தாவி உட்கார்ந்துகொண்டுவிட்டது. அவர் காபாலிகன் பின்னேபோக ஆரம்பித்தார்.

காபாலிகன் ஏன் பின்னால் திரும்பினான்?

முன்னேற்பாடா? இருக்காது. முன்னேற்பாடென்றால் ஏன் ஒளியவேண்டும்?

ஏதாவது காரணம் உண்டா? அப்படியானால் அது என்ன? அதைத்தானே கண்டுபிடிக்கவேண்டும்.

பீமன் முன்னமேயே காபாலிகரைப் பற்றிச் சில விஷயங்களைக் கேள்விப்பட்டிருந்தார். காபாலிகர் திரிபுரசுந்தரி கோவிலுக்கு இளம் மங்கையரையும், சிறு பெண்களையும் தூக்கிச் சென்றுவிடுகிறார்கள் என்றும், மயானத்துக்குத் தூக்கிச் சென்று அவர்களைக் கொன்று ரத்தத்தால் பைரவரை வழிபடுவார்கள் என்றும் அவருக்குச் சொல்லியிருந்தனர். ஆனால் இவள் தான் ஸோமநகரின் தாஸி ஆயிற்றே. இவளுக்குக்கூடவா இந்தத் தொந்தரவு? எப்படியிருந்தாலும் காபாலியைத் தொடரலாம் என்று பீமதேவர் முடிவு கட்டினார்.

முன்னால் சௌளா செல்ல, அவள் அடிச்சுவட்டிலேயே காபாலியும் அவளறியாமல் பின்னால்செல்ல ஆரம்பித்தான். பீமதேவரும் பூனைபோல் நடந்து காபாலியைக் கவனித்துக்கொண்டே கர்ப்பக்கிருஹத்தின் முன் பக்கம் செல்ல ஆரம்பித்தார். சௌளா ஆற்றுக்குச் செல்லும் வாயிற்பக்கம் திரும்பி நடந்தாள். இந்தச் சமயம் அவள் எதற்காக ஆற்றுக்குச் செல்கிறாள்? என்று எண்ணியவாறே பீமதேவர் கதவுக்குப் பின் ஒளிந்து நின்றார். காபாலி துறைக்கருகே சென்று ஒரு மரத்தருகே நின்றுகொண்டான். இருவரும் சௌளாவைத் தனித்தனியே கவனிக்க ஆரம்பித்தனர்.

சௌளா நதித்துறையில் கடைசிப்படிக்கட்டுவரை சென்று நின்றுகொண்டாள். மிக அவசரமாகத் தன் வஸ்திரங்களைக் களைய ஆரம்பித்தாள். அவள் இரண்டு ஆண்கள் தன்னையே நோக்கி நிற்கின்றனர் என்று சந்தேகித்ததாகவே தெரியவில்லை. அந்த ஆண்களின் கண்கள் அடங்காத் தாகம் கொண்டு, மாறுபட்ட எண்ணங்கள் தூண்ட, காற்றில் பறக்கும் வண்டுபோல், மேலே உடைச் சிறைக்கம்பி உடைய உடைய சுதந்திரமடைந்து வெளியேறும் அவள் அழகை ஆத்திரத்துடன் பருகுகின்றன என்று அவளுக்கு உண்மையிலேயே தெரியாதோ, என்னவோ!

சௌளாதேவி உடையை அகற்றினாள். ஸ்நானம் செய்யத் தயாரானாள். நிலவின் அமுத ஒளி; அலைகளின் வெள்ளி நிழல், அவள். பாற்கடலில் நிற்கும் லக்ஷ்மிபோல நின்றாள். நிலவின் ஒளியை இடையூறின்றிப் பெறும் அவள் இயற்கை எழில் நிலவே ஓர் சிறிய பெண்ணுருப் பெற்று நீரிலிருந்து எழுந்ததோ என்று ஐயமுறவைத்தது.

இந்த அழகுக் காட்சியின் ஆனந்த வெள்ளத்திலே மிதந்து போய்க்கொண்டிருந்த அவன் வைத்த கண் வாங்காமல் பிரிந்த இமை கொட்டாமல் அந்த உருவத்தையே அதன் எழிலையே பார்த்துக்கொண்டிருந்தான்.

சௌளா தண்ணீரில் ஸ்நானம் செய்யக் கால் குதித்தாள். பீமதேவன் இதயத்துள் ஏதோ ஒன்று நடை போட்டது. சௌளா இன்ப வெறியில் மனம் மறந்திருந்தாள். அவள் அங்கே நின்று தலையை அவிழ்த்துக் விட்டுக்கொண்டாள். மிகவும் ஆசையுடன் அதைத் தடவி விட்டுக் கொண்டாள். முகத்தை மார்பை பிறகு வயிற்றைக் கையால் தடவி விட்டுக்கொண்டே அவள் நீரில் முழுகிவிட்டாள். சற்று நேரம் பீமதேவர் உள்ளம் எதையோ தொலைத்துவிட்டுத் தவித்தது. சௌளா தலையைத் தூக்கினாள். மறுபடியும் மறைந்து விட்டாள். பிறகு அவள் நீரில் குப்புறப் படுத்து, கையாலும், காலாலும் தண்ணீரை அடித்து இறைக்க ஆரம்பித்தாள். பிறகு முதுகில் படுத்து நீந்த ஆரம்பித்தாள். மின்னும் அலைகளின் வழியாக ஊடுருவி அலையும் சந்திரனுடைய கிரணங்கள் அவள் மேல் சிதறிக்கொண்டிருந்தன. அவளைப் பார்த்தால் ஓர் அழகிய சங்கு மிதப்பதுபோல் காணப்பட்டாள்.

கங்கை அவளைத் தன் பாற்கட்டிலில் தாலாட்டுவது போலத் தோன்றிற்று. — மெதுவாக, கட்டுக்கொள்ளாக் காதலுடன்.

பீமதேவர் அழகிகளைப் பார்த்திருக்கிறார். கெட்ட பெண்கள். அழகு கொட்டும் கன்னியர், மயக்கி நடக்கும் மங்கையர், நாக்கைச் சப்ப வைக்கும் நங்கையர் எவ்வளவோ பெயரைப் பார்த்திருக்கிறார். ஆனால் அவர் இப்படி ஒரு பெண்ணைப் பார்த்ததில்லை. இவ்வளவு உள்ளத்தை வாட்டும் ஒரு சிறுமியைக் கற்பனையும் செய்ததில்லை. இது என்ன? நிலவு, சிற்றலைகள், மந்தமாருதம், உவப்புச் சுவை இவைகளால் ஆகி, அழகின் எல்லையைமீறிய பலத்தால் மனிதன் உணர்ச்சியை ஈர்த்து வாங்கும் கனவாகவல்லவா இருக்கிறது!

அவர் உடல் முழுவதும், உயிர்ப்பு முழுவதும் அவர் கண்களிலே வந்து தங்கிவிட்டது.

சௌளா ஸ்நானம் முடித்தாள். முழங்கால் வரை தண்ணீரில் எழுந்து நின்றாள். உடலைச் சிலிர்த்து ஒட்டியிருந்த நீர்த்திவலைகளை உதறித் தள்ளினாள். தலை மயிரைக் கையால் பிழிந்து முடிபோட்டாள். நீர்நிலையிலிருந்து வெளியேறினாள். பீமதேவர் பார்த்துக்கொண்டே நின்றார்.

நிலவின் மதம் தரும் புதுமை. அதிலே அலைகளின் மின்னொளிக்கு ஒரு புத்தொளி தந்து கொண்டு நின்றாள், அந்த உருப்பெற்ற ரஸ உணர்ச்சி போன்ற அந்தப் பெண்கொடி. அந்த உணர்ச்சியை விரசமாக்கிக்கொண்டு வந்து நின்றான் அந்தக் காபாலிகன் அந்த அழகி எதிரில். பயங்கரமான உங்காரம், கையிலே சுழலும் எலும்புக் கதை, இவைளுடன் கூடிய அந்தக் காபாலி அவளுக்கு ஓர் ராகுவாக வந்து குதித்தான்.

இன்ப உணர்ச்சியிலே மிதந்து உத்ஸாகம் கொண்டு நின்ற அந்த மெல்லியலாள் அந்தப் பயங்கரமான எமனுருவத்தைக் கண்டு கொஞ்சம் பின் தங்கினாள். அவள் போட்ட இதயத்தை உருக்கும் தீனக் கூச்சல் சிற்றலைகள் கட்டியிருந்த அமைதியை நொற நொற என்று இடித்துத் தள்ளிற்று.

பீமதேவர் மனதில் ஒரு கொடிப்புப் போலஏற்பட்டது. அவர் புலிபோல் பாய்ந்து, படிகளைத் தாண்டி, காபாலியின் மேல்போய் விழுந்தார். அப்படியே அவர் தம் பலம் பொருந்திய நரம்புகள் தாங்கும் கையால் அவன் கழுத்தை நெறித்துப் பிடித்தார்.

காபாலியின் கைகள் சௌளாவைப்பிடிக்க நீண்டன. ஆனால் அவைகள் அப்படியே நிற்க நேரிட்டுவிட்டது. பயமடைந்த சௌளா மூர்ச்சையடைந்து தரையில் விழுந்திருந்தாள். பீமதேவர் பலத்தால் அமுக்கப்பட்ட அந்தக் காபாலி மிருகத்தைப்போல அலறிக்கொண்டு திரும்பி அவர் கைகளைப் பிடித்து முறுக்க முயன்றான்.

பீமதேவரின் கோபம் எல்லை கடந்தது. காபாலிகன் கழுத்தை நெறித்துக் கீழே தள்ள முயன்றார். காபாலியும் அவரை எட்டி நெட்டித் தள்ள முயன்றான். இருவரும் அதே முயற்சியில் ஒருவருடனொருவர் பொருது நின்றனர். ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டே இருவரும் நீர் நிலையருகில் வந்தனர். பீமர் உருத்திரமூர்த்தியாக மாறினார். உதட்டோடு உதடு பொருத்தி, ஆத்திரத்துடன் அவர் காபாலியைத் தண்ணீரில் தள்ளினார். பிறகு அவன் கழுத்தைப் பிடித்து அமுத்தி நெறிக்க ஆரம்பித்தார். கைப்பிடியில் அவன் கழுத்தெலும்பு நொறுங்க ஆரம்பித்தது. நரம்புகள் நசுக்குண்டன. காபாலியின் ஆட்டம் நின்றது. முயற்சிகள் சாந்தமடைந்தன. வாயிலிருந்து நுரைவர ஆரம்பித்தது. உயிரை இழந்து வாழ்க்கையை முடித்து வெறும் சடலமாகித் தண்ணீரில் விழுந்துவிட்டான். காபாலி பிறகு எழுந்திருக்கவேயில்லை, பீமதேவர் கோபம் குளிர்ந்தது. பிணத்தை ஒரு உதை கொடுத்துவிட்டு அவர் வெளியேறினார்.

4

பீமதேவர் தண்ணீரிலிருந்து வெளியேறி, சௌளா கிடந்த இடத்தில் வந்து பார்த்தார். அந்த அழகி வாடும் குண்டுமல்லிகை மலர்போல வெளுத்து உடல் சோர்ந்து படுத்திருந்தாள். அதை அவர் சற்றுநேரம் பார்த்துக்கொண்டே நின்றார். அவருடைய உள்ளத்திலே அலைகள் எழ ஆரம்பித்தன. அவர் அவளை இருகைகளாலும் தாங்கித் தூக்கினார். தம்முள்ளே சேர்த்துக்கொண்டு விடுபவர் போல் அவளை அப்படியே தம் மார்புடன் இறுக்கிச் சேர்த்துக்கொண்டார்.

நனைந்து மணல் ஒட்டி, குளிர்ந்தும் இருந்த அவள் தேகத்தைத் தொட்டதும் அவருக்கு ஓர் மெய்சிலிர்ப்பு உண்டாயிற்று. அவள் இன்னம் சிறுமியே. யௌவனம் தான் நிரப்ப வேண்டிய இடங்களுக்கெல்லாம் வெறும் ஓரக் கோடுகள் மட்டுமே இட்டிருந்தது. ஆனால் அவள் மெல்லிய அங்கங்களில் விசுவகர்மா தன் அற்புதமான சிற்பவேலைத் திறனைக் கொட்டிக் காட்டியிருந்தான். அவள் குளிரினால் அசைவற்றிருந்தாள். பீமதேவர் உள்ளத்தில் விவரிக்கமுடியாத ஓர் உணர்ச்சி, நேசபாசம் ஏற்பட்டது. அவள் முகத்தில் தன் முகத்தை வைத்து அமுக்கினார். கோபம் களைப்பு ஆவேசத்தில் சூடேறி

யிருந்த அவர் முகத்துக்கு அவள் குளிர்ந்த முகத்தின் ஸ்பர்சம் கொஞ்சம் அமைதி தந்தது. சௌளாவின் மற்ற வஸ்திரங்களையும் எடுத்து, அப்படியும் இப்படியும் அவள் மேல்சுற்றினார். உட்கார்ந்து மடிமேல்சார்த்தி மூர்ச்சை தெளியவைக்க முயன்றார்.

சௌளா மெதுவாகக் கண்களைத் திறந்து கொஞ்சம் ஞாபகம் வந்தவுடனேயே அவள் ஒரு கூச்சல் போட்டு எழுந்து ஓடி விலகி நின்று கொண்டாள். அவள் ஓட ஓட அவள் மேல் சுற்றியிருந்த மற்ற உடைகள் கீழே விழுந்தன.

பீமதேவரும் எழுந்து நின்று, "பயப்படாதே! என்று தைரியம் கூறினர். தான் இருக்கும் நிலையை அறிந்த சௌளா வெட்கம் அடைந்தாள். அவள் கீழேவிழுந்திருந்த வஸ்திரங்களை எடுத்து அப்படியுமிப்படியும் சுற்றிக்கொண்டாள். சுற்றிக் கொண்டவாறே அவள் "அந்தக்காபாலி எங்கே சென்றான்?" என்று கேட்டுவிட்டு அங்குமிங்கும் பயந்தவாறே, கண்களைச் சுழற்றிப் பார்க்க ஆரம்பித்தாள்.

பீமதேவர் சிரித்தார். "காலமுகனை நான் அனுப்பிவிட்டேன்—பைரவரிடமே."

சௌளா திடுக்கிட்டாள். வார்த்தைகளை விழுங்கி விழுங்கி, "என்ன காலமுகரைக் கொன்றுவிட்டீர்களா?" என்றாள். பதிலை ஒருவாறு தெளிந்துகொண்டு "ஐயையோ! அபசகுனம் ஏற்பட்டுவிட்டதே! அதிருக்கட்டும். நீங்கள் யார்?" என்று கேட்டாள்.

அதைக் கேட்டதும் பீமதேவருக்கும் ஒரு கலவரம் ஏற்பட்டது. எப்படியோ அந்தப் பதற்றத்தைத் தணித்துக்கொண்டே, "என்னை மறந்துவிட்டாயா? நான்தான் பட்டண்நகரின் பீமதேவன்" என்றார்.

"யார் 'அம்பு வரிசை' பீமதேவரா?" என்று கேட்ட அவளைப் பயமும் மருட்சியும் வந்து கவிந்து கொண்டன.

"ஆம், நான் அவனைக் கொல்லாவிட்டால் அவன் உன்னை எடுத்துச் சென்றிருப்பான்."

"ஆனால், அண்ணலே! என்னை ஸ்நாக உடையிலேயா தாங்கி வந்தீர்கள் இங்கு?" அவள் கண்கள் மேலே எழவில்லை.

அவள் வெட்க நிலையைக் கண்டு ஒருவாறு களித்து மகிழ்ந்துகொண்டே பீமதேவர், "பிறகு என்ன செய்வது? நீதான் மயங்கும்போது உன் உடை என்ன, உன்னையே மறந்து விழுந்துவிட்டாயே!" என்றார். அதில் புதைந்திருந்த கபடற்ற ஹாஸ்யத்தை உணர்ந்த சௌளாவும் கொஞ்சம் வெட்கம் நீங்கி உவகை கொண்டாள்.

"கருணைக்கடலே! ஏதாவதிருந்தாலும் மறந்துவிடுங்கள். நான் சாதாரண நர்த்தகி அல்ல, சிவ நிர்மால்யம்......"

"ஆம், நானும் அப்படி எண்ணியேதான் என் தலைமேல் தாங்கி நின்றேன். உன் உடையைச் சரியாய்க் கட்டிக்கொள்." என்று சொல்லி, பீமதேவர் சிரித்துக்கொண்டே பெண்ணுக்கு முதுகு காட்டிக்கொண்டு நின்றார்.

கலவரத்துடனேயே சௌளா அங்குமிங்கும் பார்த்தவாறே தன் உடைகளைக் கட்டிக்கொண்டாள். பரபுருஷன்முன் தான் சற்றுமுன் இருந்த நிலையைக் குறித்து ஏற்பட்ட வெட்கத்துக்குள் காபாலியைப்பற்றி ஏற்பட்டிருந்த பயம் இன்னும் தொலையாமல் இருந்து அவள் இதயத்தைப் படபடக்க வைத்துக் கொண்டிருந்தது,

"என்ன, ஆயிற்றா? நான் திரும்பலாமா?"

"சரி, திரும்புங்கள்." சௌளா உத்தரவு கொடுத்தாள்.

"நல்லதாய்ப் போயிற்று நான் இங்கே வந்தது! இல்லாவிட்டால்........."

"உங்களுக்கு அந்தக் காலமுகனிடம் பயம் ஏற்படவில்லை? அந்தப் பட்டுப்போவான் என்ன எண்ணி வந்தானோ? நினைத்தாலே குடல் நடுங்குகிறது. அந்தப் பீடையைத் தொட உங்களுக்கு மனது எப்படித் துணிந்தது? கடவுள்தான் உங்களுக்கு அந்தத் துணிவைக் கொடுத்திருக்கிறார். ஸோமதேவன் அவர் நர்த்தகியை மறக்கவில்லை!" பீமதேவர் சிரித்தார். நன்றி நிறைந்த சௌளா அவரை நெருங்கி வந்தாள்.

"நீங்கள் பெரிய வீரர்தாம்!" என்று ஒரு பெருமைப் பத்திரத்தையும் மனது நிறைந்து கொடுத்தாள்.

"சரிதான், நீயே சொல்லும்போது நான் நம்பாமல் எப்படி இருக்கிறது?"

"நான் போகவா? நீங்கள் எவ்வளவு நேரம் இங்கே தங்குவீர்கள்?"

"நானா? கடவுள் இதற்காகத்தான் என்னை இங்கே நிறுத்தி வைத்திருந்தார் போலும். இல்லாவிடில் நான் இவ்வளவு நேரம் போயிருப்பேன்."

"என்ன? இப்பொழுதே போகிறீர்களா?"

"ஆம். பட்டண் போகிறேன்."

"என்ன? இன்று காலையில்தானே வந்தீர்கள்! அதற்குள் போகவேண்டும் என்று ஏன் முடிவு செய்து விட்டீர்கள்?" சௌளா முறுவல் காட்டினாள். பீமதேவர் முதல் முறையாக அழகின் தண்ணொளி பலகால் விட்டுப் பாய்வதைப் பார்த்தார்.

"சொல்லுகிறேன். ஒருவரிடமும் சொல்லாதே."

"இல்லை. சொல்லவில்லை. கண்டிப்பாய்... என்ன அது?"

"கஜினி மிலேச்சன் வருகிறான். அவனுக்குத் தக்கபடி வரவேற்பு அளிக்கப் பாலைவனம் போகவேண்டும்."

"அப்படியா? சரிதான். வெற்றிவாகை பூண்டு உடனே திரும்பிவிடுங்கள். போலாநாத் தங்களுக்குத் துணை புரிவர்." செளளாவின் ஆசிர்வாதம் உள்ளமுந்தி வந்தது.

பீமதேவன் திடீரென்று, தாமறியாமலே "நீ எதிர்பார்ப்பாய் அல்லவா?" என்று கேட்டேவிட்டார்.

செளளா நிலைமையைத் திருத்தினாள்: "நீங்கள் திரும்பும்போது நான் மகாதேவனுடைய சரணத்தில் இருப்பேன்."

கௌரவத்தில் ஆழ்ந்த பீமதேவர் அறைபட்டவர்போல் பார்த்து நின்றார். அவர் அந்தப் பெண்ணைப் பார்த்தார். நன்றியறிதல் காட்டும் அவள் முகத்தில், அன்பு காட்டும் அவள் கண்களில், மனதை அள்ளும் அந்த மோகனப் புன்னகையில் மனித அன்பு இல்லை; தேவ பக்திதான் கோயில் கொண்டிருந்தது. அவர் ஓர் பெருமூச்சு விட்டார்.

"சரி, நட, நானும் போகவேண்டும். விமலன் காத்திருப்பான். உன்னைப் போகும்போது கொண்டுவிட்டுப் போகிறேன்."

"சரி, போகலாம்." என்று சொல்லிய செளளா தேவி நடக்க ஆரம்பித்தாள். அதற்கு முன் ஒரு தடவை தண்ணீரைத் திரும்பிப் பார்த்த அவளுக்கு மீண்டும் நடுக்கம் ஏற்பட்டது.

5

நிர்த்தகிகளின் இருப்பிடத்துக்குப் போகும் தலைவாயில் வந்தவுடன் செளளா பீமதேவரிடம் விடை பெற்றுக்கொண்டாள். மறையும் சந்திரபிம்பம்போல் கண்கள் எதிரே பார்வைக்கு அப்பால் போய்க்கொண்டிருக்கும் அவளைப் பீமதேவர் பார்த்துக்கொண்டேயிருந்தார். அவரால் அசைய முடியவில்லை என்று தோன்றிற்று. இந்த ஒருமணி அரைமணி நேரத்திற்குள் அவர் அனுபவித்த ஸௌந்தர்ய உணர்ச்சி அவருக்கு முற்றிலும் புதிது; அனுபவத்திலும் புதிது; கனவிலும் புதிதே! இருண்ட உலகில் உயர்தர சூரியன் உதயமானதுபோல அவர் வாழ்க்கையின் பிராணேசுவரியாக அவள் உதித்தாள். அந்த அதிர்ஷ்ட க்ஷணத்துக்குப் பின் மறைந்தும் விட்டாள். அவருக்கு ஒரு ஏக்கம் பிடித்தது. அவர் எப்படியும் சண்டைக்குப் போய்த்தான் ஆகவேண்டும். வெற்றித் தேவதையின் மடியில் தலைவைத்துத்தான் ஆகவேண்டும். ஆனால் திரும்பி வர முடியுமா? வருவாரா? இதற்குப்பதில் காலம்தானே சொல்லவேண்டும்! ஒரு பயம் அவர் மனதை வாட்ட ஆரம்பித்தது.

பீமதேவர் அங்கு நின்றபடி கோயிலைப் பார்த்தார். மெதுவாகக் கீழிலிருந்து ஆரம்பித்து மேலே, மேலே விமானம்வரை பார்வையைச் செலுத்தி, காற்றில் அடித்துக் கொள்ளும் கொடியில் நிறுத்தினார். அவருடைய மகாதேவன், அவர் பக்கம் இருந்தார். அது கங்க சர்வக்ஞரின் ஆசிர்வாதம். செளளாவும் அவர் வழிபார்த்து நிற்பாள். கட்டாயம் எதிர் பார்ப்பாள்;— இல்லை, என்று சொல்லிவிட்டாளா? அதனால் என்ன? அவரும் கண்டிப்பாய்த் திரும்புகிறவர்தான். பிறகு இதே காட்சி... இன்னம் ... இல்லை, மேலே கற்பனை பறக்க ஆரம்பிப்பதற்குள் அதன் சிறகைக்கட்டி மனதில் அடக்கிக்கொண்டு உதடுமடித்து அவ்விடம் விட்டுப் பெயர்ந்தார்.

அவர் வேகமாகச் சென்று மகாதேவனைத் தரிசனம் செய்துகொண்டார். பிறகு அவர் வரவை எதிர்பார்த்து நிற்கும் விமலரிடம் சென்று சேர்ந்தார். கிளம்புவதற்கு முன்னமே அவர் தாமோதரரை எழுப்பி அவரிடம் விடைபெற்றுக்கொண்டார்.

அப்பொழுது தாமோதரன் சொன்னார்: "எந்தையே! நானும் உடல் நிலை சரியான அக்கணமே புறப்பட்டுவந்து சேர்ந்துவிடுகிறேன். ஆனால் ஜாக்கிரதையாயிருங்கள். எதிலும் பிழைபோய் விடாதீர்கள். அந்த மிலேச்சன் காட்டுத் தீ போன்ற தீயவன், அவனை அடித்து விரட்டிவிடுவது சுலபமில்லை."

"நீ ஒன்றுக்கும் பயப்படாதே. நாங்கள் அங்கேபோய் வேண்டியவற்றைச் செய்கிறோம்." என்று பீமதேவர் அவரை அமர்த்தினார்.

"சரி"

இடையே விமலர் "இந்தச் சண்டையை எந்த விதம் நடத்தி முடிக்கவேண்டும் என்று சொல்லு" என்று கேட்டார். அவருக்குத் தாமோதரருடைய பயம் அகாரணமாகப் பட்டது. "நானே சேனையைச் செலுத்திக் கொண்டு போகிறேன். அன்னதாதா பட்டனைப் பார்த்துக்கொள்வார்."

தாமோதரர் தலையை ஆட்டினார். "வேண்டாம். இந்தமாதிரி அசட்டுத்தைரியம் கொள்ளவேண்டாம். எல்லாச் சேனையையும் சேர்த்து ஒரே மூச்சில் அவனைச் சிதற அடித்துவிடவேண்டாம். எந்தையே! இதை கொஞ்சம் நினைவிலிருத்திக்கொள்ளுங்கள்."

"தாமோதரா, நீ ஒன்றுக்கும் கவலைப் படாதே. நான் எல்லாவற்றிற்கும் ஏற்பாடுசெய்கிறேன்." என்று சொல்லிப் பீமதேவர் தாமோதரனுக்குத் தைரியம் அளித்தார். பிறகு அவர் மீண்டுமொருமுறை சர்

வக்ஞரிடம் ஆசீர்வாதம் வேண்டிப் பெற்று விமலருடன் யாத்திரையைத் துவக்கினார். ஸோமநாதர் கோயிலை விட்டு ஒட்டகம் அவரை அகற்றிச் செல்லச் செல்ல, பீமதேவர் மெல்லிழையாளின் ஒரு மெல்லிழையால் இறக்கப்படுவதுபோல் உணர்ந்தார். அவர் உள்ளத்தின் பாசப்பகுதி அவரை அன்பின் பக்கம் இழுக்க, கடமையுணர்ச்சி சண்டைப்பக்கம் இழுத்தது. கடைசியில் கடமையுணர்ச்சி அவரைத் தூரம் இழுத்துச் செல்லச் செல்ல, பாச உணர்ச்சி சௌளாவிடமே சென்றடைந்து தங்கிவிட்டது.

6

ஒரு சிவபக்தன் நியமப்படியே அன்று காலை எழுந்தான். பிறகு பல்லைக் குச்சியால் துலக்கிக் கொண்டே சிவநாமத்தை உச்சரித்தபடி நதியின் பக்கத்திலுள்ள வாயில் வழியாக மெதுவாய்ப் படிக்கட்டுகளில் இறங்க ஆரம்பித்தான். சந்திரன் மறைந்து அவன் நிலவும் நிறம் மங்கி விட்டிருந்தது. அவன் படியிறங்கி, பற்குச்சியை நீரில் விசிறி எறிந்தான். கீழே குனிந்து வாய்கொப்பளிக்க ஆரம்பித்தான்.—அவ்வவளவுதான்: ஒரு பெருங் கூச்சலுடன் பின்னால் திரும்பிப் பிடித்தான் ஓட்டம். உயிரைக் கையில் பிடித்து, போகும்போதே "ஓம் நமோ பகவதே சதாசிவாய சகலதத்வாத்மகாய" என்று சிவபெருமானையும் துணைக்கழைத்துக் கொண்டே ஓடினான்.

இரண்டு ஸ்திரீகள் தண்ணீர்க் குடம் கொண்டு நிரப்ப வந்தனர். கொட்டாவி விட்டுக்கொண்டே வம்பளந்துகொண்டு வந்த அவர்கள் அந்த நிலையிலேயே படியிறங்கினர். தண்ணீரில் கால்வைத்தனர். ஏதோ தட்டுப்பட்டது, இருவரும் கீழே குனிந்து பார்த்தனர்; குடங்களை எறிந்தனர். "ஐயையோ,—அம்மாடியோ!" என்று கத்திக்கொண்டு பாய்ந்து விட்டனர்.

அரை நாழிகை நேரத்தில் கோயிலில் பரபரப்பு ஏற்பட்டுவிட்டது. ஒரு பயங்கரமான விஷயம் ஒவ்வொருவர் நாக்கிலும் தாண்டவமாடிற்று. ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஒரு பயம் சூழ்ந்து அமுக்கி நின்றது. இதுவரை ஒருவரும் ஒருபொழுதும் கேட்டிராத ஓர் காரியம் நடந்திருந்தது. ஒருகாலமுகன் நன்கு பிரிந்த பயங்கரமான கண்களும் அறுந்த மேலுதடும் கொண்டு கடவுளின் பயங்கரமான கோபத்தைக் குறித்துக் கொண்டு துறையில் கிடந்தான்.

இந்த விஷயம் காற்றிலேறிக் காற்றுடன் பரவிற்று. சர்வக்ஞர் மடம் கோயில்கள், பாடசாலைகள், சிவபக்தர்கள், சிவதானிகள் இவர்கள் வசிக்கும் விடுதிகள் எங்கிருந்தும் ஆணும் பெண்ணும் கிளம்பினர். அவர்கள் முகம் கலவரத்துக்குக் குடியிடமாக விளங்கிற்று. இதயம் பயம் மேலிட்டு துடிப்புக் குறைந்து காணப்பட்டது. நடந்த காரியத்தின் கற்பனையே ஆளை அலறவைத்து அசத்தப் போதுமானதாயிருந்தது. முன்னே பின்னே தற்பொழுதோ கேட்டுப் பழக்கமே இல்லாத, அறிந்திராத ஓர் செயல் நிகழ்ந்து நின்றது. ஒரு பயங்கரமான காபாலியின் சவம் கோயிலுக்கெதிரே துறையில் கிடந்தது! அச்சத்தால் அலறி, தெய்வத்தின் கோபத்துக்கு நடுங்கும் மனது கொண்ட ஆண்கள் தங்கள் ஆவலையும் அடக்க முடியாமல் உண்மை நிகழ்ச்சியை நம்பவும் முடியாமல் திகைத்தனர்.

வழக்கப்படி வதந்திக்கு உடல் பருத்தது; இறகுகள் முளைத்தன. ஒரு காபாலி செத்த இடத்தில் அநேக காலமுகர்கள் இறந்ததாகச் செய்தி கூடிச் சென்றது.

யாத்திரிகர்களுடைய தர்மசாலையில் செய்தி வெளியாயிற்று. அதைக் கேட்டு நடுக்கம் கொண்ட பக்தர்கள், சிரத்தையுள்ளவர்கள், தெய்வத்தின் சினத்திலிருந்து தப்புவதற்கு வழி தேட ஆரம்பித்தார்கள். பெண்கள் கண்ணீர் விட்டுக் கதறினர். இளம் சிறுவர்களுக்குத் திருஷ்டி கழித்தனர். சிறுமிகளும் கேவ ஆரம்பித்தனர். எல்லோருடைய வாயிலும் சிவன் நடனமாடிக் கொண்டிருந்தார்.

சிவகவசம் தெரிந்தவர்கள் அதைப் பாடம் சொல்ல ஆரம்பித்தனர். வேதபாராயணம் செய்பவர்கள் தலை குனிந்து கன்னத்தில் போட்டுக்கொண்டு சுவாமியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்தனர், 'காப்பாற்று' என்று வேண்டிக் கொண்டனர். சந்தியாவந்தனம் முடிக்காதவர்கள் ருத்ரம் சொல்ல ஆரம்பித்தனர். எவ்வளவோ பேர்வழிகள் கூடிக் கிளம்பி சேர்ந்து நின்று கீர்த்தனம் செய்ய ஆரம்பித்தனர். சலங்கைகள், மிருதங்கம், நாயனம் முதலியவைகளின் குரல்கள் கேட்க ஆரம்பித்தன.

எல்லோரும் இருந்தது இருந்தபடி, போட்டது போட்டபடி கோவிலுக்கு ஓடினர். கடவுளிடம் முறையிடுவதைத் தவிர அவர்களுக்கு வேறு ஒன்றும் தோன்றவில்லை.

சிவராசி மிகவும் கஷ்டபபட்டு, காலதாமதம் ஆகிக் கடைசியாகக் கண்களைமூடி ஒரு நாழிகை தூங்கியிருப்பான்; அதற்குள் இந்த ஆரவாரம் அவன் தூக்கத்துக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டது. அவன் எழுந்தான். விசாரித்தான். விஷயம் தெரிந்தவுடன் சிவகவசத்தைப் பாடம் செய்ய ஆரம்பித்தான்

நித்ய கர்மானுஷ்டானங்களைக் கூட மறந்து அவன் கோயிலுக்குச் சென்றான். அங்கே பயந்து நிற்கும் மக்களைக் கண்டதும் அவன் உள்ளமும் அச்சுற ஆரம்பித்தது. எப்படியோ வழிசெய்துகொண்டு கூட்டத்தைத் தாண்டி வாயிலை அடைந்து படிக்கட்டுகளில் இறங்க ஆரம்பித்தான். உதித்தேறுகிற ஆதித்தனுடைய வெளிச்சத்தில் காபாலியின் உதடு அறுந்த பயங்கரமான முகம் வெடித்தாற்போன்ற கண்கள் கொண்டு சிகரத்தில் ஆடிநிற்கும் வெற்றித் கொடியைப் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

தாமோதரன் பேச்சைக் கேட்டுத் தெய்வ கோபத்தின் பயத்தால் பீடிக்கப்பட்ட சிவராசியும் மற்றவர்களைப் போலத் தலையின் இரு பக்கங்களிலும் கையைவைத்து 'ஓம் நமோ பகவதே சதாசிவாய சகல தத்வாத்மகாய" என்று சொல்ல ஆரம்பித்தான். அவனும் பின்னால் செல்ல ஆரம்பித்தான். ஆனால் அஞ்சிநிற்கும் மக்கள் கூட்டத்தைப்பார்த்து இரண்டு அடிகளுடன் நிறுத்திக் கொண்டு நின்றான். இருபது வருஷங்களாக நன்றாக முறைப்படி அத்யயனம் செய்து சேவித்த சாஸ்திர வசனம் குருசேவை தவம் இவைகள் எல்லாம் அவனுக்குத் தக்க சமயத்தில் கைகொடுத்து உதவின. கங்கசர்வக்ஞர் கைலாயபதவியை அடைந்தபிறகு பாசுபதமடத்துக்கு அதிகாரம்வகிக்கப்போகும் சிவராசியே இப்படிப் பயந்து ஓட ஆரம்பித்தால்? ஆகவே தைரியத்தை வருவித்துக் கொண்டு அருகே நின்ற ஒரு சிஷ்யனை விளித்தான். "சித்தேசுவரா!.

"ஐயா."

"போ. உடனே சென்று காபாலிகர்களில் சிறந்த முக்கால முணர்ந்தவர் ஸ்ரீமத் கங்கயோகீசுவரர் கைலாசமெய்தி விட்டார் என்று சொல். பிறகு காபாலிகர் கூட்டத்திலும் தெரிவித்துவிட்டுவா."

சித்தேசுவரனும் "அப்படியே" என்று சொல்லிச் சென்றான்.

ஜனங்கள் கங்கயோகீசுவரர் பேரைக் கேட்டவுடனே மறுபடியும் ஒருபயத்தின் அலை அவர்களை அலைத்து வைக்க ஆரம்பித்தது. காலமுகர்கள் வழியில் அந்த யோகீசுவரர் பெயர் மிகவும் மதிப்புக்கும் மரியாதைக்கும் உகந்ததாக எண்ணப்பட்டு வந்தது. அவருடைய யோகபலம் காரணமாகப் பைரவரே அவர் எதிரே இருந்ததாகப் பாசுபத மதத்தினர் நம்பிவந்தனர். சங்கரனை நேரே காணப் பேராவல் கொண்ட அவர் இந்தப் பயங்கரமான முறைகள் கொண்ட வழியைப்பின் பற்றினார். மேலும் நூற்றெட்டு அழகிகளின் ரத்தத்தால் பைரவரை நனைப்பதாகவும் விரத மேற்றுக் கொண்டிருந்தார். அகோரர்களின் முதன்மையான அவர் நடுநிசிக்கு முன் மயானத்தைவிட்டுக் கிளம்புவதில்லை, அவர் இப்படி இறந்தது ஜனங்களைத் தனி ஒரு பீதியிலாழ்த்திற்று.

சிவராசி தன் தைரியத்துக்கும் வாழ்க்கை வெற்றிக்கும் ஒரு சோதனைக் காலம் வந்ததாக அறிந்தான். ஜனங்கள் அவனும் பயப்படுகிறான் என்று கண்டால் சர்வக்ஞருக்குப் பட்டத்துச் சிஷ்யனாக இருக்க உரித்தானவனில்லை என்று எண்ணி விடுவர். எப்படியோ தனக்கேற்பட்ட உதறலை அடக்கிக் கொண்டான். அருகே ஒரு கிழவி பயத்தால் உடல் ஆடிக்கொண்டிருந்தாள். சிவராசி அவளுக்குத் தைரியம் கூற ஆரம்பித்தான்,

"அம்மா! ஏன் பயப்படுகிறீர்கள்?"

"ராசி! இது என்ன இப்படி நேரிட்டு விட்டதே. கங்கயோகீசுவரர் இப்படித் துர்மரணம் அடைந்துவிட்டாரே. இதன் பலன் என்ன ஆகுமோ, தெரியவில்லையே!"

"சங்கரபகவான் கருணை இருக்கும் வரையில் பயம் என்ன தாயே!"

"மகாதேவன் கருணை இருந்தால் இப்படி நடக்குமா? அதுதானே பயமாயிருக்கிறது! என்னென்ன போராபத்துக்கள் வருமோ?"

சிவராசிக்குக் கஜினி அமீர் ஞாபகம் வந்தது. அவன் மயிர்க் காம்புகள் குத்திட்டு நின்றன. அதை மறைத்து அவன் தைரியமாகப் பேசினான்.

"தாயே, இப்படி ஏன் பயப்படுகிறீர்? யோகீசுவரரே என்னிடம் சொல்லியிருக்கிறார். 'எந்த நேரம் சிவபகவான் தரிசனம் நேரேகிட்டுமோ அந்த நேரமே நான் இந்த உடலை விட்டுவிடுவேன்' என்று. பிறகு ஏன் பயப்படவேண்டும்? கண்டிப்பாய் ஸோமநாதன் கருணையால்தான் இவ்விதம் நேர்ந்திருக்கவேண்டும்."

இவ்வாறு அவளுக்குத் தைரியம் கூறிவிட்டு, சிவராசி ஆடம்பரமாகப் மறுபடி படியிறங்கி, காபாலியின் சவத்தருகே சென்று நின்றுகொண்டான். அதன் முகத்தையும் அலங்கோலக் கண்களையும் பார்க்காமலேயே ஸ்தோத்ரபாடத்தைச் சொல்ல ஆரம்பித்தான். ஒவ்வொரு நிமிஷமும் அவன் உயிர் தன்னிடம் விடைபெற்றுவிடும் என்று பயந்துகொண்டுதானிருந்தான். ஆனாலும் அதனிடம், 'இதோ குரு வந்துவிடுவார், பயப்படாதே. விட்டுப் போகாதே!' என்று சொல்லிக் கெஞ்சிக் கூத்தாடி அதைப் பிடித்துவைத்துக்கொண்டிருந்தான்.

கூட்டம் அதிகரித்தது. கடவுள் கோபத்தைச் சாந்தம் செய்ய என பாடப்பட்ட கீர்த்தனைகளும் பஜனைகளும் அதிகரிக்க ஆரம்பித்தன. சிவராசி திரித்த கயிறும் ஜனங்களி

டையே பரவ ஆரம்பித்தது. 'இது தெய்வத்தின் கோபம் அல்லவாம், அவர் கருணையாம்.' என்ற ஓர் சந்தேகமும் எழுந்து வளர ஆரம்பித்தது. கங்க சர்வக்ஞரும் வந்துசேர்ந்தார். அவர் வந்தவுடன் இருந்த பயமும் கொஞ்சம் விலகி அமைதி ஏற்பட்டது. சர்வக்ஞர் நமஸ்காரத்தை ஏற்றுக்கொண்டே வந்து சேர்ந்தார். அவர் முகத்திலே எப்பொழுதும்போல் ஒரு அழகிய அமைதியான கம்பீரம் விளங்கிற்று. அவர் வந்தவுடன் பழக்கமான ஒரு ஸ்தோத்திரத்தை உயர்ந்த குரலில் சொல்ல ஆரம்பித்தார் மசகளில் பெரும் பகுதியினர் பயத்தைவிட்டு அந்த ஸ்தோத்திரத்தை உடன் சொல்ல ஆரம்பித்தனர். சர்வக்ஞர் யோகீசுவரர் அருகில் சென்று கீழ குனிந்து கண்களில் பூவைத் தெளித்தார். இதற்குள் காபாலிகர் குழுவினர் தங்கள் வழக்கமான அதிரவைக்கும் உங்காரத்தைச் செய்துகொண்டு வந்து சேர்ந்தனர். வந்தவுடன் தங்கள் தலைவரின் சவத்தை ஏற்றுக்கொண்டனர்.

கங்க யோகீசுவரரின் சவயாத்திரை தொடங்கிற்று. ஒரு லக்ஷம் ஆண் பெண்களின் நாக்குகள் சிவபகவான்நாமத்தை உச்சரிக்க, முதன்மையான யோகீசுவரருடைய சவம் மயானத்தை அடைந்தது. காலமுகர்கள் தங்கள் முறைப்படி கிரியைகளை ஆரம்பித்தனர். சர்வக்ஞர் அவர் சிஷ்யர்கள் கூட்டம் தவிர மற்றவர்கள்எல்லாரும் விடைபெற்றுக்கொண்டனர். காலமுகர்கள் தங்கள் வழக்கப்படி யோகீசுவரரின் எலும்பு, தோலை அலங்கோலம் செய்து மூடித்தனர். அதையார் இப்பொழுது விவரிப்பது?

கங்காதேவி வீட்டுக்குத் திரும்பிவந்தபோது சூரியன் உச்சி நடுவே வந்துவிட்டான். சௌளா தூங்கிவிட்டிருந்தாள். அவளுக்குப் பல பயங்கரமும் பிடிப்பும் நிறைந்த கனவுகள் வந்துகொண்டிருந்தன. திடுக்கிடவைக்கும் அகோரர்களின் கூட்டம் அவளைத் துரத்திக்கொண்டிருந்தது. அவள் ஓடிக்கொண்டிருந்தாள். அவள் முன்பு விருஷப வாகனத்தில் ஏறி, சிவபிரான் போய்க்கொண்டிருந்தார். பீமதேவர் மடியில் ஒளிந்து அவள் கணபதியின் மூஞ்சூறின்மேல் சவாரி செய்துகொண்டிருந்தாள். அவளைக்குறித்து, தேவர்களும் தானவர்களும் சண்டையிட்டு மடிந்துகொண்டிருந்தனர். சங்கரரின்மடியில் அமர்ந்து அவள் பார்வதியிடம் சண்டையிட ஆரம்பித்தாள். பார்வதி மிகவும் கோபிக்கவே ஒற்றைக்காலில் நடனம் புரிய ஆரம்பித்துவிட்டாள். உதடு அறுந்த அகோரி அவளைத் தோளைப் பிடித்துப் பீமதேவரிடம் இழுத்துச்செல்ல ஆரம்பித்தார். பீமதேவர் கார்த்திகேயன் மயிலில் அமர்ந்து வந்து, அவளைத்தாவி ஏந்தி, மார்புறத் தழுவிக்கொண்டார. மயில் அவளுடைய உடை



Sastry & Sastry
JEWELLERS
33, EAST MADA STREET,
MYLAPORE P. O. MADRAS-4.

யைப் பற்றி இழுத்து, அதைப் பறக்கவிட்டு விட்டது.

அவள் 'சட்'டென்று திடுக்கிட்டு எழுந்தாள். முன்னுள் நடந்ததை மீண்டுமொரு முறை நினைவுக்குக் கொண்டுவந்தாள். "நேற்று நான் தெய்வத்துக்குப் பிரீதி செய்தேன், பிறகு கடல் ஸ்நானம் செய்தேன். பீமதேவர் கையில் ஒளிந்தேன். என் தெய்வம் ஸோமநாதர் என்னைக் காப்பாற்றினுர். இல்லாவிட்டால் பீமதேவர் ஏன் வந்தார்? ஆகவே நான் கடவுளின் காதலிதான்......... ஆம், அவருக்கு நான் பிரியமானவள்தான். இதில் கொஞ்சமும் சந்தேகமில்லை" என்று சொல்லிக் கொண்டே அவள் நகைத்தாள்

கங்கை வந்தவள் தன் மகள் நகைத்திருப்பதைக் கண்டாள்.

"ஏண்டி? இன்னுமா தூங்குகிருய்? நடுப்பகல் எப்பொழுதே ஆகிவிட்டது தெரியுமா?"

"ஆனுல் என்ன? நேற்று இரவு முழுவதும் கண் விழித்தது!"

"சரிதான். என்ன நடந்ததென்று ஏதாவது தெரியுமா?"

"தூங்கின நான் என்ன கண்டேன்? சொல்லேன் அம்மா. என்ன விஷயம்?" அவள் சிரித்துக்கொண்டே கேட்டாள்.

"கங்க யோகேசுவரர் இறந்துவிட்டார்."

"யார்?"

"காபாலிக காலமுகர்களின் ஆசாரியர். அவருடைய சவம் படித்துறையில் கிடந்தது. அப்பப்பா — அது என்ன கோரம்! அந்த அறுந்த உதடும், வெடித்த கண்களும்......... அம்மா!"

கங்காதேவி உடை மாற்றிக்கொண்டே அதைப்பற்றிப் பேசத் தொடர்ந்தாள்.

"உனக்குத் தெரியுமா? நூற்றெட்டுப் பெண்களின் ரத்தத்தால் சிவபூஜை செய்தவர் அவர்" என்று சொன்ன அவள் கண்கள் தன் மகள் அலறிப் புடைத்து எழுந்து உட்காருவதைக் கண்டன. பேச்சை நிறுத்திய தாய், "ஏண்டீ?" என்று கேட்டாள்.

"சிறுமிகளின் ரத்தமா? ஐயையோ, அம்மா!" என்று கூவின சௌளா அப்படியே மூர்ச்சையாகி விழுந்தாள்.

மயானத்திலிருந்து திரும்பிய கங்க சர்வக்ஞர் மீண்டும் ஒரு முறை ஸ்நானம் செய்து தியானத்தில் அமர்ந்தார். அவர் வாய் தானே சிவ கவசத்தைப் பாடம் செய்ய ஆரம்பித்தது.

"ஓம் நமோ பகவதே சதாசிவாய...... ●

(தொடரும்)



உப விநியோகஸ்தர்கள்:

தஞ்சை ஜில்லா செல்வா எலக்ட்ரிக் ஸ்டோர்ஸ்

கும்பகோணம்

நாடகமேடை விசித்திரங்கள் - 1

ஆண்டி

[கார்த்திப்பாட்டுக் கார்த்திகேயனும், கொக்குப் பாட்டுக் கோவலனும், வண்ணான் பாட்டு வாசுதேவனும் தமிழ் நாடக மேடையிலேறி இயல், இசை, நாடகம், இந்து மதம் இந் நான்கையும் அவமதித்து வந்தார்களல்லவா சில நாட்களுக்கு முன்பு வரையிலும்? பட்டுச் சொக்காயணிந்த பெண் நந்தனும், தண்டகாரண்யத்தில் பதின்மூன்று வருஷங்களாகப் பிரதி தினம் முக க்ஷவரம் செய்துவருபவர் போல் தோன்றிய இராம லக்ஷ்மணர்களும், இங்கிலிஷ் லெதர் பூட்ஸ் அணிந்துகொண்டு வனாந்தரங்களில் வேட்டையாடிய அர்ஜுன முருகாதியரும், கறுப்புக் காகில்ஸ் (Goggles) அணிந்த யமதர்மனும் அடிக்கடி அரங்க மேடையில் அவதரித்து வந்ததையும் தமிழ் நாட்டார் அதற்குள் மறந்திருக்க முடியாது. ஆனால் இவ்விசித்திர சம்பிரதாயங்கள் இந்நாட்டிலே மட்டுமல்ல, நாடகக் கலை தோன்றிய நாள் முதல் இதர தேசங்களிலும் பற்பல உருக்களில் நடமாடியும் 'நடனமாடியும்' வந்திருந்தன, என்ற உண்மையை விளக்குவதற்கே இக் கட்டுரை.]

புராதன கிரேக்கர் நாடக மேடை :

கி. மு. 6ஆவது நூற்றாண்டில் புராதன கிரேக்கர்களிடையே தான் நாடகக்கலை தோன்றியதாக மேனாட்டு ஆராய்ச்சிக்காரர்களில் பலர் நம்பி வருகிறார்கள். அவர்கள் டையொனீஸஸ் (Dionvsus) என்ற தெய்வத்துக்கு நடத்திவந்த விழாவின் முக்கிய அம்சம் நாடகச் சடங்கேயாம். அத் தெய்வத்தின் பிம்பத்தை ஊர்வலமாகக் கொண்டு சென்று, ஒரு மலையடிவாரத்திலுள்ள பீடத்தில் வைத்து, அப்பீடத்தைச்சுற்றியமைக்கப்பட்ட அகன்ற வட்டவடிவமான திண்ணைமீதேறி நூற்றுக் கணக்கான பக்தர்கள் நடனமாடி வந்தார்கள். திண்ணையைச் சுற்றிலும் மூன்று பக்கங்களிலுமாகப் பாதி வட்டவடிவத்தில் சுமார் ஐம்பது வரிகளுள்ள படிக்கட்டுக்களை அமைத்திருந்தனர். அதன்மீது பதினாயிரக் கணக்கான ஜனங்களுக்கு உட்கார்ந்து தரிசிக்க வசதியிருந்தது. இவையனைத்தும் மேற்கூரையில்லாத திறந்த வெளியிலேயே அமைக்கப்பட்டிருந்தன.

கிரேக்கர்களுடைய தேவதைகளுக்குப் பலியிடப்பட்ட ஆடுகளின் தோல்களைப் போர்த்திக்கொண்டு, பல பக்தர்கள் ஆடியும் பாடியும் பிம்பத்தைச் சுற்றிச் சுற்றிக் குதித்து வந்தார்கள். கொட்டும், குழலும், முரசும், யாழும் கூடின இசைமிகுந்த பஜனைக் கோஷ்டியே அது. ஏறக்குறைய தமிழ் நாட்டு வில்லுப் பாட்டையொத்த இசையெனலாம். கதையையொட்டிய பாவ ராக தாளத்துடன் ஒருவன் முறைவைப்பதும், மற்றவர்கள் அதைப் பின்பாட்டாகப் பாடுவதும், சில சமயங்களில் மாறி மாறிச் சம்பாஷணைக் கீதங்களைப் பாடி நடனமாடுவதுமாயிருந்தன. ஆனால் வில்லுப்பாட்டில் பாடகர்களும் வாத்தியக்காரர்களும் உட்கார்ந்தேயிருக்கிறார்களல்லவா? கிரேக்கர்களிடையே எல்லாப் பக்தர்களும் பஜனை கோஷ்டிபோல் பிம்பத்தைச் சுற்றிக்கொண்டேயிருந்தனர்.

சுமார் கி. மு. 535ல், ஷெ 'பஜனைக் கோஷ்டியில்' (Chorus) ஒருவனாயிருந்த 'தெஸ்பிஸ்' (Thespis) என்ற நடிகன் மாத்திரம் தனியாக முன்வந்து, பற்பல கதாபாத்திரங்களாகத் தானே அபிநயிக்க ஆரம்பித்தான். அதைக்கண்டு அதிசயித்து அக்காலத்திய அரசன் அவனுக்குப் பரிசளித்தான். இவனுக்கு



எழுபது வருஷங்களுக்குப் பின்பு, 'எய்ஸ்கைலஸ்' (Aeschylus) என்ற ஆசிரியர் இரண்டு நடிகர்களை முன்னே விட்டு நடிக்கச் செய்தார். இன்னும் பதினைந்து வருஷங்களுக்குப் பின் 'சோபாக்லீஸ்' (Sophocles) என்றவர் மூன்று நடிகர்களை விட்டு நடிக்கச் செய்தார். அவரது காலத்தில் கோரஸ் என்ற பஜனைக் கோஷ்டியாரின் எண்ணிக்கையும் பன்னிரண்டாகக் குறைக்கப்பட்டது. ஸோபாக்ளீஸைப் பின்பற்றி 'யூரிப்பிடீஸ்' (Euripides) என்ற நாடகாசிரியர் தோன்றி, மேற்கூறிய மூன்று நடிகர்களுக்கும் கதாபாத்திரங்களுக்கேற்ற முகமூடிகளையும் வேஷங்களையும் அணியச் செய்தார். அதுவரையிலும் அவர்கள் ஆட்டின் தோல்களையன்றோ போர்த்திக்கொண்டிருந்தனர்? இந்த ஸோபாக்ளீஸும், யூரிப்பிடிஸும் இருந்த காலத்திலேதான் புராதன கிரேக்க நாடகக் கலை உச்சநிலையை அடைந்திருந்தது. இவர்களிருவரும் கி. மு. 406லே இறந்துபோயினர்.



இந்தக் கிரேக்க நாடகக் கதைகளைப்பற்றிச் சில விஷயங்களைச் சொல்லவேண்டியதுண்டு. கி. மு. ஆறுவது நூற்றாண்டுக்கு முன் பஜனை செய்துவந்த கீதங்கள் யாவும் 'டயனேஸஸ்' (Dionysus) என்ற கிரேக்க மன்மதனுடைய அகால மரணத்தைப்பற்றிய சோகரஸப் பிலாக்கணங்களும், அவனை மீண்டும் உயிர்ப்பிக்கும்படியான 'சிவனார்' (Zeus) மீதுள்ள பிரார்த்தனைகளுமே. தான்யப்பேறும் மகப்பேறும் அளிக்கும் தெய்வம் அன்றோ மன்மதன் (Dionysus)? தெஸ்பிஸ் தோன்றியபொழுது டயனஸைப் போன்ற வேறு தெய்வங்களின் சோகரஸக் கதைகளையும் அபினயிக்கத் தொடங்கினான். அவனுக்குப் பின்பு

தோன்றிய ஆசிரியர்கள் கிரேக்க வால்மீகியாகிய ஹோமருடைய மாபெருங் காப்பியங்களிலுள்ள பற்பல சோகரஸக் கதைகளைக் கையாள ஆரம்பித்தனர்.

இவர்களது நாடக சம்பிரதாயத்திலும் ஒருவித விசேஷமிருந்தது. நாடகாரம்பம் முதல் முடிவு வரையிலும் ஒரே காட்சி! ஒரே ஊரிலே, ஒரே நாளிலே நடைபெற்ற சம்பவங்களாகவும் இருக்க வேண்டும்! இவ்விலக்கணச் சம்பிரதாயத்துக்கு "மூவொற்றுமைகள்" (The Three Unities) என்று பெயர். நாடக மேடையிலும் திரை கிடையாது, சீனும் கிடையாது; நாற்காலி, படுக்கை, பெஞ்சுகளும் கிடையாது. துக்ககரமான முடிவுடைய கதைகளேயாயினும் (Tragedy) கொலை, சாப்பாடு, மரணம், யுத்தம் முதலான சம்பவங்களை அரங்கமேடையில் அபினயித்துக் காண்பிக்கலாகாது. கோரஸ்ஸிலிருந்து சிலர் "தூதர்" (Messengers) என்ற பெயருடன் அரங்க மேடைக்குவந்து, மேற்கூறிய அருவருப்பான சம்பவங்களைச் சபையோருக்கு இயலாகவோ, இசையாகவோ தெரிவித்துச் சென்றார்கள். நடிகர்கள் முகமூடிகளையும், கால்களில் மூன்று நாலு அங்குலம் கனமுள்ள மரப்பாதுகைகளையும் அணிந்திருந்தனர்.

யூரிப்பிடீஸுக்குப் பிற்காலத்தவர்களான பல ஆசிரியர்கள் கதா பாத்திரங்களையும் நடர்களையும் அதிகரித்து கோரஸ்ஸின் முக்கியதையைக் குறைத்துச் சீர்திருத்தினார்களாயினும், அந்தப் பஜனைக் கோஷ்டியாரை அறவே அகற்றத் துணியவில்லை; ஏனெனில் அவர்கள் புராதன காலம் தொட்டேயுள்ள பக்தகோடிகளின் பிரதிநிதிகளல்லவா?

கிரேக்கர் ஹாஸ்ய நாடகங்கள் :

துன்பியல் நாடகங்கள் (Tragedy) உருப்பட்ட காலத்திலேயே. 'ஹாஸ்ய நாடகங்களும்" (Comedy) கிரேக்கர்களிடையே தோன்றிவிட்டன. ஆனால் இந்தக் காமெடிகளில் நடிகர்களோ கோரஸோ ஆட்டின் தோல்களைப் போர்த்திக்கொள்ளவில்லை. அவைகளுக்குப் பதிலாக ஆண்குறி (Male Sex Organ) போல் செதுக்கப்பட்ட ஒரு சின்னத்தை ஒரு நூலிலே கோத்துத் தமது கழுத்துகளிலே கட்டிக்கொண்டு நடனமாடவும் நடிக்கவும் செய்தனர்! நமது தேசத்திலும் கன்னட நாட்டு லிங்காயத்து ஜாதியார் சிவலிங்கத்தைத் தமது கழுத்துக்களில் அணிந்து கொள்ளுவதில்லையா? அதைப்போல். நாடகக்கதை முற்று பெறுவது ஆணும் பெண்ணும் சேரும் சம்போகத்திலேதான்! அதற்குப் பெயர் 'காமக்ரீடை' என்ற பொருளுடைய 'காமாஸ்' (Kamos) என்பதே. அதிலிருந்தே 'காமெடி' (Comedy) என்ற வார்த்தையும் உண்டானது. 'காமன்' பண்டிகையிலல்லவா நாடக விழா நடைபெற்றுவந்தது?

இந்த ஹாஸ்ய நாடகங்கள் காமக்ரீடையில் முற்றுப் பெறுவதாயினும், அவைகளின் கதைகள் காமனைப் பற்றியவையேயல்ல! அக்காலத்திய சமூக சித்திரங்களாகவே யிருந்தன. நாடகமத்தியிலே 'பரபாஸிஸ்' (Parabasis) என்ற ஒரு நீண்ட இடைவேளை (Interval) இருந்தது. அப்பொழுது கோரஸ் பஜனைக் கோஷ்டியில் சிலர் அரங்கமேடையிலேறி வந்து, அக்காலத்திய அரசியல், சமூக, இலக்கிய நிகழ்ச்சிகளைப்பற்றி நீண்ட உபன்யாசங்களைச் செய்து வந்தனர். இதில் அவர்கள் தங்களது சமகாலத்தினராயிருந்த தேசாதிபதிகளையும், ஜனநாயகர்களையும் சமூகப் பிரமுகர்களையும் கிண்டலாகத் தாக்கி, அலசி

யெடுத்து விடுவார்கள். அதனுல் கி. மு. 414-ல் இவ்வித தாக்கல்களைத் தடைசெய்து ஒரு சட்டமேற்பட்டுவிட்டது. அதைப்போலவே இன்னும் நூறு வருஷங்களுக்குப் பின்பு இவர்கள் கழுத்துக்களில் ஆண்குறிச் சின்னங்களையணிவதையும் 'மெனண்டர்' (Menander) என்ற அரசன் தடைசெய்துவிட்டான்.

கிரேக்க ஹாஸ்ய நாடகாசிரியருள் மிகப் பெயர்பெற்றவர் 'அரிஸ்டோபானீஸ்' (Aristophanes) என்பவரே. இவரது ஜீவித காலம் கி. மு. 448 முதல் கி. மு. 300 வரையிலுமாகும்.

சீன நாடகம்

சீன தேசத்தார் நாடகக்கலையை இந்தியாவிலிருந்தே கற்றுக்கொண்டனர். அவர்களுக்குப் புத்தமதம் போதித்த குருவான அசுவகோஷரே நாடகாசிரியரல்லவா? அவருடைய பற்பல நூல்கள் சீனபாஷையிலுள்ள மொழிபெயர்ப்பில் கிடைத்திருக்கின்றனவேயன்றி, அவரெழுதிய இந்திய பாஷையில் இன்னும் அகப்படவில்லையே! அவரது காலம் (கி. பி. 100) முதலே சீனத்தார் பற்பல கலைகளை இந்தியாவிலிருந்து கற்க ஆரம்பித்தனர். அவைகளில் ஒன்று நாடகம்.

ஆனுல் யதார்த்த சீன நாடகம் கி. பி. 720-ல்தான் உருப்பெற்றது எனலாம். அதில் சக்கரவர்த்தி, அரசகுமாரன், மந்திரி முதலியவர்கள் நாடக மேடையில் அபினயிக்கலாகாதென்ற நிபந்தனையிருந்தது.

ஒரு நாடகத்திலே சுமார் 40, 45 காட்சிகள் வரையிலுமிருக்கும். அதனுல் ஒரு நாள் இரவு பகலுக்குள் அபினயிக்கக் கூடிய நாடகங்களே இல்லை. ஒரு நாடகம் நாலைந்து நாட்களாவது நடைபெறுமாகையால், தரிசிப்போர் குடும்பசகிதம் கையில் சாப்பாடு படுக்கைகளுடன் நாடக மைதானத்துக்கு வந்துவிடுவார்கள்.

முக்கிய நடிகனே சூத்திரதாரனுக அடிக்கடி வந்து கதைச் சுருக்கத்தை உரைப்பான். மற்ற நடிகர்களும் பிரவேசிக்கும்பொழுது அவரவருடைய சொந்தப் பெயர், நாடகபாத்திரப் பெயர், பூர்வசரித்திரம் இவைகளை விளம்பரப்படுத்திக்கொள்வார்கள்! கதைகளில் மாத்ருபக்தி, பித்ருபக்தி, ராஜபக்தி இவைகளும், மற்ற நீதி மார்க்கங்களும் நிரம்பியிருக்கும். நீதி கற்பிக்காத நாடகங்களே கிடையாது. சீனசக்கரவர்த்தியின் குணுதிசயங்களையும், தெய்வீகத் தன்மையையும்பற்றி எல்லா நாடகங்களிலும் சொல்லத் தவறமாட்டார்கள். நீதி வாசகங்களும், பழமொழிகளும், கவிதைகளும்கொண்டு நிறைந்திருக்கும். சீன்களே கிடையாது. வெட்டவெளியிலேதான் நாடகமேடை அமைத்திருப்பினும், உயர்ந்த பட்டிலேசெய்த அழகிய வேலைப்பாடுகளுடைய திரைகளிருந்தன. வேஷமிடுவதிலும், உடைகளணிவதிலும் சீனர்களை மிஞ்சிவிட யாவராலும் முடியாது.

கிரேக்கர்களிடையேயுள்ள மூன்று ஒற்றுமைகளில், முக்கியமான நிபந்தனை, ஒரே நாளைய சம்பவக் கதையல்லவா? சீனர்களிடையே அப்படியல்ல. ஒரு கதை இருபது முப்பது வருஷக் கணக்கான சம்பவங்களையும், அடக்கியிருக்கும்! இடையிடையே பிரதான ஆக்டர் தோன்றி, அபினயிக்காத பாகங்களைக் கதையாகவே சொல்லிவிடுவான். ஒரு சோகரஸக் காட்சிவந்தால் அடுத்தபடியாக ஒரு ஹாஸ்யக் காட்சி வரவேண்டும். மரணம், கொலை, விஷமிடுதல், உபவாச மிருந்து மரித்தல், தண்ணீரில் மூழ்குதல், பிரம்பாலடித்தல், சித்திரவதை முதலியவைகளை மேடையில் காண்பித்து வந்தனர்! ஆனுல் இக்காலத்தில் (கி. பி. 1900த்துக்குப்பின்பு) இவைகளொன்றும் காண்பிப்பதில்லை. மிகுந்த மரியாதையும், பயிர்ப்பும் நிலவியிருக்கின்றன. மந்திரவாதம், செப்படிவித்தை, பிசாசுகள், பிரேதங்கள், யாதனு சரீரங்கள் இவைகளையெல்லாம் அபினயிப்பார்கள். கதைகள் சுபமாக முடிவுபெறுவதற்காக இந்துக்கள் தெய்வங்களைக் கொண்டுவருவதைப்போல், சீனர்கள் தங்கள் சக்கரவர்த்தியின் அதிகாரம் பெற்ற தூதனைக்கொண்டுவிட்டுச் சுபமாக்கிவிடுவார்கள். அவ்வளவு ராஜபக்தி அவர்களுக்கு!

வியர்வை தாங்கமுடியாது சபையோர்கள் தவிப்பார்கள். அதனுல் பல தூவாலைகளும், தளுவங்களும் ஒருவரிடமிருந்து மற்றொருவர் கைக்கு மாறி மாறிச் சபையெங்கும் சுற்றிக்கொண்டே வரும்.

சில சமயம் அவைகளை நடனமேடையி லாடுகிற ஆக்டர்களுக்கும் வீசியெறந்து கொடுப்பார்கள்! சுடச் சுடத் தேத்தண்ணீரும் அவ்விதமே எங்கும் சுற்றி வரும். அரங்கமேடை வேலையாள் சில சமயம் சிற்சில நாற்காலிகள், கட்டில் முதலான சாமான்களை நடீநடிகர்கள் நடிக்கும் பொழுதே சபையோர் கண் முன்பாக வைப்பதும் மாற்றுவதுமாக இருப்பான். கதாநாயகி அபிநயிக்கும் உருக்கமான கட்டமாயிருப்பினுங்கூட அந்த வேலையாள் அங்கேயே நின்று, தேநீர் அருந்தி விட்டு, உரக்க ஏப்பமிட்டுக்கொண்டு, அன்றைய தினப் பத்திரிகையையு மெடுத்து, சபைக்குத் தன் பிருஷ்டத்தைக் காண்பித்துக் கொண்டு வாசிக்க உட்கார்ந்து விடுவான்! கதாநாயகி அவன் காலின்மேல் விழுந்து மூர்ச்சையாவாள்! இது இக்காலத்திலும் நடை பெறும் சம்பவம்!

சிற்சில விசித்திர அடையாளங்களைப் பற்றிக் கூறவேண்டும். ஒருவனுடைய தலைப்பாகைமேல் ஏதேனும் ஒரு சிறிய கொடி பறக்குமானால் அந்த மனிதன் சேனைத்தலைவன்! ஒரு நூல்கயிறு கட்டிய கம்பு கையிலிருப்பின் அவன் குதிரை மேலிருப்பதாக நாம எண்ணிக் கொள்ளவேண்டுமாம்! அவன் குதிரையை விட்டுக் கீழே இறங்குவதற்காக அபிநயம் காட்டுவது மிக விசித்திரமாயிராதா? குதிரை மயிர்க்குஞ்சம் அற்றத்திலே கட்டிய சிறு கோலைக் கொண்டு வரும் நடிகனை ஒரு பிசாசோ, பூதமோ, யாதனுசரீரமோ என்றெண்ணவேண்டுமாம்! ஒருவன் தன்னிருகைகளாலும் முகத்தை மூடிக்கொண்டால் அவன் ஒளிந்து மறைந்து விட்டான் என்ற பொருள்! [தொடரும்]

தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

கல்கத்தா

அதிகாரம் பெற்ற மூலதனம்	....	ரூ. 8,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	....	ரூ. 4,00,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	....	ரூ. 2,00,00,000
ரிஸர்வ் நிதி	....	ரூ. 52,50,000

●

டைரக்டர்கள்

G. D. பிர்லா—சேர்மன்

ஈஸ்வரி ப்ரஸாத் கோயென்கா
(வைஸ்-சேர்மன்)

ரமன்லால் ஜி. ஸரையா
(வைஸ்-சேர்மன்)

ஆநந்த சரண் லா
பைஜ்நாத் ஜலான்
கோவிந்த்லால் பங்கூர்
மதன்மோகன் R. ரூயியா
மஹாதேவ் L. தஹானுகார்

மோஹன்லால் L. ஷா
மோதிலால் தபூரியா
நவீன் சந்த்ர மபட்லால்
P. D. ஹிமத்சிங்கா
R. L. நோபனி

ஜெனரல் மானேஜர்

B. T. தாகூர்

●

இந்தியாவிலும் பர்மாவிலும் உள்ள முக்கிய நகரங்களில் 70 பிராஞ்சுகளுக்கு மேலும், உலகெங்கும் சேவை செய்யத் திறமை மிக்க ஏஜன்ஸி வசதிகளும் உள்ளன.

ஒரு இளைஞன் மரணத்தினின்றும் காப்பாற்றப்பட்ட விநோதம்!

ஒரு உண்மையான வாக்குமூலம்

பிரிய வாசகர்களே!

நான் ஒரு முனிவரோ அல்லது டாக்டரோ அல்ல. நான் ஒரு சாதாரண மனிதன். என்னுடைய துர்கடத்தை காரணமாகக் கெட்டலைந்தவன் நான். நான் அத்துமீறி, சிற்றின்ப சாகரத்தில் இறங்கிய காரணத்தால் சொற்ப காலத்திற்குள் இரவு நேரங்களில் இந்திரியக் கழிவுகள் ஏற்பட்டு வீரியம் குறைந்து வெறும் ஆள் ஆகிவிட்டேன்.

நாளுக்கு நாள் பலம் குறைந்தது. இருதயத்தின் துடிப்பு அதிகமாயிற்று. தொடர்ந்து மயக்கம்வர ஆரம்பித்தது. மரணவேதனைப்பட்டேன். நான் இப்படி இருப்பதன் காரணங்களை நண்பர்கள் கேட்பார்கள். நானாகவே வலிய தேடிக்கொண்ட இந்த கேட்டைப்பற்றி நான் எப்படி அவர்களிடம் சொல்வேன்? "குணப்படுத்திவிடுவோம்" என்று தம்பட்டமடித்த ஆயிரக்கணக்கான டாக்டர்களையும் ஹக்கீம்களையும் ரகசியமாகக் கலந்து ஆலோசித்தேன். அவர்கள் கொடுத்த மருந்துகளையும், அமிர்தங்களையும் ஒன்றுவிடாமல் சாப்பிட்டேன். ஆனால் பலன் ஒன்றுமில்லை. உயிருடன் இந்த நரகவேதனைப்படுவதைவிட உயிரை விடுவதே மேல் என்ற முடிவுக்கு வந்தேன்.

அதிர்ஷ்டவசமாக நான் காஷ்மீர் செல்ல நேர்ந்தது. வேலை காரணமாகச் சென்றேன். அலைந்து திரியும் ஒரு மஹாத்மாவை (பக்கீர்) சந்தித்தேன். என்னைக்கண்ட உடனே அவர் கேட்ட முதல் கேள்வி நான் ஏன் இப்படி துக்கமே உருவெடுத்து வந்தமாதிரி இருக்கிறேன் என்பதுதான். துன்பப்பட்ட என் பாழும் மனம் மஹாத்மாவிடம் எல்லா விபரத்தையும் சொல்லிவிடும்படி தூண்டிற்று. அதன்படி எல்லாவற்றையும் சொன்னேன். தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்திருப்பதையும் சொல்லிவிட்டேன். மஹாத்மாவின் மனதில் இரக்கம்பிறந்தது. உள்ளுக்குச் சாப்பிடுவதற்கு ஒன்றும் மேலே பூசிக்கொள்வதற்கு ஒன்றும் ஆக இரண்டு மருந்துகள் செய்யும் விதங்களை விவரித்தார். தேவையான சகல மூலிகைகளையும் சேகரித்து அவர் முன்னிலையில் மருந்துகளைச் செய்தேன். உடனே மருந்துகளைப் போடவும், சாப்பிடவும் ஆரம்பித்தேன்.

என் பிரிய தோழர்களே!

மருந்துகளை உட்கொள்ள ஆரம்பித்த முதல் தினத்தன்றே மறுமலர்ச்சியின் உதயத்தைக் கண்டேன். கடவுள்மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன், இன்று என் மீறிய வீரிய சக்தியைக்கண்டு நான் பெருமிதம் அடைகிறேன். சிலவேளை மருந்துசாப்பிட்ட உடனே என் சிற்றின்ப வேட்கை அடக்க முடியவில்லை எனினும் மஹாத்மாவின் கட்டளைக்கிணங்க 25 நாட்கள் வெகு கட்டுதிட்டத்துடன் மருந்து சாப்பிட்டு வந்தேன். தினம் 3 முதல் 4 சேர் பால் ஜீரணிக்க முடிந்தது. என் கண்களில் புது ஒளி பிறந்தது. கன்னங்களில் ஜீவ ஒளி தவழ்ந்தது. இழந்த சக்தியும் பலமும் உடலுக்கு வந்தன. நான் ஊர் திரும்பியதும் மீதமிருந்த மருந்தை கைவிடப்பட்ட சில கேஸ்களுக்குக் கொடுத்தேன். ஈடு இணை இல்லாத சஞ்சீவி இது.

முன் ஜாக்கிரதையுள்ள என் நண்பர்களின் யோசனைக்கிணங்கவும், பொதுஜனங்களின் நலனை உத்தேசித்தும் இதைப்பற்றி நான் விளம்பரம் செய்தேன். பயங்கரமான இந்த வியாதியால் வீரியத்தை இழந்த என் நண்பர்களுக்காகவே இந்த விளம்பரம். அதிக பணம் செலவு செய்தும் குணமடையாத வியாதியஸ்தர்கள் மிகமிகக் குறைந்த செலவில் சொஸ்தம் செய்துகொள்ளலாம். நீங்கள் கொடுக்கும் பணம் விளம்பரச் செலவுக்குக்கூட வராது.

காஷ்மீர் மறுமலர்ச்சி மாத்திரை 15 நாட்களுக்கு	ரூ. 2—8—0
பூசுவதற்கு எண்ணெய்	ரூ. 2—8—0

மாத்திரைகளில் விஷக்கலப்பு இல்லை. ஆகையால் சிறியோர் பெரியோர் யாவரும் வயது வித்தியாசமின்றி எந்தக் காலத்திலும் உபயோகிக்கலாம். எண்ணெய் பூசினால் கொப்புளங்கள் உண்டாகாது.

கடைசியாக நான் சொல்வது என்னவென்றால் இதனால் லாபம் அடையவோ அல்லது என் சுயநலனுக்காகவோ நான் விளம்பரம் செய்யவில்லை. பொதுஜனங்களின் நலம் ஒன்றுதான் குறிக்கோள். அயல் தேசத்தவர் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

இந்த மாதிரி வியாதிகளுக்குக் கைகண்ட மருந்து இது.

உத்தரவாதமான சிகிச்சை: இந்த மருந்தால் குணமில்லை என்று கண்டால் முழுப் பணத்தையும் வாபஸ் செய்கிறேன். குணமாகவில்லை என்று சத்தியம் செய்தால் போதும். ஆயிரக்கணக்கான வைத்தியர்களால் சிபாரிசு செய்யப்படுவது இது.

முக்கிய அறிவிப்பு: வீரியமின்மை, சதைத் தளர்ச்சி, நரம்புத் தளர்ச்சி முதலியவைகளுக்குத்தான் இந்த மருந்து. வெள்ளை விழுந்து பலக் குறைவாக இருந்தால் இது ஜீவ சஞ்சீவி. சுத்தமான ரத்தத்தை உண்டாக்குகிறது.

Prof. B. S. Sidhu (C. K.) Halka No. 6, Jullundur City Pb.

காம சாஸ்திரம்

உலகத்தில் மிக்க அத்தியாவசியமான ஆண்—பெண் சேர்க்கையைப் பற்றிய 84 ஆசனங்களை உடைய, ரகசியக் குறிப்புகளுடன் கூடிய மிகவும் உயர்ந்த புத்தகம். 84 ஆசனங்களின் 200 வகை நிற போட்டோ படங்கள், தனித்தும், சேர்ந்தும் பல்வகை முறையில் போகம் துய்ப்பது போன்ற நீங்கள் இதுவரை அறிந்திராத பல ரகசியங்களை யெல்லாம் இப்புத்தகம் வெளிப்படுத்துகிறது. கல்யாணமாகாதவர்கள் இப்புத்தகத்திற்கு எழுதற்க. 1 புத்தகம் விலை ரூ. 2-12-0. ரகசிய போட்டோ பலவகை தோற்றத்தில் கிடைக்கும். 25 கார்டுகள் தனித்திருப்பது ரூ. 2—12—0. 50 கார்டுகள் சேர்ந்திருப்பது விலை ரூ. 5—0—0. ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்

M/s. French Photo Supply Company

(C. K.) JULLUNDUR CITY

ரொக்கப்பரிசு ரூ. 1000

(அபூர்வ சக்தியுடையது)

மாய மோதிரம்

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும் மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம்மோதிரத்தை அணிந்துகொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்த்தேவதைகள் உங்களிடம் அணுகாது. இந்த மாய மோதிரத்தை அணிந்துகொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணாமற்போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும் உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றியடைவீர்கள். சுருங்கச்சொன்னால் இம்மோதிரம் ஒரு பாதுகாப்பாளரைப் போன்றது. ஒருமுறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1—15—0. ஸ்பெஷல் ரூ. 3—0—0. ஸ்பெஷல் அதிக சக்திவாய்ந்தது ரூ. 3—15—0. தபாற்செலவு தனி. பலனில்லை யென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Principal, Bengal Mesmerism House (C. K.)

JULLUNDUR CITY. Pb.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami at the Cauveri Colour Prees, Besant Road, Kumbakonam.